
முற்றுகை
மேலாண்மை பொன்னுச்சாமி
திருவரசு புத்தக நிலையம்

# முற்றுகை

('கல்கி' பொன்விழா பரிசு நாவல்)

மேலாண்மை. பொன்னுச்சாமி

திருவரசு புத்தக நிலையம்

23, தீனதயாளு தெரு,
தியாகராயர் நகர், சென்னை - 600 017.

முதற் பதிப்பு : மே, 1993
இரண்டாம் பதிப்பு (திருவரசு) : டிசம்பர் 2004

**விலை : ரூ. 85.00**

* Title : MUTRUKAI
* Author : Melanmai, Ponnusami
* Language : Tamil
* Subject : Novel
* Edition : Second Edition, December - 2004
* Pages : viii + 260 = 268
* Publication : Thiruvarasu Puthaka Nilayam
23, Deenadayalu Street,
Thyagaraya Nagar,
Chennai - 600 017.

* Price : Rs. **85.00**

---

ஒளி அச்சு : நேரு அச்சகம், இராயப்பேட்டை, சென்னை – 600 014.
Printed At : எம்.எஸ். பிரிண்டிங் ஒர்க்ஸ்,
சென்னை –600 014.

# என்னுரை

இது எனது முதல் நாவல். 'கல்கி' பொன்விழா நாவல் போட்டியில் முதற் பரிசு பெற்று, கல்கியில் 29 வாரங்கள் தொடராக வெளிவந்து, ஏராளமான பாராட்டுகளையும், விமர்சனங்களையும் சந்தித்த 'முற்றுகை' நாவல், நூல் வடிவில் உங்களிடம் வருகிறது.

பாராட்டியவர்களுக்கும் - விமர்சனம் செய்தவர்களுக்கும் எனது நன்றிகள். முற்றுகையின் நாயகி சொர்ணம் எடுத்த முடிவு குறித்துத்தான் விமர்சனமும் சர்ச்சையும். அதுபற்றிய எனது விளக்கம்:

'லட்சியப் போதனை செய்யாமல், துளிகூட செயற்கையில்லாத இயல்பான முடிவு' என்பது பாராட்டுவோரின் சாராம்சம். 'சொர்ணத்தைப் புதுமைப் பெண்ணாக்காமல், சூழலுக்குட்பட்டவளாய்ப் படைத்திருப்பது நியாயமல்ல' என்பது விமர்சனம் செய்வோரின் மொத்த சாரம்.

சொர்ணம் என்பவள் வெறும் பெண் ணல்ல. நிலப்பிரபுத்துவ தோரணை மிக்க பணக்கார விவசாயி குடும்பத்தில் பிறந் தவள். அந்தச் சூழலிலேயே... அதன் கலா சாரப் பின்னணியிலேயே வளர்ந்தவள்.

புதிய பெண்ணாக மாற்றுவதற்குரிய கல்விச் சூழலோ, உத்தியோகச் சூழலோ அமையாமல்... நொடித்துப்போன 'இழந்த சொர்க்கம்' பற்றிய கனவில் வாழ்கிறவள்.

இந்தப் பெண்... அவளுக்குச் சுற்றி யுள்ள சூழலில் இந்த முடிவுக்குத்தான் வருவாள்.

இந்த முடிவுக்கு அவள் வந்ததில் எனக்குச் சம்மதமில்லை. பழநியின் சிந்தனை வாயிலாக எனது சம்மதமின்மை பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால் என் விருப்பங்களையும் சமூகம் சார்ந்த எனது லட்சியங்களையும் சொர்ணத் தின் மீது ஏற்றி சொர்ணத்தை 'ஆகப் பெரிய' புதுமைப் பெண்ணாக்கி, பழநியின் மனைவி யாக்கி... நான் அற்ப மகிழ்ச்சி அடைந் திருக்கலாம்.

அப்படிச் செய்திருந்தால்... சொர்ணம் உயிரும் சதையுமுள்ள இயல்பான ஒரு பெண்ணாக இருக்கமாட்டாள். என்னால் செய்யப்பட்ட செயற்கையான பொம்மை யாகவே இருப்பாள்.

பாத்திரத்தின் இயல்புத்தன்மையைக் கொன்று 'பொம்மைப் பாத்திரங்கள்' மூலமாய்க் கருத்துப் பிரசாரம் செய்ய வேண்டிய பலவீன நிலையில் இன்றைய முற்போக்குக் கலைஞர்கள் இல்லை.

நிலப்பிரபுத்துவ கலாசார முற்றுகைக் குள் சிக்கியிருக்கும் வரை பெண் விடுதலை சாத்தியமில்லை. பெண் விடுதலைக்கான முதல் நிபந்தனையே பிரபுத்துவச் சூழலை ஒழிப்பதுதான் என்கிற எனது கருத்தை பொம்மைகளின் மூலமாக அல்ல... உயிருள்ள பாத்திரங்களின் வாயிலாக நிரூ பித்திருக்கிறேன்.

நூலை அழகான முறையில் வெளி யிட்டுள்ள திருவரசு புத்தக நிலையத்திற்கும், என்னைத் தொடர்ந்து அன்புகாட்டி அர வணைத்து வரும் 'முற்போக்கு எழுத்தாளர் சங்க'த்திற்கும், கல்வி நிலையங்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகள்.

இந்த நாவலுக்கான உங்கள் பிரதி பலிப்பை ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

நன்றி.

என்றும் உங்கள்
**மேலாண்மை பொன்னுச்சாமி**

மேலாண்மறைநாடு–626127
காமராசர் மாவட்டம்

# நூலாசிரியரைப் பற்றி...

நசிந்து வரும் விவசாயமும், குழந்தை உழைப்பு மலிந்த தீப்பெட்டி ஆபீஸ்களும் நிறைந்த காமராசர் மாவட்டம் மேலாண்மறைநாடு கிராமத்தில் பிறந்து, ஐந்தாம் வகுப்புக் கல்வியோடு, வறுமைப்பட்ட வாழ்க்கையோடு மல்லுக் கட்டுகிற அனுபவங்களும் முற்போக்குச் சிந்தனைகளும் நிறைந்த மென்மை இதயத்தோடு வாழ்ந்து வருகிற மேலாண்மை பொன்னுச்சாமி என்னும் இப்படைப்பாளியைக் கண்டெடுத்து வழங்கியது, 'செம்மலர்' என்னும் மாத இதழ்.

நிறையச் சிறுகதை எழுதி இருக்கிறார். ஜனரஞ்சனி, கல்கி, வாசுகி போன்ற இதழ்களின் சிறுகதை போட்டிகளில் நான்கு தடவைகள் முதற் பரிசு பெற்றிருக்கிறார். 'இலக்கியச் சிந்தனை' பரிசுகள் மூன்று தடவை.

உடன்பிறப்பான தம்பி கரிகாலன் குடும்பமும் இவர் குடும்பமும் கூட்டுக் குடும்பமாய், அன்புச் சோலையாய்... இன்றும்.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத் துடன் சேர்ந்து உதயமான இவர், அந்த அமைப்பு

மாதிரியே வளர்ந்து வருகிறார்.. மாநிலத் துணைச் செயலாளர்.

இவரது கதைகளில் சில ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம் ஆகிய மொழிகளில்.

மானுடம் வெல்லும், மானுடப் பிரவாகம், பூச்சுமை, பூக்காத மாலை, மனப்பூ, ஒரு மாலை பூத்து வரும், வெண்பூ மனம், அன்பூ வாசம், சிபிகள், மரம், ஆகியன இவரது பிற சிறுகதை நூல்கள்.

# முற்றுகை

## 1

அருஞ்சுனையின் ஸ்கூட்டர் வேப்ப மர நிழலில் வந்து நின்றது. வண்டியின் மூச்சையடக்கினான். நிறுத்தி ஸ்டாண்ட் போட்டு உட்கார வைத்தான்.

நழுவிக்கொண்டு ஓடுகிற பாலியஸ்டர் வேட்டியை இடது கையால் கொத்தாகப் பற்றிக்கொண்டு நிமிர்ந்தான்.

கண்ணாடியைக் கழற்றியவுடன், சாயங்கால வெயில் சுள்ளென்று தாக்க, கண்களை இடுக்கினான்.

ஸ்கூட்டரின் சப்தம் கேட்டு, ஒற்றைக் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள் ரத்னம். அவள் கண்களில் வியப்பு. முகத்தில் மலர்ச்சி.

இரும்புக் கேட்டைத் திறந்துகொண்டு நுழைந்தான்.

"என்ன இது, ஆச்சர்யமாயிருக்கே?"

"ம்..."

"சாயங்காலமே வீட்டுக்கா? என்னடியம்மா இது. மழை கிழை வரப்போகுதா?"

“ஏன் வரக்கூடாதா?”

அவள்மீது மோதிக்கொண்டு, திறந்திருந்த ஒற்றைக் கதவுக்குள் நுழைந்து, உட்புறமாகச் சிரித்தான்.

குப்பென்று வியர்க்கிறது. உடம்பெல்லாம் ஒரே நசநசப்பு. ஷர்ட்டைக் கழற்றிவிட்டு, நடு ஹாலில் மின்விசிறியைத் தட்டிவிட்டு, நாலுக்கு உயர்த்தினான்.

இரைச்சலுடன் அறையெங்கும் பரவுகிற காற்று.

நெருங்கி நின்ற ரத்னத்தின் கண்களில் இன்னும் ஆச்சர்யம் தங்கி நிற்கிற கேள்விக்குறி.

காலையில் தீப்பெட்டியாபீஸுக்குப் போனால்... மதியச் சாப்பாட்டுக்கு வருவது நிச்சயமில்லை. வந்தால்... உண்டு; வராவிட்டாலும் அவ்வளவுதான்.

அப்புறம் ஆளை ராத்திரி பத்து மணிக்கும்மேல் ஓர் அகால நேரத்தில்தான் எதிர்பார்க்கலாம். முழுக்க வேலை, வேலை, வேலைகள்தான்.

அப்படி ‘வேலை வேலை’ என்று கிடக்கிற ஆள் சாயங்கால அதிசயமாக இப்படி வந்து மின்னினால், ஆச்சர்யமாக இருக்காதா என்ன?

அவள் கண்களைப் பார்த்தான், அருஞ்சுனை. சாதாரணமாய்ச் சிரித்தான். அவள் வியப்புக்கு பதில் சொல்வதைப் போலச் சொன்னான்:

“நம்ம தீப்பெட்டிக்கு பீகார்லே ஆர்டர் பிடிக்கிற முத்துச்சாமியைப் பார்க்க வேண்டியிருந்துச்சு. நேத்துத்தான் வந்துருக்கான் அவன். அவனைப் பாத்துட்டுப் போற வழிதானேன்னு, இங்கே உன்னைப் பாத்துட்டுப் போகலாம்னு வந்தேன்.”

"இருங்க... ஹார்லிக்ஸ் போட்டுத் தாரேன்."

"வேண்டாம் ரத்னம், இப்பத்தான் காப்பி குடிச்சேன்."

"பரவாலே, எங்கையாலே போட்டுக்குடுத்த மாதிரி இருக்குமா?"

துள்ளலுடன் உள்ளே சென்றவளைப் பார்த்தான். "சரி... கொண்டா" என்று உற்சாகமாகச் சொல்வது போலப் பாவனை செய்தான்.

அவளது அகலமான முதுகைப் பார்த்தான். ஃபுல்வாயில் ஜாக்கட்டையும், ப்ராவையும் மீறித் திமிறிக்கொண்டு, கறுப்புச் சதை மடிப்புகள்...

கேலியாக உதட்டைப் பிதுக்கிக் கொண்டான். ரகசியமாகத் தோளைக் குலுக்கிக் கொண்டான். 'கருமுண்டம்...'

மனசுக்குள் வெறுப்போடு ஓடுகிற நினைவுகள். சோபாவின் முதுகில் கிடந்த ஷர்ட்டை எடுத்து, ஹாங்கரில் மாட்டினான்.

சுவரில் பெரிய அகலமான புகைப்படத்தில், இவனது மாமா. ரத்னத்தின் அப்பா. சந்தன மாலைக்குள் அமரராகி இருந்த மாமாவுக்கு மீசையில்லாத முகம். அடர்த்தியான நரைத்த புருவம். காது மடல்களில் சிலிர்த்துக்கொண்டு ரோமக் கற்றை. காலர் இல்லாத கதர்ச்சட்டை. தலைவழியாக மாட்டுகிற சட்டை. கழுத்துக்குக் கீழே சட்டையில் தங்க ஊக்குகளும், பித்தான்களும்.

மாமாவின் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். மனசுக்குள் முட்டி மோதுகிற முரண்பாடான

நினைவுகள். மரியாதை உணர்ச்சியின் ஆழத்தில், வெறுப்பான கைப்புணர்ச்சியும்...

...நீல நிறத்தில் முரட்டு அழுக்குத் துணியை இடுப்பில் சுற்றிக்கொண்டு கந்தகக் கலவைக்குள் கிடந்தவன். இடுப்புயர அடுப்பில் எரிகிற 'தகதகா' நெருப்புச் சீறல். கனத்த குச்சிக் கட்டைகளைத் தூக்கித் தூக்கி, மருந்து முக்கி முக்கி எடுத்தவன். முக்கி எடுக்கிறபோதெல்லாம் குபீரென்று எழுகிற தீயின் அனலில் வெந்தவன்.

வெறும் முந்நூற்றைம்பது ரூபாய் மாசக் கூலியாகக் கந்தகத்திலும், நெருப்பிலும் வெந்து கிடந்த போர்மேன் அருஞ்சுனையை... இந்தக் கடல் மாதிரியான தீப்பெட்டி ஆலைக்கே முதலாளியாக மாற்றிய மாமா.

இவன் அந்தஸ்தை இவனே நம்ப முடியாத அளவுக்கு உயரத்தில் தூக்கி நிறுத்தியவர். இவனது தலையெழுத்தைத் தலைகீழாகப் புரட்டி எழுதியவர்.

'வாடா, போடா' என்று சகஜமாகக் கூப்பிட்டுக் கொண்டிருந்த சக தொழிலாளிகளையெல்லாம் 'முதலாளி' என்று கூப்பிட முடியாமல் திணறிப் போகச் செய்தவர், மாமா.

அதற்கும் ஒரு விலை தர வேண்டியிருந்தான் அருஞ்சுனை. அதற்கான விலையே அருஞ்சுனைதான். கரிக்கட்டையாக இருந்த ரத்னத்திடம் புருஷ உத்யோகம்.

முதலாளி, தன் மகளை ஒரு கூலிக்காரனுக்கு ஏன் தந்தார்? அதுவும் தன் வேலைக்காரனுக்கு. ரத்னம் கறுப்பு என்பது மட்டும்தான் காரணமா? கறுப்பு கசக்கவா செய்யும்? ரத்னம், ஊசிப்போன பலகாரமா?

கெட்டுப்போன தின்பண்டமா? யாரும் பார்த்தால் மூக்கைச் சுளித்து அருவருக்கிற பொருளாகிவிட்டாளா?

இப்படியெல்லாம்... சந்தேகப்பட்ட அருஞ்சுனையை ஆலை முதலாளி என்கிற கவர்ச்சி இழுத்தது. சந்தேகங்களை ஜீரணித்துக்கொண்டது. கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியாத அந்தஸ்தும், உரிமையும், பணவசதியும்...

இப்போது... சொத்து சுகம் முழுக்க இவள் பெயரில். இவளிடம் இவனுக்குப் புருஷ பதவி.

இவனையும் ஏமாற்றிக்கொண்டு, அவளையும் ஏமாற்றி, பொய்யாகச் சிரித்து, போலியாக மயக்கி... அவளைப் புல்லரிக்கச் செய்து...

கசப்பான சுமையாக மனசை அழுத்துகிற வதைக் கிற - கணவன் உத்யோகம்.

மாமாவைப் பார்த்தான்.

'இவர்... ஒரு நாதியற்ற ஏழையைப் பணக்கார வாழ்க்கையில் ஏற்றி வைத்து வாழ்வு தந்தவரா, அல்லது... நாதியற்ற ஓர் ஏழையின் இயலாமையையும், சபலத்தை யும் பயன்படுத்தி தன் கெட்டழிந்த மகளின் எதிர் காலத்துக்கு வேலியாக்கிக் கொண்ட சுயநலக்காரரா?'

"என்னங்க" என்ற சப்தம் கேட்டு சோபாவுக்கு வந்தான். ஒரு தட்டில் ரெண்டு பஜ்ஜிகள். நடுவில் சில பிஸ்கட்டுகள்.

"இதைக் கொறிச்சுக்கிட்டிருங்க. இதோ வந்துர்றேன்."

"டீ.வி.யைத் தட்டிவிட்டாள். சாயங்கால யு.ஜி.சி.யில் யாரோ பேராசிரியர் பேட்டி கொடுத்தார்.

"ரத்னம்."

"என்னங்க?"

"நா ஆபீஸுக்குப் போகணும்மா - தலைக்கு மேலே வேலை கிடக்கு."

"கொஞ்சம் இருங்க. நீங்க இருக்கிறப்பவே குளிச்சிடு றேன்ங்க. ஒரு செகண்ட்."

"நீ அப்புறமா குளிச்சுக்கோ."

"புருஷன் போனபிறகு பொம்பளை குளிக்கக் கூடாதுங்க. அது ஆகாது."

"நா ஒண்ணும் வெளியூர் போகலியே. ஆபீஸுக்குத் தானே..."

"நீங்க எப்போ வெளியூரு போவீகன்னு உங்களுக்கே தெரியாதே. ஒரு போன் வந்துட்டா... மதுரையிலே போய் நிப்பீக."

கொஞ்சலும் சிரிப்புமாய்க் குலுங்கினாள். உள்ளுக்கும் வெளிக்குமாய் ஓடிப் பரபரத்தாள். சுண்டெலியின் பரபரப்பில் ஒரு யானை உலவுவதைப் போல... வினோதமாய் அவள்.

மனைவியின் பின்னாலேயே பார்வை ஓடிய அருஞ்சுனைக்குள்... இப்படிக் குழந்தையாய் ஓடித் திரிகிற இந்தக் கள்ளமில்லாத பெண்... ஊசிப்போன பலகார மாகவா இருப்பாள்? ஊஹூம்...

தண்ணீர் ஒரு கிளாசிலும் ஹார்லிக்ஸ் ஒரு கிளாஸிலும் கொண்டு வந்து வைத்தாள். அவசரமாய் பாத்ரூமுக்குள் ஓடினாள்.

கறுப்பு. கவர்ச்சியில்லாத கறுப்பு. கசிந்தோடுகிற தார் எண்ணெயில் வெள்ளைப் பவுடர் தூவி வைத்தமாதிரி ஒரு நிறம். சற்றே கனத்து உருண்ட கைகள். பூசினாற் போல பருத்த உடம்பு. நீளமில்லாத கழுத்தின் மேல் உட்கார்ந்திருக்கிற தலை. உப்பு மூட்டையின் மேல் தேங்காயை வைத்தமாதிரி ஒரு வினோதத் தோற்றம்.

"ரோட்டிலே ஆயிரத்தெட்டுப் பொண்ணுக கண்ணுலே தட்டுப்படத்தான் செய்யுதுக. ஆனா ஒங்கிட்டேயிருக்கிற ஓர் அழகை — ஒரு கவர்ச்சியை — வேற எந்தப் பொண்ணுகிட்டேயும் நா பாக்கலே."

அவள் முகத்தில் பெருமிதம் பொங்கி வழியும். நம்பாதவளைப் போலப் பொய்யாகச் சிணுங்குவாள்.

"நீங்க பொய் சொல்றீக."

"ஒங்கிட்டே நா எதுக்குப் பொய் சொல்லணும்? உண்மையைச் சொன்னா... கழுத்தைச் சீவிருவியா?"

அவ்வளவுதான். அப்படியே நம்பிவிடுவாள். ஒரு குழந்தையைப் போலக் குதூகலிப்பாள். குலுங்கிக் குலுங்கிச் சிரிப்பாள். அந்த நாணச் சிரிப்பிலும், உதட்டைக் கிழிப்பது போல அந்த எற்றுப்பல் வெளிப்படும்.

இப்படியே... பொய்யும் புளுகுமாய், போலியாய் நடித்து நடித்து... நடிப்பே வாழ்க்கையென எட்டு வருஷம் ஓடிப்போய்விட்டது.

நினைத்துப் பார்த்தால்... சலிப்பாக இருக்கிறது.

உள்ளுக்குள் புதைந்து அமுக்கப்பட்ட ரசனை உணர்ச்சிகள்.. அடக்கி வைக்கப்பட்ட அழகுணர்ச்சிகள்...

மனசுக்குப் பிடித்தமான வாழ்வுக்காக ஏங்கித் தவிக்கிற வேட்கை...

எல்லாமே உள்ளுக்குள் கொதிநீராகத் தளதளக்கிறது. நீராவி இரைச்சலுடன் பாம்புச் சீறலாய்ச் சீறுகிறது. எப்போதாவது மூடியைத் தூக்கியெறிந்து விட்டுப் பொங்கி வழிந்துவிடுமோ...

நாசியைத் தாக்குகிற சுகந்த வாசனை. ரத்னம்தான். புதிதாக உடுத்திய ஸாரியில் சலவை மடிப்புகள். சலவை மணம். இடது தோளின் வழியாக மார்பில் வழிந்த ஈரக்கூந்தலைத் துவட்டிக்கொண்டே வந்தாள்.

முகத்தில் திட்டுத் திட்டாக மஞ்சள். மனசைக் குடைந்து நெருடுகிற சோப்பு மணம். கண்களை உறுத்துகிற குங்குமம். அவளது கண்களில் ஒரு மோகனப் புன்னகை. குதூகல மின்னல்.

தனது வேண்டுகோளுக்குச் செவி கொடுத்து - மனம் கொடுத்து — உட்கார்ந்திருக்கிற கணவனின் அன்பை நினைத்து மனசுக்குள் ஒரு குழைவு.

இவனுள் ஒரு மன அயற்சி. ரகசியமாகக் கசிந்த ஆயாசப் பெருமூச்சு.

அவள் இப்படி... குளித்து முடித்து சுகந்தச் சிரிப்புடன் இவன் முன்பு வந்து நிற்கிறாள் என்றால் அது ஒரு சங்கேதப் பாஷை. ஒரு சமிக்ஞை.

மீண்டும் ஒரு பாரமாய் வந்து அழுத்துகிற அயற்சி. அருஞ்சுனை உள்ளுக்குள் சலித்தான். நீளமாய்ப் பெருமூச்சு விட்டான், ஏக்கப் பெருமூச்சு போன்ற பாவனையில்.

"முடிச்சாச்சா?"

"ம்..."

வாஷ்பேசினில் முகத்தைக் கழுவினான். துடைத்தான். பவுடரை அப்பிக் கொண்டான். தலையை வாரிக் கொண்டான். திரும்பினான். திரும்பச் செய்கிற போதையான நறுமணம்.

மல்லிகைச் சரத்துடன் ரத்னம். உதட்டில் மல்லிகை வாசமாய் ஒரு சிரிப்பு. சிரிப்பின் அந்த மெல்லிய வெடிப்பில் மனசுக்குள் சத்தமாய் வந்து உரசுகிற சலங்கைச் சொற்கள்.

கண்களின் ஆழத்திலும் அதே சிரிப்பு. மனசைச் சுண்டி இழுக்கிற மௌன அழைப்பு.

ஷர்ட்டை எடுத்து மாட்டிக் கொண்டான்.

"பொறப்பட்டாச்சா?"

"ஆமா ரத்னம். நீ தந்த ஹார்லிக்ஸ் நைட் வரைக்கும் தாக்குப் பிடிக்கும்."

பாராட்டின் குளிர்ச்சி தாங்காமல் பனிப் புல்லாகச் சிலிர்த்தாள்.

"சாப்பிட வந்துருங்க."

"வேலைகள் எப்படி அமையுதோ!"

"அதெல்லாம் முடியாது. இன்னிக்கு நீங்க கட்டாயம் வர்றீங்க. நீங்க வந்தபிறகுதான் நா சாப்பிடுவேன்."

ரத்னத்தின் சர்க்கரைப் பாகான கெஞ்சல், அவன் செவியில் விழுந்தது - மனசுக்குள் இறங்க மறுத்தது.

இறங்கிவிட்ட மாதிரி கிளுகிளுத்தான். அவளது வலது கன்னத்தை மெல்லக் கிள்ளினான்.

"அல்வாத்துண்டு!" குறும்பாகக் கண்ணடித்தான்.

"ச்சீய்... போங்க" என்று அவள் சிணுங்கலுடன் கண்டித்தாள்.

செருப்பை மாட்டிக்கொண்டான்.

"வரட்டா?"

வெளியே வந்தான். இவர்களைப் பரிகாசம் செய்வதைப் போல இரும்புக் கதவு கிறீச்சிட்டது.

அவள் வாசலிலேயே நின்றாள். இவன் ஸ்கூட்டர் அருகில் வந்தான். வண்டியை நகர்த்தி, உயிர்ப்பித்தான். மனம் நிறைந்து புன்னகை செய்த ரத்னத்திடம் கையாட்டிவிட்டுப் புறப்பட்டான். சறுக்கிக் கொண்டு சீறிய ஸ்கூட்டரில் வசதியாக உட்கார்ந்து கொண்டான்.

இரவில் இவளைச் சந்தித்தேயாக வேண்டிய கட்டாயம்.

வீணான சந்தோஷம். வெற்றிக் கனி பறிப்பது போன்ற எந்த விளைவும் நிகழ்த்த முடியாத பூஜ்ய சந்தோஷம். மழலைச் சத்தம் உண்டாக்க முடியாத மலட்டுச் சந்தோஷம்... ச்சே!

மூச்சு முட்டுகிற சலிப்பு. மனசைத் திணறடிக்கிற இழப்புணர்வு. காறித் துப்பினான். மனசின் சுமை பாதியாகக் குறைந்தது போல் இருந்தது.

மிச்சம் மீதியிருந்த கசப்புகளை மறக்கடிப்பதற்காக, தீப்பெட்டியாபீஸ் வேலைகளைப் பற்றி வலிய யோசித்தான். ஒரு விடுதலை வேண்டும்!

உ.பி.க்கு இன்றைக்கு பண்டல் லோடு ஏற்றி யாகணும். ஆர்டர் பிடித்த அய்யாச்சாமி நேற்றே 'கால்' போட்டுக் கத்தினான், 'ஏன் லேட்' என்று.

லாரி ரெடி. சரக்கும் ரெடி. அநேகமாக லோடு பண்ணி முடித்திருப்பார்கள். இன்று ராத்திரியில் எப்படியும் லாரியை நகர்த்திவிட்டாகணும்.

வறண்ட காற்றாக வீசிக் கொண்டிருந்த நினைவு களுக்கு மத்தியில், திடுதிப்பென்று ஒரு குளிர்த் தென்றல். பனித்துளி விலகாத பசுஞ்சோலைக்குள் நுழைந்துவிட்ட மாதிரி, மனசுக்குள் சிலிர்ப்புகளோடு ஓடுகிற ஒரு பரவச உணர்ச்சி.

சொர்ணம் வேலை முடிந்து போயிருப்பாளா? போ யிருக்கமாட்டாள். அவள் அஞ்சரை மணிக்குத் தானே புறப்படுவாள்? அட... இன்றைக்கு முழுவதும் அவளை ஒருதடவைகூட கண்ணால் பார்க்க வில்லையே...

சொர்ணம்! அவளுக்கு மட்டும் பெயர் என்னமாய்ப் பொருந்தியிருக்கிறது. அவளுக்கென்றே அந்தப் பெயர் பிறந்தமாதிரி. சொர்ணத் தங்கமாய் நிறம். 'மண்வாசனை' ரேவதி மாதிரி... சின்னக் கிளி. கைக்குள் அடங்கக்கூடிய பூப்போன்ற மென்மைப் புறா.

அவளைப் பார்த்தாலே போதுமே! மனசு நிறைந்து ததும்புமே. அட அட அடா...

அவள் நிமிர்ந்து பார்க்க வேண்டுமே! ம் ஊஹூம்! ஏறிட்டே பார்க்கமாட்டாள். அவளுக்கு வேலையிலேயே முழுக்கவனம்.

படு சுறுசுறுப்பு.

பசையை விரல் எந்நேரம் தொடும், அட்டையை எந்நேரம் மடிக்கும், எப்போது இழுவும், எப்படி மடித்து எறிவாள்? என்பதைப் பார்க்கவே முடியாது. அத்தனை வேகம், அத்தனை சுழற்சி.

வசதியாகக் கிராமத்தில் ஓகோவென்று ஒரு காலத்தில் வாழ்ந்து, நொறுங்கிப்போன ஒரு பெரிய விவசாயக் குடும்பத்தின் கடைசிக் கொழுந்து. நொடித்துப் போய் தூசிக் காடாகிப்போன அந்தச் சிதைவுகளின் கடைசியான ஜீவமிச்சம்.

வாழ்ந்து கெட்ட குடும்பத்தின் மிச்சமாகியிருந் தாலும்... மண்டைக் கனத்திற்குக் குறைவில்லை. கூலிக்குப் பசை ஒட்டிப் பிழைக்கிற யதார்த்தத்திலும், பழைய 'பசையான' காலத்துக் கர்வம் இன்னும் அப்படியே இருக்கிறது.

அவள் கர்வப்படுவதில் நியாயம் இருக்கிறது.

அந்த அழகு... அந்தச் சின்ன உருவம்... கச்சிதமான வடிவ அமைப்புகளோடு கடைந்தெடுத்த மாதிரியான தேகக் கட்டு, சொர்ணத் தங்கமாய் நிறம்.

அவள் கர்வப்படலாம்.

அவனுக்குள் உப்பங்காற்று குளிர்ச்சியாக வீசியது.

## 2

**க**ங்குல் மங்குகிற நேரம். வைகறைப் பொழுது. தாய் வீட்டைப் பிரிய மனசில்லாமல் தயங்குகிற புதுமணப் பெண்ணாக, இருட்டு நகர மறுத்துக் கொண்டிருந்தது.

பால் பீய்ச்சுவதற்கு எருமை மாடுகளைப் பால் சொஸைட்டிக்குப் பத்திக்கொண்டு போகிற சப்தம்.

கொக்கு நோயில் சாகாமல் தப்பித்த சேவல்களின் காலக் கூவல். வேலாயி வெளியே வந்து நின்றாள். நரைத்த ரோமக் கற்றைகளை அள்ளி முடிந்துகொண்டே, எச்சிலைத் துப்பினாள்.

கீழடி வானத்தில் ஜொலிப்புடன் ஒளிவிடுகிற ஒற்றை நட்சத்திரம். வானம் முகம் வெளுத்துப் போயிருந்தது.

விடிந்தும் விடியாத இந்தப் பொழுதில்தான்... ராமானுஜத்தின் வில்வண்டி வாசலில் வந்து நிற்கும். சின்னக்காளைகள் ரெண்டும் துடியாய் நிற்கும். அதன் நெற்றியில் சலங்கைச் சரம். கழுத்துகளில் மணிகள் கோக்கப்பட்ட வார்கள். மாடு குலுங்கினால், சலங்கைகள் சங்கீதம் பாடும்.

அந்தச் சின்னஞ்சிறு கூட்டு வண்டியிலிருந்து ஆஜானுபாகுவாய் ராமானுஜம் இறங்குவார். தங்க நிறம். ஒங்குதாங்கான தோற்றம். ஜமீன்தார் மாதிரியான கம்பீரம். கண்டவர் எவரும் அரண்டு போவார்கள். அப்படியோர் தாட்டியம்.

நடந்தால்... செருப்பாணிகள் ‘சர்ர்ருக், சர்ர்ருக்’ கென்று கர்ஜித்து அச்சுறுத்தும்.

‘எந்த வீட்டில் இன்றைக்கு வாசமோ’ வேலாயியால் கேட்க முடியாது. கேட்டால்... தொலைந்தாள்.

“பொட்டக் கழுதைகளுக்கெல்லாம், என்ன கேள்வி?” என்ற வார்த்தைக் கத்திகளோடு, சாட்டைக் கம்பும் சேர்ந்து பேசும்.

கணக்கு வழக்கு இல்லாத காடுகரைகள், நிதான மில்லாத வருமானம், சமுத்திரமாய்ச் செல்வம் அலை

மோதுகிற பெருத்த சம்சாரிக் குடும்பம். ஊரிலேயே மேல் கை. ஊரில் மட்டுமல்ல, சுற்றுப்பட்டி பத்து ஊர்களிலும் இந்தக் குடும்பம்தான் மேல் கை.

எத்தனை வைப்பாட்டிகளுக்கு ஏற்றம் போட்டு இறைத்தாலும், வற்றாத சமுத்திரச் செருக்கு!

அவர் வண்டியில் வந்து இறங்கினால்... வண்டி முகக் காலைப் பிடிக்க ஓர் ஆள். காளை மாடுகளைத் தொழுவத்திற்குள் கொண்டு செல்ல ஓர் ஆள்.

தொழுவத்திற்குள் பசு மாடுகள், காளை மாடுகள், உழவு மாடுகள், எருமை மாடுகள், தொழுவம் கொள்ளாமல் நிறைந்து ததும்புகிற கால்நடைச் செல்வங்கள். அதன் வெதுவெதுப்பான பெருமூச்சு இரைச்சல்கள், சுவர்களில் மோதி எதிரொலிக்கும்.

இப்போது—

தொழுவம் கழுவி வைத்த அண்டாவைப் போல... 'ஹோ'வென்கிற வெறுமையாக - சுத்த சூன்யமாய் - ஜீவகளை அற்றுப் போய் - வெறும் சுவரும் பிய்ந்த கூரையுமாய் - செத்த சவமாய் - தொழுவம்.

முற்றம் தெளிக்கிற சாணத்துக்குக் கூட அடுத்தவன் தொழுவத்துக்கு அலைய வேண்டியிருக்கிறது.

தெரு முழுக்க அத்தனைபேரும் சாணியள்ளிக் கொண்டு போவார்கள். முற்றம் தெளிக்க, வீடு மெழுக, கூடைக்கண் மறைக்க என்று அள்ளிக்கொண்டு போனது போக, கிடக்கிற மிச்சத்தை அள்ளிக் குப்பை சேர்க்க நாலு நாள் ஆகும்.

சாக்கை 'கொங்காணி' போட்டுத் தலையில் போட்டுக் கொள்வார்கள். முதுகு முழுக்க சாக்கு பரவி

மூடிக்கொள்ளும். தலையில் தூக்கி வைத்துச் சுமக்கிற கூடையிலிருந்து வழிகிற மூத்திரக் கழிவிலிருந்து காப்பாற்றுகிற கவசம்தான், அந்தக் 'கொங்காணி.'

வீட்டில் எந்நேரமும் பத்தாள் வேலை செய்யும். அடுப்பில் மொடாப் பானையில் சோறு வெந்து கொண்டேயிருக்கும். வந்தவர்கள், போனவர்கள், வேலைக்காரர்கள், காவல்காரர்கள் என்று எந்நேரமும் பந்திதான், பரிமாறல்தான், ஏப்பம்தான்.

உண்டு முடித்த திருப்தியில் வாயார வாழ்ததுகிற ஜனங்கள். 'தருமவான் வீடு,' 'புண்ணியவான் கோயில்' "இப்பேர்ப்பட்ட தர்மதுரையோட வம்சமே தொட்டது துலங்கி, பட்டது படர்ந்து, 'ஓகோ'ன்னு இருக்கணும்; வறுத்த காணம் வெதைச்சாலும், செழிச்சு முளைக் கணும்..."

மனசார வாழ்த்திய சத்தங்கள் இதோ... இப்பவும் காதில் கேட்குதே. இப்பத்தான் சொல்வது போல இருக்கிறதே...

ஊ...ம்...

அப்பேர்ப்பட்ட வீடு, இப்போ—

செல்வம் பொழிந்து, சீரகச்சம்பா விளைந்த வீட்டில், வீடு முழுக்க நிறைந்து நிற்கிற தரித்திரம். ரெண்டு ஜீவ னுக்குக் கஞ்சிக்கு வழியில்லை. ரெண்டு வயிறுகளைக் கழுவுவதற்கு என்ன பாடுபட வேண்டியிருக்குது?

எப்படி ஆயிற்று?

காலம் என்னமாய்க் கண்ணாமூச்சி காட்டி, குரூரமாய் விளையாடுகிறது?

“ம்ன்ச்சூ...” என்று பெருமூச்சோடு சூள்கொட்டிக் கொண்டாள் வேலாயி.

“எல்லாம்... அந்தக் குருட்டுப் பய கூத்துவன் பண்ணுகிற கூத்து. இன்னும் என்னென்ன கூத்தெல்லாம் நடத்திப் பாக்கப் போறானோ...”

முற்றத்தில் சாம்பல் போட்டு மினுக்கி முடித்த பாத்திரங்களை விரலுக்கு இரண்டாக இடுக்கிக் கொண்டு எழுந்தாள்.

மூட்டுகள் வலிக்கிறது. எழும்போது முழங்கால் மூட்டு எல்லாம் மொறு 'மொறு'வென்கிறது.

உள்ளே வந்தால்... கழுவிக் கவிழ்த்த பானையைப் போல சூன்யமாய் வீடு. பெரீய்ய வீடு. ஆறு தலைக்கட்டுகள் அடுப்பு கூட்டிக் குடும்பம் நடத்தலாம்.

முன்பு—

இந்த வீட்டில் கால் வைக்க இடமிருக்காது. வீடு நிறைய தான்ய மூட்டைகள், உளுந்து மூட்டைகள், பருத்தி அம்பாரம், மூலை மூலைக்கு விதைப் பண்டங்கள், கலப்பைகள், வடங்கள், ஏர்க்கால்கள், சாட்டைக் குச்சிகள், பட்டை வார்கள், வண்டிப் பைதாவின் குடங்கள், பாரக் கயிறுகள் என்று வீடு முழுக்க மரச் சாமான்கள், இரும்புச் சாமான்கள்.

கால் வைத்த இடமெல்லாம் சாமான்கள் கிடந்து சீரழியும். இன்றைக்கு...

எல்லாம், எப்போதோ கண்ட பழங்கனவாகி... மனசின் ஆழத்தில் காயமும் வடுக்களும் மிஞ்ச... வீடு முழுக்க வறுமையும் அவலமும் சமணக்கால் போட்டு உட்கார்ந்துகொள்ள...

அடுப்பங்கரைக்குள் நுழைகிறபோது, திண்ணையில் சுருண்டு படுத்துக் கிடக்கிற சொர்ணத்தைப் பார்த்த வேலாயிக்கு எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது.

'என்ன இது, இந்தக் கழுதை இன்னும் படுத்துக் கிடக்கு!'

அந்த எரிச்சல் கத்திய கத்தலில் தெரிந்தது.

"ஏண்டி, பொழுது பொறப்படப் போவுதடி, பொட்டச்சி இன்னும் ஒறங்குனா... எப்படி? எந்திடி."

அதட்டலாய் எழுப்பிவிட்டு விட்டு, விளக்குமாறை எடுத்தாள். கடலாய் விரிந்து கிடந்த வீடு பூராவையும் பெருக்கி, ஓரிடத்தில் ஒதுக்கி, கூடையில் அள்ளிக் குப்பையில் கொண்டுபோய்ப் போட்டுவிட்டு வந்தாள் வேலாயி. இருட்டு சாம்பல் நிறமாய் வெளுக்கிறது.

இன்னும் சுருண்டு கிடக்கிற சொர்ணம், வேலாயிக்கு வெளம் வெளமாக வந்தது.

'அடிப்பாதகத்தி, ஒனக்கு இன்னைக்கு என்ன கேடு வந்துச்சு? இப்படிப் படுத்துக் கிடந்து உசுரைப் பிடுங்குறே? தீப்பெட்டியாபீஸுக்குப் போக வேண் டாமா?'

அவளுக்குள் வெடித்துக்கொண்டு வந்த கோப நினைவுகள். உஷ்ணமாய்க் கொட்டிவிட முடியாது. வெளியில் முகம் காட்டத் தயங்குகிறது.

செல்ல மகள், சின்ன மகள். ஒன்றரை மைல் நடந்துபோய்... தீப்பெட்டியாபீஸிலே பசை தடவி பெட்டி ஒட்டி, உலை கொதிக்க வழி காட்டுகிற நாச்சியாள், எப்படிக் கோபிப்பது?

உள்ளடங்கிய உணர்வுகள், நேர உணர்வு தெரியாமல் இப்படிப் படுத்துக் கிடக்கிறாளே...

மீறிக்கொண்டு பீறிடுகிற கோப உணர்ச்சி.

"ஏய், சொர்ணத்தாயீ... வெளக்குமாத்துத் தாயீ..."

"என்னம்மா?" வெடுக்கென்று வார்த்தையால் எகிறுகிற சொர்ணம். அம்மாவின் நச்சரிப்பைச் சகித்துக்கொள்ள முடியாத கண்டனம், அவள் கண்களில்.

வேலாயியின் மனசுக்குள் ஒரு திகைப்பு. உள்முகமாய்த் திரும்புகிற நினைவு.

'மகள் வம்புக்கு படுத்திருக்கலையோ... ஏதோ நியாயம் இருக்கோ... ஒருவேளை உடம்புக்கு ஏதாச்சும்...'

பெற்ற மனம் திடுக்கிட்டது. குரலில் ஒரு நடுக்கம். சொல்லில் வந்து உட்கார்ந்த குழைவு. சின்னதாகப் பதைப்பு.

"ஏம்மா... ஒடம்புக்கு என்னமும் செய்யுதா?"

"ஒரு எழவுமில்லே, ஒடம்பு குத்துக்கல்லாத்தான் இருக்கு."

"ஏண்டி இப்படி 'வெடுக் வெடுக்'குன்னு புடுங்குறே? வேலைக்குப் போகவேண்டிய புள்ளை இப்படிச் சுருண்டு கிடக்குதேன்னு... பதறிப் போய்த்தானடி நா நச்சரிக்கேன்?"

அம்மாவைப் பார்த்தாள் சொர்ணம். உடைந்து போயிருக்கிற அம்மா. பெற்ற மகளிடம்கூட சொந்த உணர்ச்சியைக் காட்ட முடியாமல் பதறிப்போய் நிற்கிற அம்மா. கெஞ்சுதலோடு பரிதாபமாய் நிற்கிற அம்மா...

சொர்ணத்திற்குள் நனைந்த நிலமாய்க் குழைகிற நினைவுகள். பதற்றத்தைக் குறைக்கணும். குளிர்ச்சியான வார்த்தைகள் சொல்லணும்.

ஆனாலும் அவள் பிறவிக் குணம், அவள் சொற்களில் தெறித்தது. மெல்லிய குரலில் அதே கடுப்புடன் கூறினாள்.

"ஒண்ணுமில்லே. பொண்ணா ஜெம்மமெடுத்த பாவத்துக்கு அனுபவிக்கிற அந்தத் 'தொல்லை'தான்."

"அப்ப... இன்னிக்கு நீ வேலைக்குப் போக வேண்டாம்மா. குளிச்சுட்டுப் பேசாம, வீட்லே இரு."

"இல்லே, போகணும்."

"வேண்டாம்மா... வீட்லே இருடி."

அம்மாவை எரிப்பது போலப் பார்த்தாள்.

"இதுக்கெல்லாம் லீவ் போட்டுட்டா, வீட்லே எப்படி உலை கொதிக்கப் போகுது? வீடு நிறைய செல்வம் குமிச்சி வைச்சிருக்கியாக்கும்?"

'அப்பன் குணம் அப்படியே ரத்தத்துலே ஓடுது. அதே திமிரு. அதே கருவம்.'

வேலாயி மனத்தில் ஓடிய இந்த நினைவில் ஒரு பெருமிதம் இருந்தது. சந்தோஷம் இருந்தது. புருஷனை மகள் வடிவில் பார்க்கிற உள்மனத் திருப்தி.

சோர்வான பெருமூச்சோடு எழுந்தாள் சொர்ணம். அவள் முகத்தில் அயர்ச்சி, நனைந்த காகிதமாகத் துவள்கிற உடம்பு. வாட்டம். வேரறுந்த கொடி வெயிலைச் சந்தித்த மாதிரி வாட்டம்.

பெற்ற தாய்க்குக் குலையெல்லாம் பிடுங்கிக் கொண்டு வந்தது. மனசைப் பிசைந்துகொண்டு வெளிப்படுகிற அழுகை. மூஞ்சியில் வந்து அறைகிற அவலத்தின் கொடூரம்.

"அடக் கூத்துவனே, இந்தப் பாதரவை பாக்குற வங்கொடுமைக்கா என்னை உசுரோட வுட்டு வைச்சிருக்கே? ஏந் தங்கப் பெட்டியைத் தூக்கிக்கிட்டுப் போனியே... என்னோட ஓலையைக் கிழிக்க மட்டும் ஒனக்கு நேரமில்லாமப் போச்சாக்கும்?"

கிசுகிசுத்த குரலில் முணுமுணுக்கிற அவள் வார்த்தைகளைத் துண்டுத் துண்டாக உடைக்கிற அழுகைத் திமிறல்.

அடுப்பங்கரைக்குள் நுழைந்தாள். அடுப்புக்கு வெளியே கிடந்த கங்குகளையும் விறகையும் உள்ளே தள்ளினாள். அந்தச் சின்ன முக்காலியில் உட்கார்ந்து, சுவரில் சாய்ந்த வேலாயி, குமுறிக் குமைந்த உணர்ச்சியெல்லாம் தனிமைச் சுதந்திரத்தில் பீறிட... கொதிக்கிற மனசோடு தலையில் 'மடேர் மடே'ரென்று அடித்துக் கொண்டாள்.

"ஏந்தங்கப் பெட்டி... ராசாபோல நீங்க இருந்த இருப்பு என்ன, நடந்த நடை என்ன! சொர்ணத்தைத் தூக்கி வச்சு என்னமாய்க் கொஞ்சுவீக? எங்க எங்கேயோ கொண்டுபோய் சீமைப் படிப்பெல்லாம் படிக்க வைச்சு, டாக்டராக்கணும்னு வாய்க்கு வாய் பெருமையாய்ச் சொல்லுவீகளே... மலையைத் தூசியாக்கி ஊதிவிட்ட மாதிரி, குடும்பத்தையே சீரழிச்சுட்டுப் 'போய்ச்'

சேந்துட்டீக. இந்தப் பாழாய்ப் போற பொழப்புலே எங்களை மட்டும் தவிக்க விட்டுட்டீகளே...

"ஏழு ஊரு, அழுகையும் தேகத்துலே அள்ளிப் பூசிக்கிட்டு, என் வவுத்துலே வந்து பொறந்த பொன்னுரதம், இப்பச் சீரழியற கோலத்தைப் பாத்தீகளா? ஒன்னரை மைல் நடந்துபோய் பசையும் தாளுமாய்ப் பகலெல்லாம் பெட்டி ஒட்டி, வாங்குகிற கூலியிலே வவுறு நனையுது...

"அடப் பாதரவே, செல்வம் பொழிஞ்சு சீரகச் சம்பா விளைஞ்ச இந்தக் குடும்பத்துக்கும் இப்படியோர் கதியா? அடக் குருட்டுப் பய தெய்வமே, ஒனக்கு இதுவும் சம்மதமா?"

வேலாயியின் மனசுக்குள் தளதளத்துக் கொதித்து அரற்றுகிற அவல நினைவுகள். முனகலும் அழுகையுமாய், நிலைகுலைந்து அங்கலாய்ப்பாகக் கசிகிற துன்பம். மூக்கைச் சீறிச் சுவரில் இழுவினாள். அழுகை அழுகையாக இருந்தாலும், சமையல் நடந்தாகணும்.

மகளை வேலைக்கு அனுப்பிவைக்க வேண்டுமே. தாட்சண்யமற்ற ராட்சஸனாக வாழ்க்கை சுற்றிச் சுற்றி வட்டமடிக்கிறதே...

## 3

**ஓ**டைக்குப் போய்விட்டு வந்தாள், சொர்ணம். வழுவழுத்த நாக்கிலிருந்து எச்சிலைக் காறிக் காறித் துப்பினாள். இடுப்பைச் சுற்றிலும் உளைச்சல்.

எதிர்ப்பட்ட பெண்களுக்கெல்லாம், "என்ன சொர்ணம், இப்படி முகம் கொராவிப் போயிருக்கியே" என்று கேட்கத்தான் ஆசை, கேட்கவில்லை. கேட்டால், சுமுகமாகப் பேசமாட்டாள், சொர்ணம். அவளது செருக்கான பாவனைதான் கிடைக்கும். ஏளனமான பார்வைதான், பதிலாக வரும். இது எதற்கு?

'நாயைக் கேட்பானேன். கடி வாங்குவானேன்' என்று ஒதுங்கிப் போய்விட்டனர்.

'வீடு வெறுமனையாய்ப் போனாலும், வீராப்பு குறையவில்லை. கழுத்து ஒடிகிற அளவுக்குத் தலைக் கனம் இருக்கிறவள்' என்று அபிப்பிராயம் அவர்களுக்கு.

அனுபவம் இல்லாமல் அபிப்ராயம் வருமா?

வீடு வந்து சேர்ந்த சொர்ணம் பல்லை விளக்கினாள். நிமாண்ட் நாழியில் குளித்து முடித்தாள். எல்லாம் அவசர மயம்தான்.

நைலக்ஸ் சேலையும், ஜாக்கெட்டும் அணிந்து கொண்டாள்.

உச்சந்தலையில் எண்ணெயை வைத்துத் தேய்த்துக் கொண்டாள். சடை பின்னி, ஹேர் பின்களைச் சொருகினாள்.

எண்ணெய் வழியும் முகத்தில் சோப்புப் போட்டுக் கழுவித் துடைத்தாள். பவுடரை லேசாக அப்பிக் கொண்டாள். கையகலக் கண்ணாடியில் முகம் பார்த்து, சரியான இடத்தில் பொட்டு இட்டுக்கொண்டாள்.

கண்ணாடியில்—

மஞ்சள் வெளிச்சமாய் ஜொலிக்கிற சின்ன முகம்.

சிறிய விழிகளின் இருண்ட கருமையின் மினு மினுப்பு. முகத்தின் தங்க நிறத்தை அடிக்கோடிட்டுத் துல்லியமாக்குகிறது. மனசுக்குள் மடை திறந்து பொங்கிப் பெருகி நுரை நிரப்புகிற பெருமிதம்.

'இந்த நிறமும், லட்சணமும் எந்தச் சிறுக்கிக்கு வரும்? எம்புட்டுப் பெரிய கோடீஸ்வரியாயிருந்தாலும்... ஏங்கால் தூசிக்குப் பெறுவாளா? என்னைப் பார்த்துப் பொறாமைப் பட்டுப்போய், தலை குனியத்தானே செய்யணும்?'

கண்ணாடியிலிருந்து கண்ணையும் நினைவையும் எடுத்தாள். கண்களை இறக்கிக் கழுத்துக்குக் கீழே பக்கவாட்டில் பார்த்தாள். வயலெட் கலர் ஜாக்கெட், புஜப் பகுதியில் நிறம் மாறி வெளுத்திருந்தது. பார்க்க அசிங்கமாக இருந்தது. நைலக்ஸ் சேலையில் வயலெட் கலர் போகவில்லை. ஆனால் பெரிய பெரிய ரோஜாப்பூ டிசைன்கள் முழுவதும் சாயம் கரைந்து, சேலை பூராவும் பரவி, லட்சணத்தையே நாசமாக்கியிருந்தது.

"85 ரூபாய்தாமா சீலை. நீ வாரத்துக்கு அஞ்சு ரூபாயாத் தந்து கழிச்சாப் போதும். வேற ஏவாரியை மாதிரி என்னையும் நெனைச்சிடாதேம்மா. நம்மகிட்டே வார்த்தை சுத்தம் இருக்கும். ஒரு பொட்டுச் சாயம்கூட விலகாது. சேலை கிழிஞ்சு நார் நாராகப் போற வரைக்கும், இந்தக் கலரும் போகாது; கனிவும் போகாது; அப்படியே இருக்கும்; ஃபுல் கேரண்டி."

நாலு மாதத்து முன்னால்தான், சத்தியம் பண்ணிச் சரக்கு கொடுத்திருந்தான், துணி வியாபாரி. அவன் சத்தியம் கரைந்து, கலர் மாறி... ச்சே!

அவளுக்குள் பற்றிக்கொண்டு வந்த கோபாக்னியில் அந்த வியாபாரி பஸ்பமானான்.

"**சோ**று வைக்குறீயா?"

"ஏம்மா கண்ணா! இன்னிக்கு வீட்லே இரேன்."

"எதுக்கு?"

"பெத்த மனசு தாங்கமாட்டேங்குதடி... இந்த நிலைமையிலே ஒன்னை வேலைக்கு அனுப்புறதுக்கு, மனசு சம்மதிக்க மாட்டேங்குதடி."

"ஒன்னோட சம்மதம் கேட்டுக்கிட்டு இங்க எது நடக்கு? பொழுது அடையுது - விடியுது. நம்ம குடும்பம் நொறுங்கி நொந்த வீடானது. இதெல்லாம் ஒன்னோட சம்மதம் கேட்டுக்கிட்டா... நடக்குது?"

"என்னடி... இப்படி விட்டாத்தியா பேசுதே?"

"பெத்த மகளுக்காக ஒரேயடியாக உருகி வழியா தேம்மா. உருகி வழிஞ்சதுக்காக உருப்படியா என்ன நடக்கப்போகுது? உக்கார வைச்சு, ஒன்னாலே சோறு போட்டுற முடியுமா?"

"அதுக்கும் மேலே கோடி கோடியா ஆசை உள்ளே கிடக்குதடி. ஆசையைச் சொல்லக்கூட முடியாம நம்ம ரக்கைகளை ஒடிச்சுப் போட்டிருச்சே, நம்ம விதி. நா என்ன செய்ய?"

"அதைத்தான் நானும் சொல்லுதேனம்மா. விதி இருக்கே, அது... ஒன்னையும் என்னையும் எப்படி யெப்படியெல்லாம் ஆட்டிப் படைச்சு வேடிக்கை

பாக்கக் காத்திருக்கோ யார் கண்டது? இம்புட்டு உருகி வழியற ஒன்னைக்கூட, நாளைக்கு என்னைக் கொடுமை பண்ணிப் பாக்குற நிலைக்குத் தள்ளினாலும் தள்ளிருதோ... என்னவோ?"

"ச்சீய்! வாயைக் கழுவுடி. கன்னி வாக்கோ, கரி நாக்கோன்னு சொல்லுவாக. பலிச்சாலும் பலிச்சிறப் போகுதடி. வா. வந்து சாப்புடு."

சாப்பிட்டாள். அம்மா சோறு வைத்துத் தந்த சில்வர் தூக்குச் சட்டியை எடுத்துக் கொண்டாள். சின்னச் சிட்டையும், சில்லறை போட்டு வைத்திருந்த பிளாஸ்டிக் டப்பாவையும் எடுத்துக் கொண்டாள்.

புறப்பட்டாள். பார்த்துக் கொண்டிருந்த வேலாயி யின் கண்கள், குத்துண்ட பறவையாகத் தவித்துக் கொண்டிருந்தன. மௌனமாய் நகரும் மகளையே பார்த்தாள்.

"போய்ட்டு வாரீயா?"

"ம்."

"போய்ட்டு வா கண்ணு. சண்டை சத்தம் போடாம பத்திரமா வந்து சேரு."

"ம்."

செருப்பை மாட்டிக் கொண்டாள் சொர்ணம். முற்றத்தில் இறங்கினாள். உதிக்கிற யத்தனிப்பில் சூரியன். கீழடி வானப் பஞ்சு மேகத்துண்டுகள் ரத்தச் சிவப்பாகக் கன்றிப் போயிருந்தன. காலைச் சூரியனின் கண் படாத மேக இணுக்குகள் வெள்ளைத் தகதகப்பாக...

தை மாசப் பனி வீர்யம் குறைந்திருக்கிறது. மாரி மூலைக் காற்று இலேசான காலைக் கூதலாக வீசுகிறது.

செவிமடலைத் தடவுகிற வாடைக் காற்று. உள்ளுக்குள் ஊடுருவி, ஒரு சுகமாகப் பரவுகிறது.

ராமலட்சுமியும் தூக்குச்சட்டியோடு வந்துவிட்டாள்.

"என்னடி, அந்தக் கழுதைகள் எங்கே?"

"யாரு... கெங்கம்மாவும் ராசாத்தியுமா?"

"ஆமா. அதுகதான்."

"போய்ட்டாக. ஊருக்கு வெளியே காத்திருப்பாக. வா. நாம போவோம்."

கிழக்காக நீள்கிற தெருவில் நடந்தனர். கிராமம் இன்னும் காலை நேர உறக்கச் சடைவிலிருந்து முழுதும் முறித்துக் கொள்ளவில்லை. சோம்பல் நடையாய் நடக்கும் வேலைகள்.

சம்சாரி வீட்டுப் பெண்கள் மாட்டுச் சாணிகளை அள்ளுகிறார்கள். காளை மாடு உள்ள விவசாயிகள், பருத்தி விதையை ஆட்டுரலில் போட்டு ஆட்டிக் கொண்டிருக்கின்றனர். 'கடக்... கடக்'கென்று சப்தமிடுகிற ஆட்டுரல்.

டீக்கடைகளில் காலை நேர மனிதக் கசகசப்பு.

தெருவின் முடிவில் ஒரு பஸ் ஸ்டாப். அங்கிருந்து துவங்குகிற கப்பி ரோடு. இவர்களுக்காகக் காத்திருந்த ராசாத்தியும், கெங்கம்மாவும் சேர்ந்து, நான்கு பேராக நடையைப் பிடித்தனர்.

சில மீட்டர் தூரம் கடந்தால்... தெற்காக நீள்கிற அகலமான தேசிய நெடுஞ்சாலை. சுத்தமான வழுவழுப் பான சாலை. இலை போடாமல் சோறு போட்டுச் சாப்பிடலாம். அவ்வளவு பளிச்சென்று சாலை.

அந்த ரோட்டில் ஏறிவிட்டால்... உலக மானுட சமுத்திரத்தில் கலந்துவிட்ட மாதிரியோர் உணர்வு. முடிவற்று விரிந்து நீள்கிற பிரபஞ்ச வெளியில், கால் வைத்துக் கைகோத்து விட்ட மாதிரியாக ஒரு நினைப்பு.

ரோடு முழுக்க ஜனம். சைக்கிள்களும், வேன் களும், பஸ்களும், லாரிகளுமாய் எந்நேரமும் மனிதச் சலனங்கள்.

முன்னும் பின்னுமாய் எதிரும் புதிரும் ஆட்கள். மூவரும் சற்றுத் தள்ளி முன்செல்ல, நாலடி பின்னால் சொர்ணம் ஒற்றை மனுஷியாக.

அவளாக உருவாக்கிக் கொண்ட இடைவெளி.

அந்த மூவரும் ஒரே வரிசையில் பேசிச் சிரித்தும், கும்மாளமுமாய்ச் செல்ல சொர்ணம் மட்டும் அதில் பட்டுக் கொள்ளாமல் தனிமையாகச் சென்றாள்.

ஒரே பாக்டரியில் வேலை செய்கிறவர்கள். ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். அதற்காக—

அவர்களுக்குச் சமதையாக இவளால் போக முடியாது. இவளுக்குச் சமதையாக நெருங்கி வர அவர்களுக்குத் தகுதியில்லை. அழகில் ஈடாவார்களா? வாழ்ந்த வாழ்க்கையில் சமதையானவர்களா? ம்ஹூம்!

சொர்ணத்திற்குள் அக்காள் வந்தாள். கிருஷ்ணம்மா. அய்யா உடம்பைப் போல ஓங்குதாங்கானது. நின்றால்... வாசல் தலை தட்டும். ஆனால், மனசு அம்மாவைப் போல.

பயந்த மனம். நடுங்கிச் சாவாள்.

அடிபட்டு அழுது வீங்கிய முகத்தோடு, பிள்ளை களோடு அல்லது தனியாக அடிக்கடி வந்து விழுவாள்.

மூசுமூசுவென்று அழுவாள். தலைவிதியை நொந்து கொண்டு புலம்புவாள்.

அய்யாதான் இவள் வாழ்க்கையை நாசம் பண்ணி விட்டார். பாழுங்கிணற்றில் தள்ளிவிட்டார் என்று ஒப்பாரி வைத்து அங்கலாய்ப்பாள்.

இரண்டுநாள் கழித்து—

முன் வழுக்கை விழுந்த மாமா வருவார். அக்கா ளோடு பேசமாட்டார். அம்மாவிடம் மட்டும் பேசுவார். கிருஷ்ணம்மாளைப் பற்றிப் புகார் சொல்வார் - 'வாய் நீளுது' என்று.

காடுகரை விளைய மறுப்பதை - விளைந்த விளைச் சலுக்கும் விலையில்லாமல் போனதைச் சொல்லிப் புலம்புவார்.

கிருஷ்ணம்மா இல்லாமல் மாடு கன்றைக் கவனிக்க முடியாமல் தான் திண்டாடுகிற அவஸ்தையைச் சொல்லுவார்.

எல்லாரும் கூடிச் சேர்ந்து தன்னை ஏமாற்றிக் கவிழ்த்துவிட்டதாகக் குற்றம் சொல்வார்.

அன்றைக்குச் சாயங்காலமே—

அக்காளைச் சைக்கிளில் உட்கார வைத்துக் கூட்டிக் கொண்டு போய்விடுவார். பக்கத்து ஊர்தான். ரெண்டு மைலில் மாமா ஊர். அதுவும் விவசாயக் கிராமம்தான்.

பாவம்... மாமா! அவர்மீதும் குற்றம் இல்லை. ஏகப் பட்ட கனா. கனாக் காண்கிற அளவுக்கு ராமானுஜம் வீடு செல்வாக்காக இருந்தது.

ராமானுஜம் வீட்டில் பெண்ணெடுத்தால் சமுத்திரத்தில் தலா போட்ட மாதிரி. ஏற்றம் போட்டு இறைத்தாலும் வற்றாது.

ராசா மாதிரி… வீட்டு மாப்பிள்ளையாக உட்கார்ந்து மைனர் வாழ்க்கை வாழலாம்.

இப்படித்தான் கனாக் கண்டார், மாமா?

ராமானுஜத்தின் சாவு சகல கனவுகளையும் சமாதியாக்கிவிட்டது.

ராமானுஜம் வாழ்கிற வரை எத்தனை கடன் இருந்தது; எத்தனை கேஸ்கள் இருந்தன… என்பதெல்லாம் தெரியவில்லை. சாவுக்குப் பிறகு, ஒன்றுக்குப் பத்தாகப் பாய்ந்து வந்தன. திரண்டு வந்தன. கூச்சல் போட்டன. ஆளுக்குக் கொஞ்சமாய் எடுத்துக் கொண்டது போக… மிஞ்சியது சூன்யம்தான்.

வேறு வழியில்லை. மனைவியை அழைத்துக் கொண்டு சொந்தக் கிராமத்திற்குப் போனார். எட்டியும் எட்டாத பிழைப்பு. சிறிய சம்சாரி. கைக்கு எட்டினால் வாய்க்கு எட்டாது. சாண் ஏறினால் முழம் சறுக்கும்.

தின்கிற புள்ளைகள். கழுத்தை நெரிக்கும் இல்லாமை. மூச்சுத் திணற அடிக்கும் வறுமை.

உள்ளுக்குள் சண்டைகள் - சப்தங்கள் - சாபங்கள் - புலம்பல்கள்.

என்ன காரணமோ—

மூன்று மாசமாக அக்காள் வரவேயில்லை.

நல்ல நேரம் வந்துவிட்டதோ…

# 4

தெற்காக நீள்கிற அகலமான தேசிய நெடுஞ் சாலையின் இடது விளிம்பில் சொர்ணம் மெது நடையாக நடக்கிறாள்.

கொஞ்சம் தள்ளி சிரிப்பும் கும்மாளமுமாய் அந்த மூவர். அதிலும் ராசாத்தியின் குதியும் கும்மாளமும்தான் ஜாஸ்தி.

யார் என்ன சொல்லிவிட்டாலும், ராசாத்திக்குச் சிரிப்புத்தான். எதற்குத்தான் சிரிப்பது என்கிற விவஸ்தையும் கிடையாது. இன்னதுதான் பேசுவது என்கிற தாரதம்மியமும் கிடையாது. எல்லாமே பேச்சுதான். எல்லாத்துக்கும் சிரிப்புதான்.

'ஏண்டி இப்படி' என்றால்... அலட்சியமாய் எடுத்து வீச அவள் வாயில் பதில் ரெடியாக இருக்கும்.

"அறிவோட பேசினா... அஞ்சு நிமிஷம் பேசற துக்குத்தான் விஷயம் இருக்கும். நெதம் ஒன்னரையும், ஒன்னரையும் மூணு மைல் நடந்து சாகணும். நடை தோணாம இருக்கணும்; அலுப்பு தெரியக்கூடாது. நேரம் போறது தெரியாம இருக்கணும். அதற்கு என்ன செய்ய? என்னத்தையாச்சும் பேசிக் கழிச்சு, எப்படியாச்சும் சிரிச்சு, நாம நம்ம மனசை ஏமாத்திக்கிட வேண்டி யிருக்கு இல்லே?"

யோசித்துப் பார்த்தால்... ராசாத்தி சொல்வதிலும் நியாயம் இருக்கிறது. ஒரு வாழ்க்கை நிஜம் இருக்கிறது.

வெட்டிப் பேச்சுகளிலும், வீண் அரட்டைகளிலும், குழாயடிக் கசகசப்புகளிலும் விருதா வம்பு தும்புக் கச்சேரிகளிலும், காலத்தையும் காற்றையும் மனுஷ மக்கள் விரையப் படுத்துகிறார்களே... ஏன்?

உள்ளுறைந்து அழுத்துகிற வாழ்க்கை நிஜங்களையும், துன்ப அவலங்களையும் மனசால் மறந்து, தற்காலிக விடுதலை பெறுகிற செயற்கையான முயற்சிகள்தானா?

சொர்ணத்தின் இடது கையில் தூக்குச் சட்டி, அதே உள்ளங்கையில் டப்பாவும், சிட்டையும், காற்றைச் சீவிக்கொண்டு சன்னமாய் வீசுகிற வலது கை. ஒரே சீரான நடை. மனசுக்குள் நுட்பமாய் ஓடுகிற நினைவுகள்.

முன்னால் செல்கிறவர்களை எடை போடுவதைப் போலப் பார்க்கிறாள், சொர்ணம்.

கெங்கம்மாவின் பின்னங்கழுத்து தெரிகிறது. அவள் சடைப் பின்னலுக்கும் கழுத்துக்கும் அவ்வளவாக வித்தியாசமில்லை. ஒரே கறுப்பு.

ராமலட்சுமிக்குக் குச்சிபோல உடம்பு.

ராசாத்தி, 'குட்டைக் கத்தரிக்காய்' - குள்ளம். சற்றுக் குண்டு போலத் தோன்றும். ஆனால், அம்சமான லட்சணமான முகம்.

சொர்ணம் தன்னைப் பற்றியும் நினைத்துக் கொள்வாள். இவர்களோடு இணைத்து ஒப்பிடுவதே தப்பு. இவள் அழகு அப்படி. பத்தோடு பதினொன்று என்பதைப் போலல்ல இவள்.

தனியானவள். தனித்துவம் நிறைந்தவள். எண்ணற்று பூத்து ஜொலிக்கும் நட்சத்திரங்களில் ஒன்றல்ல. ஆகாயத்தின் நிலவு. ஒற்றையாய்த் தனித்து ஜொலிக்கும் நிலவு. மேகத்தால் கூட மூடிவிட முடியாத ஒளித் தகதகப்பு.

"ஏய் ராசு, சொர்ணம் பின்னாலேயே வாராளே, என்னவாம்?"

"அவ என்னிக்குத்தான் நம்மகூட வந்தா?"

"அதாண்டி கேக்கேன், அவா மட்டும் தனிச்சு வாராளே, அது என்ன சங்கதி?"

"நம்மகூட ஒட்டி வந்தா... பேயடிச்சிருமாம்."

"பேயடிச்சாலும் அவளை மட்டும் தனிச்சுத்தான் அடிக்கும்."

"எதுக்கு?"

"பேய்கூட தராதரம் பார்த்துத்தானே வந்து அடிக்கும்? அவாதானே சினிமா ஸ்டார் கணக்கா இருக்கா?"

"கெங்கு நீ ஆயிரம்தான் சொல்லு... சொர்ணம் நெசமாவே... ரேவதி கணக்கா இருக்காடி."

"சினிமாக்காரங்க கண்ணுல பட்டாள்னா... இவளை ஒரே கொத்தா கொத்திக்கிட்டுப் போயிருவாக."

பேச்சும் சிரிப்பும் அமளி துமளிப்பட்டது. ராசாத்தி குதித்துக் குதித்துச் சிரித்தாள். எல்லாம் சொர்ணம் காதில், விழத்தான் செய்தது.

உள்ளுக்குள், பூக்களை அள்ளிச் சொரிகிற சுகம். பனி படர்ந்த பூவிதழ்களால் மென்மையாய் வருடிவிட்ட மாதிரி... ஒரு புல்லரிப்பு. பூரிப்பு. பெருமிதத் ததும்பல்.

ஆனால் வெளிப் பகட்டுக்காகக் கோபிப்பது போலக் கண்டித்தாள். கண்களை வெறுப்புடன் இடுக்கினாள்.

"ஏய் கொரங்குகளா... என்னைப்பத்தி என்னடி பொரணி?"

"எங்க ஊரு ராணி நீ. ஒன்னைப்பத்தி பொரணி பேசிற முடியுமா? கழுத்தைச் சீவிடமாட்டே?"

ராசாத்தி பயப்படுவதைப்போல நடித்துச் சிரிக்க, ராமலட்சுமி உண்மையை உடைத்தாள்.

"நீ ரேவதி கணக்கா இருக்கீயாம். ஒன்னைப் பார்த்தால், சினிமாவுலே நடிக்கக் கூட்டிட்டு போயிருவாகளாம்."

"நா சம்மதிச்சாத்தானே?"

"ஒனக்குக் கசக்குமாக்கும்?"

"போங்கடி, தலைநிறைய தங்கத்தை குமிச்சிட்டு, கால்லே வுழுந்து கூப்பிட்டாலும்... நா நடிக்கப் போகமாட்டேண்டி."

"நாள் பூராவும் பசை இழுவி பெட்டி ஒட்டினாலும், குறுக்கு வலிதான் மிச்சம். பானைஞ்சு ரூவா சம்பளம்கூட கைக்கு எட்டமாட்டேங்குது. சினிமாவுலே நடிச்சா... லட்சம் லட்சமா பணம் குமியுமே. கட்டில்லே பணத்தை விரிச்சு, படுத்துப் புரளலாமே."

“வாயைப் பொளக்காதேடி. பணத்துக்காக மானத்தை உதுத்திட்டா... உசுர் வாழணும்?”

“நடிக்கிறவுக எல்லாம் மானங்கெட்டவுகளா?”

“அதெல்லாம் யாருக்குத் தெரியும்? கூச்சம் வெக்கத்தை உதுத்துனால்தானே அப்படியெல்லாம் நடிக்க முடியும்? நம்மாலே அப்படி உதுத்திட்டு இருக்க முடியாதம்மா.”

“லட்சம் லட்சமாப் பணத்தை அள்ளிக் குடுத்தா?”

“ஏண்டி, நூறுபேரு பாத்துக்கிட்டிருக்கிற கூட்டத்திலே, ஒருத்தன் ஒங்கையைப் பிடிச்சு இழுத்து, கட்டியணைச்சு முத்தம் குடுத்துட்டு, நூறுரூவா குடுத்தா... சரீம்பியா?”

“அதெப்படி? வெளக்கமாத்தை எடுத்து சாத்திருவேன், சாத்தி.”

“அப்படித்தாண்டி நானும்.”

இத்தனைக்கும் பிறகு ராசாத்தி கிண்டிக் கிளறினாள். “எட்டாப்பழம் புளிக்கத்தானே செய்யும்.”

வெடுக்கென்று அவளைப் பார்த்தாள். கண்களில் உஷ்ணச் சீறல். எதுவும் பேச விருப்பமற்று உதடுகள் துடிக்க மௌனமாகி விட்டாள்.

இதற்குமேல் இவளுடன் பேசுவதுகூட தகுதிக் குறைவு என்கிற கோப மௌனத்தில் உறைந்து போனாள், சொர்ணம்.

நொறுங்கிப் போன கிராமங்களிலிருந்து வேலை தேடி வியர்வை கொட்டி, பிழைப்பிற்காகப் புற்றீசல்களாகப் படை எடுத்து வருகிற ஜனத்தையெல்லாம்... பிரம்மாண்டமான ராட்சஸனாக வாய் பிளந்து விழுங்கி ஏப்பமிடத் தயாராக இருக்கிற அந்தச் சிறிய தொழில் நகரம்.

நெட்டி முறித்து உறக்கத்தை உதறிவிட்டு, பெருத்த கொட்டாவியோடு மலையாகப் புரண்டு எழுகிற அசுரமாய் நகரம்.

நடந்து வருகிற இளஞ்சிட்டுகளை, தாவணி மொட்டுகளை கண்ணால் நுகர்வதற்காகவே நோட்டும் கையுமாக ரோட்டோரக் கடைகளில் நிற்கிற கல்லூரி மாணவர்கள். அவர்கள் கண்களில் வெட்கமற்ற விடலைத் தாகம்.

பஞ்சாயத்து யூனியன் கட்டடம், பி.ஆர்.சி. பணிமனை, சினிமா தியேட்டர். இன்னும் கொஞ்ச தூரம்தான், பஸ் நிலையம். அதையும் தாண்டிச் சென்றால்... 'ரத்னம்' தீப்பெட்டி ஆபீஸ் வந்துவிடும்.

பஸ் நிலையத்துக்கு எதிர்ப்புறத்தில், வரிசையாகச் சேவுக் கடைகள் பார்க்கப் பார்க்க எச்சில் ஊறும். இப்போதே கடையைத் திறந்து வைத்து, பத்தி பொருத்தி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சாயங்காலம் ஆகிவிட்டால்... இந்த இடத்தில் விலக முடியாது. ஒருத்தர் தோளை ஒருத்தர் உரசிக்கொண்டு, 'ஜேஜே' என்று மனிதக் கூட்டம்.

இப்போது—

ரோடு வெறிச்சென்று கிடக்கிறது. அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஆட்கள். கழுதைகள். வாலைச் சுழற்றிக்கொண்டு பன்றிகள்.

இடதுபுறத்தில் வரிசையாக ரிக்ஷாக்கள். அதற்குள் மூடிக்கொண்டு கிடக்கிற ரிக்ஷாக்காரர்கள்.

அவர்கள் தலைக்குமேல் உயரத்தில் சினிமாத் தட்டிப் போர்டுகள்.

"ஏய் ராசாத்தி இங்க பாரடி, படம் மாத்திட்டாக."

"ஆமாண்டி. அய்ய்! ரஜினி படம்டி. இதென்னடி நம்ம பட்டிக்காட்டுக் கிழவன் கணக்கா... ரஜினி இருக்காருடி, இது என்ன படம்?"

"எங்கேயோ கேட்ட குரல்" என்றாள் சொர்ணம்.

"ரஜினி ஸ்டண்டுக்கும், ஸ்டைலுக்கும்தான் நல்லாருக்கும். கிழவனா வந்தா... படம் நல்லாருக்காது."

"இது பெரிய வெற்றிப் படம். வெள்ளி விழா கொண்டாடுன படம்."

"அப்படியா! அப்படீன்னா... இதைப் பாக்கணுமே."

சொர்ணம் இப்போதும் கண்டித்தாள்.

"ஏண்டி வெறும் பேச்சா பேசிக்கிட்டு வாரே? வாயை மூடிக்கிட்டு வாயேன். நம்மாலே சினிமா பாக்க முடியுமா? நாம ஆம்பளையா பொறந்துருக்கணும்."

"பொறந்துருந்தா...?"

"வேலைக்கு வந்துட்டு, இஷ்டம் போல சினிமா கினிமா பாத்துட்டு, ராத்திரி தங்கி, ராசா போல வீடு

போகலாம். பொட்டச்சியா பொறந்து தொலைச்ச தாலே... நாம நம்ம ரெக்கைகளை ஒடிச்சுட்டு ஒடுங்கிக் கிட வேண்டியிருக்கு."

விளையாட்டு வேடிக்கையாக ராசாத்தி பேசிச் சிரிக்கிறாள். அதற்குள் எத்தனை கொடிய வேதனை உள் ரணமாகத் துடிக்கிறது, உறைந்துகிடக்கிற சோகம்.

பெண் ஜென்மமாப் பிறந்துவிட்டதால் நேர்கிற இயற்கையான இடர்பாடுகளும் உபாதைகளும் போதா தென்று, சமூகத்தில் செயற்கையாக ஏற்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளும் ஒடுக்கு முறைகளுமாய்...

ஒரு விடலைப் பையனுக்குரிய உரிமையையும், சலுகையையும், உழைக்கிற ஒரு விடலைப் பெண் எடுத்துக்கொள்ள முடியவில்லையே...

அடக்க ஒடுக்கமாய் பண்போடு இருத்தல் என்கிற பெண் லட்சணத்திற்காகச் சொந்த சிறகுகளைச் சுயமாகவே நறுக்கிக் கொண்டு, நத்தைகளாய்க் கூட்டுக்குள் உள்வாங்கிக் கொண்டு... ச்சே!

சொர்ணத்திற்குள் ஆழமாய் அலை அலையாய் நினைவுகள். உலுக்கப்பட்ட மனசின் ஆழத்திலிருந்து பீறிடுகிற நினைவுகள். கிளறிக்கிளறி வாழ்வின் நிஜங் களை உணர்த்துகிற அவல நினைவுகள்.

"ச்சே! ஆம்பளைக்கு என்ன தனியாகக் கொம்பா முளைச்சிருக்கு? இல்லே, பன்னெண்டு மாசம் கர்ப்பத்துலே இருக்காங்களா?"

"ஏய் சொர்ணம், நடந்துக்கிட்டே கனா காண்றியா? ஆபீஸ் வந்துருச்சு."

# 4

தெற்காக நீள்கிற அகலமான தேசிய நெடுஞ் சாலையின் இடது விளிம்பில் சொர்ணம் மெது நடையாக நடக்கிறாள்.

கொஞ்சம் தள்ளி சிரிப்பும் கும்மாளமுமாய் அந்த மூவர். அதிலும் ராசாத்தியின் குதியும் கும்மாளமும்தான் ஜாஸ்தி.

யார் என்ன சொல்லிவிட்டாலும், ராசாத்திக்குச் சிரிப்புத்தான். எதற்குத்தான் சிரிப்பது என்கிற விவஸ்தையும் கிடையாது. இன்னதுதான் பேசுவது என்கிற தாரதம்மியமும் கிடையாது. எல்லாமே பேச்சுதான். எல்லாத்துக்கும் சிரிப்புதான்.

‘ஏண்டி இப்படி’ என்றால்... அலட்சியமாய் எடுத்து வீச அவள் வாயில் பதில் ரெடியாக இருக்கும்.

“அறிவோட பேசினா... அஞ்சு நிமிஷம் பேசற துக்குத்தான் விஷயம் இருக்கும். நெதம் ஒன்னரையும், ஒன்னரையும் மூணு மைல் நடந்து சாகணும். நடை தோணாம இருக்கணும்; அலுப்பு தெரியக்கூடாது. நேரம் போறது தெரியாம இருக்கணும். அதற்கு என்ன செய்ய? என்னத்தையாச்சும் பேசிக் கழிச்சு, எப்படியாச்சும் சிரிச்சு, நாம நம்ம மனசை ஏமாத்திக்கிட வேண்டி யிருக்கு இல்லே?”

சாப்பிட்டுவிட்டுப் போன மனுஷர், எந்நேரம் வரு கிறாரோ ஊர்மடத்தில் உட்கார்ந்து, ஊர்ப் பொரணி களைப் பேசத் துவங்கிவிட்டால்... வருவதற்குச் சாம மாகிவிடும்.

கிருஷ்ணம்மா குளித்து முடித்தாள். துணியை மாற்றிக் கொண்டாள்.

ஊர் அடங்கத் துவங்கிவிட்டது. மணி ஒன்பது இருக்கும். காடுகளில் வெயிலில் பாடுபட்ட அலுப்பில் உறங்கத் தொடங்கி விட்டனர்.

கிருஷ்ணம்மாவுக்குக் குளித்து முடித்ததில் ரொம்பத் திருப்தி. கழுவி முடித்த உடம்பு. புடைத்தெடுத்த தான்யத்தைப் போல நிம்மதியை அனுபவித்தது.

மனசுக்குள் ஓர் ஆசுவாசம். என்ன புண்ணியமோ... மனுசருக்கு மூன்று மாசமாகக் கோபமே வரவில்லை. குத்திக் குத்திப் பேசுகிற பேச்சே இல்லை.

"ஏமாத்தி எந்தலையிலே ஒன்னைக் கட்டிட்டு, உங்கய்யா போய்ச் சேந்துட்டாரு" என்று எந்நேரமும் கொத்திப் பிடுங்குகிற குற்றச்சாட்டு இப்போது இல்லை.

மனுசர் மனுசராக இருக்கிறார். அன்பான பேச்சு, குழைவான வார்த்தை, அக்கறையான விசாரிப்பு என்று மனுசர் தேனாக உருகி வழிகிறார்.

இதுவும் நல்லதுக்கோ... கெட்டதுக்கோ...

இந்த நல்ல புத்தி, இத்தனை வருஷமா எங்கே போய்த் தொலைஞ்சது? தாலி கட்டுன இந்தப் பத்து வருஷமா இந்த மனுசன் தந்த துன்பம் கொஞ்சமா? குத்திக் குத்திப் பேசிய பேச்சு கொஞ்சமா? அடித்த

அடிகளும், உதைகளும் கொஞ்சமா? வைத வசவுகள் கொஞ்சமா?

அடியாத்தி... சொல்லியழுதாலும் மாளுமா? பூமிதான் தாங்குமா? இத்தனை காலமும் வாழ்ந்தது வாழ்க்கையா? நரகம்! பொண்ணாகப் பிறந்த எனக்கும் இந்தக் கொடுமையா? அதுவும் பேரு பெற்ற பெரிய மனுசர், ஊரே கையெடுத்துக் கும்பிடக்கூடிய ராமானுஜர் வயிற்றில் பிறந்தவளுக்கா, இந்தக் கதி?

ஒருநாளாவது மனம் விட்டுச் சிரித்ததுண்டா? ஆசையோடு பேசியதுண்டா? மனுசி என்று மதித்த துண்டா?

இந்த நீண்ட கொடுமைகளையெல்லாம் ஒரு பழைய கனவோ என்று நினைக்கச் செய்கிற மாதிரி, மனுசர், இப்போது குழைகிற குழைவு என்ன, கனிவு என்ன?

இப்ப வந்திருக்கிற நல்ல நேரமும், நல்ல புத்தியும் நீடிச்சு நிலைக்கணும். அடக் கடவுளே, அதுக்கு நீதான் பொறுப்பு.

அதுக்கு ஈடாக நீ எதைக் கேட்டாலும் நா குடுத்துடுறேன். உன் சன்னதியில் வந்து ஒப்படைக் கிறேன்...

கதவைத் தள்ளுகிற சத்தத்திற்கு முன்பாக—

“கிட்ணம்மா...” என்ற அழைப்புக் குரல்.

“இருக்கேன்...”

உள்ளே வந்த நாராயணசாமி, மேல்துண்டை கொடியில் போட்டான். முன் வழுக்கையை வலது கையால் தடவிக் கொண்டான். மீசையில் ஒன்றிரண்டு நரை. காதோரம் முழுக்க நரை.

புள்ளைக ஒறங்கிருச்சுகளா?

"ம்."

"நீ சாப்பிட்டியா?"

"சாப்பிட்டுட்டேன். உங்களுக்குக் கொஞ்சம் சோறு வைக்கட்டா?"

"வேண்டாம். நான்தான் அப்பவே சாப்ட்டேனே. கொஞ்சம் தண்ணி கொடு."

செம்பில் கொண்டுவந்த தண்ணீரை வாங்கினான் நாராயணசாமி. முகத்தைப் பார்த்தான். மஞ்சள் பூசிக் குளித்த முகம். மகிழ்ச்சிப் பூரிப்பில் ஒலி சிந்தும் முகம். புருஷனின் பார்வையில் வழியும் தாபத்தில், நனைந்து குழைந்த மனசைச் சுமந்து வர்ணஜாலம் செய்கிற உணர்வு முகம்.

தண்ணீரைக் குடித்தான். நெஞ்சில் வழிந்த நீரைத் துடைத்துவிட்டு மெல்லிசாகச் சிரித்தான். சிரிப்பில் குறும்புத்தனம்.

"என்ன சிரிப்பாணி?"

"மூணு புள்ளை பெத்த பொண்ணு மாதிரியா யிருக்கே."

"பெறகு?"

"போன வருஷம் சடங்கான கொமரி கணக்கா யிருக்கே."

"உங்களுக்கு ரொம்ப மப்பு ஏறிப்போச்சு."

"இல்லே கிட்ணம். நா நெசமாத்தான் சொல்லுதேன். அசலா... கொமரி மாதிரியே இருக்கே. அம்புட்டு இளமை."

“இன்னிக்கு உங்களுக்கு என்னாச்சு?”

அவளுக்குள் பொங்கி வழிகிற பெருமிதம். பூரிப்பு. தேகமெங்கும் ஓடிச் சிலிர்க்கிற புல்லரிப்பு.

அதை மறைக்க முடியவில்லை. உதட்டிலும் கண்களிலும் இன்ப ஒலியாக வந்து உட்கார்ந்து கொண்டன.

அவள் செம்பை வாங்கிக்கொண்டு உள்ளே போனாள். பின்னாலேயே அவன்—

“இந்தா... சும்மா இருங்க. புள்ளைக...”

அதுக ஒறங்கிருச்சில்லே...”

“முழிச்சிருந்தாலும் முழிச்சிருக்கும்.”

“சும்மா... பதறாதே.”

“இந்தா... விடுங்க... ம்... விடுங்க.”

“விடமாட்டேன்.”

“எதுக்கு?”

“பேச்செல்லாம் வேண்டாம். சும்மாயிரு.”

கிருஷ்ணம்மா உள்ளுக்குள் ததும்பினாள். பாவனைக்காக மறுத்துத் திமிறினாலும்... மனசில் குழைந்தாள்.

வெறுப்பும் சிடுசிடுப்புமாய் அடைக்கோழியாக இருந்த மனிதர், எம்புட்டு மாறியிருக்கிறார். எம்புட்டு கனிஞ்ச மனிதராகி விட்டார்...

இப்படி நினைத்த கணத்தில்—

அவள் திமிறவில்லை. உடன்பட்டாள். குழைந்தாள். கொத்திப் பிடுங்குகிற வறுமைக்கு மத்தியிலும், அன்பான

வாழ்க்கை எத்தனை உன்னதமானது என்பதை மனசால் உணர்ந்தாள்.

திளைத்தாள்.

மறுநாள்—

காலைக் கரண்டு, மதியம் பன்னிரண்டு மணி வரைக்கும்தான் பம்ப்செட் மோட்டார் ஓடும். அதற்குள் அரைக் குறுக்கம் மிளகாய்ச் செடிக்குத் தண்ணீர் பாய்ச்சியாக வேண்டும்.

பங்குக் கிணறு. தன் பங்குக்குரிய நேரத்திற்குள் தண்ணீர் பாய்ச்சாமல் விட்டுவிட்டால், அவ்வளவுதான். வெள்ளாமை நாசம். காய்ந்து கனல் பறந்துவிடும். காலை அஞ்சரை மணிக்கே பதறியடித்துக் கொண்டு கண் விழித்துவிட்ட நாராயணசாமி, 'அவக் தொவக்' என்று எழுந்தான்.

கிருஷ்ணம்மா அடுப்பங்கரைக்குள் இருந்தாள். காப்பிச்சட்டி கொதிக்கிற 'ங்ங்ங்' என்கிற இரைச்சல்.

"சரி... கிட்டணம்மா, மம்பட்டி எங்கே இருக்கு?"

"தண்ணி பாய்ச்சவா?"

"ம்."

"கொஞ்சம் இருங்க. காப்பியைக் குடிச்சிட்டுப் போங்க."

"நேரமாவுது."

"இதோ ஒரு செகண்ட்லே."

அவன் எழுந்து முகத்தைக் கழுவினான். வாயைக் கொப்பளித்தான். மேல் துண்டால் அழுந்தத் துடைத்துக்

கொண்டான். அடுப்பங்கரைக்கு நேராக வந்து நடையில் வந்து உட்கார்ந்தான்.

அடுப்புத் தீயின் வெளிச்சத்தில் கிட்ணம்மாளின் நிறமே வினோதமாகப் பட்டது. ஒளியும் நிழலுமாக அவளே ஒரு புதிய தோற்றத்தில் இருந்தாள்.

"என்னங்க..."

"ம்."

"எங்க ஊருக்குப் போனீகளா?"

"போகலே. ரெண்டு மாசமாச்சு."

"எங்க அம்மாவைப் பாக்கலியா?"

"இல்லே..."

"என்னங்க... சொர்ணத்துக்கும் ஏதாச்சும் நல்லது பாக்க வேண்டாமா? ஏதும் துப்பு விசாரிச்சீகளா?"

"நாம என்னத்தைப் பாக்குறது?"

"அதென்ன அப்படிச் சொல்லிட்டீக? அம்மா பொம்பளை. அவளாலே என்ன செய்ய முடியும்? வீட்டுக்கு மூத்த மாப்பிள்ளை நீங்க. நாமதானே ஏதாச்சும் செய்து வைக்கணும்."

நாராயணசாமிக்கு மனம் 'திக்திக்'கென்றது. ஏதோ சொல்லிவிட மனசு கிடந்து அடித்துக் கொள்கிறது. 'இல்லே... இது பொருத்தமான நேரமில்லே' என்று அறிவு லகான் போடுகிறது.

மனைவியைப் பார்க்கத் தெம்பில்லாமல் இருட்டைப் பார்க்கிறான். கள்ள மனசு எங்கெங்கோ துள்ளுகிறது, பாய்கிறது, தவ்வுகிறது, குதிக்கிறது.

மறுபடியும் லகானை ஒரு சுண்டு சுண்டி அடக்கிக் கொண்டான். மூளைக்குள் ஏதோ ஒரு நெறுநெறுப்பு.

மெல்ல யோசிக்கிறான். நிதானிக்கிறான். மூளையின் முறுக்கு தளர்கிறது. மெல்லத் தன்னிலைக்கு வருகிறான்.

"ஏங் கிட்ணம்..."

"என்னங்க."

"நமக்குக் கல்யாணம் மூய்ஞ்சி எத்தனை வருஷ மாகுது?"

"இந்த மாசி முடிஞ்சா... பதிமூணு வருஷமாகுது. அதுக்கென்ன இப்போ?"

"இல்லே கிட்ணம்... நாம கல்யாணம் மூய்றதுக்கு முந்தியே எனக்கொரு ஆசை இருந்துச்சு. அந்த ஆசை இன்னும் கைகூடவேயில்லே."

"அது என்னங்க ஆசை...?"

"சொந்தமா ஒரு பம்பு செட்டுக் கிணறு, புஞ்சை, அத்தோட ஏழு ஏக்கர் கருசக்காடு இருக்கணும்."

"இருந்தா நல்லதுதான். இருக்கணுமே. அதுக்கும் யோகம் வரணும். நேரம் பொழுது எல்லாம் கூடி வந்தா... எல்லாம் தானாகவே வந்து சேரும்."

"யோகமா?"

"அது ஒரு பக்கம் இருக்கட்டுங்க. சொர்ணத்தைப் பத்திப் பேசுங்க. அவளுக்கு ஒரு இடம் பாருங்க."

"அவளைப் பத்தி நா ஒரு நினைப்பு வைச்சிருக் கேன்."

"என்னங்க அது?"

“பொறு. பொறு. காலம் நேரம் வர்றப்போ நா சொல்றேன்.”

“அது என்னன்னுதான் சொல்லுங்களேன்? ஏங் கிட்ட சொல்ல முடியாத ரகசியமா?”

“சொல்றேன். சொல்றேன். முதல்லே காப்பியைக் குடு நேரமாவுது.”

“இந்தாங்க.”

“சரி... நா புஞ்சைக்குப் போறேன்.”

“என்னமோ நினைப்புன்னு சொன்னீகளே?”

“அதான்... பொறுன்னு சொன்னேனே. இந்தா தம்ளர், நா வரட்டா?”

“ம்... சோறு கொண்டாரணுமா?”

“ஆமா நல்ல தண்ணியும் கொண்ணாந்துரு.”

“சரிங்க.”

“பீடி, தீப்பெட்டியும் வாங்கிட்டு வந்துரு.”

வாசலைத் தாண்டுகிற சப்தம். தெருவில் அவன் நடக்கிற காலடியோசை.

அவளும் ஒரு கிளாசில் கடுங்காப்பியை ஊற்றி மெல்ல உறிஞ்சினாள். நினைவு முழுவதும் புருஷன் மீது-

சண்டையும் சச்சரவுமாய், கோபமும் தாபமுமாய் வீட்டையே வருஷக்கணக்காக ரணகளப்படுத்திக் கொடுமைப்படுத்திய மனிதர் என்னமாய் மாறிவிட்டார்!

இது நிலைக்கணுமே! இப்படியே அன்பும் ஆசையுமாய்ச் சிரித்துப் பழகுகிற குணம் நீடிக்கணுமே.

நீடிக்க என்ன செய்யணும்...?

# 6

**தை** முடிந்து மாசி பிறந்து தேதி ஐந்து கழிந்தால்... நாராயணசாமிக்கு வயது 42 முடிந்து 43 ஆகிறது. காதோரம் நரை.

அட... அதற்குள் இத்தனை வயதாகிவிட்டதா! இந்த நினைப்பு திடுதிப்பென்று நெஞ்சுக்குள் தோன்றி, ஒரு வியப்பாகப் படர்ந்து மலைக்க வைக்கிறது. சிறிது கலக்கம்கூட வருகிறது.

பார்த்திருக்க, காலமும், வயதும் பரபரவென்று ஓடிப்போய் விட்டதே! நேற்றுப்போல இருக்கிறது. கல்யாணம் முடிந்து, பதின்மூன்று வருஷம் மாயமாகி விட்டதே... அடேயப்பா!

கல்யாணம் என்றால்... இலேசுப்பட்ட கல்யாணமா? இவனது விரலுக்கேற்ற வீக்கமா, அது? ராஜவீக்க மல்லவா!

சாமான்யமான வீட்டுச் சம்பந்தமா? சுற்றுப்பட்டி பத்து ஊரும் ஓகோவென்று கொண்டாடுகிற பெரிய பண்ணை ராமானுஜம் வீட்டுச் சம்பந்தமல்லவா? லேசாக நடக்கவிடுவாரா?

அடேங்கப்பா... ஏழுநாள் கல்யாணம். ஏழு ஊரு ஜனமும் ஒன்றாக வந்து கூடிக் கும்மாளமிட்டு, ஆக்கி, அவித்து, தின்று தீர்த்ததே.

கிருஷ்ணம்மாவின் அய்யா ராமானுஜம், ஏற்கெனவே பண்ணை. அதிலும் ஜமீன்தார் என்கிற நினைப்பில் மிதப்பவர். கேட்க வேண்டுமா?

அவர் வீட்டு மருமகனாக முடியும் என்று நாராயண சாமி நினைத்துக்கூடப் பார்த்திருப்பானா? அதற்கான தகுதி தனக்கு உண்டு என்று கனவில்கூட ஒப்புக் கொள்ள முடியாதே...

நாராயணசாமி குடும்பம் வெறும் டப்பாக் குடும்பம். பெருங்காய டப்பா. இவனது தாத்தா காலத்தில் 'ஜேஜே' என்று இருந்ததாகக் கேள்வி. அதெல் லாம் ரெண்டு தலைமுறைக்கு முந்தின கதை. ரெண்டு தலைமுறைக்குள் விவசாயம் நொடித்து, பெருங்காய மெல்லாம் மாயமாகி, வெறும் டப்பாவாகிவிட்டது.

எச்சமிச்சமாய் நின்ற குலக்கொழுந்துவுக்கு மிஞ்சிய தெல்லாம் ஒரு கூரை வீடும், கிணற்றுப் பாசனத்தில் ஒன்றேகால் குறுக்கம் புஞ்சையும்தான்.

கிணற்றிலும் நல்ல தண்ணீர் கிடையாது. மண்ணை உவர்நிலமாக மாற்றக்கூடிய உப்புத்தண்ணீர். வாயில் வைக்க முடியாது. நாக்கில் பட்டுவிட்டால், குடல் வரைக்கும் உப்புக் கரிக்கும்.

அப்பேர்ப்பட்டவனுக்கா ராமானுஜம் வீட்டில் சம்பந்தம்?

ஊரே மூச்சு அடைத்துப் போய் நின்றது. வட்டாரத்தில் எங்கு நின்றாலும், இதுதான் பேசுகிற பேச்சாகிக் கிடந்தது.

நாராயணசாமிக்கே நம்பமுடியாத ஆச்சரியம்தான்! 'நம்மைப் பிடித்த பீடை இத்தோடு தொலைந்தது, நல்ல

*காலம் பிறந்துவிட்டது' என்று நிஜமாகவே நம்பினான். கிடைத்தாலும் கிடைத்தது - புளியங்கொம்பாய்க் கிடைத்துவிட்டது என்று பூரித்துக் கிடந்தான்.*

*சுற்றியிருந்த சக இளவட்டங்களும் அதையே சொல்லிக் கோட்டா பண்ணிச் சிரித்தனர்.*

*"இனிமே என்ன, நாராயணன் பெரிய பண்ணை யாருதானப்பா. சமுத்திரத்துலே தலா (ஏற்றம்) போட்டுட் டான். ஏழு தலைமுறைக்கும் வத்தாது."*

*எல்லாம் ஒரு வருஷம்தான்.*

*கிருஷ்ணம்மா 'ஆறுமாசம்' என்று வயிற்றில் சுமந்து கொண்டிருந்தபோது... ராமானுஜம் பொசுக்கென்று போய்ச் சேர்ந்துவிட்டார். பத்து ஆள் கூடி அடித்தாலும் சாய்க்க முடியாது. அப்பேர்ப்பட்ட ஓங்குதாங்கான ராமானுஜம் 'நெஞ்சு வலிக்குது' என்றார். சோடா வருவதற்குள் உயிர் போய்விட்டது.*

*அவர் போனபிறகுதான் சமுத்திரம் வற்றிக் கிடக்கிற நிஜலட்சணம் தெரிந்தது. விளைந்த விளைச்சல் எல்லாவற்றையும் ஏதேதோ வியாபாரிகள் கொள்ளை யடித்துக் கொண்டு போயிருக்க - ராமானுஜம் அதை யெல்லாம் கவனிக்காமல் கோர்ட் கேஸ்களுக்கும், வைப்பாட்டி வீடுகளுக்குமாய் வாரி வழங்கியிருக்கிறார்.*

*பெரிய பெரிய தொகைக்கு பத்திரக் கடன்கள். காடுகரைகள் யாவும் 'ஒத்தி'க் கடன்களில் மூழ்கிப் போயிருந்தன. கடைசியில்—*

*மிஞ்சியதெல்லாம் வீடும் மூன்றரைக் குறுக்கம் கிணற்று இறவைப் புஞ்சையும், ஏழு குறுக்கம் மானா வாரிக் கரிசல் காடும்தான்.*

அதுவும் சொர்ணத்திற்கு.

நாராயணசாமியின் பண்ணைக் கனவுகளும், மகிழ்ச்சியும், கரிசல் காட்டுக் கானல் நீராகிவிட்டது. வெட்கக்கேடான நிராசை. வெளியே சொல்ல முடியாத கேவலம். ஊமையன் கண்ட கெட்ட கனா.

விலகுகிற மாதிரி பாவலா காட்டிய பீடை, கழுத்துப் பிடியாகப் பிடித்துக்கொண்டது. ஊர் சிரித்துவிட்டது. நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாம் போலிருந்தது.

அந்தக் குருட்டுக் கோபம் முழுவதும் கிருஷ்ணம்மா மேல் திரும்பியது. பாய்ந்தது. 'உங்க அப்பன் பிழைப்பு தெரியாதா, உங்க ஆத்தா பிழைப்பு தெரியாதா' என்று கத்திச் செருகலான வசவுகளாக வெடித்தன.

பதின்மூன்று வருஷம் கிருஷ்ணம்மாவை அடித்து உதைத்தும், வாட்டி வதைத்தும், வாழ்க்கையையே நரக மாக்கிக் கூத்து நடத்தியது, அந்த ஊமைக் கோபம்தான்-

எல்லாம் ஆயிற்று. பதின்மூன்று வருஷம் ஒரு கனா போலப் போய்விட்டது. இத்தனை கால வாழ்க்கையில் என்னத்தைச் சாதிக்க முடிந்திருக்கிறது? மூன்று ஆண் பிள்ளைகள். அதுதான் மிச்சம்.

இரவும் பகலுமாய் உஸ்ஸென்று உட்கார நேரமில் லாமல் ஓடி ஓடிப் பாடுபட்டாகிவிட்டது. கிருஷ்ணம் மாளும் உழைத்துப் போட்டதில் குறை வைத்திருக் கிறாளா? காட்டிலும் உயிரைக் கொடுத்து, வீட்டிலும் வந்து 'வேலை வேலை' என்று மாய்ந்திருக்கிறாள்.

என்ன பிரயோசனம்? ஒரு பாத்தி அகலம் பூமிகூட வாங்க முடிந்ததில்லை. வயிற்றுப் பாடே 'ஆத்தாடி அம்மாடி' என்றுதான் கழிகிறது.

கிருஷ்ணம்மாளுக்கு ஒரு நல்லது பொல்லாதது என்றால்கூட, நல்ல சேலை துணிமணி எடுத்துத் தர முடிந்திருக்கிறதா? பிள்ளைகளுக்கு உருப்படியான டவுசர் சட்டைகளாவது எடுத்துக் கொடுக்க மனம் வந்திருக்கிறதா? முடிந்திருக்கிறதா?

ஊஹூம்! முழத்துக்கு ஆசைப்பட்டால், சாண் சறுக்குகிற பிழைப்புத்தான்.

என்ன பயல் பிழைப்பு இது?

**நா**ராயணசாமி பொழுதுக் காலைப் பார்த்தான். காலைச் சூரியன் தை மாதக் கதகதப்பில் சுகமாக இருந்தது. பாத்தியில் நீர் சரியாகப் பாய்ந்தும் பாய்வ தற்குள் வாய் மடையை விலக்கினான். தண்ணீர் ஓடிப் பாய்ந்தது. மிளகாய்ச் செடியில் சுருட்டை நோய். பாத்தி அடைத்து அடர்த்தியாக இருக்க வேண்டிய செடிகள், ஒடுக்கிப் பிடித்துக் கட்டிய விளக்குமாறு போல நின்றன.

மருந்து அடித்துவிட்டுத் தண்ணீர் பாய்ச்சியிருந் தால்... நோய் மாறி தளிர் எடுக்கும். மருந்து வாங்க வக்கில்லை. கைமாற்றுக்கு அலைந்து பார்த்தான். யாரும் தரவில்லை. வேறு வழி.

வெறும் தண்ணீர் பாய்கிறது.

ஒரு பாத்தியைக் கொத்தி விட்டுவிட்டு, டிராயர் பைக்குள் கை விட்டான். பீடியை எடுத்துப் பற்ற வைத்தான்.

பீடியில் பழைய மணம் இல்லை. ஏதோ ஒரு கெட்ட கமறல் வாடை வீசுகிறது. ரொம்ப மட்டமான புகையிலை இணுக்கை வைத்திருப்பார்கள் போலும்.

ச்சே என்று மனம் அலுத்துக் கொண்டது.

... இவன் அப்போது ரொம்பச் சின்ன வயசு. ஆறு வயசு ஏழு வயசுக்குள்தான் இருக்கும். 'அரிச்சலாக' ஞாபகம் இருக்கிறது.

ஒரு நாள்—

ஊரே அலறுகிற மாதிரி பாட்டுச் சத்தம் கேட்டது. 'என்னடா இது, மைக்செட் பாடிக்கொண்டு நகர்ந்தும் வருமா?' என்று ஜனங்கள் திகிலடித்துப் போனார்கள்.

ஒரே திகைப்பு. புரிபடாத ஆச்சர்யம். சத்தம் வந்த திசை நோக்கி சகல ஜீவன்களும் ஓட்டமும் நடையுமாக புழுதியைக் கிளப்பிக்கொண்டு வந்து பார்த்தால்... அங்கே ஒரே அதிசயம்.

மஞ்சள் பூதமாய் ஒரு வேன். வேனுக்குள் சுற்றிலும் பச்சையிலும் சிவப்பிலும் கலர் கலராய் டியூப் லைட்கள். வேனின் உட்புறத்தில் பார்த்தால்... தேவலோகம் போல வினோதமாக — பலபல வர்ண ஒளிக் கலவையாக... அட, இந்திரலோகம் இப்படித்தான் இருக்குமோ...

வேனே அதிசயம். நகரும் கரண்டு அதிசயம். ஒளியலங்காரம் அதைவிட அதிசயம்.

கொஞ்ச நேரம் பாட்டுப் போட்டார்கள். எதைப் பார்ப்பது, எதைப் புரிவது என்று ஜனங்கள் திகைத்துப் போய்க் கிடந்தனர். பேச வார்த்தை வராமல், வாய் எழும்பாமல் ஜனங்கள் அசந்துபோய்க் கிடந்தார்கள்.

கூடிய கூட்டத்தின் தலைக்கு மேலாக, பீடிகளை கொத்துக் கொத்தாக அள்ளி இறைத்தார்கள்.

இளவட்டங்களிடம் முழு முழுப் பீடிக் கட்டுகளைக் கொடுத்தனர். ஓசிதான்.

வேனுக்குள் இருந்தவர்கள் பீடி குடிக்கிற - நாசி வழியாகப் புகை விடுகிற - அதிசயத்தைப் பார்த்து பிரமித்துப் போய் நின்றனர். கையில் இருந்த பீடிக் கட்டு களை இளவட்டங்கள் மகிழ்ச்சியோடும் வியப்போடும் பார்த்தனர், மந்திரக்கோல் கிடைத்துவிட்ட மாதிரி.

அந்த இடத்திலேயே சில இளவட்டங்கள் துணிச்ச லாக பீடியைப் பற்ற வைத்துப் புகைத்துப் பார்த்தனர்.

அந்த நாற்றமும், வாடையும் புதிதாக இருந்ததால் — ஒவ்வாமல் நெஞ்சு வெடிக்க இருமினர். சிரித்தனர். கண்ணில் நீர் வரச் சிரித்தனர்.

குத்துக் குத்தாக அள்ளி ஜனங்கள் தலைக்கு மேல் ஓசியாக இறைக்கப்பட்ட அந்தப் பீடிகள், இப்போது ஒரு பீடி பத்துப் பைசா. அதிலும் நாலில் ஒன்று பழுது.

இந்தப் பீடி இல்லாமல் இப்போது மனிதன் இருக்க முடியவில்லை. ரத்தத்தோடு ஒட்டிப் போய்விட்டது.

எங்கேயோ... கண்காணாத இடத்தில் இருந்து கொண்டு முதலாளிகள் இந்தப் பட்டிக்காட்டு ஜனங்கள் மேல்... வலையை வீசிவிட முடிகிற அதிசயத்தையும், மீன்களைப் பிடிக்காமலேயே ரத்தத்தை மட்டும் உறிஞ்சிவிட முடிகிற சாமர்த்தியத்தையும் நினைத்துப் பார்த்தால் ஆச்சர்யமாகத்தான் இருக்கிறது. நாராயண சாமிக்குள் ஒரே பிரமிப்பு.

தோலிருக்க சுளையைத் தின்கிற சாமர்த்தியம் என்பது இதுதானா?

நினைவு மனசுக்குள் தன்போக்கில் நடை போட, கை தன்பாட்டில் வேலை செய்துகொண்டிருந்தது. மிளகாய்ச் செடிகளைப் பார்க்கப் பார்க்க வயிறு கொதிக்கிறது. உள்ளுக்குள் பயமும் குருட்டுக் கோபமு மாய் அலைமோதுகிறது.

'தை மாசம், தடவு பழம்' என்று சொலவடை.

பூவுக்கும் பிஞ்சுக்கும் பஞ்சம் வந்து, நோய் முற்றிக் கிடக்கிற செடியில், தடவு பழத்துக்கு எங்கே போவது?

வாங்கியிருக்கிற கடன்களை நினைத்தால்... மனசுக்குள் புளியைக் கரைக்கிறது. 'எப்படி கடன் கட்டி, மீண்டுவரப் போகிறோமோ?'

மருந்து வாங்க - உப்பு வாங்கப் பணமில்லாமல், கடன் கேட்டு அலைந்தபோது, தாட்சண்யமில்லாமல் முகம் திருப்பிக்கொண்ட 'கைத் துட்டுக்காரன்'களை நினைத்தால்... அவமானமாக இருக்கிறது. வேதனை யோடு மட்டியைக் கடித்துக் கொண்டான்.

அந்தப் பயல்கள் நம்மை 'எம்புட்டு' இலேசாக நெனைச்சுட்டாங்க. 'வக்கு இல்லாத பய' என்கிற நெனைப்புலேதானே... தயவு தாட்சண்யம் பார்க்காம தலையைக் குலுக்கிட்டாங்க?

அந்தச் சின்னப் பயக நெனைப்பை நெசமாக்குகிற மாதிரிதானே வெள்ளாமை நடப்பும் வந்து வாய்ச் சிருக்கு. வெறும்பய வெள்ளாமை.

வேதனை நினைவுகள். வியாகூலப் பெருமூச்சு. புண்ணைச் சுற்றி மொய்க்கிற ஈக்களாய், சள்ளைப் பிடித்த நினைவுகள்.

கிணற்றின் பக்கம் பார்த்தான். மோட்டார் ஓடிக் கொண்டிருக்கிறது. தொட்டியில் விழும் நீர்க்கற்றை, சூரிய ஒளியில் வெள்ளியாக மினுமினுக்கிறது.

இந்தக் கிணற்றில் இவனுக்கு ஒரு துண்டுப் பங்கு. ஆறில் ஒரு பங்கும், ஒரு பங்கில் மூன்றில் ஒன்றும்.

இந்தப் பங்குத் தண்ணீரைப் பகிர்ந்து பாய்ச்சு வதற்குள் ஆயிரத்தெட்டு வம்பு வழக்குகள், சண்டை சச்சரவுகள், சட்ட வியாக்யான சண்டப் பிரசண்டங்கள். ஒரு சுற்றுத் தண்ணீர் பாய்ந்து முடிப்பதற்குள்.. ஆத்தாடி அம்மாடி என்றாகிவிடும். அன்றாட மல்லுக்கட்டுப் பிழைப்புதான். ச்சே! ஈனப்பயல் பிழைப்பு!

நம்ம புஞ்சை, சதுரமாய் நாலு குறுக்கம். சொந்தப் பம்ப் செட் கிணறு. பங்கு பகிர்வு என்று எந்த நாயும் அண்ட முடியாமல் முழுச் சொந்தமாய் - ஏக பாத்யதை யாய் கிணறும் புஞ்சையும் தனியாக மானாவாரிக் கரிசல் காட்டில் ஒரு ஐந்து குறுக்கம் காடு...

இப்படி இருந்தாலல்லவா, முழுச் சம்சாரி என்றாக முடியும்! கம்பீரமாய் நெஞ்சு நிமிர்த்தி நானும் சம்சாரி தாண்டா என்று சொல்லும் தகுதி வரும்.

அப்படி இருந்தாலல்லவா, கடன் கொடுக்கிறவனும் நம்பிக் கொடுப்பான். “நாராயணசாமிக்கு என்னப்பா விளைஞ்சாலும் விளையாட்டாலும் குடுத்த கடன் வீடு வந்து சேருமப்பா. காடுகரைக நிறைய கிடக்கு” என்று நம்பிக்கையோடு பேசுவார்கள்.

நாராயணசாமிக்கு மனசு நமநமத்தது. சொந்த பம்ப் செட் சாவியை அரைஞாண் கயிற்றில் தொங்கவிட்டு

'என் கிணறு' என்று உரிமையோடு சொல்கிற காலம் வருமா? எப்போது வரும்? வராமலேயே போய்விடுமா?

கிருஷ்ணம்மாவின் அய்யா வீடு நொறுங்கிப் போனாலும், சொர்ணத்திற்கென்று மூணறைக் குறுக்கம் இறவைப் புஞ்சை ஒரே சதுரமாய்க் கிடக்கிறது. தனிக்கிணறு. மானாவரிக் காடும் கிடக்கிறது.

வெள்ளாமை செய்ய ஆளில்லாமல் தரிசாகக் கிடக்கின்றன, இளம் விதவையாக.

சொர்ணம் இல்லையென்றால்... எல்லாம் கிருஷ்ணம்மாக்குத்தான். நமக்குத் தான்.

இருக்கிறாளே... தடையாக இருக்கிறாளே.

வருஷக்கணக்கான அவனது நிலக் கனவை, பகல் கனவாக்கிக்கொண்டு, சொர்ணம் இடையில் மதிலாக...

தடையையே பாலமாக்கிவிட்டால்... சொர்ணத்தின் மூலமே நிலக் கனவையும், தனிக் கிணற்றுச் செல்வத்தையும் கைவரப் பெற்றுவிட்டால்...

சொர்ணம் இரண்டாம் தாரமாகத் தனக்கு வாழ்க்கைப்படச் சம்மதிப்பாளா? கிருஷ்ணம்மாவைப் பயன்படுத்திச் சம்மதிக்க வைத்துவிட முடியுமா?

நடக்குமா?

நியாயமா?

ஊர் உலகத்தில் நடக்காததா? இந்த ஊரிலேயே அக்காள் தங்கச்சியை கட்டிக்கொண்ட ஆம்பளை ரெண்டு பேர் இருக்கிறான்களே...

அவனுக்குள் உப்பங்காற்றின் குளிர்மை. ஜில்லென்று பூத்துச் சொரிகிற பூக்கள்.

ஏதோ நினைவில் முன் வழுக்கையை இடது கையால் தடவிக் கொண்டான்.

# 7

**ம**ணி பார்த்தான். ஏழு இருபத்தெட்டு. மனசுக்குள் ரத்னம். சாப்பிடாமல் காத்திருப்பாள். கெஞ்சலாய்க் கெஞ்சிய அவளது குரல், மனசைப் பிடுங்கியது.

"ம்... ம்... ம் போக முடியாது போலிருக்கே. இன்னும் வேலை முடியலையே" என்று வாய்விட்டு முணங்கிக் கொண்டான், அருஞ்சுனை.

ஆபீஸுக்கு வெளியே எட்டிப் பார்த்தான்.

லாரியில் லோடு பண்ணி முடித்தாகிவிட்டது. இரண்டாள் உயரத்திற்கு லோடு. பூராவும் தீப்பெட்டிப் பண்டல். பண்டல் தெரியாமல் முழுக்க தார்ப்பாய்கள், தார்ப்பாயின் மேல்கட்டில் நார்ப் பின்னல் மாதிரி இறுக்கிக் கட்டப்பட்டிருந்த கயிறு.

டிரைவர் வீட்டிற்குப் போயிருக்கிறான். 'போனதும் வாரேன்' என்று சொல்லிவிட்டுப் போனவன், இன்னும் வந்து சேரவில்லை. இன்றைக்குப் புறப்பட்டால், திரும்பிவர பதினைந்து நாள்களுக்கு மேலாகிவிடும்.

பெண்சாதியிடம் பிரிவு சொல்வதில் தாமதமா? தேவையான வீட்டுச் சாமான்கள் வாங்கிப் போட்டு விட்டு வருவதில் தாமதமா? இதில் தாமதப்பட என்ன இருக்கிறது? செலவுக்காக ரூபாயைக் கொடுத்துவிட்டு, வந்து சேர வேண்டியதுதானே!

அருஞ்சுனைக்கு வயிறு பசித்தது. ‘கப கபா’ என்றது. ஆபீஸ் ரூமை விட்டு வெளியே வந்தான்.

குழந்தைகள், பெண்கள் எல்லோரும் போய் விட்டனர். விரிந்து பரந்த வெட்டவெளியான ஹால், ‘ஹோ’வென்று வெறுமை கூச்சலிட்டது.

ஒட்டிக் கிடக்கிற பெட்டிகள், அட்டைகள், தாள் கட்டுக் குவியல்கள், பார்சல்கள், மூட்டை முடிச்சுகள். எல்லாவற்றையும் உள்ளூர் ஊழியர்கள் ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கின்றனர்.

“ஏப்பா...”

ஒருவனை அழைத்தான்.

“என்ன மோலாளி...”

வெறுப்பில் இவன் முகத்தைச் சுளித்தான்.

“போய்... டிரைவரை சீக்கிரம் வரச் சொல்லிட்டு வா.”

“சரி மோலாளி” என்றவன், எதற்கோ தயங்கினான். முகத்தில் குழப்பம். கண்களில் பயம்.

“என்னப்பா?”

“இல்லே மோலாளி... டிரைவர் வீடு...”

“வீடு தெரியாதா? பைபாஸ் ரோட்டுலே காந்தி தெரு, போய் விசாரிச்சுப் பாரு, தெரியும்.”

"ஆட்டும் மோலாளி."

வெளியே வந்த அருஞ்சுனைக்குள் 'மோலாளி' என்ற உச்சரிப்பு வெறுப்பூட்டியது.

"முதலாளி என்று ஒழுங்காச் சொல்லணும். இல்லேன்னா, அண்ணாச்சின்னு சொல்லிட்டுப் போக வேண்டியதுதானே! மோலாளியாம், மோலாளி! ச்சே!"

மெயின் பஜாருக்கு வந்தான். சோடியம் விளக்கின் வெளிச்சத்தின் அழுக்கான மஞ்சளில், எல்லாம் பொய் பொய்யாகத் தெரிகின்றன.

அருஞ்சுனை ஒரு ஹோட்டலில் நுழைந்தான். வழக்கமான ஹோட்டல். காலியாய்க் கிடந்த மேஜையின் முன் உட்கார்ந்தான்.

சமையல் ரூமிலிருந்து கல்லாப்பெட்டி நோக்கிவந்த முதலாளி, இவனைப் பார்த்து, "வாங்க அண்ணாச்சி" என்று வரவேற்போடு புன்னகையைக் குளிர்ச்சியாக உதிர்த்தார். போகிற போக்கில் காற்றாடியின் சுவிட்சைத் தட்டிவிட்டார்.

"அண்ணாச்சி, என்ன கொண்டார?" அந்நியோன்ய மாய் நெருங்கி நின்று கேட்கிற சப்ளையர்.

"என்ன ஸ்பெஷல்?"

"ஜாங்கிரி, தூள் பஜ்ஜி."

"சரி... கொண்டா."

அந்தச் சிறிய ஹோட்டலில் மொத்தம் பத்து மேஜைகள்தான். அதிலும் மூன்று காலி. ஜாங்கிரியைப்

பிய்த்து துண்டு துண்டாக்கி, சாவகாசமாய் வாயில் போட்டுக் கொண்டிருந்தான்.

சற்று முன்னால் — பக்கத்து மேஜையில் ஓர் இளம் குடும்பம் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறது.

பெண்ணின் குறுகலான முதுகும், மடிப்பு விழாத தேன் கலர் இடுப்பும் தெரிகிறது. அவளது இடது புஜத்தில் தலையை வைத்து, விரலைச் சூப்புகிற மழலை.

சிவந்த பிள்ளை. பூ மாதிரியான முகம். மிருதுவான கன்னம். சுருள் சுருளான பஞ்சு முடி. மின்விசிறியின் காற்றுக்கு அந்த முடி ஆடுகிறபோது.. மனசுக்குள் விரிகிற மாய அழகு, மன ஆழத்தில் மெல்லுணர்ச்சியைச் சீண்டி எழுப்புகிற அழகு.

அந்தப் பஞ்சு முடியில் முகம் புதைத்து முத்தமிட வேண்டும் என்று அருஞ்சுனையின் மனம் உன்மத்தம் கொள்கிறது. சூழல் பிரக்ஞையை மூழ்கடித்து, ஓங்காரமாய் எழுந்து ஆட்டுவிக்கிற உன்மத்தம்.

சின்னக் கண்களில் கருந்திராட்சை உருண்டைகளாக உருள்கிற விழிகள். இவன்மீது வந்து, தொட்டுத் தொட்டு விளையாடுகிற விழிகள். இவனது உள்மனத் தாபங்களுடன் சீண்டி விளையாடி, பாஷைகள் பேசுகிற அதன் குறுவிழிகள்.

சூப்புகிற விரலை எடுக்காமலேயே எச்சிலை வடித்துக் கொண்டு, சின்ன உதடுகளை விரித்து, அந்த உயிர்ப்பூ சிரிக்கிற அழகு...

இவனது ஆவியே துடித்தது.

*அந்தக் குழந்தையை அப்படியே அள்ளணும், தூக்கிப் பிடித்து விளையாடிக் கொஞ்சணும். ரோமங்கள் அடர்ந்த தன் மார்பில் அதைப் போட்டுச் சீராட்டணும்.*

*அவனுள் துடிக்கிற உயிர். இதயமே விம்மி வீங்கி வெடிக்கப் போகிற மாதிரியானதோர்... உணர்வு.*

*உருட்டிய வெண்ணெய் உருண்டையாகக் குழந்தையின் வயிறு. அதன் மென்மைக் குளிர்ச்சியில் மீசை ரோமங்களும் உதடுகளும் அழுந்த அழுந்தப் பதித்து, முத்தமிட... அதன் கூச்சத்திலும், மகிழ்ச்சியிலும் தாளாமல் கிணுகிணுத்து, குழந்தை சிரிக்க... வழிகிற மழலையின் எச்சில், நெற்றியில் தேனாய் விழுந்து வழிந்தால்...*

*ஆகா! அந்தச் சுகம். வார்த்தைகளுக்குள் பிடிபடாத தேவ சுகம். விளிம்புகளே இல்லாத ஆகாயச் சுகம்.*

*அவன் நெஞ்சம் பொங்கித் ததும்பியது. கற்பனைச் சுகத்தில் கனிந்து, கனம் குறைந்து, அடிக்காமல் சிறகு விரித்த நிலையில் அந்தரத்தில் மிதக்கிற மாதிரியோர் உணர்ச்சி.*

*எல்லைகளற்ற இந்த ஆகாயச் சுகத்தை சொந்தமாக அனுபவிக்கிற உரிமையைத் தரவில்லையே ரத்னம். மலட்டு ரத்னம்.*

*"அண்ணாச்சி, காப்பி ஆறுது!" வேலைச் சுழற்சியின் வேகத்தில் போகிற போக்கில் சப்ளையர் உசுப்பிவிட்டுப் போகிறான். உள் உலகத்திலிருந்து உதிர்ந்து, அதிர்ச்சியோடு நிஜ உலகத்தில் வந்து பொத்தென்று விழுந்தான். காப்பியின் மேல் மெல்லிய ஆடை நெய்யப்பட்டிருந்தது.*

உயிர் கழன்ற பிரேதமாகக் காப்பியை ஆற்றினான். மிடறு மிடறாக விழுங்கினான். ஜாங்கிரி இனித்ததா, பஜ்ஜி உறைத்ததா, காப்பி வாசனையில் மனசு கால் வைத்ததா? எதையும் அவன் உணரவேயில்லை.

மனசு முழுக்க நிரம்பியிருந்த நிஜம், கசப்புதான். மூளை முடுக்கெல்லாம் பிடுங்கிப் போடுகிற கசப்பு. தனது மொத்த வாழ்க்கையே சபிக்கப்பட்டுவிட்டதை உணர்ந்த கசப்பு.

விமோசனமேயில்லாத சாபக் கசப்பு. அகலிகைக் கல்லாக உறைந்துபோய்விட்ட வாழ்க்கை. சிருஷ்டிப்புக் கான ஜீவ அணுக்கள் இல்லாமல் போய், கல்லாகிக் கிடக்கிற வாழ்க்கை.

வாரிசு இல்லை.

சொத்துக்காக மட்டுமா, வாரிசு? மனிதன் வாழ்ந்த தற்கான அடையாளமே வாரிசுதானே!

தனது ஜாடைகளை - சுபாவங்களை - உயிரைச் சுமந்து நின்று தன் முகத்தைக் காட்டுகிற ஒரு குழந்தைக் கண்ணாடி தனது நிழல். தனது ரத்தத்தின் உயிர் வடிவம்.

அது இல்லை. தனது நிழல் இல்லை, நிழலை உருவாக்கக்கூடிய வெளிச்சம் தன்மேல் விழவில்லை.

தன்மீது விழுந்ததெல்லாம் ரத்னம் என்ற இருட்டுத் தான். நிழலைச் சிருஷ்டிக்க முடியாத இருட்டு. உயிரினத்தைச் சலிப்பூட்டி உறக்கத்தில் உறைய வைக்கிற இருட்டு. விலக இடமில்லாத அடர்ந்த இருட்டு.

திரண்ட சொத்தையும், பேக்டரியையும் ஆள்கிற அந்தஸ்தை வழங்கிவிட்டு, அதற்கு விலையாக

*நிழல்களைச் சிருஷ்டிக்கும் ஜீவ வெளிச்சத்தைப் பறிமுதல் செய்துவிட்டுப் போய்ச் சேர்ந்த மாமாவை... நினைத்துப் பார்த்தான்.*

*காறித் துப்ப வேண்டும் என்கிற உணர்ச்சி. காப்பியின் அடர்த்தி நாவில் படர்ந்ததாலா, மனசின் உள் வெறுப்புணர்ச்சியாலா?*

*செருமினான். காறித் துப்பினான்.*

*அகலிகைக் கல்லாய் உறைந்துபோய்விட்ட— மலடாகிப் போன தன் வாழ்க்கை மீளுமா? உயிர்ப் பிக்கிற ஆற்றல் பெறுமா? உயிர்களை உருவாக்குமா? எந்த ராமன் காலடி பட்டுச் சாப விமோசனம் பெறப் போகிறது? பெறாமலேயே போய்விடுமா?*

*ரத்னம் செத்துப் போனால்...*

*மனசுக்குள் குப்பென்று குளிர் காற்றாய்ப் பரவுகிற விடுதலை உணர்ச்சி. சாபத்திலிருந்து விடுதலை. சட்டபூர்வமான சமுதாய ரீதியான விடுதலை.*

*நினைவை உலுக்கிக் கொண்டான்.*

*ச்சே! இது என்ன மனுஷத்தன்மையில்லாத நினைப்பு? மிருகத்தனத்தைவிட இழிவான நினைப்பு. அன்பையும், பாசத்தையும் அள்ளி வழங்கிவிட்டு, பூனைக்குட்டியாய்ப் பொசு பொசுவெனக் காலைச் சுற்றும் ஒரு வெகுளியான பெண்ணைக் கொன்று, அதற்குப்பின் வருகிற உயிர்ப்பு, ஓர் உயிர்ப்பா?*

*மிருகத்தனத்திற்கு ஒரு நிழலா வேண்டும்? வாரிசு வேண்டும்? மிருகத்தனத்தைவிட கொடிய இழிவில்*

பிறக்கிற அந்தக் குட்டி மிருகம், ஒரு மழலைக்குரிய மகிழ்ச்சியைத் தருமா?

மனசு ஊனப்படுமே! ஒரு கொலை பாதகத்தின் ஞாபகச் சின்னமாய்க் கையில் கிடக்கும் அந்த மழலை மிருகம் - மன அமைதியைக் கடித்துக் குதறுமே!

ச்சே! என்ன இது, பேய்த்தனமாய் மனசு அலையுது?

ரத்னம் - நீ மலடுதான். அட்டுப் பிடித்த கறுப்பு தான். உன் அப்பாவால் என்மீது சுமத்தப்பட்ட சாபம்தான். ஆயினும் நீ ஒரு மனுஷி. என் உயிரைப் பின்னிக் கிடக்கிற மனைவி. என்மீது பாசத்தையும், பக்தியையும் பொழிவதில் நிறைவு காணுகிற பேதை. என் அன்பிலும் ஆதரவுக் கதகதப்பிலும் நம்பிக்கை உயிர் வளர்க்கிற பெண்.

உன்னிடம் கல்மிஷமில்லையே... நீ மலடாக இருக்க வேண்டும் என்று விரும்பி இருக்கவில்லையே...

நீ சாகக்கூடாது. சாவின் மூலம் வருகிற விடுதலையும் ஒரு விடுதலையல்ல. அதுவும் ஒரு சாபம்தான். ஆயுள் பரியந்தமும் மன அமைதியைத் தின்று ஆத்மாவைக் கடித்துக் குதறும் கொடிய சாபம்தான்.

அருஞ்சுனை சாலையைப் பார்த்தான். ஒரு சிகரெட் வாங்கிப் பற்றவைத்துக் கொண்டான். நினைவுகளின் நெரிசலில் மனம் மூச்சுத் திணறியது.

ஆழ்ந்த பெருமூச்சோடு நடந்தான். சுமையாக அழுத்தித் திணறடிக்கிற நினைவைக் கலைக்கிற மாதிரி யாரிடமாவது பேச்சுக் கொடுத்தால் நல்லது. அது ஒரு வடிகாலாக அமையும்.

சாலையைக் கடந்தான். போகிற போக்கில் யாரோ அவனுக்கு 'விஷ்' பண்ணியதைக் கவனித்தான். தலையை அசைத்து மெஷினாகச் சிரித்தான்.

ஆபீஸுக்கு வந்தான்.

இவன் தலையைக் கண்டதும் லாரி டிரைவர் பிடித்துக் கொண்டிருந்த பீடிக்கங்கை மறைவாக நசுக்கினான். தலைப்பாகையை அவிழ்த்தான்.

"மோலாளி, வீட்லே கொஞ்சம் நேரமாயிருச்சு."

"பரவாலே. வந்தாச்சுல்லே? பொறப்படுங்க."

"சரி மோலாளி."

"கச்சாத்து எல்லாம் வாங்கியாச்சா?"

"கணக்குப்பிள்ளை குடுத்தாரு."

செலவுக்குப் பணம் வாங்கியாச்சா?"

"ம்."

"போதுமா?"

"ம். போதும் மோலாளி."

சரி. பொறப்படுங்க. சரக்கு பத்திரம். ஜாக்கிரதையாய்ப் போகணும். கரெக்டா டெலிவரி பண்ணணும்."

"ஆட்டும் மோலாளி."

# 8

ஸ்கூட்டரை நிறுத்தி இறங்குவதற்குள், வீட்டிற்குள் வெளிச்சம் கண் விழித்தது. இரும்புக் கேட்டை இடது கையால் திறந்து, வண்டியை உள்ளே தள்ளி, வராண்டாவில் ஸ்டாண்ட் போட்டுவிட்டு மணியைப் பார்த்தான்.

9-47.

கேட்டைப் பூட்டிவிட்டுத் திரும்பினான். ஒற்றைக் கதவைத் திறந்துகொண்டு நின்ற ரத்னத்தைப் பார்க்கவும் ஒரு குற்ற உணர்ச்சி. "இப்பத்தான் வர்றீங்களா?" சுரத்தில்லாத வறண்ட குரலில் கேட்டாள்.

"ம்" என்றான். பார்டரும் டிசைனும் போட்ட சந்தனக் கலர் ஸாரியும், மேட்சிங் ஜாக்கெட்டும் அவளது கறுத்த உடம்புக்குப் பாந்தமாய் அமைந் திருந்தன. அவளது கூந்தலில் மொட்டு அவிழ்ந்த மல்லிகையின் வாசனைச் சிரிப்பு.

அவளது புற அலங்காரத்திற்கு முரண்பாடாக, வாட்டமடைந்த முகம். புண்பட்டுப்போன உணர்வுகளை மறைக்க யத்தனிக்கிற அவஸ்தை.

இவனுள் முள்ளாக உறுத்துகிற குற்ற உணர்வுக் குரலில் குழைந்தான்.

"ரத்னம், இன்னும் சாப்பிட்டிருக்கமாட்டே? இல்லே,"

"பரவால்லேங்க..."

அவன் கழற்றித் தந்த சட்டையை வாங்கிக் கொண்டாள். சமாதானம் சொல்கிற பாவனையில் சுய பச்சாதாபத்துடன் சொன்னான்:

"இல்லேம்மா, நம்ம பொழைப்பே இப்படியாகிப் போச்சு. அடையுறதுக்குக் கூடு கிடைக்காத பறவையா அலையுறதே தொழிலாகிப் போச்சு. இங்க பாரு — இன்னிக்கு உ.பி.க்கு ஒரு லோடு அனுப்பியாகணும். அர்ஜெண்டு. டிரைவரு வர லேட்டாயிடுச்சு. அவனைப் பார்த்துப் பிடிச்சு இழுத்துவந்து, டயத்துலே அனுப்பி வைக்கலேன்னா... கிடைச்ச ஆர்டர் கேன்சலாயிரும். தொழில் கெட்டுப் போகும்."

"............"

"தொழிலுக்கு நல்ல புள்ளையானா... வீட்டுக்குக் கெட்ட புள்ளையாக வேண்டியிருக்கு. வீட்டுக்கு நல்ல புள்ளையாகிட்டா... தொழில் நம்மளை ஏமாத்திரும்."

இவனது சமாதானத்திற்குப் பிறகும் அவள் மௌனம் நீடிக்கிறது. அது, இவனுள் ஒரு வேதனையாக உட்கார்கிறது.

அவளை நம்பவைத்து காத்திருக்க வைத்து ஏங்கச் செய்து அவளது பெண்மை உணர்வையே அவமதித்து விட்டதாக அவள் உணர்கிறாள் — வருந்துகிறாள்.

அவளது குறைந்தபட்சமான கனவுகளைக்கூட காயப்படுத்தி விட்டேனோ...?

"ரத்னம்..."

"ம்."

"வண்டியிலே பக்கடா வைச்சிருக்கேன். ஒனக்குப் பிடிக்கும்னு வாங்கிட்டு வந்தேன். எடுத்துட்டு வாரீயா."

"பக்கடா மட்டும்தானா?"

"அல்வா இல்லாமல் பக்கடாவா? நம்ம வாடிக்கை மறந்துருமா?"

அவள் வராண்டாவுக்கு விரைகையில் ஒரு மாற்றம் முகம் காட்டியது. வருத்தம் நீங்கி, முகத்தில் உயிர்ப்பு ஒளி மொட்டு விரியத் தொடங்கியிருந்தது.

அவள் நடையில் ஒரு சிறிய துள்ளல். முகத்தில் மலர்ச்சியின் சின்ன நகை. கண்களின் இமைத் துடிப்பில் அந்த உயிர்ப்பின் வாசம்.

"வாங்க... சாப்பிடுங்க."

"ரத்னம், ஒடம்பை லேசா அலசிக்கிடுறேன். ஒரே புழுக்கம், நசநசப்பு."

"வெண்ணி ஆறிப் போயிருக்குமே!"

"பரவாலே இருக்கட்டும்."

குளித்து முடித்து, டவல் அணிந்து வெளியே வர, கைலியுடன் அவள் நின்றாள்.

அட, நிஜமாகவே அழகாகத் தோன்றுகிறாள்.

அவள் கைலியை நீட்ட, அதை வாங்கிய ஈரக் கையோடு அவள் கையை எட்டிப் பற்றினான். கையை உருவிக்கொள்ள மனசில்லாமல் முயன்றாள்.

"ச்சீய்... என்னங்க இது?"

"இதுவா? ரத்னத்தோட கை."

சட்டென்று சுண்டி இழுத்தான். அலம்பலாய், தடுமாறிப்போய் மார்பில் வந்து விழுந்தவளை அழுத்தமாய் அணைத்து... இறுக்கி...

"ச்சீ... போங்க. என்னை வுடுங்க" என்று சிணுங்கிய உதடுகளை அசைய விடாமல், அழுத்தமாய் முத்தமிட...

திமிறிக்கொண்டு தப்பித்து ஓடினாள்.

அவளுக்குள் பொங்கிப் பிரவகித்து, அவளை அடித்துச் செல்கிற இன்ப நதி. உடம்பின் ஒவ்வொரு மெல்லிய துடிப்பிலும் அது கசிகிறது.

கைலியை உடுத்திக் கொண்டான். அருஞ்சுனைக் குள்ளும் முறுக்கிக் கொண்ட தேக நிலை. நிஜமாகவே ஒரு பரவச நிலை.

ஒரு பெண்ணை வெற்றி கொள்கிற ஆண்மைப் பரவசம். ஒரு பெண்ணின் கட்டாயத் தேவையாக - வேர் பதித்துப் படர்கிற மண்ணாக - இருக்கிறோம் என்கிற பரவசம். தனது இருப்பின் அர்த்தத்தை உணர்ந்த பரவச நிலை.

பனியனைக் கூடப் போட்டுக் கொள்ளவில்லை. தலையைச் சீவிக் கொண்டான். பவுடரைத் தட்டி மார்பிலும், கழுத்திலும் பரவலாய்த் தடவிக் கொண்டான். லேசாக முகத்திற்கும்...

கண்ணாடியில் தன்னைப் பார்த்தான். கறுப்பு ரோமங்கள் அடர்ந்த தேன்நிறத் தேகம்.

நடு ஹாலுக்குள் வந்தான். அவனிடம் ஒரு இன்பப் பெருமிதம். குறும்பான சிரிப்பு உதட்டில்.

அந்த இளங்குறும்பைப் பார்ப்பதைத் தவிர்த்தாள், ரத்னம். லஜ்ஜையில் நடுங்குகிற மனசு. அவள் கண்களின் ஆழத்தில் நாணத்தின் ஒளித் தெறிப்பு.

"சாப்பிடுங்க, வாங்க."

"அப்புறம் பாக்கலாம். மொதல்லே அல்வா பக்கடாவை எடு."

"டயத்தைப் பாருங்க - பத்தாகுதுங்க."

"தெரியுதுங்க."

பொய்க் கோபத்தில் முகத்தை ஒரு வெட்டு வெட்டினாள்.

அல்வாவைப் பிய்த்து உண்டான். அவளால் உண்ண முடியவில்லை. உண்ணும் நிலையில் மனசு இல்லை. ஒரு பரவசத் தவிப்பு. வேரறுந்த, காற்றில் அலைபாய்ந்து மிதக்கிற ஒரு பூங்கொடியாக... மனசு...

"சாப்பிடுங்க ராணியம்மா."

"வேண்டாங்க."

"இந்தா இந்தத் துண்டை மட்டும் வாயிலே போட்டுக்க."

"வேணாங்க. போதும்."

"நீயா எடுத்துக்கலேன்னா... நானே எடுத்து வாயிலே ஊட்டிவிடுவேன்." சிரித்துக்கொண்டே அவன் மிரட்டவும், அவளும் பயத்தோடு சிரித்துக்கொண்டே எடுத்துக் கொண்டாள்.

கையைக் கழுவித் துடைத்துக்கொண்டனர்.

*"அப்படியே கொஞ்சம் சாதத்தை உள்ளே போட்டுக் கங்க."*

*"இப்ப வேண்டாம்."*

*"சொன்னா கேளுங்க" வற்புறுத்துவதற்காகத் தொட்ட அவளது கையைப் பற்றி அழுத்தி, நெருக்கமாய் இழுத்துக் கொண்டான்.*

*கூந்தலின் பூங்கொத்தில் முகம் புதைத்தான். மல்லிகையின் வாசத்தை உள் இழுத்தான். பூதங்களை உசுப்பிவிடுகிற லாகிரி வாசனை.*

*அவளது மெல்லிய சிணுங்கலும் மறுப்புங்கூட மனசுக்குச் சுகமாகவே இருக்கிறது.*

**பெ**ண்மையின் சாகசமும் ஒரு இயக்கம்தானா? தின்னும் கனியின் ருசியை அதிகமாக்குகிற ஆச்சர்யம் தானா?

*அவளை அணைத்துக்கொண்டே படுக்கையறைக் குள் நகர்ந்தான். அவள் இன்னும் மெல்லத் திமிறுகிறாள். கையைத் தட்டிவிடுகிறாள்.*

*விடிவிளக்கின் மங்கலான வெளிச்சத்தில் அவளது பிம்பம் - அழுகாகவே தோன்றுகிறாள்.*

*மனசில் பொங்கியெழுகிற தாபப் பேரலைகள். உணர்ச்சிக் கொதிப்பில் உக்ரமாகிற மனசு.*

*பிரம்மாண்டமான கவண்வில்லிலிருந்து வீசி யெறியப்பட்டு, 'விர்ர்'ரென்று இரைச்சலோடு வந்து*

மோதுகிற மாயப் பிசாசுகள். மோதியடித்து வீழ்த்திக் கெக்கலிக்கிற பூதங்கள்.

போர்க்களக் குதிரைகள். கால்களை உயர்த்தி, பயங்கரமாய்க் கனைக்கிற குதிரைகள். தேகத்தின் சகல அணுக்களும் ஆயிரம் ஆயிரம் குதிரைகளாகி... புழுதியைக் கிளப்பிக்கொண்டு சீறிச் சினந்து பாய்கிற குதிரைகளாகி...

ஈட்டிகளின் மின்னல் உராய்வுகள். கவசங்களோடு மோதிச் சப்திக்கிற ஆயுதங்கள். யானைப் படைகளின் பிளிறல்கள்.

என்ன ஆயிற்று? சேனாதிபதி கைதாகிவிட்டாரா? ராஜாவின் மார்பிலேயே ஈட்டி சொருகிக்கொண்டதா? செத்துவிட்டாரா? திகைத்துக் குழம்புகிற படைகள். பாய்ச்சலின் வேகம் சிதறிய திகைப்பு. தேக்கம். ஏதோ உள் சிதைவு.

இது... விருதாவான போர்க்களமோ? விளைவு எதுவும் இல்லாததோ? மழலையை உயிர்ப்பிக்க இயலாத வெற்று ஆரவாரமோ?

அருஞ்சுனை தளர்ந்தான். உள் உடைவுகளோடு களைத்துப் போய்ச் சிரித்தான். பாதிச் சவமாகிவிட்ட அவன் தேகமெல்லாம் வியர்வைக் கோடுகள்.

இன்பமில்லை. பரவசம் இல்லை. கிறங்கடிக்கிற சுகமில்லை. அழுத்தி வதைக்கிற சலிப்புணர்ச்சிதான் மிச்சம். மனசைப் பிய்த்துப் பிடுங்குகிற சலிப்புணர்ச்சி, உள் உணர்வுகளையெல்லாம் கொத்திப் பிடுங்குகிற கசப்புணர்ச்சி, வெறுமையான ஆயாசம்.

**ஏ**தையும் பார்க்க விரும்பாமல், வெறுப்புடன் கண்களை மூடிக்கொண்டான்.

ரத்னம் என்ன ஆனாள்? நிராசைத் தீயில் துடிக்கிறாளா? வேதனைக் கசிவு அவள் கண்களில் தெரிகிறதா? கசந்துபோய் அழுகிறாளா? கவனிக்க விருப்பமில்லை. வெறுப்பு. பயம்.

அவள் எக்கேடும் கெட்டுத் தொலையட்டும். நாசமாய்ப் போகட்டும். இந்த வெறும் கட்டையைக் கட்டிக்கொண்டு எத்தனை காலத்துக்கு வியர்வையும் கண்ணீருமாய் அழுவது? மலட்டுச் சனியன். புல்கூட முளைக்காத - உவர்நிலம். வெறும் மண்.

இரக்கப்பட்டுப் பிச்சை போடுகிற விஷயமா இது? அசலான கொடுக்கலும், அசலான வாங்கலுமாய் இருக்க வேண்டிய தாம்பத்யம், ஒருவழிப் பாதையாய்க் குறுகிப் போய் இறுகிக் கிடப்பதை எத்தனை காலம்தான் சகித்துக் கொள்வது?

கணிதம் தோற்றுப் போக வேண்டிய புனிதமான இடமல்லவா தாம்பத்யம்! ஒன்றும் ஒன்றும் இரண்டல்ல. ஒன்றுடன் ஒன்று சேர்ந்தால், ஒன்றாகவும், மூன்றாகவும் முரண்பட வேண்டிய முடிச்சல்லவா, இனிய தாம்பத்யம்! இரண்டு என்கிற வறண்ட கணிதச் சூத்திரத்தை எத்தனை காலம்தான் பொறுத்துக் கொள்வது?

பக்கத்தில் ஓர் உருவம் மெள்ளப் புரள்கிறது. அவளும் வாழ்க்கையை ஒரு சாபமாக உணர்கிறாளா? ஆயுள் தண்டனையை அவஸ்தையுடன் அனுபவிக்கிற பக்குவத்தை வரவழைத்துக் கொள்கிறாளா?

உள்ளுக்குள் நமைச்சல் எடுக்கிற நினைவுகள். மனசின் மூலை முடுக்கெல்லாம் கடித்துக் குதறுகிற நமைச்சல்.

களைப்பின் அயர்ச்சியில் இன்பத் தென்றலாய் வந்து தழுவ வேண்டிய தூக்க தேவதையை, கிட்டத்தில் அண்டவிடாமல், அடித்து விரட்டுகிற நமைச்சல்.

உறங்கவும் முடியாமல் மனசின் இறுக்கத்தைப் பேசிப் பகிர்ந்து உடைக்கவும் முடியாமல்... புழுக்கத்தில் உழன்றான். சுமை தாளாமல் தவித்தான். மூச்சுத் திணறியது.

நமைச்சலிலிருந்து மனசை வலுக்கட்டாயமாய்ப் பிய்த்து விடுதலைப்படுத்தினால்... வேறு நினைவுகளை நினைத்தால்— மனசில் வந்து நின்றாள், சொர்ணம். அந்திச் சூரியனின் குளிர்ப் பிரகாசமாய், தகதகப்பாய்ச் சுடர்கிற சொர்ணம்.

கைக்குள் அடக்கமாய் - சின்ன உருவமாய் - வாசத்தை உள்ளடக்கிய மல்லிகை மொட்டாய் - சொர்ணம்.

மனசின் சகல மூலை முடுக்கெல்லாம் நீக்கமற நிறைகிற சொர்ணம். பாலைவன மனிதன் கண்ணில் பட்ட நீர்ச்சுனையாய்... சொர்ணம். அருவியாகப் பாய்ந்து அள்ளிக் கொள்கிற சொர்ணம்.

கற்பனையின் தாலாட்டுப் பாட்டில் மனசு லயித்து லயித்து, கிறங்கிச் சரிகிறது. இதுதான் உறக்கம் என்பதா?

# 9

மதியச் சாப்பாட்டை முடித்துவிட்டு, எல்லோரும் வேலைகளில் இறங்கிவிட்டனர். அடிப் பெட்டி ஒட்டுகிற வேலை. மேல் பெட்டி ஒட்டுகிற வேலை, குச்சியடுக்குகிற வேலைகள்...

சொர்ணம் அவள் இடத்தில் வந்து உட்கார்ந்தாள். மேல் பெட்டி ஒட்டுகிற வேலை. அவள் எதிரில் சின்னக் குவியல். ஒட்டி முடித்த பெட்டிகளின் குவியல்.

அவளுக்கு இடதுபுறத்தில் அட்டைக் கட்டுகள், தாள் கட்டுகள். எதிரில் சின்னப் பலகையும், பசைச் சட்டியும்.

இன்னும் சின்னஞ்சிறுமிகள் வெளியே விளையாடிக் கொண்டிருக்கின்றனர். கடைகளில் மிட்டாய் வாங்கிச் சப்பிக் கொண்டு, கை கழுவுகிற குழாயடியில் ஓயாமல் குழாயடிக்கிற விளையாட்டும், பூஞ்செடிகளுக்குத் தண்ணீர்ப் பிரித்துப் பாய்ச்சுகிற சந்தோஷமுமாய்... சிறுமிகள்.

தோள் சுமைகளை இறக்கிப் போட்டுவிட்ட சிறகு முளைத்த பறவைகளாய்... அந்தச் சிறுமிகள்.

நொறுங்கிப் போன கிராமங்களும், சிதைந்துபோன விவசாயமும் வயிற்றுப் பாட்டுக்காக இந்தச் சிறுசு களைப் பெரிய பெண்களுக்குச் சமதையாக உழைப் புக்குத் தள்ளுகின்றன.

உழைக்க வந்தபோதிலும் வயசுக்குரிய குழந்தைத் தனம் மாறாமல், தளிர்களின் மெல்லியல்புகளும் விளையாட்டுக் குணமும் மாறாமல், வேலையை விளையாட்டாகவும், விளையாடிக் கொண்டே வேலையுமாய்... வாழ்க்கைச் சூறாவளியில் சிக்குண்ட நிலையிலும் இயல்பு மாறாமல்...

"ஏய், குட்டிப் பிசாசுகளா! உள்ளே போய் வேலை களைப் பாருங்க!"

"வெளியே இப்படி விளையாட விட்டு வேடிக்கை பாக்கவா, டீசல் போட்டு, சாமக்காட்டுலே பஸ்களை அனுப்புறோம்? முண்டங்களா!"

"தின்னாச்சு இல்லே? தின்னத்துக்குப் போய், குச்சியடுக்குங்க. ம்... போங்க, போங்க."

போர்மேன்கள் ஆள் ஆளுக்கு அதட்டி, குட்டி களைப் பற்றி, கூட்டில் அடைப்பதுபோல உள்ளே திணித்தனர்.

பழகிப்போன அதட்டல்கள். மரத்துப்போன வசவுகள். புழங்கிப் புழங்கி மொட்டையாகிப் போன வார்த்தை ஊசிகள்.

உள்ளே வருகிற குழந்தைகள் வருந்தவில்லை. அழவும் இல்லை. வசவுகளுக்காக விசனம் கொள்ளவும் இல்லை. குறும்பு குறையாமலேயே உள்ளே வந்தனர்.

பாவாடைகளின் சடசடப்புச் சப்தங்களை அமுக்கிக் கொண்டு, அந்தச் சிறிசுகளின் பேச்சு சப்தம்.

மேல் பெட்டி ஒட்டிக்கொண்டிருந்த சொர்ணத்தின் பக்கத்தில் ஒரு தாவணிச் சிறுமி.

சிமெண்ட் கலர் தாவணியும், சிமெண்ட் கலர் ஜாக்கெட்டும் உடுத்தியிருந்தாள். தேன் நிறத் தேகத்துக்குப் பொருத்தமான வெளிர் சிமெண்ட் கலர்.

பார்த்திருக்க ஒரு மினுமினுப்பு, முகத்தில் உடம்பில் ஒரு தளதளப்பு.

நல்ல கலகலப்பாகப் பேசுவாள். ராசாத்தியைப் போல வெகுளியானவள். எந்நேரமும் கேலிதான். கிண்டல்தான். பேச்சுத்தான். வாய், ஒரு நேரம்கூட ஓய்ந்து இருக்காது. ‘பொடு பொடு’வென்று ஏதாச்சும் பேசிக்கொண்டே இருப்பாள்.

இப்போதும் அப்படித்தான்.

சொர்ணம் ‘உம்’ கொட்டிக் கொண்டிருக்க, ஏதேதோ பேசிச் சிரித்துக் கொண்டேயிருந்தாள்.

அடிப்பெட்டிக்கான நீலக் கலர்க் காகிதம் தீர்ந்து விட்டதைச் சட்டென உணர்ந்தாள்.

“அய்யய்யோ... தாள் கட்டு தீர்ந்து போச்சே!”

“ம்...”

“அக்கா!”

“என்ன வெள்ளைத்தாயீ!”

“கொஞ்சம் பாத்துக்கங்க. நா போய்த் தாள்கட்டு வாங்கிட்டு வந்துர்றேன்க்கா.”

“எங்கே? ஸ்டோர் ரூமுக்குப் போறீயா?”

"ஆமாக்கா..."

முகத்தில் சிரிப்பு மாறாமல், துள்ளும் குதூகலத்துடன் ஓடினாள். உற்சாக நதி. நுரை பொங்கத் ததும்பி ஓடுகிற நதி.

சொர்ணம் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள். பார்வை பார்வையாக இருந்தாலும், வேலையில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தன, கைகள்.

வலது சுட்டுவிரல் பசையைத் தொட, அதே விரலால் நீல நிறக் காகிதத்தை எடுத்து விரிக்க, இடது சுட்டுவிரல் அட்டையை அதன்மேல் வைத்து நீட்ட, மற்ற விரல்கள் அதை மடித்துச் சுருட்டியெறிய...

அனிச்சை செயலாக வேலை இயல்பாக நடந்து கொண்டிருந்தது. அத்தனை வேகம், விறுவிறுப்பு.

வெள்ளைத்தாய் வந்தாள். போனதுபோல் வரவில்லை. குதூகலமாய்ப் போனவள், குத்துண்ட பறவையாக வந்தாள்.

அவள் முகம் வாடிச் செத்துக் கிடந்தது. அவளிடம் ததும்பி நின்ற குதூகலத்தைக் கொள்ளையடித்தது யார்?

அழுகையை உள்ளடக்கிக் கொண்டு அவளது கண்கள். சிரமப்பட்டு தனது உள் உணர்வுகளை மறைக்கிற யத்தனிப்பில், அவள்.

என்ன ஆச்சு? இந்தப் பூச்செண்டை நோகடித்தது யார்?

கேட்க வாயெடுத்தாள். சொர்ணம் கேட்கவில்லை. ஒரு புண்ணைக் குத்திவிட்ட மாதிரியாகி விடுமோ..?

வேலை வேலையாக இருக்க, அவளை உற்றுப் பார்த்தாள். அவள் கீழ் உதட்டில் ஒரு வேதனையின் துடிப்பு. நாடியில் பொடிப் பொடியாய் வியர்வை.

கழுத்துக்குக் கீழே...

அவளது மேலாடையில் அழுக்கான விரல்கள் பதிந்த அடையாளம். வெளிர் சிமெண்ட் கலரில் பளிச்சென்று கண்ணை உறுத்துகிற அந்த விரல்களின் அழுக்கு வரிகள். அழுக்கான மனசுகளின் வக்கிர அடையாளம்.

**சொ**ர்ணம் மனசுக்குள் வெகுண்டாள். ஸ்டோர் ரூமுக்குள் என்ன நடந்திருக்கும் என்பதை யூகிக்க முடிகிறது. காறித் துப்ப வேண்டும் என்கிற நமைச்சல், மனசுக்குள். வெறுப்பிலும் கொதிப்பிலும் வருகிற குமைச்சல்...

வாழக் கதியற்று வறுமையின் காரணமாய் அரும்பு வயதிலேயே உழைக்கப் புறப்படுகிற கிராமத்துச் சிறுமிகள். கிராமச் சூழலின் அடக்க ஒடுக்கமான பண்பு மரபில் ஊறிப் போன சிறுமிகள்.

கனவுகளோடு சேர்த்து, துணிச்சலையும் தொலைத்து விட்ட சிறுமிகள். கூச்சத்திலேயும். அச்சத்திலேயும் சகலத்தையும் முடக்கிக் கொள்கிற சிறுமிகள்.

கல்வி வெளிச்சம் எட்டிப் பார்க்காத அந்த மனசுகள் முழுவதும் பரவிக் கிடக்கிற கோழை இருட்டு.

எதிர்த்துப் பேசினால், என்ன ஆகிவிடுமோ என்று பதைத்துக் கிடக்கிற அறியாமை.

இதைப் பயன்படுத்திக் கொண்டு, அற்பக் குரங்குகள் வாலைச் சுழற்றிக்கொண்டு செய்கிற சேஷ்டைகள். ஆண் என்கிற திமிறில் ஊறிப்போன உதிரிப் பயல்கள்கூட, செய்கிற ஊழிக் கூத்துகள்...

சிறுமியைப் பூவாகவும், குமரியைக் கண்ணிய மாகவும், பெண்களை மனுஷிகளாகவும் மதித்து நடத்த வேண்டிய நாகரிகத்தையே தொலைத்துவிட்டு, மிருகங்களாய்... கடித்துக் குதறும் ஓநாய்களாய்... உறுமி உறுமி அச்சுறுத்தி, உள்ளுணர்வுகளை அதிரச் செய்து, நடுங்க வைக்கிற கொடிய நச்சு மிருகங்களாய்... ச்சீய்...

சொர்ணம் வேலைக்கு வந்து சேர்ந்த புதிது. இப்படித்தான் ஒருநாள் பசை வாங்கப் போயிருந்தாள், ஸ்டோர் ரூமுக்கு. பார்க்கிற நேரமெல்லாம் பல்லிளித்துக் கொண்டிருந்தவன் மிதமிஞ்ச...

பத்து ஊரும் கைக் கட்டித் தலைவணங்கும் ராமானுஜம் மகள். இவனைப்போல தினம் முப்பது பேருக்குச் சோறு போட்ட குடும்பத்தின் குலக்கொழுந்து.

காலக் கொடுமையில் இங்கு வந்து விழுந்தவள். இந்த அற்பப் பயலுக்கு இவளைத் தொடுகிற துணிச்சலா?

பத்ரகாளியாகி விட்டாள்.

எட்டி அவனது தலைமயிரைக் கற்றையாக இடது கையால் பற்றிய அந்தக் கணத்திலேயே...

பசைப் பிசுபிசுப்பான வலது கையால் பளார், பளார், பளார்!

எத்தனை அறைகள் அறைந்தாள், எப்போது நிறுத்தினாள் என்பதே அவளுக்குத் தெரியாது. கூட்டம் கூடிவிட்டது.

முதலாளியிடம் விஷயம் வந்தது. ரௌத்ரமாய்க் கத்திக் கூச்சலிட்டாள்.

அந்தத் தீப்பெட்டி ஆலையே அரண்டு போய் நின்றது. அந்தப் 'புதுமைப் பெண்ணி'ன் அடங்காத ஆவேசத் தீயின் ஜ்வாலையில் - ஜொலிப்பில் - மிரண்டு போய்விட்டது.

அந்த ஸ்டோர்மேன் அன்றே சீட்டுக் கிழிக்கப்பட்டான். அதற்குப் பிறகுதான் அவள் தன்னிலைக்கு வந்தாள்.

சொர்ணம் தனித்துவமானவள் என்று ஆலை முழுவதும் பிராபல்யம். அவள் வம்புக்கு எவனும் வரவே மாட்டான்.

அழுக்கு மனசின் அடையாளங்களைச் சுமந்து கொண்டு, அறுபட்ட கொடியாக வாடிப் போய் வருகிற வெள்ளைத் தாய்கள், ஏன் சொர்ணத்தைப் போல கொதிக்கவில்லை? கொந்தளிக்காமல் இருப்பது ஏன்?

ரோஷம் இல்லாமலா? மானத்தை இழக்கச் சம்மதித்தா? இல்லை, இல்லை. அறியாமை. அறியாமையால் வந்து மூண்ட அச்சம். கல்வி இல்லாத அறியாமை இருட்டில் வந்து பம்மிக் கொள்கிற பயப் பிசாசுகள்.

பயம்! - எல்லாச் சோகங்களுக்கும், அவலங்களுக்கும் அநீதிகளுக்கும், அத்துமீறல்களுக்கும், உயிர் தருகிற தளமாக இருக்கிற இடம்.

சொர்ணம் யோசனையோடு வெள்ளைத்தாயை ஏறிட்டுப் பார்த்தாள். பரிதாபமாக இருக்கிறது. அன்பாய்

- ஆறுதலாய் நாலு வார்த்தைகள் சொல்ல விருப்பமாக இருக்கிறது. எப்படிச் சொல்ல என்னத்தைச் சொல்ல?

வெள்ளைத்தாய் பேசவில்லை. ஏறிட்டுப் பார்க்கவே பயந்தாள். சொர்ணம் ஏதாச்சும் கேட்டு விடுவாளோ என்று மிரண்டாள்.

மானத்தை உதிர்த்துவிட்டு வயிற்றைக் கழுவ வேண்டியிருக்கிறதே என்ற வாழ்க்கை அவலம், மனசில் கனத்த சுமையாக ஏறிக்கொண்டதோ..? அழுத்துகிறதோ..?

மனசே மூச்சுத் திணறித் தவிக்கிற போது... அவள் என்னத்தைப் பேசுவாள்? எப்படிச் சிரிக்க முடியும்?

சொர்ணத்திற்கு அவளைப் பார்க்கப் பார்க்க என்னவோ போலிருந்தது.

சாக்கடையில் புரண்டெழுந்த பன்றிக் கூட்டம் இவள்மீது ஏறிச் செல்வது போல... மனசுக்குள் ஒரு அருவருப்பு. உள் மனசை அச்சுறுத்துகிற வாழ்க்கை யதார்த்தங்கள். குரூர முகம் காட்டி, தாட்சண்யமின்றிப் பல்லையிளிக்கிற சமூகச் சூழல்...

**சா**யங்காலம் வரை அவள் மனசில் இதே உளைச்சல்கள். திசை புரியாமல் பாய்கிற குருட்டு ஈக்களாய், நினைவுகள். கட்டுமீறி, தாறுமாறாய், கரைகளை உடைத்துக்கொண்டு அலைபுரண்டு சீறுகிற கற்பனைகள்.

சாயங்காலம் ஐந்து மணி. ராசாத்தி ஓடி வந்தாள்.

“போவமா?”

"ம்."

"இந்தா, என் சிட்டையைச் சரி பார்த்துரு."

சிட்டையை வாங்கிப் பிரித்தாள். காலையில் வாங்கிய பொருட்கள் எண்ணிக்கையையும், மாலையில் வாங்கிய எண்ணிக்கையையும் விசாரித்தாள். ஒப்பிட்டுப் பார்த்தாள். சரியாக இருந்தது.

"சரியாய்த் தானிருக்கு."

அதேபோல கெங்கம்மாவும் ராமலட்சுமியும் சிட்டைகளுடன் வந்தனர். சரிபார்த்துச் சொன்னாள்.

இவளும் வாங்கிய பொருளுக்குரிய மேல் பெட்டிகளை ஒப்படைத்துவிட்டு, சிட்டையை வாங்கிக் கொண்டாள்.

தூக்குச் சட்டிகளையும், டப்பாக்களையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டனர். ஆபீஸ் வாசலைவிட்டு வெளியேறிய போது... முகத்தில் வந்து தொட்டது மஞ்சள் வெயில்.

## 10

**நீ**ளம் நீளமாக, கிழக்காக விழுந்து கிடக்கிற மாலை நிழல்கள். கட்டடங்களின் அடர்ந்த நிழல்களே சாலையின் வெயிலைச் சாப்பிட்டிருந்தன. கழுதை நிறத்துப் புழுதியில் கால் புதைய நடந்து, தார்ச் சாலைக்கு வந்து சேர்ந்தனர்.

காலையில் மாதிரி வெறிச்சென்று இருக்கவில்லை சாலை. இம்மிகூட இடமில்லாமல் இயங்கிக் கொண் டிருந்த ஜனங்கள். பரபரப்பாய் வாகனங்கள்.

கோர்ட்டுக்கு, தாலுகாபீஸுக்கு வந்து போகிறவர் கள், கமிஷன் கடைகளுக்கு வந்து போகிற சம்சாரிகள், கோயிலுக்குப் போய் மொட்டை போட்ட தலையில் சந்தனப் பூச்சோடு வருகிற பக்தர்கள்... இதுபோக, இருக்கவே இருக்கிறார்கள் தீப்பெட்டியாபீஸ்களுக்கு வந்து போகிற பெரும் படைகள்.

அந்தச் சின்ன நகரம் நெரிசல் தாளாமல் திணறியது. மெயின் வீதி முழுக்க ஜனம்... ஜனம்... ஜனக்காடு. சமுத்திரத் தண்ணீராக, ஜனக்காடு.

சாலையின் இருபுறமும் விதம் விதமான கடைகள். பாட்டுச் சப்தங்கள்.

மேற்புறத்தில்... கடைகள். சிறு ஹோட்டல்கள், இன்னும் பல இருந்தாலும், அதையெல்லாம் கவனிக்க விடாமல்... கண்ணைச் சுண்டியிழுக்கும் சேவுக் கடைகள்.

பெரிய பெரிய இரும்புத் தட்டுகள். அவற்றில் வெட்டிச் சரித்த மாதிரி கோபுரம் கோபுரமாய்க் குவித்து வைக்கப்பட்ட சேவு, சீவல், மிக்ஸர், ஓமப்பொடி, வறுத்த கடலைப் பருப்பு, அரிசிப் பொறி...

மேலே, ஆள் உயரத்துக்கு வட்டம் வட்டமாய் அடுக்கி வைக்கப்பட்டுள்ள சீனி மிட்டாய், வெல்ல மிட்டாய், மைசூர் பாகு...

பார்த்த மாத்திரத்தில் வாயில் எச்சில் ஊற வைத்துவிடும். 'வாங்கு, வாங்கித் தின்னு' என்று

வற்புறுத்தும். நச்சுப் பிடுங்கும், கைக் காசுக்கு அரிப்பு எடுத்துவிடும்.

ராசாத்திக்குத் தான் முதலில் அரிப்பு.

"ஏய் கெங்கு, சேவு வாங்குவமா?"

"சொர்ணத்துக்கிட்டே கேட்டுக்க."

"பாஸ், சொர்ணம் பாஸ், சேவு வாங்குவமா? உத்தரவு கெடைக்குமா, பாஸ்?"

அவளது கிண்டல் இப்போது எரிச்சல் படுத்த வில்லை.

ஓநாய்களின் காமப் பசி - வெறி மிருகங்களின் குரூரங்கள். இவற்றுக்கிடையே சலிப்பூட்டி வதைக்கிற இந்த 'நொண்டிப் பய' வேலையில், இந்தச் சிரிப்பும் விளையாட்டும்கூட இல்லாவிட்டால் வறண்டு போகும். வெறுத்துப் போகும்.

இந்தக் கிண்டலும், கேலியும் தேவைதான். போலியானதாக இருந்தாலும் மனசை ஈரப்படுத்துகிற நீர்ச் சுனைகள். மனுஷத்தன்மையை உணர வைக்கிற உயிர்ப்பு நீரோட்டம். சுயத்தின் கரணையைக் கிள்ளிப் பார்த்துக் கொள்கிற ருசுக்கள்.

"என்னம்மா தேவி, உத்தரவு உண்டா, இல்லியா? சட்டுன்னு சொல்லித் தொலையேன், மூதேவி!"

"எனக்குப் பக்கடா வேணும்."

"துட்டுக்குடு தாயி."

பிளாஸ்டிக் டப்பாவில் கிடந்த சில்லறையைத் தந்தாள். மதியச் சாப்பாட்டுக்கு ஊறுகாய் வாங்கியது போக, மிச்சச் சில்லறை.

"ஏய், கெங்கு ஒனக்கு என்ன வேணும்?"

"சக்கரை பூந்தி."

"சரி சரி... எல்லாரும் ராசாத்திகிட்டே துட்டைக் குடுத்து விடுங்க. அவ தனித்தனியா பொட்டலங்களை வாங்கிட்டு வரட்டும்."

"சரி... நா வாங்கிட்டு வாரேன். நீங்க இங்கேயே நிக்கணும்? போயிரக் கூடாது?"

"நாங்க ரோட்டிலேயே நிக்கறோம்டி. ஒனக்கென்ன பயம்? ஒன்னையென்ன தூக்கிக்கிட்டா... போயிடப் போறாக?"

"அவளைத் தூக்கிக்கிட்டு யாராச்சும் போனா... அவளுக்குக் கசக்கவா போகுது? வேண்டாம்னு மறுக்கவா போறாள்?"

"ராசாத்தி எங்கன்னு அவுக வீட்லே கேப்பாகளே?"

"எதுக்குக் கேக்கப் போறாக? சனியன் தொலைஞ்ச துன்னு சந்தோஷப்படுவாக. ஆறு பவுன் நகையும் கல்யாணச் செலவும் மிச்சம்னு நினைச்சுக்குவாக."

ராமலட்சுமி இப்படிச் சொல்ல, மற்றவர்கள் 'களுக்' கென்று சிரிக்க, இவர்களுக்கும் சேவுக் கடைக்கும் நடுவில் போய்க் கொண்டிருந்த ராசாத்தி இவர்களைப் பார்த்துக் கோபத்துடன் முகத்தை வெட்டினாள்.

"ச்சீய், போங்கடி கழுதைகளா!" உதட்டைக் கோணலாக்கி 'வெவ்வே' காட்டினாள். ராமலட்சுமியும், கெங்கம்மாவும் இன்னும் ராசாத்தி பற்றி ஏதோ பேசிக் கொள்ள, சொர்ணத்தின் பார்வை, சாலையிலும், பஸ் நிலையத்திலும் ஊர்ந்தது.

வெள்ளை டவுன் பஸ்களில் ஓடி ஏறுகிற கிராமத்துப் பெண்கள். கையில் குழந்தையுடன் காலில் செருப்பில் லாமல், தன் ஊர் செல்லும் பஸ் அடையாளம் தெரியாமல், தேடித் தேடி விசாரிக்கிற பட்டிக்காட்டு ஜனங்கள்.

சாலையிலேயே நிற்கிற மதுரை பஸ்களில் ஏறுகிற இறங்குகிற பெண்கள். அவர்கள் உடம்பைச் சுற்றியிருக் கிற வண்ண வண்ணப் பட்டுச் சேலைகள். அழகழகாய் பார்டர்கள் ஜொலிக்கிற சேலைகள். நவநாகரிகமாய்ச் சுடர் விடுகிற சேலைகள்.

சொர்ணம் என்கிற சராசரிப் பெண்ணை ஈர்த்து, கனவுலகத்துக்கு இழுத்துச் செல்கிற சேலைகள். இவளால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத கனவுச் சேலைகள்.

ஒவ்வொரு சேலையையும் அணுஅணுவாய் மேய் கிறாள். அதன் கலர்கள்... டிசைன்களின் வித்தியாசங் களைப் பார்க்கிறாள். விதவித அழகோடும், அகலத் தோடும் அமைந்திருக்கிற பார்டர்கள், மேட்சிங்காக அணிந்திருக்கிற ஜாக்கெட்கள். அதன் கழுத்து மாடல் புதுமைகள்.

அழகில் நிறத்தில் இவ்ளின் காலடித் தூசியைத் தொடக்கூட அருகதையில்லாத பெண்கள்.

இவளால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத விலை உயர்ந்த ரகங்களை உடுத்தியிருக்கிறார்கள்.

விளக்குமாற்றுக்குப் பட்டுக் குஞ்சம் கட்டிய மாதிரி...

இதே சேலைகளை, சொர்ணம் உடுத்தினால்... அவற்றின் மகத்துவம் உயரும். ஜென்மப் பலனைப் பெறும்.

அவர்கள் கழுத்தில் அணிந்திருந்த தங்க நகைகள். முறுக்கு வடச் சங்கிலி, டாலர் தொங்குகிற ஒற்றைச் செயின், நெக்லஸ், காதுகளில் கிடக்கிற விதம்விதமான தங்கச் சிமிட்டல்கள்.

**சொர்**ணம் கனவில் உலவினாள். அவளுக்கேயுரிய மாய உலகம், விதம்விதமான வண்ணச் சேலைகள். அலை அலையாக ஆர்ப்பரிக்கிற உலகம். நவநவமான ஜால ஜொலிப்புகளுடன், குவியல் குவியலாய் நகைகள், கண்களைச் சிமிட்டுகிற தங்க உலகம்.

அவள் அழகுக்கும், அந்தஸ்துக்கும் தகுதியான உலகம். பெரிய குடும்பத்துப் பெண், பேரழகிக்குரிய உலகம். அந்த அழகுச் சிகரத்துக்கு நியாயம் வழங்குகிற உலகம்.

இவளது உள் உலகத்தில், அழகற்றவர்கள் எல்லோ ரும் மூளிகளாய் இருக்கக் கடவர். ஆடைகளும், ஆப ரணங்களும் மூளிகளுக்குத் தூரமாய் இருக்கக் கடவது.

சென்னை செல்கிற 'வள்ளுவர்' ஓரமாய் வந்து நின்று கொண்டிருந்த சொர்ணத்தை உரசிக்கொண்டு ஹாரன் அலற—

அந்தத் திடீர்ப் பேய்ச் சப்தத்தில் செவியும் மனசும் திடுக்கிட—

கெங்கம்மா அவள் கையைப் பற்றிச் சரேலென்று இழுக்க,

டிரைவர் அவளைச் சள்ளையோடு திட்டுகிறார்.

"ஒதுங்கி நின்னு தொலைங்களேன்! எதுக்கு எங்க உசுரை வாங்குறீங்க?"

சொர்ணம் அவரை எரித்து விடுவதைப் போலப் பார்த்தாள். முகத்தில் கோபக் கனல். உதட்டுக்குள் 'பொடு பொடு'வென்று முணுமுணுத்தாள்.

சொர்ணம் காயப்பட்டுவிட்டாள். அநியாயமாகவும், அனாவசியமாகவும் அவமதிக்கப்பட்டுவிட்ட வேதனை உணர்ச்சி, காயத்திலிருந்து கசியும் ரத்தமாக அவளது சோகப் பெருமூச்சு.

இந்த உலகம், அன்பற்ற உலகம்; நீதியற்ற உலகம்; வாழும் நியாயத்தை இழந்துவிட்ட உலகம்.

ராசாத்தி இரண்டு கைகளும் கொள்ளாமல் பொட்டலங்களோடு வந்தாள். அவரவர் பொட்டலங்களை எடுத்துக் கொண்டனர். சொர்ணத்தின் கையிலும் ஒன்று திணிக்கப்பட்டது.

அவரவர் பொட்டலங்களைப் பிரித்து, கொறித்துக் கொண்டே வடக்காக நகர, சொர்ணத்திற்குப் பிரிக்க மனமில்லை. கொறிக்கும் மனநிலை இல்லை.

மனசுக்குள் அலை பாய்கிற அவல நினைவுகள், கம்பீரமான கற்பனைகளைக் கண்டு சுகம் காண்கின்றன.

கௌரவமான பெரிய பெரிய மனிதர்கள். இவளது அழகைப் பார்த்துத் திடுக்கிட்டு பிரமிக்கிறதாக எழுகிற கற்பனைக் காட்சி...

ஊர் மக்களும், வட்டார மக்களும் வாய்பிளந்து நிற்க, அவளின் அழகின் தனிச் சிறப்பை உலகமே ஒப்புக் கொண்டு தலை வணங்குகிற அபூர்வக் காட்சி...

உள்ளங்கை வியர்க்கிறது. கைக்குள் வைத்திருந்த பொட்டலத்திலும் வியர்வைச் சுவடுகள். நனைந்து பக்கடா நமர்த்துப் போயிருமோ என்று மடியில் வைத்துக் கொண்டாள்.

அவளுக்குச் சில அடிகள் முன்னால் நடக்கிற தோழிகள். சிரிப்பும் கும்மாளப் பேச்சுமாய்ச் செல் கின்றனர். வாயில் கொறிக்கிற தின்பண்டத்தால்... சிதை வுறுகிற பேச்சுச் சப்தம். சுருதி மாறி ஒலிக்கிற சிரிப்புகள்.

இவர்களைக் கடந்து ஓடுகிற பஸ்கள், வேன்கள், லாரிகள், சைக்கிள்கள், ரத்னம் தீப்பெட்டியாபீஸ் பஸ்.

அதில் அடைபட்டு மூச்சுத் திணறுகிற சிறுமிகள், அரும்புகள். இவர்களைப் பார்த்ததும் நட்பார்ந்த ஆனந்தத்தில் கூச்சலிடுகிற பெண்கள். சிறுமிகள்.

“ஏய், ராசாத்தீ...”

“கெங்கு, ஹைய்யா!”

கூட்டுக் கூச்சல். சந்தோஷக் கூப்பாடு... ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கிற தலைகள். இவர்களும் அதுகளைப் பார்த்துக் கையாட்டி, கூச்சல் போடு கின்றனர்.

பின்னால் திரும்பிப் பார்த்தாள் ராசாத்தி.

யோசனையின் அழுத்தத்துடன் வந்த சொர்ணத் தைப் பார்த்தாள்.

“என்னடி, சொர்ணம் பக்கடா திங்கலியா?”

“அவா திங்கமாட்டா. வீட்லே போய்...”

“புருஷனுக்குக் கடிச்சிக்கிடையா குடுப்பாளா?”

"ஏய் ராசு, வாயைப் பொத்துடி. அவா காதுக்குக் கேட்டுச்சுன்னா... ஒன்னைப் பிடிச்சு... ஆய்ஞ்சிருவா, ஆய்ஞ்சு!"

"கிழிப்பாள். எனக்கும் வாய் இருக்குல்லே? நானும் பிடிச்சு வஞ்சி விட்டுற மாட்டேன்?"

விலக்குச் சாலையில் நடந்தனர். கண்ணுக்கு வரி வடிவமாய்த் தெரிகிற கிராமம்.

சூரியன் அஸ்தமித்துவிட்டது. ஆகாய நீலத்துக்குப் போட்டியாக நீலமலையாய் நிறம் மாறித் தெரிகிற மேற்குத் தொடர்ச்சி நீள மலை. கிராமத்திற்குள் தெரு விளக்குகள் கண்விழித்துக் கொண்டன.

எல்லோரும் கேலியும் சிரிப்பும் மாறாமல் பிரிந்து கொள்ள, அதே கவலை நிறைந்த மௌனத்துடன் வீடு நோக்கி நடக்கிற சொர்ணம்.

இதோ... தன் தெரு. தன் வீடு.

வீட்டு வாசலில் யாரோ ஒரு சிறுவன். யாரது? ரமேஷ்! அவளுக்குள் குப்பென்று ஒரு சந்தோஷம். அக்கா மகன் ரமேஷ் ஐந்தாம் வகுப்பு படிக்கிறவன். அவள் முகமெல்லாம் மலர்ச்சி. அக்கா மகனைப் பார்த்த அசலான ஆனந்தத்தில் பொங்கி வழிகிற மனசு.

"ஏலேய், எப்படா வந்தே?"

"ஆய், சித்தி! மத்தியானமே வந்துட்டேன்."

அவளையும் முந்திக்கொண்டு ஆவலோடு பாய்ந்து வந்த கேள்வி, "அம்மா வந்துருக்காளா?"

"இல்லே. அய்யா கூடத்தான் சைக்கிள்லே வந்தேன்."

"ஏலேய், அம்மாவைக் கூட்டி வரக்கூடாதாடா?"

"அம்மா வரலை. ஏன் வரலைன்னு தெரியாது."

"சாப்பிட்டாயா?"

"இனிமேதான்."

அவனை அன்புடன் ஆசையுடன் சேர்த்து அணைத்துக் கொண்டாள். அவளுக்குள் இனம்புரியாத மகிழ்ச்சி. அக்காளையே பார்த்துவிட்ட மாதிரியான சந்தோஷம்.

"சரி... வாடா" அவன் கன்னத்தைத் தடவி வழித்து வாயில் வைத்து முத்தமிட்டுக் கொண்டாள்.

ஒரு பாசக் குழைவோடு மனசுக்குள் நெகிழ்ந்து ஓடுகிற நினைவு. தேனான நினைவு.

அக்காவை நினைத்தால்...

மனசுக்குள் ஒரு சந்தோஷ தென்றல், உப்பங்காற்றின் சுகமாக... ஆரோக்கியமாக... நினைவுகள்.

கூடவே ஒரு நெருடல்... புழுவாக நெளிந்த ஒரு தர்மசங்கடம்...

## 11

வீட்டுக்குள் மாமா உட்கார்ந்திருப்பாரே.

"வாங்க மாமா" என்று உபசாரமாக ஒரு வார்த்தை யாவது கேட்க வேண்டுமே. எப்படிக் கேட்பது? கூச்சமும் நடுக்கமுமாய் இருக்கிறதே...

நான் அந்த அளவுக்குப் பெரிய மனுஷியா? உபசார மாய் வாங்க என்று கேட்காமல் இருக்க. சின்னப் பிள்ளையும் இல்லையே... இது என்னடா வம்பாய்ப் போச்சு!

இவர்... பழைய நாராயணசாமி என்றால் கதையே வேறு. இவள் ஏறிட்டுப் பார்க்கக்கூட அருகதை யில்லாதவர். ஊரிலேயே பெரிய குடும்பத்தின் வாரிசு, இவள். மரியாதை, அந்தஸ்தோடு வாழ்ந்த குடும்பத்தின் கொழுந்து.

இவள் வீட்டில் காளைமாடுகளைப் பராமரிக்கிற வனுக்கு என்ன தகுதியோ... அதுதான் இவருக்கும்...

ஆனால், இப்போது—

இவர் அக்காவின் புருஷன், இந்த வீட்டின் மருமகன். பத்து வயசுப் பருவத்தில் இவர் விரலைப் பிடித்துக் கொண்டு விளையாடிய ஞாபகங்கள், அவரும் ஒரு தந்தையைப் போல இவளுடன் சிரித்து, விளையாடிய நினைவுகள்.

“வாங்க” என்று கேட்காமல் இருந்துவிட்டால், மாமா வருத்தப்படுவாரோ... ஊரில் போய் அக்காவிடம் சண்டை போடுவாரோ...

உள்திண்ணையில் உட்கார்ந்திருந்தார் மாமா.

ஏகமாய்த் தயங்கி லஜ்ஜையுடன் மாமாவை ஒரு கணம் பார்த்தாள்.

“அடடே... சொர்ணமா? இப்பத்தான் வேலை முடிஞ்சு வாரியா?”

நல்ல வேளை! அவரே கேட்டுவிட்டார். மனசின் இறுக்கம் சட்டென்று தளர்ந்தது.

"ஆமா, மாமா. எப்ப வந்தீக?" தொண்டைக்குள் சப்தமாகக் கேட்டாள்.

"மத்தியானமே வந்துட்டேம்மா."

"அக்காவைக் கூட்டிட்டு வரக்கூடாதா, மாமா?"

"இல்லேம்மா. நா ஒரு முக்கியமான விஷயமா வந்தேன்."

தூக்குச்சட்டியை அம்மாவிடம் தந்தாள். சிட்டையையும் டப்பாவையும் பலகையில் வைத்தாள். பக்கடா பொட்டலத்தை ரமேஷிடம் தந்தாள்.

"இந்தாடா."

"அய்ய்! சித்தி பக்கடா வாங்கிட்டு வந்துருக்கா."

அந்தச் சிறுவனின் இயல்பான குதூகலமும் வெடிச் சிரிப்பும் இவளையும் தொற்றிக் கொண்டன. மயிலிற கால் நீவிவிட்ட சுகம், மனசில்.

நாராயணசாமி வெத்தலையை 'சக்கு, சக்'கென்று மென்றுகொண்டே சொர்ணத்தை வைத்த கண் வாங்காமல் பார்த்தான்.

"ரமேஷ் வீட்டுக்கு வந்துருக்கான்னு டவுன்லேயே தெரிஞ்சுகிட்டியா?"

"என்ன மாமா?"

"இல்லே, மகனுக்குன்னு பக்கடா வாங்கிட்டு வந்துருக்கீயே, அதான் கேட்டேன்."

ஏதோ நகைச்சுவையைச் சொல்லிவிட்டவனாய்ச் சிரித்தான். பாவம், அம்மாவும் நிழலாய்ச் சிரித்தாள். உடனே முகம் வாடிவிட்டது.

சொர்ணமோ பெருமிதக் கூச்சத்தில் ஒரு புன்ன கையை மட்டும் உதிர்த்தாள். அந்தச் சின்ன உதடுகள் மூடிய நிலையில் மெல்லிசாக விரியும்போது வருகிற பேரழகைக் கவனித்தான், நாராயணசாமி.

"அம்மா... மாமா சாப்ட்டாகளா?"

அம்மா முகம் இருண்டு கிடந்தது. ஆழமான உள் வேதனை குடைகிற மாதிரியோர் முகவாட்டம். எதையோ கண்டு அரண்டு போனவளைப் போல பம்மிக் கிடந்தாள். அம்மாவுக்குரிய சுமாரான உயிர்க் களைகூட இன்று சுத்தமாய்க் காணாமல் போயிருக் கிறது.

என்னாச்சு? இங்கு என்ன நடந்துவிட்டது?

இவளுக்குள் திகிலான குறுகுறுப்பு.

சொர்ணம் கேட்டதற்கு வேலாயி என்னவோ வறண்ட குரலில் பதில் சொன்னாள். காதில் வந்து விழக்கூடிய அளவுக்குக்கூட உயிர்ப்பசையோ, தெளிவோ இல்லை. என்ன கேடு நிகழ்ந்துவிட்டது இங்கு?

"ஆச்சும்மா. இப்பத்தான் வச்சுக் குடுத்தாக, சாப்புட்டுட்டுத்தான் வெத்தலை போட்டுருக்கேன்."

அம்மாவைச் சினந்து பார்த்த சொர்ணம், மாமா சப்தம் கேட்டுத் திரும்பினாள். மாமாவின் நிழல், மேலச் சுவரில் கரும்பூதமாய் அசைந்தது.

“அக்கா எப்படியிருக்கா, மாமா?”

“இருக்கா...”

மாமா பதிலில் இருந்த சலிப்பு, இவளுக்குள் வேதனையாகப் புரண்டது. விதம் விதமான யூகங்களைத் தூண்டிப் பயமுறுத்தியது.

“என்ன மாமா, ஒடம்புக்கு ஏதாச்சும்?”

“அதெல்லாம்... நல்லாத்தான் இருக்கு.”

“பெறகு?”

“பாவம் கிட்ணம்மா. காட்லேயும் உசுரைக் குடுத்துப் பாடுபடுறா. வீட்லேயும் ஓய்வில்லாம முதுகை ஒடிக்கிற வேலை நாறிப் போகுது. ஒத்தையிலே கிடந்து சீரழியுறா.”

மாமா... இதைச் சொல்லிவிட்டு ஏதோ உள்ளர்த்தம் தொனிக்க அம்மாவைப் பார்த்தார். அந்தப் பார்வையை வெறுப்புடன் புறம் தள்ளுவதைப் போல, தலையைச் சொறிகிற சாக்கில் அடுப்பங்கரைப் பக்கம் திரும்பிக் கொண்டாள் அம்மா.

சொர்ணத்திற்குள் சின்னதாய் ஒரு நிழலிருட்டு. முகம் காட்டிவிட்டு நகர்கிற திகில்.

“நீயும் சாப்புடுடி.”

“ஆட்டும்மா.”

“அந்தப் பயலையும் சாப்பிடச் சொல்லு.”

“ம்.”

அடுப்பங்கரைக்குள் நுழைந்தாள்.

“டேய் ரமேஷ், சாப்பிட வாரீயாடா?”

"ஆட்டும் சித்தி."

"இங்க வா கண்ணு."

"ம்?"

"தம்பிக என்னடா செய்றாக? அவுகளையும் கூட்டிட்டு வரக்கூடாது?"

"அய்யா யாருக்கும் தெரியாம, சைக்கிள்லே ஒத்தையிலே கிளம்புனாரு. நா பாத்துட்டேன். வாரேன்னு அழுதேன். அப்புறம்தான் என்னை வஞ்சிக்கிட்டே சைக்கிள்லே ஏத்திக்கிட்டாரு."

அவன் திக்கித்திக்கிச் சொல்கிற 'அழகில்' சொர்ணம் அப்படியே பூரித்துப் போனாள். சோறு வைத்துக் குழம்பு ஊற்றினாள். உட்கார்ந்தாள். மகனையும் பக்கத்தில் இழுத்து வைத்துக் கொண்டாள். வலது காலைச் சப்பணமிட்டு, இடதுகாலை மடக்கிக்கொண்டு குனிந்து சாப்பிட்டாள்.

"சாப்புடடா..."

அம்மாவும், மாமாவும் குசுகுசுவெனப் பேசுகிற சப்தம். வருத்தமாய் அம்மா விடுகிற பெருமூச்சின் இரைச்சல். கசிந்த குரலில் அம்மா முணுமுணுத்து விசும்புகிற சப்தம்.

என்னத்தைப் பேசுகிறார்கள்? எதற்காக அழணும்? அம்மாவைப் பற்றிக்கொண்டு வதைக்கிற விஷயம் எது? ஒருவேளை... விஷயம் தன்னைப் பற்றியதாக இருக்குமோ..?

இனம் புரியாமல் மர்மமாய் மிரட்டுகிற திகில் திகைப்பு.

கண்ணுக்குப் புலப்படாத மாயப் புகைக் கூட்டம் தன்னை மொய்த்து முற்றுகையிட்டதைப் போல அரூபமாய் நாசிக்குள் திபுதிபுவெனப் புகுந்து நெஞ்சடைப்பதுபோல சுவாசிக்க முடியாமல் இருதயம் இயக்கமற்று தவிப்பதைப்போல—

ஒரு பிரமை. பிரமைதானா? உண்மையின் அரூப மான நிழலா? மனசைக் கவ்விக்கொண்ட கிலி.

மாமா உறங்கிவிட்டார். ரமேஷ் சொர்ணத்துடன் ஒண்டிக்கொண்டு தூங்கிப் போனான். தூக்கம் அண் டாமல் அவஸ்தையோடு புரண்டு படுக்கிறாள், அம்மா. சப்தம் கேட்கிறது.

ஏதோ ஒரு கவலை அவளைப் புரட்டி எடுக்கிறது. நிலை கொள்ளவிடாமல் அவஸ்தைப்படுத்தி, குரூரமாய் விளையாடுகிறது.

இவள் அடுப்பங்கரைக்குள் சாப்பிட்டுக் கொண் டிருந்தபோது அவர்கள் குசுகுசுத்த பேச்சில் ஒன்றிரண்டு புரிவது போலிருந்தது...

"நா சொல்ற வார்த்தையைக் கேளுங்கக்கா. காடு கரைகளும் தரிசா கெடக்கக்கூடாது. கன்னிப் பொண்ணையும் வீட்லே வைச்சிக்கிட்டிருக்கக் கூடாது. நாலா திசையிலேயிருந்தும் யோசனை பண்ணிப் பாருங்க. நா சொல்றது நியாயம்னு படும்."

"அதெல்லாம் சரிதான் தம்பி. செல்வம் பொழிஞ்ச இந்தக் குடும்பம், காலக் கொடுமையினாலே தரித்திரத் துலே வந்து பேயாட்டம் போடுது. கிட்ணம்மா கதைதான் இப்படியாகிப் போச்சு. விதிப்பலன்.

காடுகரைகள்லே கொதிக்கிற வெயில்லே கிடந்து பாடுபடுற வங்கொடுமையில்லாத வாழ்க்கையை, சொர்ணத்துக்காச்சும் அமைச்சுக் குடுத்திடணும்னு இந்தப் பாழும் மனசு தவிச்சுக்கிட்டிருக்கு தம்பி... இதான் என் நெனைப்பு."

இவ்வளவுதான் காதில் விழுந்த வார்த்தைகள். அதற்கு முன்னும் பின்னும் என்ன பேசிக்கொண்டார்கள்? ஒரு இழவும் தெரியமாட்டேன் என்கிறது. மாமா என்ன சொல்கிறார்? தெரியவில்லை. ஆனால் ஒன்று புரிகிறது. இவளுக்குத் தூரமானது; விரோதமானது; சுற்றி வளைத்து நிர்ப்பந்தப்படுத்துவது; சிறகுகளை நறுக்கக்கூடியது... அமாவாசை. சாஸ்வத அமாவாசை.

அடித்தரையறியாத ஆழத்திற்குள் மூடிக்கொண்டிருந்த நினைவுகளைச் சட்டென்று நிறுத்தினாள். ச்சே! என்ன இது, என்ன ஏது என்று தெரிந்து கொள்ளாமலேயே, எதற்காக பயந்து சாகணும்?

அய்யா இருந்திருந்தால்... பயந்து சாக வேண்டியது இருக்குமா?

அப்போது இவளுக்கு எட்டு வயதிருக்கும். கால்களில் கொலுசு சங்கீதம் பாட... வீடு முழுக்க பட்டாம்பூச்சியாக ஓடித்திரிவாளே...

எங்கு ஓடினாலும் எதிலாவது மோதத்தான் வேண்டும். அப்படி... வீடு நிறைய தட்டுமுட்டுச் சாமான்கள். சீதேவி.

ஓடித்திரிகிற இவளைக் கொஞ்சுற வேலையாட்கள். "சின்னம்மா சின்னம்மா" என்று தேனாகக் கொஞ்சுகிற சத்தம். அந்தத் தேன் வெள்ளத்தைப் பார்க்காமல் ஓடி விளையாடிய சொர்ணம்.

மூக்கு ஒழுக, கிழிந்த பாவாடைகளோடு, பரட்டைத் தலையோடு இவளுடன் விளையாட வருகிற சிறுமிகள்.

"அடியே... அடியே..."

அம்மாவின் கூப்பாடு கேட்கும். ஏனென்று கேட்கவேமாட்டாள். வேலைக்காரிகள் மாறி மாறி வருவார்கள்.

"சின்னம்மா, சின்னம்மா உங்களை அம்மா கூப்டுறாக."

வேலைக்காரிகள் குழைவோடு நீட்டுகிற ஓலைகளை யெல்லாம் வாங்கியே பார்க்கமாட்டாள்.

ஒரே விளையாட்டுத்தான்.

வேலாயியே வருவாள். வந்து இவளைப் பிடித்துக் கொள்வாள். வேலாயியின் கோபம் பூராவும்கூட விளையாட வந்த சிறுமிகளைத்தான் கிழிக்கும்.

"வேலையத்த கழுதைக, எதுக்கு இங்க வந்து எம்புள்ளையைக் கெடுக்கிக? கொரங்குகளா... விளையாட வந்துருக்கிற முகரைகளைப் பாரு. வக்கத்த கழுதைக. யார்கூட உங்க விளையாட்டு? சீமான் புள்ளை கூட விளையாட்டா? ஒரு தராதரம் வேண்டாம்.?"

வேலாயியின் சீறலில் அந்தச் சிறிசுகள் பதறிச் சாகும். அப்படியே பம்மிப் பதுங்கும். கிள்ளி வெயிலில் போட்ட பூவாக முகம் வாடிச் சிறுத்துப் போகும்.

அரவமில்லாமல் ஒவ்வொன்றாக வெளியேறிவிடும். இவளுக்கு அதுவும்கூட ஒரு வேடிக்கையாகத்தான் இருக்கும். ஒரே சிரிப்பாணியாகச் சிரித்துப் பொங்குவாள்.

கடைசியில்—

வேலாயி இவளிடமும் சீறுவாள். வெறுங் கழுதைகளோடு சமதையாக, விளையாடியதற்காக அதட்டுவாள்.

"நீ யாருன்னு நினைப்பு இருக்கா? ராசா மகள். இப்படி நீ தரங்கெட்டு விளையாடுறது உங்க ஐயாவுக்குத் தெரிஞ்சதுன்னா... அம்புட்டுத்தான். ஒன்னையும் என்னையும் தோலை உறிச்சு உப்பைத் தடவிருவாரு. தெரியுமா?" என்பாள்.

**சொ**ர்ணச் சிறுமி இப்படியேதான் உணர்த்தப் பட்டு வளர்க்கப்பட்டவள். அவளுக்கு அவளே இப்படித் தான் அறிமுகமானாள்.

நீ உசத்தி. தரம் உயர்ந்தவள். உன் தலையில் கிரீடம் இருக்கிறது. கிரீடத்தைச் சுற்றி ஒளிவட்டம் சுடர்கிறது. நீ தேவமகள். நீ தேவதை. நீ ராசா மகள்.

தான் ராசா மகள் என்றால், இந்தப் பெரீய்ய வீடுதான் அரண்மனை என்று மனசுக்குள் ஒரு படிமம் விழும்.

# 12

ஆ! அந்த அரண்மனை இன்று கிடக்கிற கோலம். அலங்கோலம்! ஆறுதலைக் கட்டுகள் சாமான் செட்டு களோடு வாழக்கூடிய பெரிய வீடு. அதில் இரண்டே ஜீவன்கள் - எந்தச் சாமான்களும் இல்லாமல்.

பசை ஒட்டி வயிறு நனைக்கிற பிழைப்பு.

இதில் வீட்டை எங்கே கவனிப்பது? சுண்ணாம்பு வாங்கி வெள்ளையடிக்கக்கூட விதியில்லை. சுவரெல் லாம் கறுத்துப் பாசி படர்ந்து கிடக்கிறது. உவர் பொங்கி, காரையெல்லாம் பெயர்ந்து, மாவுத் தூசியாக உதிர்ந்து...

உடைந்து சிதிலமான இடத்தை மட்டும் பூசினால்கூட பத்து மூட்டை சிமெண்டு வேண்டும். தவிட்டுக்குத் தவிக்கிற காலத்தில், இஞ்சிப் பச்சடிக்கு ஏங்க முடியுமா?

வீடெல்லாம் இஞ்சிப் பச்சடி சிந்திச் சிதறிக் கிடந்த காலம் எப்படி நழுவிப்போனது? தவிட்டுக்கே தவிக்கிற நேரம் எங்கிருந்து வந்து சேர்ந்தது? எல்லா விதியும் அய்யாவிடம்தான் மையம் கொண்டிருக்கிறதா?

செழிப்பு வீழ்ச்சி இரண்டுக்குமே அய்யாதான் காரணமா? அய்யாவின் சூழல்தான் காரணமா?

செழிப்பு என்றால் சாதாரணமான செழிப்பா? அந்தக் காலத்துக்கு அது எம்புட்டுப் பெரிசு? சுத்துப் பட்டிகள் அரண்டுபோய் வாய் பிளந்ததே...

அன்று மதியமிருக்கும். வழக்கமில்லாத வழக்கமாக அந்நேரத்திற்கு வீட்டு வாசலில் வில் வண்டி வந்து நின்றது. மாட்டுச் சலங்கைச் சத்தம் கேட்டு, சிறுமி சொர்ணம் ஓடிவந்தாள். வீட்டுக்குள்ளிருந்து ஓடி வருவதற்குள், வண்டியிலிருந்து அய்யா குதிக்கிற சத்தம். 'செருக்கு செருக்கு' என்று கர்ஜிக்கிற ஆணியறைந்த செருப்புச் சத்தம்.

அய்யாதான்.

மாடுகளை ஒருவன் பிடித்துக்கொண்டு தொழுவத்திற்குள் இழுத்துச் செல்ல, வண்டியை ஒருவன் ஓரமாகத் தள்ளி நிழலில் நிறுத்தினான்.

"எலேய், முனுசாமி..."

"என்ன சாமி?"

"வண்டியிலே ஒரு பொட்டணம்" — கம்பீரமாய்ச் சொன்ன ராமானுஜம், தூக்கிக்கொண்டு உள்ளே வா என்பதுபோல் கைஜாடை உத்தரவு போட்டார்.

வாசல் கொள்ளாத உயரம். சிவந்த நிறம். தங்கக் கலர். கலர் மின்னல். ராஜா போலவே கம்பீரம்.

வீடு தங்காமல் மானாவரித்தனமாய் அலைந்ததில் நிறம் மங்கி, பிளந்து வைத்த பப்பாளிப் பழத்தின் கலராய் இருந்தார். நரைத்துப் போயிருந்தாலும், இளவட்டம் போல மீசை வைத்திருப்பார்.

எந்நேரமும் கதர் வேட்டியும் சட்டையும்தான். மடிப்புக் குலைந்திருக்கக் கூடாது. சலவை வெள்ளை,

பளிச்சென்று இருக்க வேண்டும். ஒரு கசங்கலோ ஒரு பொட்டு அழுக்கோ இருக்கக்கூடாது. பயங்கரமான ஷோக் பேர்வழி.

*"என்ன அய்யா பொட்டணம்?"*

*"ம்..."*

*"அய்யா... அய்யா... என்னதுய்யா?"*

விரலைப் பிடித்துத் தொங்கிய மகளைப் பார்த்துக் கஞ்சத்தனமாய் ஒரு முறுவல்.

*"ஐவுளி."*

*"யாருக்கு?"*

*"அக்காவுக்கு, ஒனக்கு, அம்மாவுக்கு— எல்லாருக்கும் தான்."*

*"கல்யாணத்துக்கா?"*

*"ம்..."*

சட்டையைக் கழுத்து வழியாகக் கழற்றினார். வெள்ளை வெளேர் பனியனையும் உரிந்தார். உடம்பை அலசிவிட்டு வந்தார். வேலாயி, மயிலைக் கண்ட சர்ப்பமாய்ச் சுவரோடு ஒண்டி நின்றாள்.

ஈர உடம்பைத் துடைத்துக்கொண்டே வந்தவர், வேலாயியைப் பார்த்து உறுமினார்.

*"என்ன, சுவர்லே சாத்தி வச்சாச்சா? வந்து, பொட்டணத்தை அவுத்துப் பாரேன்?"*

அவளுக்குக் கை நடுங்கியது. நடுக்கத்தோடு அவிழ்த்தாள். சொர்ணத்தின் பிஞ்சு விரல்கள் துறுதுறுக்க நடுவே புகுந்தாள்.

கிருஷ்ணம்மா நெருங்கி வந்து சொர்ணத்தை அதட்டினாள்.

ஏய் வாலு, கொஞ்சம் சும்மாயிரேன்."

"நா அவுக்கக்கூடாதா?"

"முடியுமா?"

"அதெல்லாம் முடியும்."

"தள்ளியிரும்மா. நா அவுக்கேன்."

கிருஷ்ணம்மா முடிச்சுகளை அவிழ்த்தாள். உள்ளே ஒரு ஜவுளி உலகம் கண்ணைப் பறித்தது. வேலாயியிக்குப் பிரமிப்பில் நெஞ்சையடைத்தது. சொர்ணத்துக்குச் சொல்லி மாளாத சந்தோஷம். கண்களில் ஒளி மின்ன, வானுக்கும் பூமிக்குமாய் இறக்கையடித்துப் பறந்தாள்.

கிருஷ்ணம்மாளின் விழிகள் சந்தோஷத்தில் விரிந்தன. முகத்தில் ஒரு வெளிச்ச மின்னல்.

இதையெல்லாம் பார்த்து முறுவலித்தார், ராமானுஜம். பெருமிதத் ததும்பலில் முகமே விரிந்தது. கண்ணில் ஒரு கர்வம். 'பார்த்தாயா, இந்த ராமானுஜத் தைப் பத்தி என்ன நெனைச்சே?' என்று கெக்கலிப்பாகக் கேட்கிற பார்வை.

கல்யாணப் பெண் கிருஷ்ணம்மாளிடம் பட்டுப் புடைவையை எடுத்துக் காட்டினார். அன்றைக்கு உள்ள விலை நிலவரத்துக்கே... அது ஆயிரத்தைந்நூறு.

காலை நேர மழலை வெயில் பட்டு பிரகாசிக்கிற தை மாச மிளகாய்ச் செடி போல... கரும் பச்சையில் கண்ணைப் பறித்தது, பட்டுச் சேலை. முகூர்த்தப் பட்டு.

அகலமான பார்டர். மயில்கள் எதிரும் புதிருமாய் நிற்கிற மாதிரியான சித்திர வேலைப்பாடுள்ள பார்டர்.

புது மாப்பிள்ளைக்கு பட்டு வேட்டி, சட்டை, அஞ்சாம் நாள் எண்ணெய் முழுக்குக்கும் ஒரு பட்டு வேட்டி, சட்டை.

சொர்ணத்திற்கு அரக்குக் கலரில் உயர் ரகப் பட்டுப் பாவாடைத் துணி. சட்டைக்குத் துணி. அம்மாவுக்குக் கோடம்பாக்கம் சேலை. நீலக்கலரில் பொடிக் கட்டம் போட்ட சேலை. தொட்டுப் பார்த்தால்... சொர சொரவென்று சத்தம் வரும்.

அது என்ன கல்யாணமா? ஏழு ஊர் கூடி நடத்திய கோயில் திருவிழா மாதிரி, அடேயப்பா! ஊர் முழுக்கப் பந்தல். விட்ட சொந்தம், தொட்ட சொந்தம் என்று பத்து ஊர் ஜனமும் மொத்தமாய்த் திரண்டு வந்து... ஏழு நாளும் கூடிக் குலவி... ஆக்கி அவித்து, தின்று தீர்த்தது.

சாதாரண சம்சாரி குடும்பத்துக்கு ஒரு கல்யாண மும், ஒரு இழவும் வந்தால் போதும்... குடும்பம் குட்டிச்சுவராகிவிடும் என்பார்கள். ராமானுஜமோ பெருமைக்கு மாவு இடிப்பதில் பெரும் கெட்டிக்காரர். கௌரவத்திற்காகவே காரியங்களைச் செய்பவர். ஜமீன்தார் மாதிரி ஒரு நினைப்பு.

கேட்க வேண்டுமா? ஐந்து கல்யாணம், ஐந்து இழவுக்கும் என்ன செலவாகுமோ அத்தனையையும் இந்த ஒரு கல்யாணத்திலேயே அள்ளி இறைத்தார்.

நாராயணசாமி பாவம், நொந்துபோன ஆள். இந்த வீட்டுச் சம்பந்தம் கிடைக்கும் என்று கனவில்கூட நினைத்திருக்கமாட்டான். நொடித்துப்போன சம்சாரி. நாதியற்றவன்.

அவனது அய்யா ராமானுஜத்திற்கு ஏதோ ஒரு காலத்தில் ஏதோ ஒரு உதவி செய்தாராம். அதற்கான நன்றிக்கடன்தான் கிருஷ்ணம்மா.

எல்லாமே வீண்; அபத்தம்! விரயம். என்ன ஆயிற்று? இதோ... இப்போது...

அக்கா நல்லதங்காளைப் போல் துன்பப்படுகிறாள். வேனாக் கொதிக்கிற வெயிலில் பொழுதுக்கும் காட்டில் உயிரைக் கொடுத்துப் பாடுபட்டு, வீட்டிலும் நெட்டி முறிய வேலை பார்த்து... தலைக்கு எண்ணெய்கூட இல்லாமல் நார் பறிந்து கிடக்கிறாள்.

மூன்று பிள்ளைகளுக்கும் கம்மஞ்சோறும், சோளக் களியுமாகக் கரைகிற நாள்கள். வாய்க்கு ருசியாக ஒன்றும் கிடையாது. நாக்குச் செத்துக் கிடக்கிற பிள்ளைகள்.

ஒரு பக்கடா பொட்டலத்தைக்கூட அதிசயமாகப் பார்த்து 'அய்ய்' என்று கும்மாளமிட்டுக் குதூகலிக்கிற அளவுக்கு, ஆலாய்ப் பறந்து அலைகிற அவலம்.

பாவம் அக்கா!

வறுமைப் பிடுங்கலில் நொம்பலப்படுத்துகிற துன்பத்தில், வயதை - வாழ்க்கையைக் கரைத்துக் கொண்டிருக்கிற அக்கா.

இவள் சிறுமியாக இருக்கும் காலத்திலேயே... அம்மா ஏகதேசமாய்ப் புலம்புவாள். ராத்திரி நேரத்தில் அய்யா திண்ணையில் வெற்றிலை போட்டு மென்று கொண் டிருப்பார்.

அம்மா, அடுப்பங்கரைச் சுவரை ஒண்டிக்கொண்டு நிற்பாள். பயத்தோடு 'சீத் சீத்'தென்று அழுதுகொண் டிருப்பாள்.

சொர்ணம் உறங்கிவிட்டாள் என்ற தைரியத்தில் பேச்சு நடக்கும்.

"மலைமல்லையா வெள்ளாமை வெளைஞ்சு குமிஞ் சாலும் எல்லாம் முங்கிப்போய், 'கடன், கடன்'னு வீடு பூராவும் கடன் பாரம் ஏறுதுன்னா... ஏறாம என்ன செய்யும்? ஏறத்தானே செய்யும்."

"அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்றே?"

"வீட்லே ராசா மாதிரி நீங்க. காட்லே என்ன நடக்கு, வீட்லே என்ன நடக்குன்னு கண்காணிக்கணுமா, வேணாமா? ஆளுக வேலை செய்றாகளா ஏமாத்துறா களான்னு பாக்க வேண்டாமா? ஏவாரிக வாங்கிட்டுப் போறாகளே, நம்ம வெள்ளாமை வெளைச்சலை அதை என்னன்னு என்னிக்காச்சும் கவனிச்சதுண்டா?"

"ம்... ம்..."

"ஊருக்கு ஒரு வப்பாட்டி வச்சுக்கிட்டு, வில்வண்டி யிலே ஊர் ஊராச் சுத்திக்கிட்டு, துட்டை நோட்டு நோட்டா அள்ளியள்ளி இறைச்சா... கடன் ஏறாம, என்ன ஏறும்?"

ராமானுஜம் வெகுண்ட குரலில் அதட்டுவார். கேட்டால் குலை நடுங்கிப் போகும்.

"அடி சிறுக்கிப் புள்ளே! பொசுக்குன்னு வப்பாட்டியைத்தான் பேசுவே. ஓம் மூஞ்சி முகரையை மட்டும் பாத்துக்கிட்டே இருக்கச் சொல்தீயாக்கும்? மூதி!"

எட்டு வயதுச் சிறுமிக்கு இதெல்லாம் அப்போது புரியாது.

அக்கா தலைப்பிள்ளையை ஆறுமாதமாய்ச் சுமந்து கொண்டிருக்கும் போது—

ஒரு நாள்—

நெஞ்சு வலிக்குது என்று மார்பைப் பிடித்தார், ராமானுஜம். மயங்கி விழுந்துவிட்டார். ஊரே கூடி வைத்தியம் பார்த்தது. அந்தப் பட்டிக்காட்டில் என்ன வைத்திய வசதி இருக்கப் போகிறது?

ஊர் ஜனம் கூடித் தவித்தனர். அங்கலாய்த்தனர். வில்வண்டியில் தூக்கிப் போட்டுக்கொண்டு டவுனுக்குப் போகையில், பாதி வழியிலேயே உயிர் பிரிந்துவிட்டது.

'மலை சாய்ந்துவிட்டது' என்று ஊரே கலங்கியது. "பத்து ஆள் கூடிக்கிட்டு அடிச்சாலும் சாய்க்க முடியாத திரேகம் பொசுக்குன்னு விழுந்து விசுக்குன்னு போயிருச்சே. எமன்கிட்டே ஒருத்தன் பாச்சாவும் பலிக்காதப்பா!"

பெரியாட்கள் பிரமிப்புடன் பரிதவித்தனர். துக்கம் தாங்காமல் வீடு திணறியது.

அதுவரைக்கும்—

தாழம்பூவும் கொண்டையுமாய், தளதளவென்று மணந்துகொண்டிருந்த குடும்பம், அந்த மரணத்திற்குப்

பிறகு, கூந்தல் முழுக்க ஈறும், பேனும், சிரங்குமாய் நாறிக்கிடக்கிற நிலைமை வெளிச்சத்துக்கு வந்தது.

சொஸைட்டியில் கடன், வங்கிகளில் கடன், அவரிடம் வட்டிக் கடன், இவரிடம் பத்திரக் கடன் என்று வரிசை வரிசையாகப் புற்றீசலாய் வந்து மொய்த்தன.

அம்பலத்துக்கு வந்த நிஜப் பேய்கள், ஊர் சிரிக்க ஆடின. காடுகரைகள், மாடுகள், சகலமும் விற்றுத் தீர்ந்தபிறகுதான் அந்தப் பேய்களின் கூச்சல் அடங்கியது. மிஞ்சியது?

இந்த வெறும் மனையும், தொழுவமும், ஏழு ஏக்கர் கரிசல் காடும், மூன்றரை ஏக்கர் கிணற்றிறைவுப் புஞ்சையும் தான்.

நீர்ச்சத்துக் குறையக் குறைய... கிணறு வற்றிப்போய் விட்டது. ஆழப்படுத்த கையில் பசை இல்லை. அதுவும் தரிசுதான். மானாவாரியும் தரிசுதான்.

சொர்ணம் பசை தடவி மேல் பெட்டி ஒட்டி, வருகிற வாரச் சம்பளத்தில் உயிர் வளர்க்கிற அவலம்.

அடக் கடவுளே, இப்படியும் தலைகீழ் மாற்றமாய் வாழ்க்கை புரளுமா? மலை இருந்த இடத்தில் பாதாளம் தோன்றுமா? இவ்வளவு குறுகிய காலத்திற்குள்ளாகவா, இத்தனை கொடிய மாற்றம்? தோசையைப் புரட்டிப் போட்ட மாதிரி...

•

அய்யா... ஏன் இப்படிச் செய்தீர்கள்? எங்களையெல்லாம் இப்படித் தவிக்கவிட்டுச் சிறுமைப்படுத்தத் தானா?

*எப்படி வந்தது இந்தச் சரிவு? ஊருக்கு ஒரு வப்பாட்டி வைத்துக்கொண்டதால்தானா? அல்லது ஜமீன்தார் தோரணையில் மயக்கங் கொண்டு, ஆடம்பரப் படாடோபங்கள் செய்கிற வறட்டுக் கௌரவத்தினால் தானா?*

*வப்பாட்டிகளை வைத்துக்கொண்டதே, இந்த வறட்டுக் கௌரவத்திற்குத்தானா? 'இத்தனை யானைகளைக் கட்டித் தீனி போட, என்னைத் தவிர வேறு எவனால் முடியும்' என்று பெருமையாகக் காட்டி தம்பட்டம் அடித்துக்கொள்ள ஆசைப்படுகிற கர்வம் தான் காரணமா?*

*மத்தியதர விவசாயியாக இருக்கிற யதார்த்தத்தை உணராமல், பண்ணையார் என்ற போலியான ஆகாயக்கோட்டையில் மிதந்து, பறந்து, இறக்கை ஒடிந்தவுடன் சகலமும் நொறுங்கிப் போய், தரையில் விழுந்து சமாதியாகிப் போன கரிசல் காட்டு மனிதர்களில்... அய்யா, நீரும் ஒருவரா...?*

**நா**ராயணசாமியின் குறட்டைச் சத்தம் 'குர்ர்ர்' ரென்று கர்ணகடூரமாகக் கேட்கிறது. பாவம், மாமாவுக்கு வயசாகிவிட்டது. நரையும் வழுக்கையுமாய்க் கிழடாகி விட்டார். நாசியிலும் சதை வளர்ந்துவிட்டது போலும்!

பாவம் அக்கா! இந்தக் குறட்டைக் கொடுமையில் எப்படித்தான் உறங்குகிறாளோ...

பெருமூச்சுடன் ரமேஷைப் பக்கத்தில் இழுத்துக் கொண்டாள் சொர்ணம்.

குளிக்கலியே என்கிற ஏக்கம் வேறு உடம்பை அரிக்கிறது; நசநசக்கிறது.

வியர்வையும் பசை நாற்றமும் நைலெக்ஸ் துணிக்குள் ஊறி ஊறி உலர்ந்து... ச்சே!

குளித்தால்தான் மனசு ஆறும்.

பூனை போல மெள்ள எழுந்தாள். சப்தமில்லாமல் தொழுவத்திற்குள் வந்தாள். தொழுவத்தில் இருட்டு. கனத்த இருட்டு.

## 13

சிமெண்ட் தொட்டியிலிருந்த தண்ணீரைத் தொட்டுப் பார்த்தாள். ஜில்லென்றிருந்தது. இந்த அளவுக்குக் குளிர்ச்சியான தண்ணீரில் குளிக்கவா? வெடவெட என்குமே?

இனிமேல் எப்படி வெந்நீர் வைக்க? நேரங்கெட்ட நேரத்தில் அடுப்பு மூட்ட முடியுமா?

ஆனால் உடம்பு இருக்கிற இருப்பில், குளிக்காமல் உறங்க முடியாது.

சேலையை உரிந்து சுருட்டி வாளிக்குள் போட்டாள். ஜாக்கெட் ஊக்குகளைக் கழட்டினாள். பாவாடை நாடாவை அவிழ்த்து, உயர்த்தி மார்புக்கு மேல் கட்டிக்கொண்டாள்.

ஏனோ வெள்ளைத்தாய் ஞாபகத்தில் வந்து உரசினாள். ஸ்டோர் ரூமில் அந்த அழுக்குப் பயல் என்ன திமிரோடு துணிந்திருப்பான்.

கத்தி ஆர்ப்பாட்டம் பண்ணினால், தனக்குத்தான் கேவலம் என்ற அச்சத்தில், வெள்ளைத்தாய் சுருங்கிக் கொண்டாளா?

பாவம், அந்நேரம் அவள் மனசு என்னமாய்த் தவித்திருக்கும்...!

நின்று குளித்தால்... தண்ணீர் தெறிக்கிற சப்தம் கேட்கும். குத்துக்கால் வைத்து உட்கார்ந்துகொண்டாள். தலைமட்டத்தில் தொட்டி. எட்டித் தண்ணீர் முகர்ந்து, இடது தோளில் ஊற்றினாள்.

"ஸ்ஸ்ஸ்ஸ்ஸ்..."

தை மாசக் குளிர் உடம்பெல்லாம் சிலிர்த்தது. உடம்பே ஒரு குலுங்கு குலுங்குவதைப் போல ஆடி நடுங்கியது. நரம்புகள் அத்தனையும் விறைத்து, விம்முவது போலிருந்தது. சகல அணுக்களும் அந்தக் குளிர்ச்சியில் உறைந்துவிடுமோ... உடம்பே நடுங்கியது.

அவள் மனசுக்குள் விதவிதமாய்க் கற்பனைகள். வயசின் பருவக் கிறுக்கு.

இவளுக்குப் பிறகு சடங்கமான மாரியம்மாள் உள்ளூரிலேயே வாழ்க்கைப்பட்டு ரெண்டு பிள்ளைக்குத் தாயாகிவிட்டாள்.

இவளையொத்த சின்னத்தாயின் மூத்த மகன் ரெண்டாங்கிளாஸில் முதல் ரேங்க்.

காலம் கை கழுவிவிட்டு நழுவிக்கொண்டு ஓட, இவள் காலத்தின் முரண்பாடாய் நிலைத்துப் போனாள்.

இவளுக்கும் மாலை பூக்குமா? மாலை பூக்கிற நேரம் வருமா? வாய்ப்பு வருமா? என்ன நம்பிக்கை இருக்கிறது?

ஒரு பொட்டுத் தங்கம்கூட இல்லை. எவன் வருவான், மாலையோடு? நகையில்லாமல், நட்டில் லாமல் அழகிருந்தால் போதும் என்று எந்த ராஜ குமாரன் வருவான்? கை நொண்டி, கால் நொண்டியாக இருக்கக்கூடிய வெறும் பயல்கூட, 'ஆறு பவுன் போடுவியா?' என்று அதிகாரம் பண்ணுகிற காலம் இது.

இந்த லட்சணத்தில் அம்மாவுக்கு ஆசை - வெயில் முகம் பார்க்காமல் மகளை வைத்து வாழ வைக்கிற வனுக்கு முடிக்க வேண்டுமென்று, கனவு.

கை சேரக்கூடிய ஆசையா?

குளித்து முடித்தாள். உடம்பைத் துவட்டிக் கொண் டாள். வேறு மாற்றுத் துணியை உடுத்தினாள். ஜாக்கெட்டின் கடைசி ஊக்கைச் சொருகுகிறபோது...

மனசுக்குள் பழநி வந்தான். முனியசாமியின் மகள் வழிப் பேரன். தாய் தகப்பனை இழந்தவன்.

எட்டாங்கிளாஸ் வரை, தாத்தா நிழலில் இங்குதான் படித்தான். அப்போதெல்லாம் சொர்ணம் பார்க்கவே மாட்டாள். பார்த்தாலும் பொருட்படுத்தமாட்டாள்.

முனியசாமியின் பேரன்தானே! முனியசாமி இவள் வீட்டில் விசுவாசமான வேலைக்காரன். ராமானுஜத் திற்கு எடுபிடி. இன்ன வேலை என்று கணக்கில்லை.

வீட்டுக்கு விருந்தாளிகள் வந்தால்... சாராயம் வாங்கப் போகிறவன், அவன்தான். வீட்டில் சகல வேலைகளிலும் அவன் கைரேகை படிந்திருக்கும். நாய் போல - விசுவாசமான நாய்! ராமானுஜம் இறந்த அன்றைக்கு அவன் அழுத அழுகையைப் பார்த்து ஊரே

வியந்து பேசியது. அந்த வீட்டில் நஷ்டப் புயல் வீசிச் சுழன்றடித்த போதிலும், வேர் அறுந்துபோகாமல் அந்த வீட்டில் நிலைத்து நின்ற மரம், அவன்தான்.

எல்லா அவலங்களும், அவமானங்களும் அந்த வீட்டைச் சூழ்ந்துகொண்ட நிலையிலும், அந்த வீட்டுக் கஞ்சியைக் கடைசி வரைக்கும் குடித்துக் கொண் டிருந்தவன்.

வேலாயியைப் பார்த்துப் பார்த்து அழுதான். குமுறிக் குமுறிப் புலம்புவான். "மகாலட்சுமி போல இருந்த அம்மா... வீட்டுக்கு விளக்காயிருந்த ராணி யம்மா... இப்ப எப்படியாயிட்டாக? இப்படியும் செய்ய எந்தச் சாமிக்காச்சும் மனசு வருமா?"

சொர்ணத்தைப் பார்த்துக் கண்ணீர் வடிப்பான்.

"தம்பளப் பூச்சி (வண்ணத்துப் பூச்சி) மாதிரி செறகடிச்சுத் திரிஞ்ச புள்ளை. செல்லத்துலேயே விளையாடி, பழம் தின்னு, பால்லே கை கழுவுன புள்ளை. இன்னைக்குச் சித்திரம் கொறைஞ்சு, கொறைக்கோலமாகிப் போச்சே...!"

என்று சொல்லிச் சொல்லி மாய்வான். கடைசியாகக் கணக்கு முடித்துப் போனது அவன்தான். அப்பவும் போக மறுத்தான்.

"அந்த ராசா வீட்டுச் சோத்தை உண்டு வளர்ந்த உடம்பு இது. அந்த ராசா உலவுன இந்த வீட்லே கடைசி வரையில பாடு பட்டுட்டுச் செத்தாத்தான் எனக்கு நிம்மதி. சம்பளமும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம். உங்க வீட்டு நாயா வாசல்படியிலே கெடந்துட்டுப் போறேனே..."

என்று மறுகி மறுகிப் பேசினான். கண்ணீரை வடித்தான். வேலாயிதான் வலுக்கட்டாயமாகத் துரத்தினாள். வேறு வழியில்லை.

அந்த விசுவாசமான முனியசாமியின் பேரன்தான் பழநி. எட்டாங்கிளாஸ் வரைக்கும் டவுசர் மேல் அர்ணாக்கயிறைப் போட்டு வைத்திருப்பான்.

சொர்ணத்தைப் பார்த்தால் ஒதுங்கிப் போய்விடுவான். ஒன்றுமே பேசியதில்லை. முனியசாமி சொர்ணத்தைப் பற்றிக் கதை கதையாக நிறையச் சொல்லியிருப்பான். அதனால் ஒரு மரியாதையுடன் ஒதுங்கிப் போய்விடுவான்.

அப்புறம் ரொம்ப நாளாகப் பார்க்கவேயில்லை. கண்ணில் தட்டுப்படவேயில்லை. என்ன ஆனான் என்று நினைத்ததுமில்லை. நினைக்கும்படியாக மனசில் எந்தத் தடமும் பதியவுமில்லை.

முனியசாமியின் குடிசை, ஊரின் கீழோரத்தில் இருக்கும். கப்பி ரோட்டின் விளிம்பில் இருக்கும்.

அன்றைக்கு—

வேலை முடிந்து திரும்புகிறபோது, கருகருவென்று மயங்கிவிட்டது. முகம் மங்குகிற அளவுக்கு இருட்டு. தெருவிளக்குகள் கண் விழித்துவிட்டன.

கெங்கு, எல்லோரும் பிரிந்து அவரவர் வீடுகளுக்குச் செல்ல... சொர்ணம் தனித்து நடந்தாள்.

முனியசாமியின் குடிசையைக் கடக்கிறபோது — ஒரு சப்தம். சரம் சரமாய் வார்த்தைகள். பாட்டுமில்லை. ராகமில்லாமல்... வருகிற வார்த்தைச் சரங்கள். ஒரு

தாள லயத்தோடு கம்பீரக் குரலில் நடைபோடுகிற வாக்கியங்கள்.

இதென்ன... கவிதையா? கவிதை வாசிக்கிற இந்தப் புதுக்குரல் யார்? பாரதியார் கவிதையா?

முனியசாமிக்கு இதெல்லாம் தெரியாதே... 'அ' 'ஆ' என்கிற அட்சரமே தெரியாதே... அப்புறம் எப்படிக் கவிதை வாசிப்பது? எட்டிப் பார்த்துவிடலாமா? யார் என்ற கேள்வி உள்ளுக்குள் குறுகுறுக்க... குடைய ஆரம்பித்துவிட்டது. பெண் என்கிற கட்டுக்குள் தன்னை அடக்கிக் கொண்டு நடந்தாள். மனசுக்குள் அதே கேள்வி. யார்?

**ம**றுவாரம். அந்த ஊரில் பெருமாள் கோயில் திருவிழா. பட்டிமண்டபம். மதுரையிலிருந்து பேச்சாளர்கள் வேனில் வந்து இறங்கியிருந்தனர். பெரிய பெரிய கல்லூரிப் பேராசிரியர்கள்.

ஊர் ஜேஜே என்று கூடிக் கிடந்தது. ஆண்களும், பெண்களும், கிழடுகளும் சிறிசுகளுமாய் ஏகக் கூட்டம். பக்கத்துக் கிராமங்களிலிருந்து கூட டக்கர்களில் வந்திருந்தது, ஜனக்கூட்டம்.

பட்டி மண்டபம் பேச்சாளர்கள் வந்த பின்னும் நடக்கவில்லை. அவர்களுக்குள் ஒரே குசுகுசுப்பு. திகைப்பு.

யாரோ ஒரு பேச்சாளர் வரவில்லையாம். கல்லூரிப் பேராசிரியராம். வரவில்லை. அவருக்குப் பதிலாய் யாரைப் போட? அதுதான் அங்குப் பிரச்சினை.

நேரம் ஜாமமாகிவிட்டது. இன்னும் ஜனங்கள் ஆர்வத்தில் அலைபாய்ந்தனர். நடுவர் பெரிய பேராசிரிய ராம். பட்டி மண்டபத்திற்கென்றே பிறந்தவராம். சரக்கும் சிரிப்புமாய்ப் பேசுவதில் வல்லவராம். டி.வி. வானொலி என்பது அவருக்குத் தண்ணீர்ப்பட்ட பாடாம். அம்புட்டுப் பிராபல்யமாம். பெரிய பெரிய சினிமா டைரக்டர்கள் எல்லாரும் இவரது பேச்சுக்கு ரசிகர் களாம்...

நடுவர்தான் கூட்டத்தின் மொத்தக் கவர்ச்சி ஈர்ப்பு. பட்டிமண்டபம் துவக்கத் தயங்குகிற நிமிஷங்களில் ஒரே பரபரப்பு. குசுகுசுப்பு.

‘அந்தா இந்தா’ என்று பட்டிமண்டபம் துவங்கியது. மேடையின் நடுவில் நடுவர். இடதுபுறம் மூவர். வலதுபுறத்தில் மூவர்.

அட... வலதுபுறத்தில் புதிய ஆள். யார் இது? வெள்ளை வேட்டியும், சந்தனக் கலர் ஷர்ட்டுமாய், உயர்த்தி வெட்டிய ‘போலீஸ்’ முடிவெட்டு. நல்ல இளவட்டம். முகத்தில் வயசுக்குப் பொருந்தாத பெரிய மனிதத் தோரணையான கொத்து மீசை. கூட்டத்தையே பார்த்த அவர் பார்வையில் சிந்தனைத் தீவிரம்.

யார் இந்த இளைஞன்? பார்த்த முகமாய்த் தோன்றுகிறதே... ஆனால் அடையாளம் தெரிய வில்லையே...

சொர்ணத்துக்குள் குறுகுறுப்பு. சுற்றிலும் இருக் கிறவர்களின் முணுமுணுப்புகளிலிருந்து மேடையி லிருக்கும் புதியவன் உள்ளூர்க்காரன் என்று தெரிகிறது. யார் என்று தெரியவில்லை.

பட்டிமண்டபம் ஒரே சிரிப்பும் கூத்துமாய் நகர்ந்தது. நடுவர் ஜொலிக்கிறார். அவரது முகமும் சமயோசித மான நையாண்டிகளும், ஒரே சிரிப்புத்தான்.

சிரித்துச் சிரித்து வயிறே புண்ணாகிப் போய் விட்டது.

‘குடும்பங்கள் முன்னேறுவதற்குப் பெரிதும் காரண மாயிருப்பது பெண்களே - ஆண்களே’ என்ற பட்டி மண்டபத் தலைப்பில் ‘ஆண்களே’ என்ற அணியில் கடைசியாகப் பேச வந்தான் உள்ளூர்க்காரன்.

மைக்கின் முன்வந்து நின்றான். மௌனமாய்க் கூட்டத்தை ஒரு சுற்று சுற்றிப் பார்த்தான். முகத்தில் ஒரு பீதி. சிறு பதற்றம்.

கணீர்க் குரலில் பாரதியின் கவிதையோடு துவக்கி னான்.

ஒவ்வொரு வார்த்தையும் அரிவாள் வீச்சாக வந்து விழுந்தது. யாரும் செலுத்தாத ஆழத்தில் பதிகிற அவனது வீச்சு.

நடுவர் அசந்துபோனார். ஒரு பட்டிக்காட்டு இளைஞனிடம் இத்தனை ஆழமா? இப்படியோர் பாரதி நேசமா?

அசந்துபோன நடுவரின் பிரமிப்பான பாராட்டில் கிராமம் பெருமிதப்பட்டது. நெஞ்சு நிமிர்த்தியது.

தன் வீட்டில் விசுவாசமான நாயாக உழைத்த முனியசாமியின் பேரன்தான், அவன் என்று கேள்விப் பட்டபோது... சொர்ணம் அதை ஜீரணிக்க முடியாமல் திணறினாள்.

'நான் பார்த்து பிரமிக்கிற நிலையில், என் வீட்டு வேலைக்கார வாரிசா?'

வெளிப்படையாக அவனை அலட்சியம் பண்ணிப் பேசினாள். ராசாத்தியிடம் பேசுகிறபோது அவனை எடுத்தெறிந்து வீசினாள்.

ஆனால் - உள்ளுக்குள்...

பழநியின் கம்பீரத்தை மறுக்க முடியவில்லை. அவனது அடக்கம் மிகுந்த அறிவுத் தீவிரத்தை - ஞானச் செருக்கை யோசிக்காமல் இருக்க முடியவில்லை.

இப்போது...

தன்னந்தனிமையில் குளிக்கும்போது பழநியின் நினைப்பு வருவானேன்! மனசின் அந்தரங்கமான அந்தப்புர நினைவில் அவன் நுழைவானேன்...

அவனுக்கு அவ்வளவு கௌரவமா? ச்சேச்சே! இதில் தன் கௌரவம் என்ன ஆவது?

ஒரு சிலிர்ப்போடு தன்னை உலுக்கிக் கொண்டாள். தனது அகந்தையைக் காப்பாற்றிக் கொண்டாள் சொர்ணம்.

## 14

கிருஷ்ணம்மா ஓடி ஓடி வேலை செய்துகொண்டிருந்தாள். அடுப்பு வேலை ஏறக்குறைய முடிந்து விட்டது.

ரமேஷும் சின்னதுகளும் சாப்பிட்டுவிட்டன.

'இந்த ஆள் வந்து சாப்டுட்டா காட்டைப் பாத்து ஓடலாம்' என்று பரபரத்தாள். அவள் 'அவக்தொவக்' கென்று அள்ளி வாயில் போட்டுக்கொண்டாள்.

மிளகாய்ச் செடிக்குள் பருத்தி விதை ஊன்ற வேண்டும். கூலிக்கு ஆள் கிடைப்பது குதிரைக் கொம்பாகிவிட்டது.

தீப்பெட்டியாபீஸ் வேலைக்குச் சின்னதுகளும் பெரிசுகளும் போய்விடுகின்றன. காட்டு வேலைகளுக்கு ஆள் கிடைக்கமாட்டேன் என்கிறது.

தை முடியப் போகிறது. விதை ஊன்றுகிற சம்சாரிகள் எல்லோரும் முடித்துவிட்டனர். இயலமாட்டாமல் இளைத்துக் கிடக்கிற ஒன்றிரண்டு சம்சாரிகள் தான் இன்னும் பாக்கி.

விதை வாங்கப் பணம் புரட்டியாக வேண்டும். கூலியாட்கள் கிடைக்க வேண்டும். அவர்களுக்குக் கூலி கொடுப்பதற்கும் பணம் கையில் தயார் பண்ணிக் கொள்ள வேண்டும்.

அடித்துப் பிடித்து இப்போதுதான் பணம் கைக்கு வந்து சேர்ந்தது. விதை வாங்கியாகிவிட்டது. இன்றைக்குத்தான் இறவைப் பங்கு. மிளகாய்ச் செடிக்குள் நீரைப் பாய்ச்சிக்கொண்டே விதை ஊன்ற வேண்டும்.

விதையை நேற்றே வாங்கியாகிவிட்டது. விடிந்ததும், சாணம் அள்ளி விதையில் போட்டு நீரைத் தெளித்துப் பிசைந்து, உருட்டிப் புரட்டி உலரப் போட்டாகிவிட்டது. இன்னும் இவரைக் காணலியே...

**வ**ந்து நின்றான் நாராயணசாமி. ஓடைக்குப் போய் விட்டு வந்திருக்கிறான். பல்லில் வேப்பங்குச்சி. அவன் கடித்துக் கடித்து நுனி நைந்திருக்கிறது.

"எங்க போனீக...? நேரமாகுதுல்லே?"

"ஆகுது. ஆகுது. சரி, ஆள்கள்ல்லாம் வர்றாங்களா?"

"இப்பப் பெறப்பட்டுருவாக."

"சரி... சோத்தை வை."

வேப்பங்குச்சியை விருட்விருட்டென்று தேய்த்து விட்டு எறிந்தான். வாயைக் கொப்புளித்தான். பல்லின் இடுக்குகளிலிருந்த குச்சியின் இணுக்குகளைத் தேடித் தேடித் துப்பினான்.

அடுப்பங்கரைக்குள்ளிருந்து அசரீரியாய் அங்கலாய்ப்புச் சப்தம். "ஊர்லே உள்ள சம்சாரிகளெல்லாம் பருத்தி விதை ஊன, முளைச்சிடுச்சு. சிலபேருக்குச் செடியாவே ஆயிருச்சு. நாம இன்னிக்கு ஊனப் போறோம்... பருவம் பிந்தினா, வெள்ளாமையும் அப்படித்தான் இருக்கும்."

"இன்னைக்காச்சும் ஊன முடிஞ்சிருக்கேன்னு சந்தோஷப்படு."

"சரி... சாப்பிடுங்க... ரமேஷையும் கூட்டிக்கிட்டு அம்மா ஊருக்குப் போனீகளே... என்ன ஜோலியா போனீக...?"

"சும்மா பாத்துட்டு வரத்தான்."

"சொர்ணம் கல்யாண விஷயமா எதுவும் பேசுனீகளா?"

"என்னத்தைப் பேச? பேசுறதுக்கு என்ன இருக்கு?"

"வீட்டுக்கு மூத்த மாப்பிள்ளை நீங்க. இப்படி விட்டேத்தியா பேசுனா எப்படி?"

"கிட்ணம்மா... இங்க கிடக்குற வேலையைப் பாரு. அதைப் பத்தி ஆற அமரப் பேசலாம்."

அவன் பேச்சை நறுக்கிய விதத்தில் ஒரு வெறுப்பு தெரிகிறது. புருஷனின் முன் வழுக்கையைப் பார்க்கிறாள் கிட்ணம்மா. அசையும் தாடை, அகலமான கேரா.

இவளது கேள்வி குடையும் பார்வையை வேண்டு மென்றே தவிர்த்தவனைப் போல... நிமிராமல் சாப் பிட்டான்.

முகம் கொடுக்காமல் வெறுப்புடன் பேசிய வேலாயியின் முகம் ஞாபகத்துக்கு வந்தது. ஒருவேளை... சொர்ணத்தை ரெண்டந்தாரமாகக் கட்டிக்கொள்ள ஆசைப்படுவது கிட்ணம்மாளுக்குத் தெரிந்தால்... என்ன செய்வாள்? ஆத்திரப்படுவாளா? அழுது புலம்புவாளா? ஆர்ப்பாட்டம் செய்வாளா? அப்புறம் மெள்ள மெள்ள அடங்கிப் போவாளா...?

சொர்ணம் சம்மதிப்பாளா? ஒரேயடியாக மறுத்து விட்டால்...?

அதற்குத்தான் வேலாயி அக்காவின் ஒத்துழைப்பு வேண்டும்... 'ஒரு வார்த்தையைக் காதில் போட்டு வைப்போம்...' என்று வீடு போனால்... முகத்தை ஒரேயடியாகத் தூக்கி வைத்துக் கொள்கிறார்களே... இன்னும் பழைய நினைப்பு. ஜமீன்தார் பொண்டாட்டி என்கிற நினைப்பு. கஞ்சிக்குச் செத்த கிழட்டுக் கழுதை.

நாதியத்த நாய்... நெனைப்பு மட்டும் உசரத்துலே. உச்சியிலே இருக்கட்டும்... இருக்கட்டும்... பார்த்துக் கிடுறேன்...

சாப்பிட்டுக் கொண்டேயிருந்தான். விக்கலுக்குத் தண்ணீரைக் குடித்தான். எரியும் மனசைத் தண்ணீர் தணிக்கவில்லை. எரிவதை வெளிக்காட்டவும் முடியாது.

**சா**ப்பிட்டு முடித்துக் கை கழுவித் துடைத்த நாராயணசாமி ஏதோ 'கசமுசா' சப்தம் கேட்கிறதே என்று வெளியே எட்டிப் பார்த்தான். வீதியில் மனிதர்கள் இயல்புக்கு மாறான பரபரப்பாய்...

என்ன நடந்துபோச்சு...?

"ஏய்... என்னப்பா, எல்லாரும் போறாக, என்ன விஷயம்?"

"நம்ம வேலைய்யா தாத்தா மண்டையைப் போட்டுட்டாரு."

"வேலைய்யா தாத்தாவா? எப்ப?"

"மூணுநாளா இழுத்துக்கிட்டுக் கிடந்ததாம். காலையிலே கட்டிலை விட்டுக் கீழே இறக்கிப் போடலாம்னு தூக்கப் போயிருக்காக. ஆளு உசுரு போய்க் கிடந்துருக்காரு."

"அடப் பாவமே...!"

அவனுக்குள் பேரதிர்ச்சி. கண் மூக்குத் தெரியாமல் கோபம் வந்தது. 'ச்சே... சாகுறதுக்கு இந்தத் தேதிதான் கெடைச்சதாக்கும்?

கிழடு செத்ததைப் பற்றிக்கூடக் கவலையில்லை. இன்று செத்ததுதான் நஷ்டம். வேலை நஷ்டம். ஏற்கெனவே விதை ஊன்றுவதில் தாமதம். இன்றைக்கும் சாவுத் தடை.

இன்றைக்கு யாரும் வேலைக்குப் போக முடியாது. போயிருந்தாலும் திரும்பிவிட வேண்டும். பிரேதத்தை வீட்டில் போட்டுவிட்டு யாரும் வேலைக்குப் போக முடியாது. இது ஊர்க் கட்டுமானம்.

"சரி... சரி... சாணிப் பால்லே உருட்டிக் காயவைச்ச விதையை அள்ளி வை. நாளைக்குப் பார்ப்போம்..."

"இப்ப வாரேன்னு சொன்ன ஆளுகளை என்ன செய்ய?"

"சரி... போய்ச் சொல்லு. 'இந்த மாதிரியாகிப் போச்சு'ன்னு. நாளைக்கு இதே ஆளுக வரட்டும்."

**து**ண்டை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்ட நாராயணசாமி மேற்குத் தெருவில் நடந்தான்.

டீக்கடையை நெருங்கினான். யாரும் வேலைக்குப் போகாததால், ஊர் ஜனம் முழுவதும் டீக்கடையில் அடைந்து கிடந்தது. உட்கார இடமில்லாமல் ஒரே கூட்டம்.

காலை எட்டு மணியிருக்கும். வந்த பேப்பர் கசங்கிப் போய்விட்டது. அத்தனை பேர் அதைப் பிளந்து பிளந்து புரட்டியிருக்கிறார்கள்.

சின்னச் சாய்ப்புதான். மேற்குப் பக்கம் ஒரு கட்டைச்சுவர். ஈ மொய்த்த மாதிரி வரிசையாகச் சாய்ந்திருக்கிற மனிதர்கள்.

இவனும் ஓர் இடத்தில் உட்காரலாமா என்று யோசித்தும் நடுவில் நின்றான். இடமில்லை.

அதற்குள் டீக்கடைக்காரர் சப்தம் போட்டார்.

"யாரது? நிக்காதீங்க. உக்காருங்க. டீயடிக்க முடியலே."

"எடமில்லே."

"மனசிருந்தா எடமிருக்கும். சும்மா உக்காருங்க."

"சரியப்பா... சீக்கிரமா ஒரு டீ குடப்பா."

எப்படியோ ஒரு இடம் கிடைத்து, அதில் தன்னைச் சொருகிக் கொண்டான், நாராயணசாமி.

பக்கத்தில் இடம் ஒதுக்கித் தந்தவர் கிண்டலாகக் கேட்டார்.

"சீக்கிரமா குடிச்சிட்டு எங்க பொறப்பட்டுட்டே..."

அதற்குள் இன்னொருவர் குறுக்கிட்டார்.

"வேலய்யா தாத்தாவோட போட்டி போட்டு, எங்க போகச் சொல்லுறே? மயானக் கரைக்கா?"

"அப்ப... நாராயணசாமியைச் சாகச் சொல்றே?"

"ஏன் சாகக்கூடாதா? தாத்தாதான் சாகணும். நாம எல்லாம் இருக்கப் போறோமாக்கும்? சாவு யாருக்கும் வரும். எந்த வயசிலேயும் வரும்."

"வரட்டும். ஆனா... நம்ம நாராயணசாமி நல்லவனப்பா. இன்னும் கொஞ்சநாளைக்கு இருக்கட்டும்."

"இருந்து இந்தப் பூமியிலே என்னத்தை அனுபவிக்கப் போறோம்? துன்பத்தையும் தொல்லையையும் தானே?"

“அதுக்காக மூணு புள்ளைக பொண்டாட்டிகளை விட்டுட்டு நாராயணசாமி எதுக்குச் சாகணும்? இன்னொரு கல்யாணம் கூடச் செய்வானே, அவன்.”

“இன்னொரு கல்யாணமா? இந்த ஆளுக்கா? நல்ல கூத்துத்தான்.”

“ஏன் செய்யக்கூடாதா? வயசு போச்சா?”

“நாப்பதுக்கும் மேலே வயசு. தீட்டுக்கல் மாதிரி தலை ‘வழுவழு’ன்னு கண்ணாடி மாதிரி இருக்கு. மொகம் பார்க்கலாம். மூஞ்சி முகரையெல்லாம் நரைச்சிருச்சு. இனிமே கல்யாணமா? நல்லதுதான் போங்க.”

“ஏய்... என்ன இப்படிச் சிரிக்கே? நரைச்சா என்ன ஆம்பிளைச் சிங்கம். அம்பது வயசுலே கூட மண வறையிலே உக்காரலாம். அவள் கொழுந்தியாள் ஊர்லே இருக்கா சொர்ணச் சிலை மாதிரி. வந்து உக்காருன்னா... உக்காந்துட்டுப் போறா... பொண்டாட்டிக்குப் பொண்டாட்டியாத் துணையா வைச்சிரலாம். சொத்தோடச் சொத்தாச் சேர்ந்துபோகும். அப்புறம் நாராயணசாமியைப் பிடிக்க முடியுமா? ஊர்லே ‘மேல் கை’யான சம்சாரியாயிருவான்.

அதற்குள் ஒரு பெரியவர் குறுக்கிட்டு... எல்லாரையும் சப்தம் போட்டு அடக்கினார். அதுவும் கேலிதான்...

“ஏய்.. சும்மாயிருங்கப்பா. நீங்கதான் அவனைச் சுத்தி கும்மியடிச்சுப் பேசுறீக. அவன் வாயையே திறக்கலியே..”

“வாயைத் திறந்துதான் பேசணுமா? நாராயணசாமி பெரிய எம்டனாச்சே? ஊமையாகவே பேசுவானப்பா.

அங்கே பாரு... அவனுக்குச் சிரிப்பாணியைத் தாங்க முடியலே. பூரிச்சுப் போய்ச் சிரிக்கான். அந்தச் சிரிப்பு பேசாத பேச்சா ஒலகத்துலே இருக்கு?"

நாராயணசாமி நமுட்டுச் சிரிப்பாகச் சிரித்துக் கொண்டே டீயைக் குடித்தான். ஒன்றும் பேசவில்லை. ஆனாலும் உள்ளுக்குள் ஒரு பூரிப்பு. புளகாங்கிதம். மகிழ்ச்சி. அத்துடன் வியப்பும்கூட.

சொர்ணத்தை ரெண்டாம் தாரமாகக் கட்டிக்கொள் வதன் மூலம், அவள் சொத்தையும் வளைத்துப் போட்டு... முழுச் சம்சாரியாக தலையெடுக்க வேண்டும் என்று, அவன் ரகசியமாக மனசுக்குள் ஒரு முடிச்சுப் போட்டு வைத்திருக்கிறான்.

அந்தப் பொட்டலத்தை இன்னும் ஒரு ஜீவனிடம் கூட அவிழ்த்துக் காட்டியதேயில்லை. கிருஷ்ணம் மாளுக்குக் கூட இன்னும் தெரியாது.

அதற்குள் இந்தப் பாவிகளுக்கு எப்படித் தெரிந்தது? தெரிந்தது போலக் கதை பின்னிப் பேசுகிறார்களே... அவனது மன ரகசியத்தையே அளந்து முடித்தவர்கள் மாதிரி! உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூட முடியாது என்பது இதுதானா? தன்னை மாதிரியே நின்று யோசித்துப் பார்த்து... அள்ளி விடுகிறார்களோ...?

குருட்டாம்போக்கில் கல்லெறிந்து பார்க்கிறார் களோ...?

இதற்கு நான் ஏதாவது பதில் சொல்லப் போய்... அதிலேயே தனது 'வாய் இழப்பை' வாங்கிக்கொண்டு... யூகத்தை உண்மையாக்கிவிடுவார்களோ?

உள்மன ரகசியம் வாய் வழியாக எங்கேனும் கசிந்துவிடுமோ...? கசிவிலேயே உள் கிடக்கையை உறுதிப்படுத்தி விடுவார்களோ...! கிராமத்து ஜனங்கள் எமகாதகர்கள்!

டீ கிளாஸைத் தந்துவிட்டு... யாருக்கும் எந்தப் பதிலும் சொல்லாமல்... எழுந்து இழவு வீட்டை நோக்கி இவன் பயணப்பட...

இவனது முதுகுக்குப் பின்னால் டீக்கடை மொத்தமும் கூச்சமில்லாமல் கலகலத்துச் சிரித்தது.

## 15

இழவு வீடு கல்யாண வீடு போலக் களை கட்டி நின்றது. வாழ்ந்து முடித்த ஒரு கிழவன் சாவு. இயற்கையான சாவு. எவ்வித இழப்பும் இன்றி... முற்றிக் கனிந்து உலர்ந்து உதிர்கிற ஓர் இயல்பான சாவு. காயப்படுத்தாத சாவு.

வீட்டு முன்னால் ஒரு சின்னப் பந்தல். அவசரப் பந்தல். நாலு கம்புகளை ஊன்றி, மேலே ரெண்டு அகத்திக் குச்சிகளைக், குறுக்காகப் போட்டு... அதன் மேல் ரெண்டு தென்னங் கிடுகுகளை விரித்துப் போட்டு... ஆயிற்று ஒரு பந்தல்.

பந்தலின் அடிவயிற்றில் கட்டப்பட்ட வெள்ளைத் துணி. அதற்குள் பூ மாலைகள். இறுதிப் பயணத்திற்கான பூ மாலைகள்.

வீட்டின் எதிரே—

நிழல் உள்ள இடமெல்லாம் கிராமத்து ஜனங்கள். கலகலப்பாய் ஊர்க் கதைகள், நாட்டு நிலவரம் பேசிக்கொண்டு.

கதர்த் துண்டு போர்த்திய நாட்டாண்மை முன் னால் வெற்றிலைப் பெட்டி.

நாட்டாண்மை பக்கத்தில் கணக்கு நோட்டுடன் ஊர்க் கணக்குப் பிள்ளை. ஒவ்வொரு தலைக்கட்டும் ரெண்டு ரூபாய் தர வேண்டும். ஈமச் சடங்கிற்கான செலவுத் தொகை.

இறந்தவரின் இறுதிப் பயணச் செலவு ஊர்ச் செலவாக இருக்க வேண்டும் என்று ஓர் ஏற்பாடு. நாராயணசாமி நேராக அவரிடம் சென்றான்.

இரண்டு ரூபாய்த் தாளை நீட்டினான். வாங்கி மஞ்சள் பைக்குள் போட்டுக் கொண்டே கணக்குப் பிள்ளை, நோட்டை விரித்து... நாராயணசாமி என்ற பெயருக்கு நேராக இரண்டு ரூபாயைக் குறித்துக் கொண்டு, 'டிக்' பண்ணிக் கொண்டான்.

அங்கு, பேச்சு மும்முரப்பட்டது. யாரும் துக்கப்பட்ட மாதிரியே தெரியவில்லை. துக்கப்பட என்ன இருக்கிறது? சாகவேண்டிய வயசு வரை வாழ்ந்து செத்திருக்கிற பெரிசு.

எம்.ஜி.ஆர். மாதிரியே நடித்தும், ராமராஜன் படம் சரியாக ஓடாததற்கு என்ன காரணம் என்று காரசார மாக விவாதம் நடந்தது. பேச்சு, தூள் பறந்தது.

உர விலையை இப்படி உயர்த்தி விட்டார்களே என்று ஒரு சம்சாரி புலம்பிக் கொண்டார்.

" 'தலைவரை வெடிகுண்டு வைச்சுக் கொன்று போட்டாங்களே, பாவிப் பயக' என்று மனசு எரக்கப்பட்டு, எதைப் பத்தியும் யோசிக்காம ஓட்டுப் போட்டோம். இப்ப என்னடான்னா, உர உப்பை மூட்டைக்கு அறுபது ரூவா, எழுவது ரூவான்னு வெலை ஏத்திட்டாங்க. இரும்பு விலை கூடுதல். பெட்ரோல் விலை கூடுதல். எண்ணெய் விலை கூடிப் போச்சு... சம்சாரிக எப்படித்தான் இந்தப் பூமியிலே வாழ்றதோ? தெரியலே!"

அவர் புலம்பலுக்குப் பதிலாக உள்ளடங்கிய நையாண்டியாக ஒருவரின் பதில்: "உருகி வழியுற மெழுகுவர்த்தியோட தலையிலே தீயைத்தானே வைப்பாக. பூவையா கொண்ணாந்து வைப்பாக?"

"அப்பவும்... இரக்கப்பட்டு உதவி செய்ஞ்ச அப்பு ராணிச் சம்சாரிக மூஞ்சியிலா... காறித் துப்புறது? இதுதான், படிச்சவுக பண்பாடாக்கும்?"

"இது படிச்சவுக பண்பாடு இல்லே. நம்ம அரசியல் வாதிங்க பண்பாடு."

நாராயணசாமி உட்கார்ந்த இடத்தில் மண்சுவர் தான் இருந்தது. சாய்ந்தால்... முதுகில் கல் கல்லாய் உறுத்துகிறது.

எழுந்து கிழக்கில் போய் உட்கார்ந்தான். அங்கு கொஞ்சம் வயதில் பெரியவர்கள், சட்டையில்லாத வெற்றுடம்பில் துண்டுகள் போட்டிருந்தனர்.

அங்கே நல்ல காரைச் சுவர். சிமெண்ட் பூசிய சுவர். வசதியாகச் சாய்ந்து கொண்டான். பாக்கை வாயில் போட்டுக் கொண்டான்.

இளவட்டங்கள் கூடை மண் வெட்டிகளோடு புறப்பட்டனர், குழி வெட்ட.

இன்னும் இருவர் பச்சை வாகைக் குச்சிகள் வெட்டக் கிளம்பினர். உறவினர்களுக்குத் 'தகவல்' சொல்ல மூலை மூலைக்கு இளவட்டங்கள் புறப்பட்டுப் போய்விட்டனர்.

இன்னும் கொஞ்சம் படித்தவனைப் பார்த்துத் தந்தி கொடுக்க அனுப்பி வைத்தனர். ரெண்டு பெரிய 'வாரி'களைக் கொண்டுவந்து போட்டனர், தேர் கட்ட.

உள்ளூர் ஜவுளிக் கடையிலேயே ஒருவன் ஆறு மீட்டர் மல்லுத் துணி வாங்கி வந்துவிட்டான். கலயம் வாங்கவும் ஆள் போயாகி விட்டது.

வீட்டுக்காரனை எதிர்பார்க்காமல் வேலைகள் தன் போக்கில் ரெக்கை கட்டிப் பறந்தன.

**வெ**ற்றிலையைப் போட்டுவிட்டுத் துப்பினான் நாராயணசாமி. பீடியையும் பற்ற வைத்துக் கொண் டான்.

பெண்கள் இழவு வீட்டுக்குள் போய் வந்து கொண்டிருக்கின்றனர். இறந்த வேலய்யா தாத்தா ஒரு வேடிக்கையான ஆள். யாரையும் கோட்டி பண்ணிப் பேசுவதில் கெட்டிக்காரர். ரொம்ப உலக அனுபவம்.

காந்தி காலத்து விஷயங்களை ரொம்ப ருசியாகப் பேசுவார். சுபாஷ் சந்திரபோஸ் பற்றி என்றால் ரொம்ப ஈடுபாடாகப் பேசுவார். தெரிந்த கதைகள், அறிந்த கதைகள் இவற்றுடன் சொந்தக் கதைகளையும் சேர்த்து விடுவார்.

டீக் கடையில் உட்கார்ந்து இப்படிப் பழைய கதை களை அள்ளிவிடுகிற போது... சில இளவட்டங்கள் நக்கலாய்க் கிண்டல் பண்ணுவார்கள்.

"தாத்தா இருக்குறது தெரியாமப் போச்சு. தெரிஞ் சிருந்தா... சாக்கு எடுத்துக்கிட்டு வந்துருப்பேன்."

"ஏன்... வீட்லே தாட்டு இல்லியா?"

"தாட்டு இல்லே. சாக்கு எடுத்துட்டு வந்துருந்தா... தாத்தா புளுகுற புளுகுகளையெல்லாம் கூட்டி அள்ளிகிட்டுப் போகலாமே."

இதெல்லாம் தாத்தாவுக்கு எறும்பு கடித்த மாதிரி. கண்டுகொள்ளவே மாட்டார்.

ஓர் அலட்சியச் சிரிப்பு சிரிப்பார். அவ்வளவுதான்!

**நா**ராயணசாமி கல்யாணம் முடிந்திருந்த சமயம். புது மாப்பிள்ளை முறுக்கில் 'தாம், தூம்' என்று அலைந்து கொண்டிருந்த நேரம்.

இவனை ஓயாமல் கேலி பண்ணுவார். வாய் வலிக்காமல் சிரிப்பார். பெரிய பணக்காரர் ராமானுஜம் வீட்டில் 'சம்பந்தம்' கிடைத்த குருட்டாம்போக்கான அதிருஷ்டத்தைச் சொல்லிச் சொல்லிக் கேலி செய்வார்.

“குருட்டுப் பூனை விட்டத்துலே பாய்ஞ்சதுங்கிற கதை ஒனக்குத்தாண்டா பொருத்தம்” என்பார்.

அதற்கும் விளக்கம் சொல்வார்.

“குப்பைக் காட்டுலே கிண்டி மேயுற கோழி, கோபுரத்துலே ஏறுறதுக்கு நெனைச்சாவது பாக்குமா? அப்படித்தான் நீயும். ஆனா, யார் செஞ்ச புண்ணியமோ-கோழிக்குக் கோபுர உச்சியிலே கூடு கிடைச்ச மாதிரி... ஒனக்கு அந்த வீட்லே சம்பந்தம் கிடைச்சிருக்கு.”

அவர் சொல்லுகிற சொலவடைகளும் சரி, உவமைகளும் சரி ரொம்பப் புதுசாக இருக்கும். பொருத்தமாகவும் இருக்கும்.

அன்றைக்கும் அப்படித்தான். ஊர் மடத்தில் ஏராளமாய் ஆட்கள். வேலை குறைவான காலம். கூடியிருந்த ஜனங்கள் சம்சாரித்தனமே மதிப்புக் குறைந்து போனதைச் சொல்லிப் புலம்பிக் கொண்டிருந்தனர்.

“மானாவரிக் காட்டுலே கெணத்தை நம்பிப் பாடு படறதுலே இனிமே அர்த்தமேயில்லை. நெலத்தை நம்பி வேர்வை சிந்துனா... பத்திரமா வாழலாம்ங்கிறது பழைய கதை. இப்ப, சம்சாரித் தொழிலை விட்டுட்டு வேற தொழில் பாக்குறவனெல்லாம் நல்லாயிருக்கான். சம்சாரி மட்டும்தான் சாவடை செத்துக் கெடக்கான்.”

“நீரு சொல்லுறது நூத்துலொரு வார்த்தை. பெரிய சம்சாரிங்கிறவன் பெரிய கடனாளியாத்தானே இருக்கான்? ஆனா, ஓட்டைச் சைக்கிள்லே ஊரைச் சுத்திக்கிட்டு கொத்தைப் பருத்தி ஏவாரம் பாக்குறவன்கூட வட்டிக் கொடை வாங்கல் பண்ணிக்கிட்டு ‘கெத்தா’ திரியுதான்.”

"இனிமே... நம்ம தோட்டங்கள்லே வேலி விதைகளை விதைச்சுப் போட்டுட்டு, நாமளும் ஏதாச்சும் ஏவாரத்துக்குத்தான் போகணும். வெள்ளாமையும் பாக்க வேண்டாம். வெளக்கமாத்து அடியும் வேண்டாம். போதும் சனியன்!"

"எல்லாரும் ஏவாரத்துலே பாஞ்சுட்டா... வாங்குறது யாரு? குடுக்கறது யாரு?" என்று திடும்மென்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டான்.

"அட... அப்படி ஒரு சங்கதி இருக்கோ... ச்சே! நெலம்ங்கிறது இப்ப கால்லே போட்ட விலங்கு. வாழவும் விடமாட்டேங்குது. ஓடவும் விடமாட்டேங்குது."

**நா**ராயணசாமிக்கு அவர்கள் பேசிக்கொண்ட விஷயமெல்லாம் நியாயமாகவே பட்டது; உண்மையும் அதுதான். ஆனால் ஒத்துக்கொள்ள மனசில்லை.

அவன் மனத்தில் நிலம் பற்றிய வெறுப்பு இல்லை. கனவுகள் இருக்கின்றன. இன்னும் இன்னும் என்று பூக்கின்றன. பூத்துச் சொரிகின்றன.

சொந்தமாய் பம்ப் செட் கிணறு. பங்கோ பகிர்வோ இல்லாமல் எல்லாமே தனக்கு என்று பம்ப் செட் கிணறு. வற்றாத தண்ணீர் உள்ள கிணறு.

ஆடிப் பட்டத்தில் விதைக்க அஞ்சு ஏக்கர் கரிசல் காடு. புரட்டாசிப் பட்டத்தில் விதைப்புச் செய்யக் கரிசல் காடு. அரண்மனை மாதிரியான காரை வீடு.

எல்லாம் வேணும். அதற்குச் சொர்ணம் சம்மதிக் கணும். கிருஷ்ணம்மாவுக்குச் சக்களத்தியாகச் சம்ம திக்கணும்.

சின்னச் சம்சாரியாயிருப்பதில் சொல்ல முடியாத சீரழிவுகள். எண்ண முடியாத அவமானம். உப்புக் கல்லுக்குப் பெறாத ஒரு பயல்கூட மதிக்கமாட்டான். எவனும் நம்பிக் கடன் தரமாட்டான். ஆத்திர அவசரத் துக்கு அஞ்சு பத்துக்கூட கைமாற்று வாங்க முடியாது.

கைக்கு எட்டினால் வாய்க்கு எட்டாத பிழைப்பு. வாய்க்கு எட்டினால் வயிற்றுக்கு எட்டாத பாடு. நல்லது பொல்லதுக்குக் கூட ஒரு புதுத் துணி எடுக்க வக்கில்லை.

ச்சே! சின்னச் சம்சாரியா பொழைக்கிற பொழப்பும் ஒரு மனுசப் பொழப்பா? இந்தக் கொடுமையிலேயே எத்தனை காலம் சீரழியறது? எப்பத்தான் கரைசேரப் போறோம்?

சொர்ணம்தான் கை கொடுக்கணும், கொடுப் பாளா?

வேலய்யா தாத்தா உயிரோடு இருந்தால் கேலி பண்ணிச் சிரிப்பார். கெக்கெலி பண்ணுவார்.

“நா சொல்றப்போ... பெரிசா துள்ளுனீயே... இப்ப என்னடா ஆச்சு? நாஞ் சொன்னபடிதானே நீயும் மாறிட்டே?”

தாத்தாவே எந்திருச்சு வந்து கேள்வி கேட்கிற மாதிரி இருக்கிறது.

மனிதர் தெளிவான ஆள்தான். நெற்றியில் அடித்த மாதிரி சொன்னாரே... அவர் வாயில் சீனியைத்தான்

அள்ளிப் போட வேண்டும். அப்படியே பலித்து விட்டதே...

கருநாக்குக்காரன் சொன்னதும் கன்னி வாக்கும் தான் பலிக்கும் என்பார்கள். இந்தக் கிழடு சொன்னதும் நூல் பிசகாமல் பலித்து விட்டதே...

மனிதருக்கு அத்தனை தெளிவு, தீர்க்கம். மனிதர்களையும் வாழ்க்கையையும் அத்தனை துல்லியமாய் அளந்து, கைக்குள் வைத்திருக்கிறார். அனுபவம். அனுபவ வளமை.

எந்தெந்த வயதில் மனிதன் எப்படிச் சிந்திப்பான் என்று அவருக்கு அத்துப்படியாகியிருக்கிறது. எந்தெந்த வயசில் எந்தெந்த வாழ்க்கைச் சூறாவளி மனுசனை எப்படிச் சுருட்டி அள்ளிக்கொண்டு போகும் என்பதை அறிந்து வைத்திருக்கிறார்.

தாத்தாவை நினைக்க நினைக்க வியப்பாக இருக்கிறது. தன்னை ஜெயித்துவிட்டார் என்பதில் கூட ஒரு பிரமிப்பு தான் வருகிறது. வருத்தம் வரவில்லை.

## 16

**மா**ப்பிள்ளை முறுக்கு மடங்காமல் இருந்த சமயம் அது. காணாத புதையலைக் கைக்குள் அள்ளி விட்டதாக மனசு திமிர்ந்திருந்த நேரம். கிருஷ்ணம்மாவை ஊரு

உலகம் பார்த்திராத ஆடம்பரமான கல்யாணத்தில் கைப்பிடித்ததன் மூலம், ஆயுள் முழுக்க பணக்கார மைனராக வாழ்க்கை நடத்தலாம் என்று கனா கண்டு கொண்டிருந்த சுகக் காலம்.

பத்து வயசுச் சிறுமியாக இருந்த சொர்ணம் "மாமா மாமா..." என்று எந்நேரமும் கழுத்தைக் கட்டிக்கொண்டு கிடப்பாள். சின்னப் பிள்ளைகள் விளையாடுகிற விளையாட்டுகளையெல்லாம் அவனிடம் விவரிப்பாள்.

இவனும் வேறு சில விளையாட்டுகளைச் சொல்லிக் கொடுப்பான். கணக்குப் போடுவான். புதிர்க் கதைகள் போடுவான்.

மூத்த மகளைப் போல எந்நேரமும் ஒட்டிக் கிடப்பாள். விரலைப் பற்றிக்கொண்டு தன்னோடு சேர்ந்து தெருவில் நடந்து வருகிற சொர்ணம், அவனிடம் ஒரு மகளைப் போலவே பழகுவாள். இவனுக்கும் ஒரு தந்தை உணர்வுதான் இருக்கும்.

ஒருநாள்—

டீக்கடைக்கு வந்திருந்தான், நாராயணசாமி. இளவட்டங்களெல்லாம் ஒன்று சேர்ந்துகொண்டு கேலியும் சிரிப்பாணியுமாக அவனை நச்சரித்தனர், கல்யாண டீ வாங்கித் தரும்படி.

டீக்கடை முகப்பில் உட்கார்ந்திருந்த வேலய்யா தாத்தா குறுஞ்சிரிப்பு சிரித்தார். தப்பிக்க முடியாமல் தவித்த நாராயணசாமியை அன்பும் குறும்புமாகப் பார்த்தார்.

"பானைஞ்சு பைசா டீக்குப் பதறுதீயேடா, கோட்டிப் பயலே. எல்லாருக்கும் டீச் செலவு செய்யலாம்."

*"என்ன தாத்தா, நீரும் அப்படிச் சொன்னா... எப்படி?"*

*"வேற எப்படிச் சொல்லுவாக? பத்து ஊரு சம்சாரிகளுக்கும் 'மேல்கை' ராமானுஜம். அந்தச் சமுத்திரம் பூராத்துக்கும் நீதான் ஒத்தை ராஜா. டீ செலவு மட்டுமில்லே, எல்லாருக்கும் இட்லி வடை கூட செலவு பண்ணலாம்."*

*"ஒத்தை ராஜாவா? நானா? அதெப்படி? சொர்ணம் ஒருத்தி இருக்காள்லே? அவளுக்கு ஒரு ராஜா வருவான்லே?"*

*"போடா... கிறுக்குப் பயலே. ஒனக்கு அடிங்கிற ராஜாவும் வரப் போறதுல்லே, 'பிடி'ங்கிற மந்திரியும் வரப் போறதுல்லே. நீதாண்டா... ஏகச் சக்கரவர்த்தி!"*

*"அதெப்படி தாத்தா?"*

*"நீ எல்லாருக்கும் டீச் செலவு பண்ணு முதல்லே. அப்புறம் அந்த சூட்சுமத்தைச் சொல்லுதேன்."*

*"இதென்னடாயிது? தாத்தா புதுக்கதை போடுதாரு" என்றவன்... எல்லாருக்கும் டீ போட்டுத் தரும்படி ஆர்டர் தந்தான். இளவட்டக் கரைச்சல் ஒருவழியாக ஓய்ந்த பிறகு—*

*"இப்படி உக்காரு" என்றார் வேலய்யா தாத்தா. இவனும் ஆர்வத்துடன் உட்கார்ந்தான். டீ குடித்தவுடன் அவருக்குக் குப்பென்று வியர்த்தது.*

*"என்னமோ... சூட்சுமம்னு சொன்னீரே தாத்தா..."*

*"சொல்லுதேன், சொல்லுதேன்" என்றவர் மேல் துண்டால் உடம்பு முழுக்க துடைத்துக்கொண்டார்.*

"ஏலேய்... நம்ம ஊர்லேயும் சரி... பக்கத்து ஊர்லே யிருக்கிற நம்ம சாதிகளிலேயும் சரி... ரெட்டைப் பொண் டாட்டி கட்டியிருக்கிற ஆள்களையெல்லாம் நெனைச்சுப் பாரு..."

என்று ஒரு சின்ன இடைவெளி விட்டார். அவனும் யோசித்துப் பார்த்தான். வரிசையாக ஒவ்வொரு ஆளாக மனசுக்குள் நினைத்துப் பார்த்தான்.

"அவுக கட்டியிருக்கிற ரெட்டைப் பொண்டாட்டிக பூராவும் கூடப் பொறந்த அக்கா தங்கச்சிகளாக இருக்காகளா?"

அவனுக்குள் பளிச் பளிச்சென்று ஒரு வெளிச்சம். "அட... ஆமா...!" என்று பெரிய இழுப்பாக இழுத்து வியப்போடு ஆமோதித்தான்.

அவர் முகச் சுருக்கங்களில் ஒரு மின்னல். முகத்தில் பொங்கி வந்த பெருமிதச் சிரிப்பு.

"அது மட்டுமில்லேடா... அந்த அக்கா தங்கச்சிக பொறந்த வீடுகளை நெனைச்சுப் பாரு. அந்த வீடுகள்லே ஆண் வாரிசே இருக்காது" என்றார்.

அவன் வியப்பும் மகிழ்ச்சியுமாகத் திணறினான்.

"ஆமா... தாத்தா... நீங்க சொல்றது நெசந்தான்" என்று சத்தமாய் ஆமோதித்தான்.

"அதுதாண்டா... சூட்சுமம்..."

என்று முடித்தார். ஆனால், இவனுக்குள் இன்னும் புதிரான இருட்டு.

"சூட்சுமத்தை ஒடைச்சி முடிச்சிட்டீரு. எனக்கு ஒரு எழவும் புரியலே."

"புரியலியா..." என்று கேட்டவர் கண்களில் ஏளனமும் பெருமிதமும் போட்டி போட்டு நின்றன. லேசாக அவர் கண்ணைச் சிமிட்டியது போலிருந்தது.

"ஏலேய்..." என்று நீட்டி இழுத்தார். ஓர் உண்மைக் கதையைச் சொன்னார். நடந்த ஊர், ஆள் விவரமெல் லாம் கூறினார்.

ரெண்டு பொம்பளைப் புள்ளை இருந்த வீட்டில் கல்யாணம் செய்தான் ஒருவன். மூத்த பெண்ணைத் தான். ரொம்ப நாள் தவமிருந்து காலம் போன காலத்தில் ஒரு பையன் பிறந்து... அவனுக்கு மச்சினனாக இருந்தான். திரண்ட சொத்து. ஏகப்பட்ட நிலம். அத்தனைக்கும் அந்தச் சிறுவனே வாரிசு.

ஒரு திருவிழாவுக்கு மனைவியையும், மனைவி தம்பியையும் கூட்டிக்கொண்டு போனான், மருமகன். கூட்டத்தில் அந்தச் சிறுவன் தொலைந்து போனான். ஒரு வாரம் கழித்து... ஒரு சாக்கடையில் கிடந்தது, அந்தப் பையனின் உடல்.

போலீஸ் கேஸாயிற்று. விசாரித்துப் பார்த்தால் துப்பு துலங்கிவிட்டது. அந்தச் சிறுவனைக் கொன்றது அந்த வீட்டு மருமகன்தான்.

வெலவெலத்துப் போனான் நாராயணசாமி.

"இதென்ன, கொடுமையாயிருக்கு" என்று அதிர்ந்து போனான்.

"இது எப்ப துப்பு துலங்கிச்சு, தெரியுமா? அவன் ரெண்டாவது பொண்ணையும் தனக்கே கட்டி வைக்கும்படி நச்சரிக்க ஆரப்பிச்ச பிறகுதான்."

“எதுக்கு?”

“என்னடா... கூறுகெட்ட பயலாயிருக்கே? இது கூடவா, தெரியலே? அந்தப் பயல் செத்தான்னா... சொத்து பூராவும் பொம்பளைப் புள்ளைகளுக்கு. பொம்பளைப் புள்ளைக ரெண்டையும் வளைச்சுப் போட்டுட்டா... சொத்து பூராவும் சிந்தாம, சிதறாம, கைக்கு வந்துரும்லே?”

“அடப்பாவிகளா! சொத்துக்காகவா... சொந்த மச்சினனைக் கொன்னான்? பெரிய அநியாயமா யிருக்கே?”

“காலம் காலமா நடந்து வர்ற பாவங்களையெல்லாம் துப்பறிஞ்சு பாரு... மூலகாரணம், சொத்துதான்னு வந்து முடியும்.”

“அடக் கொடுமையே! இப்படியுமா நாட்லே நடக்கு?”

“அது மட்டுமில்லேடா... நாராயணா, நாளைக்கு நீயும் இதைத்தான் செய்வே.”

“எதை?”

“கொழுந்தியாளையும் வளைச்சுப் போட்டு, சொத்துலே யாருக்கும் பங்கு குடுக்காம... மொத்தமா அமுக்கணும்னு ஆசைப்படுவே.”

“சொத்துக்காகவா? ச்சே! இது மனுசத் தன்மையே யில்லாத அக்கிரமம்!”

“காலம் காலமாக இப்புடி நடந்துக்கிட்டுத்தான் இருக்கு. கருசக்காடு இதைப் பாத்துக்கிட்டுத்தான்

இருக்கு. நீ ஒருத்தன்தான் கட்டபொம்மு வசனம் பேசுதே."

"அப்போ... கருசக் காட்லே மனுசத்தன்மையுள்ள மனுசங்க இருந்ததே கிடையாதா? இதை யாருமே தட்டிக் கேக்கலியா?"

"வழமை (மரபு)யிலே இருந்து வர்ற ஒரு பழக்கத்தை யாராச்சும் குத்தம் சொல்லுவாகளா? ஏன் எதுக்குன்னு எவனாச்சும் கேக்க முடியுமா?"

"ஏன் கேக்கக் கூடாது?"

"கேக்க ஆளும் இருக்காது. வாய்ப்பும் இருக்காதுடா. மூத்த பொண்ணு கல்யாணம் தாண்டா, ஊர் அழைச்சு, பந்தி வைச்சி நடக்கும். ரெண்டாம் பொண்ணு கல்யாணம் கமுக்கமா முடிஞ்சு போயிரும். இதுலே யாரு போய்... என்னத்தைக் கேக்க?"

"அந்தப் பொண்ணு சம்மதிக்கலேன்னா..?"

"போடா... போக்கத்த பயலே..." என்று வேலய்யா தாத்தா இளக்காரமாய்ச் சிரித்தார். 'இப்படியும் ஒரு கூறுகெட்ட பயலா...' என்கிற வியப்புடன் கூடிய இளக்காரம்.

"ஏலேய்... மண்ணும் பொண்ணும் ஒண்ணுடா. ரெண்டையும் பாதுகாக்கணும். பராமரிக்கணும். உழுது பண்படுத்தணும். உருட்டிப் புரட்டி உருமாத்தணும். ஆனா... அதுககிட்டே போய் யாராச்சும் சம்மதம் கேப்பாகளாடா? பேப் பயலே!"

அவரது கெக்கலிப்பில் இருக்கிற எகத்தாளம், பெண்ணைக் கிள்ளுக்கீரையாக அலட்சியப்படுத்துகிற அகங்காரம்...

இவனுள் சுள்ளென்று உறைத்தது. பெண்ணை ஒரு மனுஷியாகப் பார்க்காமல், வெறும் பண்டமாக நினைக்கிற அந்தத் திமிர்... நிலத்தோடு பின்னிய வாழ்க்கையின் இயல்பாக இருக்கிற கர்வம்—

எல்லாமே இவனை உசுப்பியது. இவனுள் தீவிரமான எதிர்ப்புணர்வு. பொங்கிப் பிரவகித்த தார்மீகக் கோபம்.

"இது வங் கொடுமை..." என்று கொதிப்போடு சீறினான்.

"ஆமடா... வங்கொடுமைதான்... அதுதான் வழமை. இதை யாரு தட்டிக் கேக்குறது?"

"நா கேப்பேன். செவிட்டிலே அறைஞ்சு கேப்பேன்..."

"ஒன்னைப் போல ஆயிரம் சவடால்காரங்களைப் பாத்தவண்டா... இந்தக் கிழவன்..."

என்றவர்... ரோஷப்பட்ட ஒரு முனிவரைப் போல... சாபம் போடுகிற மாதிரி சப்தத்தை உயர்த்தினார்.

"நீயே... இந்த வங்கொடுமையைச் செய்யத்தாண்டா போறே!"

"நா செத்தாலும் சரி... இந்த வங்கொடுமையைச் செய்யவே மாட்டேன் தாத்தா... மனுசத்தன்மையில்லாத இந்தக் காரியத்தை எந்த மனுசனும் செய்யவே மாட்டான்."

"நா 'இருந்து' பாக்காட்டாலும்... இந்த ஊரு இருந்து பாக்கத்தான் போகுது. நீ இப்ப இளவட்டம். இளரத்தத்துக்கு தர்ம நியாயம்தா தெரியும். நரம்பு முறுக்கா இருக்குறப்போ... நல்லதைத்தான் மனசு

நெனைக்கும். பேசும். காலம் போகப் போக, இந்த வாழ்க்கை இருக்கே... இது எப்பேர்ப்பட்ட முரட்டுக் காளையையும் வசக்கி, வளைச்சு அடக்கிப் போட்டுடும்."

வேலய்யா தாத்தா இன்றுதான் மண்டையைப் போட்டிருக்கிறார். அவர் சொன்னது பலித்தே விட்டது!

இதோ... சொர்ணத்தைத் தனக்கே முடித்துத் தரும்படி... அவள் அம்மாவிடமே சொல்லிவிட்டு வந்தாயிற்று.

இளவட்டமாயிருந்த போது... மனசில் பொங்கிய தர்ம நியாயம். ஆத்திரப்பட்ட மனிதாபிமானம் 'வங்கொடுமை' என்று சாடிய வேகம், 'செவிட்டில் அறைந்து கேட்பேன்' என்று கொக்கரித்த வீரம்...

எல்லாம் எங்கே போயிற்று?

ச்சே... வாழ்க்கை என்னை எவ்வளவு சிறுமைப் படுத்தி விட்டது! என்னையே என் முகத்தில் காறித் துப்பும்படி வைத்துவிட்டதே..!

என் விரலைப் பிடித்துக்கொண்டு மகளைப் போல தெருத் தெருவாக என்னோடு ஒட்டுதலோடு நடந்து திரிந்தவள், சொர்ணம்.

அவளைப் போய்... மனைவியாக்கி மங்கிய இருட்டில் அவளுடன் மயங்கி... அது எப்படிச் சாத்திய மாகும்? அதுவும் கிருஷ்ணம்மாவைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு. ச்சே!

இப்படி மனிதனைத் தரம் தாழ்த்தி வீழ்த்துவது, எது..? என்ன காரணம்?

சொத்து... சொத்து... நிலம்... நில உடைமை... பட்டா. மனிதனுக்குத் தேவையாகவும், மனிதனைவிட மேலானதாகவும் இருக்கிற நிலப்பட்டா!

வரப்புச் சண்டைகளும், வெட்டு குத்துகளும், சகோதரக் கொலை பாதகங்களும் எல்லாமே இந்தப் பாழாய்ப் போகிற நிலப்பட்டாவால்தான்!

மொத்த தேசமே... இந்த வார்ப்பில் இந்த அச்சில் சுழன்று இயங்குகிற போது... நான் எப்படி புத்தனாக இருக்க முடியும்? மனிதனாக, யோக்யமானவனாக எப்படி இருப்பது?

சொந்த பம்ப்ஷெட் கிணறு வேண்டும். கூடுதல் நிலம் வேண்டும். அரண்மனை போன்ற வீடு வேண்டும்.

இதற்கான நேர்வழிகள் இல்லாவிட்டால்... குறுக்கு வழியிலாவது இலக்கை அடையத்தான் வேண்டும்.

மனச்சாட்சியின் கழுத்தை நெரி; மூச்சை அடக்கு; தீர்த்துக் கட்டு; பந்தங்களை மாற்று.

சொர்ணத்தின் இளமையை எண்ணி கிளர்ச்சி கொள்; உன்மத்தமாகு; மோக வெறியை நெருப்பாக மூட்டு; நெருப்புக்கு முடிவில்லாமல் எண்ணெய் ஊற்று; தீ ஜ்வாலை விட்டெரியட்டும்; திகுதிகுவென எரியட்டும்; தீயின் நாக்குகளில் சகல புனித பந்த உணர்வுகளும் சாம்பலாகட்டும்; உன் கனவுச் சமையல் நிறைவேறட்டும்.

அதோ... தலைதூக்குகிற மனச்சாட்சி. திமிறிக் கொண்டு எழுகிற தொல்லை. அதன் கழுத்தை நெரி. தொண்டைக்குழியில் விரலை வைத்து அழுத்து. விடாதே. அழுத்து சாகட்டும்.

இழவு வீடு- உறவினர்கள் வருகையை எதிர்பார்த்து காத்திருக்கிறது. தேர் கட்டியாகி விட்டது. மெல்ல எழுந்தான், நாராயணசாமி.

வீட்டுப் பக்கமாய் நடந்தான். மனசு சிலந்தியாகி வலை பின்னியது. நிதானமாய் யோசித்தது. சொர்ணம் என்கிற ஈயைக் கவர்கிற சிலந்தி வலையாக இருக்க வேண்டும்.

நாளை மறுநாள்.

ஊர் நாட்டாண்மை வெங்கடாசலத்தைப் போய்ப் பார்க்க வேண்டும். பேச வெறும் கையுடன் போகக் கூடாது.

# 17

அந்தி மயங்கி வருகிறது. மயங்கி மயங்கி இருட்டின் மடியில் சரிகிறது. தாடகை இருட்டு அரவமில்லாமல் கைகளை விரித்து, அந்தியையும், அந்தியின் மோகன அழகுகளையும் ஒருசேரச் சுருட்டி மறைத்துக் கொண்டது - வலையில் சிக்கிய பறவைகளைச் சாக் குக்குள் போட்டுக் கொள்கிற வேடனைப் போல.

ராசாத்தி, கெங்கம்மா, ராமலட்சுமி மூவரும் பிரிந்து தத்தம் தெருவில் நடக்க... சொர்ணம் மட்டும் வீட்டுக்கு வந்தாள். மனசெல்லாம் மாமாவின் சொற்கள். நேற்று ராத்திரியே முள்முள்ளாய் உறுத்தியது. அச்சுறுத்தியது. முகமற்ற அச்சுறுத்தல்.

அந்தச் சொற்களின் அர்த்தம் எதுவாக இருக்கும்?

மனசு அயர்ந்துவிட்டது. விதம் விதமாக யோசித்து ஓய்ந்துவிட்டது. வீட்டிற்குள் நுழைந்தாள். தூக்கு வாளியை அம்மாவிடம் ஒப்படைத்தாள். டப்பாவையும் சிட்டையும் பலகையில் வைத்தாள். ஒரு செம்பு நிறைய தண்ணீரை முகர்ந்து, 'மடக், மடக்'கென்று குடித்தாள். வயிறு முட்டிவிட்டது.

கால் கையைக் கூட கழுவிக்கொள்ள ஆவல் இல்லை. குளிப்புக்கும் அவசரமில்லை. மனசின் பரபரப்பு.

நேற்றைய ரகசியத்தைத் தொட்டுவிட வேண்டும் என்கிற குறுகுறுப்பு. இயல்புகளையெல்லாம் சுருட்டி உள்ளடக்கிக் கொண்டு, கர்வமில்லாமல்... ஒரு சிறுமியைப் போல ஆர்வமாய் நெருக்க நெருக்கமாய் வந்து உட்கார்கிற மகளை வியப்போடு பார்த்தாள், வேலாயி.

"என்னடியிது..? அதிசயமாயிருக்கு. கால்லே தண்ணியைக் கூட ஊத்தாம, இப்படி வந்து குழையுறே?"

"சும்மாத்தான்."

"ம்..."

"எம்மா...ம்மா..."

"என்ன?"

"எம்மா... மாமா எதுக்காக வந்துருந்தாரு?"

அக்கறையற்ற பாவனையில் கேட்டாலும், மகளுக்குள் ஒளிந்து கிடந்த சூட்சுமத்தை அந்தத் தாய்

*மனம் உணரத் தவறவில்லை. மகளைத் தழுவுகிற கண்களில் திகைப்பு, சின்ன அதிர்வு.*

*"எதுக்குக் கேக்கறே?"*

*பிடிபட்டுக் கொண்ட பறவையின் பயத்தோடு கள்ளப் பார்வை பார்க்கிற அம்மா. ஏதோ ஒரு பெரிய விஷயம் புதைந்து கிடப்பதை சொர்ணத்தால் யூகிக்க முடிகிறது.*

*"எதுக்கு இப்படிப் பதறிப் போறே? நான் சும்மாத்தான் கேக்குறேன்."*

*"நா எதுக்குப் பதறணும்? அவரு... சும்மாத்தான் வந்துட்டுப் போறாரு."*

*"ஒண்ணும் ஜோலியில்லாமலா?"*

*"இங்க அவருக்கு என்ன ஜோலியிருக்கு?"*

*"சோழியன் குடுமி சும்மா ஆடாதும்பாக. ஒரு ஜோலியுமில்லாம... ரெண்டும், ரெண்டும் நாலு மைல் தூரம் சைக்கிள் மிதிச்சு மாமா எதுக்கு இங்க வரணும்?"*

*"அது கிடக்கட்டும். நீ எதுக்கு இப்புடிக் கொடைஞ்சு கொடைஞ்சு கேக்கே?"*

*"நீ எதுக்கு எங்கிட்டே மறைக்கணும்?"*

*"நா என்னத்தை மறைச்சிக்கிட்டேன்? எல்லாத் தையும் ஒங்கிட்ட சொல்லிர முடியுமா? சொல்லக் கூடியதைத்தான் சொல்லுவாக."*

*அந்நியமானவளைப் போல அம்மா ஏன் ஒட்டாமல் பேசுகிறாள்? அடைக்கோழியைப் போல ஏன் 'வெடுக்'*

'வெடுக்'கென்று இப்படிக் கொத்த வேண்டும்? கொத்திக் கொத்தி என்னைத் துரத்திவிட்டு, எந்த ரகசிய முட்டை களைப் பொத்திப் பொத்தி மறைக்கப் போகிறாள்?

சுருட்டி வைத்த இயல்பு எப்போதோ விரிந்து வெளிப்பட்டு விட்டது. கர்வமும், அதிகாரமும் குரலின் தொனியாகி விட்டது. அம்மாவை அலட்சியமாகப் பார்த்தாள். உள்ளுக்குள் 'சுள்'ளென்று வருகிற கோபம். குரலில் ஓர் அதட்டல்.

"என்னைப் பத்தி மாமா என்னமோ சொன்ன மாதிரி இருந்துச்சே?"

"ஒறக்கம் வர்ற வரைக்கும் என்னென்னத்தையோ பத்தியெல்லாம் பேசுனோம். ஒன்னைப் பத்தியும் பேச்சு வந்துச்சு."

"அதான்... கேக்கேன், என்ன பேசுனீக?"

"ஆயிரம் பேசியிருப்போம். அதெல்லாம் நெனைச்சுக் கிட்டா இருக்க முடியும்?"

"மறைக்க முடிஞ்சா மறைக்கணும். முடியாதவளுக்கு இதெல்லாம் என்ன பாசாங்கு? மடியை இழுத்து இழுத்து மூடிக்கிட்டு, 'ஒண்ணுமில்லே, ஒண்ணு மில்லே'ன்னா... என்ன அர்த்தம்? நா என்ன சின்னப் பப்பாவா?"

"நீ கன்னிப் பொண்ணா இருக்கியேன்னு சொன் னாரு."

"இது அவரு சொல்லித் தெரியுற விஷயமா? கல்யாணம் மூய்க்கணும்னாரா?"

*"ஆமா."*

*அம்மா விசனத்தோடு அந்தப் பக்கமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள். சொர்ணம் கழுத்தைச் சாய்த்துக் கொண்டு அம்மாவைப் பார்த்தாள். மனசு மெல்லக் குழைகிறது.*

*அம்மாவின் முகத் திருப்பலில் கோபம் தெரியவில்லை. முட்டிக்கொண்டு முகம் காட்ட வருகிற அழுகையை மறைக்கிற அவசரம்தான் இருக்கிறது.*

*சொர்ணத்தின் உள் உணர்வு அதிர்கிறது.*

*எதுக்கு அழுகை? என்ன சோகம்? மகளிடம்கூட மறைக்க வேண்டிய அந்தரங்கச் சோகமா?*

*கல்யாணம் என்பது பிரச்னையான பிரச்னைதான். ஆனால், அழுகைக்குரிய விஷயமா? கண்ணீர் சிந்திக் கலங்கக்கூடிய சோகமா?*

*சொர்ணத்திற்குள் மெல்லிய குழப்பம். உள்ளுக்குள் ஒரு பயம். மனசைக் கவ்வியிழுக்கிற திகில். கிலி. அம்மா பீதியடையக்கூடிய சோகம் என்றால்... அது என்ன?*

*முகம் காட்ட மறுக்கிற உள் ஆழங்கள். இவளைப் பயமுறுத்தின. திகைப்போடு அம்மாவைப் பார்த்தாள். பரிதாபமான பார்வை. மனசில் பொங்குகிற ஒரு பச்சாதாபம். ஒரு பரிவு.*

*'பாவப்பட்ட அம்மா. காலம் பூராவும் துன்பத்திலே அழுந்துன அம்மா. மகாராணியா வாழறப்பவும் அய்யாவோட அலட்சியத்தாலே... தொழு மாட்டுக் காலடிக் கூளமா இழிவுபட்ட அம்மா, வயித்துக்*

கஞ்சிக்குத் திண்டாடுற இப்பவும் ஆடி மாசச் சருகாக 'சூறாவளியிலே மிதந்து சீரழியுற அம்மா. ஆயுள் பூராவும் துன்பத்தையே தின்று, நொம்பலப்பட்ட அம்மா...'

உள்ளுக்குள் உடைந்து ஏதோ சரிகிறது...

"ம்மா..." என்று அரற்றிக்கொண்டு, அம்மாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு கதற வேண்டும் போல ஒரு பீறிடல். மனசை அழுத்திப் பிசைகிற உள்தூண்டுதல். உந்தித் தள்ளுகிற ஓர் உணர்வு.

"அம்மா..." என்றாள். விறைப்பில்லாத குரல். கனிவு. உடைந்திருந்த குரலில் பரிவுணர்ச்சியின் ததும்பல். தழுதழுத்த குழைவு.

மகள் குரலிலிருந்த பரிவும் கலக்கமும் அந்தத் தாய் மனசை வெலவெலக்கச் செய்துவிட்டது. விதிர் விதிர்த்துப் போய்த் திரும்பி மகள் முகத்தைப் பார்த்தாள்.

மகளின் கண்களில் நீர்த் தளும்பல். சின்னஞ்சிறு அடி உதட்டில் அழுகையின் மெல்லிய துடிப்பு. விடைத்து விடைத்து அடங்குகிற நாசி நுனி. சிவந்த கன்னங்களில் ஓடிய நுண்ணிய அதிர்வலைகள், பெற்ற தாயின் குலையைப் பிடுங்கியது. அடிவயிற்றில் ஏதோ புரள்கிற சங்கடம். மனசின் இறுக்கமெல்லாம் உடைந்து போய்... கதறிவிட்டாள்.

அம்மாவின் கரகரப்பான குரலில் நீட்டி முழக்கிய கதறல். சொர்ணத்தின் மனசைப் பிசைந்தது.

"ஏம்மா... என்னாச்சு? சொல்லும்மா. சொன்னா லாச்சும் மனப்பாரம் கொறையுமே."

*"இது... சொல்லிக் கொறையுற பாரமாகத் தெரியலி யேடி... கட்டை வேகுற வரைக்கும் தீராப் பாரமா தெரியுதடி...."*

*"என்னதான்னு... சொல்லேன்."*

*"ஏண்டி சொர்ணம், ஒம் மாமனைப் பத்தி என்னடி நெனைக்கே?"*

*"ஏம்மா..? அவருக்கென்னம்மா? அக்கா புருஷன். எனக்கு அய்யாவைப் போல. பாசமாயிருக்கிறவரு. நல்லவரு தானே?"*

*"அந்த நல்ல மனுசனைத்தான் இப்ப பேய் பிடிச்சு ஆட்டுதடி. அந்தப் பேய், நம்ம மேலே வந்து குதிச்சு கூத்தாடுதடி."*

*"........."*

*"ஆமாடி. அந்தக் கொடுமையை இந்த வாயாலே எப்படிச் சொல்வேண்டி? அந்த மனுசனைக் கண்ணு மண்ணு தெரியாம பேய் பிடிச்சு ஆட்டுதடி. அறிவு கெட்டுப் போயி அவரும் ஆடுதாரடி. ஒன்னையும் சேத்துக் கல்யாணம் கட்டிக்கணும்னு ஒத்தைக் கால்லே வந்து நிக்குறாரடி... நா என்ன செய்ய? ஊர் நாட்டாண்மைகிட்டேயும் சொல்லிட்டுப் போயிருக்காரடி..."*

*கல்லடிபட்ட சிட்டுக் குருவியாக சொர்ணம் உள்ளுக்குள் எங்கோ விழுந்தாள். மனசு மரத்துப் போய்விட்ட மாதிரியிருந்தது. சப்த நாடிகளும் அடங்கிப் போக... உயிர் மட்டும் நூலிழையில் துடிக்கிறது. இதயத்தின் சகல நரம்புகளும் கொத்தாக அறுபட்டுப் போன மாதிரி... ஒரு ஸ்தம்பிப்பு. உணர்வற்ற நிலை.*

மூச்சு வெளிவர பல வினாடிகள். மெள்ள மெள்ள உயிர் பெறுகிற மனசு. கல்லடியின் முழு வேதனையையும் உணர முயல்கிற மனசு. துடிக்கக் கூட முடியாமல் திகைத்துக் கிடக்கிற உணர்வுகள்.

காதில் விழுந்த செய்தியை வார்த்தை வார்த்தையாகப் பிரித்து, பிரித்துப் பார்த்தாலும் புரிய மறுக்கிறது.

"...காடு கரைகளும் தரிசா கிடக்கக் கூடாது. கன்னிப் பொண்ணையும் வீட்லே வைச்சிக்கிட்டிருக்கக் கூடாது..."

அவரின் அன்றைய கிசுகிசுப்புச் சப்தம். அந்த மெல்லிய சப்தத்துக்குள், இத்தனை வெடிமருந்து கிட்டிப்பா? ஓர் இதயத்தையே பிளந்து, தூக்கியெறிந்து, தூள் தூளாக்கி, தூசிக் காடாக்குகிற அளவுக்கா... வெடிமருந்து?

அவரால்... இதை எப்படி யோசிக்க முடிந்தது?

மகள் வயசுப் பெண்ணை, மணப்பெண்ணாக வரிக்கிற தைரியம், மனசில் எப்படி வந்தது? வாய்த்த மனைவியை - பெற்ற குழந்தைகளை - உருப்படியாக வாழ வைக்க வக்கில்லாத ஒரு மனிதருக்கு, இன்னொரு பெண்ணின் மீது ஆதிக்கம் செலுத்தி, ஆக்கிரமிப்பு செய்ய நினைக்கிற அத்துமீறலான ஆசைக்கு... எது அடிப்படை?

எது செய்தாலும்... அகலிகைச் சிலையாக ஊமையாகக் கிடந்து, ரகசியமாகக் கண்ணீர் வடிக்கிற கோழையாக அக்கா இருப்பதாலா? வாய் திறந்து கேட்டவுடன், விளக்குமாறு எடுத்து விளாசாமல்... ஊமைக் குமுறலாய் அம்மா அழுது கொண்டிருப்பதாலா? எதிர்ப்பு இருக்கும் என்ற நிலை இல்லாததாலா?

ஊர் நாட்டாமை, ஜனம் பூராவும் 'வழமை - வழக்கம்' என்ற வட்டத்துக்குள்ளேயே செக்கு மாடுகளாகச் சுற்றிக் கொண்டிருப்பதாலா?

ச்சே!

**சொ**ர்ணத்திற்குள் பொங்கித் திமிருகிற ரௌத்ரம்! இப்போதே ஊர் தேடிப் போய், அந்த மடையனை-குரூர மிருகத்தை - தலைமயிரைப் பற்றி வீதிப் புழுதியில் வீழ்த்தி விளக்குமாறு நார் நாராக உதிர்கிற வரை அடித்து, காலால் மிதித்து, துவைக்க வேண்டுமென்கிற ரௌத்ரம்!

அவள் தேகமெல்லாம் திகுதிகுவென எரிகிற உணர்வு. நரம்புகளெல்லாம் விடைத்து விறைப்பேறுகிற மாதிரியான தினவு.

அவளுள் சட்டென்று தோன்றுகிற வைராக்ய மின்னல்.

"...எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த அக்கிரமத்துக்குப் பணிஞ்சிரவே கூடாது. என்ன ஆனாலும் சரி. எதுத்து நிக்கணும். தலைவணங்காம நிக்கணும். பொம்பளைன்னா... தாழ்வில்லே. வெறும் பூவுமில்லே. திருப்பி வைச்ச திசையிலே அப்படியே பார்க்கிற கற்சிலையில்லே. அவள் மனுஷி. உயிர்ப்பும் ரோஷமுமுள்ள மனுஷி. உயிர்களின் கர்த்தா. உலகின் சக்தி. சிலிர்த்து விட்டால்... உலகை ஜெயிக்கிற சக்தி.

இதை நிரூபிச்சுக் காட்டிடணும். பணிஞ்சிரக் கூடாது. அம்மாவுக்காக ஊருக்காக உறவுகளுக்காக

யாருக்காகவும் தியாகம் பண்ணுற விஷயமில்லே, இது. பொம்பளைன்னாலே இழிவா கால்தூசியா நினைக்கிற மனுசப் பதர்களுக்குச் செவிட்டில் அறைஞ்சு, உண்மையைச் சொல்ற விஷயம். உறைக்கிற மாதிரி உணர்த்துகிற விஷயம். தன்மான விஷயம். உயிர் விஷயம்...'

"என்னடி பேச்சு மூச்சையே காணோம்?"

அம்மாதான். அரண்டு போய்க் கிடக்கிற அம்மா. இழுத்த இழுப்புகளுக்கெல்லாம் வளைந்து வளைந்து, சுயத்தையே தொலைத்துவிட்ட அம்மா. நனைந்த கோழிக் குஞ்சாக நடுங்கிக் கிடக்கிற அம்மா.

"பயப்படாதேம்மா... எச்சிலை வடிச்சிக்கிட்டு, நாக்கைத் தொங்கப் போட்டுக்கிட்டு மாமா அலையட்டும். அவரு நெனைக்குறது, நடக்கப் போறதில்லே."

"எளங்கன்னு பயமறியாதும்பாக. நீயும் அப்படித் தாண்டி பேசுறே. ஊர் கூடி சாதி ஜனமெல்லாம் சுத்தி நின்னுக்கிட்டு 'இப்படித்தான் செய்யணும்'னு சொன்னா... நாம எப்படி மீற முடியும்?"

"இந்த ஊர்லேயே இல்லாமப் போயிட்டா?"

"அதெப்படி? காடுகரைக கிடக்கே. அரமனை மாதிரி வீடு கிடக்கே. இத்தனையையும் மடக்கி கக்கத்துலே இடுக்கிக்கிட்டா... போக முடியும்?"

"ஏம்மா... நா ஒண்ணு கேக்கேன், அக்காளுக்கு இன்னொரு இளவட்டப் புருஷன் வேணும்னு கேட்டா-மாமா சம்மதிச்சிருவாரா?"

வேலாயி தீயை மிதித்தவள் போல துடித்துப் போய் மகளைப் பார்த்தாள். இந்தக் கேள்வியில் அப்படியே அரண்டு போய்விட்டாள். பருந்தைக் கண்ட பாம்பாக நடுங்கிப் போனாள், வேலாயி.

யாரும் இதுவரை கேட்டிருக்க முடியாத கேள்வி. வேலாயி கேட்டதில்லை. அவளது அம்மாவும் கேட்டிருக்க மாட்டாள், பாட்டியும் கேட்டிருக்க மாட்டாள்.

மனித உதடுகள் இதுவரை உச்சரித்திருக்க முடியாத கேள்வி. உலகம் தலைகீழாகப் புரண்டு விட்டதா... என்ன?

மகளை வினோதமாகப் பார்த்தாள். பார்வையில் அளவிட முடியாத வெறுப்பு.

## 18

அம்மாவின் கண்களில் கொப்புளித்தது வெறுப்பு. அவள் முகம் சட்டென்று நிறம் மாறியது. முகச் சுருக்கங்களில் உதட்டுச் சுளிப்புகளில் அப்பட்டமான வெறுப்பு. அருவருப்பு.

இவள் என் வவுத்துல வளர்ந்தவள்தானா? என் ரத்தத்தில் ஊறியவள்தானா? என் மடியில் கிடந்து, பாடிய ரோராட்டு (தாலாட்டு)களைக் கேட்டவள் தானா?

இல்லை இருக்காது. இருக்க முடியாது. இது வேற்று ஜந்து. எங்கேயோ பிறந்து, எப்படி எப்படியோ வளர்ந்த

காட்டுப் பிராணி. என் பாலைக் குடித்து வளர்ந்தவள் இப்படி ஒரு கேள்வி கேட்பாளா? என் பரம்பரையில் - என்கொடி வழியில் வந்திருந்தவள் வாயில் இப்படியோர் வார்த்தை வந்திருக்க முடியுமா?

வேலாயிக்குள் ஓடிய வெறுப்பான நினைவுகள். சட்டெனத் தோன்றிவிட்ட இடைவெளி. நீளமான இடைவெளி. மகள்... தூரத்தில்... ரொம்ப தூரத்தில் இருப்பது போலப் பட்டது.

அந்நிய மனுசியாக பார்க்கச் சகிக்காத அற்பப் புழுவாகத் தோன்றினாள், மகள்.

வேலாயியின் கண்கள் இடுங்கின. கூர்மையாக அவளைப் பார்த்தன.

"ஏண்டி பாதகத்தி... ஒந் நாக்குலே சனியன் வந்து உக்காந்துருச்சா? எதுக்கு இப்படிப் பேசுறே? ஒரு சாதிமான் பொட்டச்சி இந்த வார்த்தையை வாயிலே வைச்சுப் பேசுவாளா... டி? த்தூ!"

"ஏம்மா பேசக் கூடாது? நா...ங் கேக்கேன். ஏன் பேசக்கூடாது? மாமாவுக்கு மட்டும் ஆசை வந்துட்டா... வரைமுறையில்லாம ரெண்டாம் பொண்டாட்டி கேக்கலாமோ? கேக்குற தைர்யம் எப்படி வந்துச்சு? ஆம்பளைக்கின்னா... கொம்பா முளைச்சிருக்கு?"

"அது வழமுறைதானடி? நம்ம சாதி சம்சாரிக குடும்பங்கள்லே கா(ல்) வாசிக் குடும்பத்துலே, அக்கா தங்கச்சிகளைச் சேத்துக் கட்டிக்கிட்டு வாழுறாகளே... இருக்கத்தானே செய்யுது, நடப்புலே?"

"ராமாயணத்துலே தசரதனுக்கு மூணு பொண் டாட்டிமார். மகாபாரதத்துலே பாஞ்சாலிக்கு அஞ்சு

புருஷன்மார். ரெண்டுமே வழமுறைதானேன்னு ஏன் சொல்லக் கூடாது? ஆனா... நாஞ் சொல்லுதேன், ராமாயணமும் வேண்டாம். மகாபாரதமும் வேண்டாம். ஒருத்தனுக்கு ஒருத்தி. ஒருத்திக்கு ஒருவன். அதுதான் நம்ம காலத்துக்குப் பொருத்தம்மா... ஆமம்மா... சட்டம் எதுவானாலும் அது ஆம்பளைக்கும் பொம்பளைக்கும் பொதுவாயிருக்கணும்மா..."

"ஏண்டி... அறுதலி (விதவ்வ) வளர்த்த புள்ளை தறுதலை'ன்னு சொல்லுவாக. நீயும் அப்படித்தானா? இல்லே... சம்பாரிச்சுப் போடுறோம்ங்கிற திமிர்லே பேசுறீயா?"

"பசை ஒட்டிச் சம்பாரிக்கிற கூலிக்காரிக்கு என்னம்மா திமிர் இருக்கும்? திமிர்லே பேசலேம்மா. பொம்பளைங்கிற ரோஷத்துலே - மனுசிங்கிற தைர்யத் துலே பேசுறேம்மா. ஒன்னை மாதிரி அடங்கிக் கிடக்க முடியாதும்மா..."

இதற்குமேல் எதுவும் பேச விரும்பவில்லை. பேசக் கூடாது. பேசினால்... அம்மா நொந்து போவாள். காயப் பட்டு விடுவாள். ஏற்கெனவே... அடிபட்டுக் கிடப்பவள்.

சொர்ணம் எழுந்தாள். தொழுவத்திற்குள் நுழைந் தாள். குளித்தாள். துணிமணிகளை மாற்றிக்கொண் டாள். சத்தம் இல்லாமல் சாப்பிட்டு முடித்தாள்.

வெளியே வந்து முற்றத்தில் நின்றாள். தூரத்தில் தெரு விளக்கு. முற்றத்தில் செல்கிற தெரு. ஒரு வெள்ளாட்டுக் குட்டி தாயைத் தேடி 'ம்மே' என்று ஏக்கமாய்க் கத்துகிறது.

அவளுக்குள் மாமாவின் தோற்றம். வெற்றிலைக் காவியேறிய பற்கள். சிவந்து கறுத்த அடி உதடு. பீடி குடிக்கிற உதடு. குள்ளமான தோற்றம். முன் வழுக்கை விழுந்த வட்டத்தலை, காதோரம் நரைத்த முடி, நறுக்கு மீசையிலும் முன்னேறுகிற நரை. கண்களைச் சுற்றிலும் சுருக்கங்கள். தோல் மடிப்புகள். முதுமையின் முகம் வெளிப்படுகிற உடம்பு.

இவருக்கா... என் மீது ஆசை? ஆசைப்பட என்ன தகுதியிருக்கிறது? என் அக்காளை மாலையிடுவதற்குக் கூட இந்த மனிதரிடம் என்ன தகுதியிருந்தது?

என் அக்காளுக்கே தகுதியில்லாத இந்த ஆள், என் மீதா ஆசைப்படணும்? என் கால் தூசி பெறுவாரா, இவர்? த்தூ!

மகளைப் போல இத்தனை காலம் பழகிவிட்டு, தகப்பன் என்கிற மரியாதை உணர்வு மனசில் நிலைத்துப் போகிற மாதிரி உறவாடிவிட்டு... இப்போது பெண்டாள ஆசை எப்படி வந்தது? இது மனுச ஜென்மந்தானா?

இந்த மிருகத்திடமிருந்து எப்படித் தப்பிப்பது? தப்பிக்க என்ன வழி? ஊர் நாட்டாமையும், ஊர் ஜனமும் முற்றுகையிட்டு நெருக்கினால்... எப்படி மீள்வது? யார் மீட்பது?

இந்த முற்றுகையை உடைக்க என்ன வழி?

இந்தக் கேள்வியில் போய் முட்டிக் கொண்டாள். ஒரு தடித்த சுவராக நின்று மறித்தது, இந்தக் கேள்வி. வாசலற்ற சுவர். பதில் இல்லாத கேள்வி.

யோசிக்க யோசிக்க மனசுக்குள் கற்பனைகள். விதம் விதமான கற்பனைகள். யூகங்கள். மனசுக்குள் நிகழ்கிற சாகச நிகழ்ச்சிக் காட்சிகள்.

நினைத்துப் பார்த்தால்... எல்லாமே அபத்தமான கற்பனைகள். ஒன்றுக்கும் உதவாது.

ஆயாசப்பட்ட மனசுக்குள் ஆயிரத்தெட்டு கற்பனைகள். முன்னோடுகிற காட்சிகள்... அதிலேயே ஓர் ஆறுதல் சுகம்...

சட்டென்று உள்ளுக்குள் ஒரு வெளிச்சம். பழநி. முனியசாமியின் பேரன். ஏதோ சங்கத்தில் தலைவர். பெரிய தொழிற்சங்கவாதி. பாலிடெக்னிக்கில் படித்து முடித்துவிட்டு... சிமெண்ட் ஆலையில் பணியாற்று கிறவன்...

ஒருவேளை... அவன் விரும்பினால்... இந்த முற்று கையை உடைக்க முடியுமா? அவன் தயவில், நான் தப்பிக்கவா? அவன் நிழலில் வாழ்வு பெறவா?

என் வீட்டில் பழைய கஞ்சிக்குத் தவம் கிடந்து காத்திருந்து, வாங்கிக் குடித்த வேலைக்காரன் முனிய சாமியின் வாரிசு. என் வீட்டில் நாயாகக் கிடந்து கடைசி வரை விசுவாசம் காட்டிய ஒருவனின் பேரன்.

அவன் கருணையில் நான் பிழைக்கவா?

இல்லை... எனக்கு அவன் சேவை செய்யக் கடமைப் பட்டவன். நியாயமாகவே கடன்பட்டவன்.

“சாமியவுக வீட்டுச் சோத்தை உண்டு வளர்ந்தவுக நாங்க. உங்களுக்கு எங்க பரம்பரை பூராவுமே காலுக்குச் செருப்பா ஒழைச்சாலும்... எங்க கடன் தீராதும்மா.”

முனியசாமி இப்படித்தான் அடிக்கடி சொல்லு வான்.

நிஜந்தான்... பழநி என்னைக் காப்பாற்றக் கடமைப் பட்டவன். செய்ய வேண்டும்.

அவனை எப்படிப் போய்ப் பார்ப்பது? எங்கே இருப்பான்? எப்படி உத்தரவிடுவது?

கேள்விச் சுவரைத் தாண்டிவிட்ட மாதிரியானதோர் நிம்மதி. நாதியற்றுப் போய் விடவில்லை என்கிற பாதுகாப்புணர்வு...

பெருமூச்சுடன் வீட்டுக்குள் நுழைந்தாள்.

அந்த டவுன் பஸ் நகரத்திற்குள் நுழைந்தபோது, பழநி பொறுமையைச் சுத்தமாக இழந்துவிட்டான். முள்ளின் மேல் உட்கார்ந்திருப்பதைப் போல... இருப்புக் கொள்ளாமல் தவித்தான்.

அடிக்கொரு தடவை கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டான். நகரத்தில் ‘முற்போக்கு எழுத்தாளர் சங்கம்’ சார்பில் பாரதியார் விழா. பத்து மணிக்கு ஆரம்பம் என்று சொல்கிற அழைப்பிதழ். சிமிண்டாலை தொழிலாளர் சங்கத்தின் இணைச் செயலாளர் பழநி, வாழ்த்துரைக்க வேண்டும்.

நேரம் கடந்து விட்டதோ.. தாமதமாகி விட்டேனோ..

அவசரமாக இறங்கினான். இலக்கியக் கூட்டம் என்பதால்... இவனுக்குள் பதற்றம். ஓர் உதறல். ஒரு புரியாமையால் வருகிற திகைப்பு.

*கையில் பாரதி நூல். கவிதை நூல். படிக்கிற காலத்திலேயே தமிழாசிரியர் ரூஸ்வெல்ட் தமிழோடு சேர்த்து பாரதியையும் இவனுள் புகட்டினார். பாடத்திற்கு வெளியேயும் போய்... பாரதியைப் பற்றிப் பரவசத்தோடு பேசுவார்.*

*அவர் விதைத்த மணிகள்... இவனுள் முளைத்து, வளர்ந்து, கொடி வீசி...*

*பாலிடெக்னிக் படிக்கிற காலத்தில் பாரதியில் கரைந்தே போனான். அவர் மகாகவி என்பதை அறிவால் உணர்ந்தான். பாரதி என்ற கவிஞனை மட்டு மல்ல, பாரதி என்ற மனிதனையும் பிரமிப்போடு உணர்ந்தான்.*

*'ஓடி விளையாடு பாப்பா'வில் எழுதியதையெல்லாம் தங்கம்மாளுக்கும் ஊட்டி வளர்த்த நேர்மைத் தந்தை. கவிதையிலும் சொல்லிலும் பாடிய பெண்ணுரிமையை நடப்பிலும் நிகழ்த்திக் காட்டியவன். அந்தக் காலத் திலேயே செல்லம்மாளை நாற்காலியில் அமர்த்தி, பக்கத்தில் பதியாக நின்று புகைப்படம் எடுத்தவன்.*

*கவிதைக்கும் வாழ்க்கைக்கும் இடைவெளியே யில்லாமல் வாழ்ந்த மனிதத் தங்கம். இவனுக்குள் பாரதியின் வேர்கள் ஆழத்தில் ஊடுருவி விட்டன...*

*இன்று இவன் ஆலைத் தொழிலாளி. மாணவனாக இருந்து பாரதியைப் பற்றிப் பேசினால் இயல்பாக இருக்கும். ஆலைத் தொழிலாளி பாரதியைப் பற்றிப் பேசினால்... இயல்பாக இருக்குமா? ஏற்றுக்கொள் வார்களா?*

*இவனுக்குள் மீண்டும் அதே உதறல். மனத்தாழ்ச்சி.*

விழா... ஒரு பள்ளியின் உள் மைதானத்தில். பஸ் நிலையத்தை விட்டு வெளியே வந்தால்... ஒரு தட்டிப் போர்டு. அதில் இவன் பெயர் இல்லை.

பெயரைத் தேடுகிற தன் மனசை நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

அறிமுகமான ஓரிருவர் வணக்கம் சொல்ல, அதை யந்திரமாய் ஏற்றுக்கொண்டு, ஒரு சிரிப்பை உதிர்த்து விட்டுத் தெருவுக்கு வந்தான்.

பரபரப்பு மிகுந்த அந்த நகரத்தில் வித்தியாசமான விதத்தில் விளம்பரம். எளிமையான செலவில் கண்ணைக் கவரும் விளம்பரம்.

சாலையில் இரு மருங்கிலும் வழி நெடுக ஒவ்வொரு மின்கம்பத்திலும் தூண்களிலும் சின்னச் சின்ன அட்டைகள். அதில் கலர் கலராய் எழுத்துகள். செய்தி யாய்... தகவலாய்... கவிதைகளாய்...

"மண்பொய் சொல்வதில்லை; மிதிக்கிறோம்.
மரம் பொய் சொல்வதில்லை; வெட்டுகிறோம்.
மந்திரி பொய் சொல்கிறார்; மாலை போடுகிறோம்."

"மதமாய்ச் சுருங்காதே. ஜாதியாய் ஒடுங்காதே.
மனிதனாய் நிமிர். ஆகாயமாய் விரி, மனிதா"

"இலக்கியம், பொழுதுபோக்குப் பண்டமல்ல.
உலகத்தை உழுது பக்குவப்படுத்தும் கருவி"

"கலை, கருத்தை மட்டும் சுமக்கும் வண்டியல்ல
மனதை நெகிழ்த்தும் அழகின் மாயம்"

வாசிக்க வாசிக்க அவனுள் விரிகிற புதிய உலகம். புதிய புதிய வார்த்தைகள். அர்த்த அடர்த்தியுள்ள

வார்த்தைகள். தொட்ட சிந்தனையை உள் ஆழப்படுத்தி விரிய வைக்கிற கருத்துச் செறிவு.

யூனியன், சந்தா, கன்ஸ்லேஷன், கேட்மீட்டிங், ஆர்பிட்ரேஷன், மெமோ என்ற வார்த்தைகளுக் குள்ளேயே புழுங்கிக் கொண்டிருந்த பழநிக்கு, திடு மென்று ஒரு சாளரம் திறந்துகொண்ட மாதிரி இருந்தது.

கற்றை கற்றையாக வெளிச்சமும், காற்றுப் புதுமையும் அவனுள் பாய்ந்து ஒளிப்படுத்துகிற பிரமை.

"என்ன பழநி சார், இங்க நிக்கீக? இங்க ஏதாச்சும் தர்ணா, ஆர்ப்பாட்டமா?"

சட்டென்று திரும்பினான். பஸ்ஸுக்குப் போகிற அவசரத்தில் வருகிற லேபர் ஆபீஸர்.

"இல்லே சார், பாரதி விழா."

"பாரதி விழாவா? உங்களுக்கு அங்க என்ன வேலை? பூக்கடையிலே கசாப்புக் கடைக்காரருக்கு என்ன ஜோலி, சார்..."

"உங்க ரெண்டு உதாரணமுமே தப்பு, சார்."

"சரி. நா வர்றேன் சார். பஸ்ஸுக்கு டயமாச்சு. பேச நேரமில்லே, ஸாரி."

"சரி சார்."

இவனும் விழா நடக்கும் இடத்தை நோக்கிப் புறப்பட்டான்.

# 19

பள்ளி மைதானத்துக்குள் நுழைந்தான் பழநி. நானூறு ஐநூறு பேருக்குள் கூட்டம். ஆசிரியர்கள், உத்யோகஸ்தர்கள், தொழிலாளர்கள், கொஞ்சமாய்ப் பெண்கள்.

மேடை ரொம்ப எளிமையாக இருந்தது. ஒரே ஒரு பேனர் மட்டும். அதிலும் பாரதியின் படம். கவிதையைப் போல ஓவியம். சுருங்கச் சொல்லி சுருக்கென உணர்த்து கிற ஓவியம். புருவங்களும், மீசையும் மட்டுமே வரையப் பட்டிருந்தது. பார்க்கிற யாருக்கும் பாரதியை உணர்த்தும்.

துவக்கவுரை நிகழ்ந்து கொண்டிருந்தது. நுழைந்த பழநியை விஷ் பண்ணுகிற பாவனை மூலமாகவே வரவேற்றனர், புன்சிரிப்புடன்.

மேடையில் உட்கார்ந்தான். எதிரில் பார்த்தால், சில கல்லூரிப் பேராசிரியர்கள் கூட உட்கார்ந்திருப்பது தெரிகிறது. இவனுள் மீண்டும் பதற்றம். மனத் தாழ்ச்சி. உள் நடுக்கம். குப்பென்று உடலெங்கும் வியர்வை.

"இப்போது.. சிமெண்டாலைத் தொழிலாளர் சங்கத்தின் இணைச் செயலாளர் பழநி அவர்கள் நமது விழாவை வாழ்த்திப் பேசுவார்."

சம்பிரதாயமான கைத்தட்டல் சப்தம், கூச்சத்துடன் எழுந்தான். "வந்தவுடனா?" என்று வியப்பில் முணுமுணுத்தான்.

ஸ்மைக்கின் முன்நின்றான். நெஞ்சு படபடத்தது. ஆவல் தேங்கிய முகங்கள், எதிரில் பார்த்தான். பார்வையில் எதுவும் படாதது போன்ற ஒரு பிரமை.

நா வறண்டு போன மாதிரியிருக்கிறது. நெஞ்சுக்குள் எங்கோ போய் ஒளிந்துகொண்ட வார்த்தைகள். நாவுக்குத் தட்டுப்படாமல் ஓடி மறைகிற வார்த்தைகள்.

'பாரதி... நீ எனக்குள் வேர் பாய்ச்சியிருக்கிறாய். உனது ஆன்மா என்னுள் கலந்திருக்கிறது. நான் யாருக்காகப் பேச? எனக்காகவே பேசுகிறேன். என்னையே பேசுகிறேன்.'

சபை வணக்கத்தைச் சுருக்கமாய் முடித்துக்கொண்டு விஷயத்திற்குள் வரும்போது... கண்கள் திறந்திருக்க இருண்டு போயிற்று. கண்கள் முழுவதும் மனசுக்குள்...

"அறிவு ஜீவிகள். பண்டிதர்களின் அரண்மனை விஷயமாக மட்டும் கோபுர உச்சியில் இருந்த இலக்கியத்தைப் பாடுபடும் மக்களுக்கும் வீதிக்கும் நெருக்கமாகக் கொண்டு வந்து கௌரவித்திருக்கிற முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர்களே! மானுட மகிமையைப் பாடுகிற இலக்கியங்களை எளிமையான மொழியில், கூர்மையான பார்வையில், அழகுச் செழுமையோடு ஆக்கித் தருகிற படைப்பாளிகளே!

பாரதி விழாவுக்கும், தொழிற்சங்கத்துக்காரனுக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் கருதுனீர்களோ... எனக்குத் தெரியாது. வாழ்த்துரை வழங்க வாய்ப்புத் தந்தமைக்கு எனது நன்றி.

நான் பாரதியை உள்ளன்போடு நேசிக்கிறவன். பள்ளி நாட்களில் பாரதியின் பாடலால் கவரப்பட்ட

நான், அப்புறம் பாரதியின் முழுமையையும், ஆழத்தை யும் உள் வாங்கிக்கொண்டு நேசிக்கிறவன்.

பொட்டு வைத்திருந்தாலும் புரட்சிக்காரனாகவே வாழ்ந்த பாரதியை ஒரு தொழிலாளி நேசிக்காமலிருக்க முடியாது; கூடாது.

பஞ்சமன் - வினைவலன் - ஏவலன் - இப்படித் தான் தமிழ் இலக்கியம் உழைப்பாளிக்குப் பெயரிட்டு உச்சரித்து வந்திருக்கிறது. பாரதிதான் முதன்முதலாய்... 'பிரம்ம தேவன் கலையிங்கு நீரே' என்று பெருமைமிக்க பெயரிட்டு, மரியாதையோடு உச்சரித்தவன். உழைப்பை ஆராதித்தவன். சக்தியை பூஜித்தவன், உழைப்புச் சுரண்டலை அடிமனசு வரை அடியோடு வெறுத்தவன்.

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்யச் சொன்னான். வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்யும்படி தீர்ப்பு எழுதியவன்.

இப்படிப்பட்ட பாரதியை - மகாகவியை - மாமனி தனை - உழைப்புச் சுரண்டலுக்கெதிராகக் கிளர்ந் தெழுகிற ஒவ்வொரு தொழிலாளியும் நேசிக்காமல் இருக்க முடியுமா? மனத்தில் வைத்து பூஜிக்காமல் இருக்கலாமா?

ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டாள், பாரததேவி. நாற்பத்து நாலு வருஷங்களாகப் பாரத மக்கள் ஆனந்தப்பட்டு, பள்ளுப்பாடி ஆடி முடித்துவிட்டனர். இன்னும் பாரதியின் சமுதாயக் கனவுகள் முழுவதும் கவிதைகளில் மட்டும் தூங்கிக் கிடக்கின்றனவே... இது என்ன கொடுமை? இது ஒரு வரலாற்றுப் பரிதாப மல்லவா?

பாரதியை மகாகவியென்று முகம் காட்டி வரவேற்கிற பாரத நாடு, அவன் கனவுகளுக்கு மட்டும் முதுகைக் காட்டிக் கொண்டிருப்பது, என்ன நியாயம்?

நம் கிராமத்து உழவுச் சாதி வந்தனை செய்யப்படுகிறதா? வஞ்சகம் செய்யப்படுகிறதா? உழுதுண்டு உலகைக் காக்கிற அந்த உழவு மக்கள், சகலரையும் தொழுதுண்டு இழிவுபடவில்லையா? உழவுத் தொழில் ஒரு தொழில் என்று இன்னும் அங்கீகரிக்கப்படவில்லையே, ஏன்? தொழிலுக்குரிய சலுகை எதுவும் வழங்கப்படவில்லையே, ஏன்? இன்றைக்கு நாட்டிலேயே நஷ்டமான - கஷ்டமான - அவலத்திற்குரிய தொழில், உழவுத் தொழில்தான்.

நஷ்டங்களால் நொறுங்கிப் போன உழவுத் தொழிலை நம்பி இனி வாழ முடியாது என்ற நிலையில்... கிராமத்து மனிதக் கொழுந்துகள், சின்னஞ்சிறு அரும்புகள் தீப்பெட்டியாலைகளை நோக்கி அகதிகளைப் போலப் படையெடுப்பதை நாம் காணவில்லையா?

பட்டங்கள் பெறவும், சட்டங்கள் செய்யவும் முன்வர வேண்டிய கிராமத்துப் பெண்கள்... தீப்பெட்டிப் பசை ஒட்டி வாழ்க்கையை நகர்த்துகிற இருண்ட நிஜத்தை எவரேனும் மறுத்திட முடியுமா..?

பாரதியின் கனவுகள் காயம் பட்டுக் கதறுகிற சப்தம் கேட்கவில்லையா?

பிஜித் தீவுகளின் கரும்புத் தோட்டங்களில் இந்தியப் பெண்கள் கொத்தடிமைகளாக உழைப்பதைப் பார்த்து மனங்கொதித்துப் பாடினானே, பாரதி! அவன் இன்று

உயிரோடு இருந்து... கந்தகக் கிடங்குகளில் மனித அரும்புகள் சிறைப்பட்டு வெந்து கிடக்கிற அவலத்தைப் பார்த்தால்... மனித நேயமில்லாத இந்த தேசத்தையே தீக்கிரையாக்கும்படி தீர்ப்பு எழுத மாட்டானா?

பாரதியின் கனவுகளை காலில் போட்டு மிதிக்கிறோம்.

'செப்பு மொழி பதினெட்டுடையாள், சிந்தை ஒன்றுடையாள்...' என்று பாரதி, ஆரோக்கியமான பாரத தேவியை அலங்காரமாய்க் கற்பனை செய்தானே...

இன்று இந்தியாவின் பல மாநிலங்களில் பிரிவினைக் கோஷங்கள். ஒவ்வொரு மாநிலமும் 'செப்பு மொழி ஒன்றோடும், சிந்தை பதினெட்டோடும்' அலங்கோலமாய்த் தலைவிரித்துக் கிடக்கவில்லையா?

வீரர்கள் நிறைந்த பஞ்சாப் மண்ணில் இந்தியனே இந்தியனைச் சுட்டுக் கொல்கிற பரிதாபக் காட்சிகள்.

இந்தியாவின் தலைப் பகுதியான காஷ்மீரச் சுவர்களில்... இந்தியாவுக்கு எதிரான கோஷங்கள்.

திரும்புகிற திசையெல்லாம் சாதிச் சண்டைகள் மனிதனை மனிதன் மனிதத் தன்மையில்லாமல் வேட்டையாடுகிற மதச் சண்டைகள்.

பாரத தேவியின் அங்கங்களைக் கூறுபோட்டுக் கூவி விற்கிற ஆபத்தான - கொலைகாரப் பிரிவினை இயக்கங்கள்...

பாரதியின் கனவுகள் ரத்தம் சிந்துகிற கொடுமையல்லவா... இது?

வீணில் உண்டு களித்திருப்போரின் கைகளில் இந்தியச் செல்வங்கள் ஒப்படைக்கப்பட்டு... சுதேசிப் பணக்காரர்களின் காலடியில் சுதேசி இந்தியர்கள் அடிமைகளாகக் கிடக்கிற இன்றைய நிஜம், பாரதியின் கனவுகளுக்குக் கிடைத்த கௌரவமா? இழிவா?

பாரதி! தமிழின் மீசையை முறுக்கி நிமிர்த்திய மகாகவியே! தேசியக் கவியே! எங்கள் தேசக் கனவே!

நடந்து போன நாள்களை மன்னித்துவிடு. இனி நடக்கிற நாள்கள் உனது நாள்களாக இருக்கும்.

உன்னையும் உன் கனவுகளையும் சுவீகரித்துக் கொள்ள இதோ... நாங்கள் வருகிறோம். உழைப்பாளிப் படைகளாக வருகிறோம்.

முப்பது கோடி மக்களுக்குப் பொதுவுடைமை கேட்டவனே... நாங்கள் எண்பது கோடி மக்களுக்குக் கேட்கிறோம்...

நீ சொன்ன மாதிரி நாங்கள் பிரம்மதேவர்கள்தான். ஆலைகளில் சிமெண்டை உற்பத்தி செய்கிற பிரம்மாக் கள் மட்டுமல்ல... உன் கனவுப் பாரதத்தை நனவுப் பாரதமாகப் படைக்கப் போகிற பிரம்மாக்கள், நாங்கள்.

இனி நாங்கள், எங்கள் தோள்களில் உனது கனவு களைச் சுமப்போம். இனி நாங்கள் உனது கைகள். கால்கள். உனது ஆன்மா. உன் விருப்பங்களுக்கு உயிர் வடிவம் தருகிற உனது ஆற்றல், நாங்கள். உன் கனவுகள் நடப்புகளாகும். மகத்துவம் பெறும்.

அந்தக் காலம் தூரத்தில் இல்லை என்பதை உரத்து முழக்குகிற இந்த விழாவை நெஞ்சார வாழ்த்தி நன்றி யுடன் முடிக்கிறேன்... வணக்கம்."

பழநி உட்கார்ந்தான். அவன் சட்டை முழுவதும் வியர்வையில் 'தொப்பலாக' நனைந்து கிடந்தது. நெஞ்சுக்குள் ஏதோ வந்து அடைத்துக்கொண்ட மாதிரி ஓர் உணர்வு.

கைத்தட்டல் சத்தம் சற்று நீளமாய் நீடிக்கிறது. அவன் உயிரோடிருப்பதை மெல்ல மெல்ல உணர் கிறான். விறைத்துக் கிடந்த நரம்புகள் மெல்ல மெல்ல... தளர்ந்து தன்னிலைக்கு வருகின்றன.

அவனுள் ஒரு பரவசம்... நெஞ்சுக்குள் வந்து உறைந்து கிடந்த உயிர், நரம்புகள் வழியே உடலெங்கும் பரவுகிறதை உணர்கிற பரவசம்.

இன்னும் கண்களுக்குள் மிச்சமாய் இருட்டு. கலர் கலராய் மிதிக்கிற ரேகைகள். நாக்கில் எச்சிலே இல்லை. கட்டியாகிவிட்டது. இன்பத்தின் உச்சியிலிருந்து சரிகிற இன்பப் பரவசம்...

"இது... வாழ்த்துரையில்லே... சிறப்புரையே இதுதான்!"

பக்கத்தில் இருந்தவர் பாராட்டினார்; சோடாவை உடைத்து, பாராட்டுகிற மரியாதையோடு நீட்டினார். நன்றியோடு வாங்கிக் கொண்டான்.

மனசுக்குள் ஒரு வெற்றிப் பெருமித உணர்ச்சி.

சோடாவை உடைத்துக் கொடுத்துப் பாராட்டியவர் தான், சிறப்புப் பேச்சாளர். அசாதாரண வளர்த்தி.

வளர்த்தியை அதிகப்படுத்திக் காட்டுகிற ஜிப்பா பேண்ட். சிங்கம் போல அடர்த்தியான முடி. கொத்து மீசை. ஞானச்செழுமையும், குழந்தைத் தன்மையும்

முரண்பட்டுக் கலந்து கிடக்கும் முகம். மனசுக்குள் இறங்கிப் பேசுகிற கண்கள்.

அவர் பேச்சைக் கேட்டிருக்கிறான், பழநி. மணிக் கணக்கில் பேசுவார். தோற்றத்தைப் போலவே உயர்ந்த நடையில் - கவிதைப் பாங்கில் - உணர்ச்சிப் பெருக்கில் பேசுவார்.

அவரே... வியந்து பாராட்டுகிறார் என்றால்...

நன்றாகத்தான் பேசிவிட்டேனா? அப்படி என்ன பேசினேன்? ஒன்றும் ஞாபகத்தில் இல்லை.

சோடா சுருசுருவென்று உள்ளிறங்க... உடலில் ஈரப்பதம் பரவ... கைக்குட்டையால் முகத்தைத் துடைத்தான். உடலெங்கும் வியர்வை நசநசப்பு.

நெஞ்சுப் பட்டனைக் கழற்றி, காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான். இன்னும் கண்களில் ஒரு நெறு நெறுப்பு. மண் துகள் விழுந்த மாதிரி...

அரங்கில் அமர்ந்திருக்கிற எல்லாக் கண்களும் இவனை நோக்க... அந்தக் கண்களில் ஒவ்வொரு பாராட்டுப் பத்திரம்...

இந்தப் பேச்சை சொர்ணம் கேட்டிருக்க வேண்டும். கேட்டிருந்தால்... என்ன நினைப்பாள்?

நம்ம முனியசாமி பேரனா... இப்படி? என்று பிரமித்திருப்பாள். ரசித்திருப்பாள். லயித்திருப்பாள்...

அவனுள் சொர்ணம். மாய உலகம்... யதார்த்த வாதிகளையும் காலை வாரிவிட்டு விடுகிற கனவுலகம்...

# 20

ஷிப்ட் முடிந்ததும், டைம் ஆபீஸுக்கு வந்தான். முகம், கால் கையைக் கழுவிக் கொண்டான், பழநி. யூனிஃபார்ம் டிரஸ்ஸைக் களைந்து, பிளாஸ்டிக் கூடைப் பைக்குள் மடித்து வைத்தான். கைலியையும், ஸிலாக் ஷர்ட்டையும் உடுத்திக் கொண்டான்.

கார்டை வாங்கி வைத்துக் கொண்டான். மற்ற சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளிகள் இவனுக்கு மரியாதையோடு வணக்கம் செய்தனர். வயதானவர்கள் கூட இவனை மதித்து... மரியாதையோடு பேசுகிறபோது கூசிப்போகிறான்.

சங்கத்துத் தோழர் ஒருவர் ஷிப்டுக்குப் போவதற்காகக் காத்திருந்தார்.

"வணக்கம் பழநி."

"என்ன ஷிப்டுக்கா?"

"ம்... என்னோட மெடிக்கல் லீவ் இன்னும் அப்ரூவல் ஆகலே போலிருக்கே..."

"அப்படியா? நேத்தே பேசிட்டேனே. சரி, இன்னிக்கு மறுபடியும் போன்லே சொல்லிடுறேன்..."

"சரி பழநி... காலனியிலே குவார்ட்டர்ஸ் ஒதுக்குறதுலே நம்ம ராமசாமிக்கு ஏதோ பாரபட்சம் காட்டறாங்களோ?"

"ஆமா, நம்ம ராமசாமிதான் முந்தி அப்ளிகேஷன் குடுத்தது. ஆனா... ஆளுங்கட்சிச் சங்கத்துக்காரன் ஒருத்தனுக்காக ராமசாமி அப்ளிகேஷனைப் 'பெண்டிங்'லே வைச்சிருக்காக."

"அது எப்படி நியாயமாகும்?"

"நியாயமில்லேதா. நிர்வாகம் அந்த லட்சணத்துலே இருக்கு. ஆனா, நாம விடப்போறதில்லே. கேட் மீட்டிங்லே இதைப் பேசப் போறேன். ஆபீஸர் கிட்டேயும் பேசுவோம். விடமாட்டோம்..."

வெளியே வந்தான். உள்ளே போவதும், வெளியே வருவதுமாகத் தொழிலாளிகள். கூட்டம் கசகசத்தது. வழி நெடுக இவனுக்கு நிறைய 'விஷ்' பண்ணினர்.

நெஞ்சு வறண்டது. ஒரு டீ குடித்தால் நல்லது. அப்படியே வேறு ஏதாவது தின்பண்டம் தின்னக் கிடைத்தால் பரவாயில்லை.

கேண்டீனுக்குள் நுழைந்தான். நிறைய புன்சிரிப்புகள். கேலி கிண்டலான உரையாடல்கள்.

ரெண்டு வடைக்கும், டீக்கும் டோக்கன் வாங்கிக் கொண்டான். யாருடனோ பேசிக்கொண்டே வயிற்றுக்குள் தள்ளிவிட்டுப் புறப்பட்டான்.

"பழநி சார்... எங்கே? ரூமுக்கா?"

"ம்..."

"சைக்கிள் இருக்கா?"

"இல்லே."

"அப்ப வாங்க. பின்னாடி ஏறிக்கங்க..."

அறைக்குள் வந்தான். மணி ஐந்தாகிவிட்டது. அப்படியே வந்து கட்டிலில் சாய்ந்தான். அன்றைய பேப்பரை எடுத்தான். படுத்துக்கொண்டே மேய்ந்தான்.

இவன் கலந்துகொண்ட பாரதி விழா நாலு வரிச் செய்தியாக இருந்தது. ஏனோ அதைத் திரும்பத் திரும்ப வாசிப்பதில்... ஒரு சுகம். ஒரு மயக்கம்.

‘தொழிற்சங்கத் தலைவர் பழநி வாழ்த்துரை வழங்கினார்’ என்ற வரி இவனுள் தேன் பாகாகக் கீழிறங்கி... இனித்தது.

பேசி முடித்தவுடன் அன்றைக்கு ஏன் சொர்ணத்தை நினைத்தான்? சொர்ணத்தின் மதிப்பில் உயர வேண்டும் என்கிற உள் மன ஏக்கம்.

அப்போது பழநிக்கு நல்ல டவுசர்கூடக் கிடையாது. பட்டன் அறுந்துபோன டவுசர், அர்ணாக்கயிறில் செருகப்பட்டு... அதன் பலத்தில் தொங்கும்.

கன்னங்கரேல் என்று கருவேலங்கட்டை மாதிரி இருக்கும். எந்நேரமும் மூக்குச்சளி வழியும். ‘புருட் புருட்’டென்று அடிக்கொருதரம் உள்ளிழுத்துக் கொள்வான்.

சொர்ணத்துடன் படப்படியில் விளையாடுவான். மற்ற பெண் பிள்ளைகளும் கூட விளையாடும். ஒருநாள் வேலாயி வந்து சொர்ணத்தை அதட்டினாள்.

தராதரமில்லாத பிள்ளைகளோடு விளையாடுவதற்காக அவளைக் கண்டித்தாள். மிரண்டு நின்ற சிறுமிகளையும் அதட்டினாள். சீறலான அதட்டல்.

“கேடு கெட்ட மூதிகளா... உங்களுக்கு வெளையாடு றதுக்கு இந்த எடம்தான் கிடைச்சதோ? கெதி கெட்ட கொரங்குக வெளயாடுற எடமா, இது? போங்க, நாய்களா...”

பிள்ளைகள் கல்லடி பட்ட தேன் குளவிகளாக ஓடிப் பறந்துவிட்டனர். பழநி கடைசியாகப் போனான். அந்த அம்மாளையே முறைத்துப் பார்த்தான்.

“என்னடா பார்வை பாக்கே? திமிர் பிடிச்ச நாயே... போடா!”

இவன்மீதும் சிதறி விழுந்த தீக்கங்குகள் மனசு முழுவதும் கொதித்தது. முதுகைத் துரத்தி வந்த தீக்கங்குகள்...

“கீழ் சாதிக்காரப் பயலுக புள்ளைககூட நிமிர்ந்து பாக்குதுகளே... கொஞ்சம்கூட பயமில்லாம!”

இந்தக் கங்குதான் இவனுள் ஆழத்தில் போய் விழுந்தது. அந்தப் புண், ரொம்பக் காலம் வரை வலித்துக்கொண்டே யிருக்கிறது. அதற்குப் பிறகு அவன் அந்த திசைப் பக்கமே தலைவைத்துப் படுக்கவில்லை.

இவனுக்கு இவன் வளத்தையாதான் எல்லாம். அம்மா அய்யா எல்லாம். எல்லா விஷயத்திலேயும் இவனுக்கு வளத்தையா ரொம்பப் பிடிக்கும். அவரது பேச்சு, அறிவுரை, உழைப்பு... எல்லாமே பிடிக்கும். ஒன்றே ஒன்று மட்டும் இவனுக்குக் கசந்து வரும்.

எசமானியம்மாவின் தர்ம குணம் பற்றியும்... அவர்கள் கொடிகட்டி வாழ்ந்த காலத்தில் அவர்களுக்கு

இருந்த பெருமைகள் பற்றியும் லயித்துப் பேசுவது அவனுக்குக் கட்டோடு பிடிக்காது.

வெறுப்பில் மௌனமாகிப் போவான். அவரது பேச்சிலுள்ள அடிமை மோகம், இவனுள் எரிச்சல் ஏற்படுத்தும்.

ஆஸ்டலில் தங்கி, பாலிடெக்னிக்கில் படித்துக் கொண்டிருந்த சமயம். வளத்தையாவைப் பார்த்துவிட்டு, பணம் வாங்கிக்கொண்டு புறப்பட்டான் பழநி.

அதிகாலை பஸ்ஸைப் பிடித்தாகணும். ஊரின் கீழ்க்கோடியில் பஸ் ஸ்டாப். காத்திருந்தான்.

இவனைக் கடந்து மூன்று பெண்கள் தூக்குச் சட்டி களுடன் சென்றனர். அவர்கள் கொஞ்சதூரம் போய்த் தேங்கி நின்றார்கள். யாருக்காகவோ காத்திருக்கின்றனர்.

மேற்குத் திசையிலிருந்து ஓர் இளம்பெண் வந்தாள். கையில் தூக்குச்சட்டி, பிளாஸ்டிக் டப்பா. பெண்ணா அது? தேவதை!

தங்கத் தகதகப்பாய் ஒரு நிறம். பார்த்த மனசைச் சுண்டியிழுக்கிற தோற்றம். சுண்டியிழுத்த மனசை சூறைக்காற்றாய்ச் சுழற்றியடிக்கிற வசீகரம். சின்ன உடல். மெல்லிய பூ மாதிரியான ஓர் உடல்வாகு. சொர்ணமா... அது?

பாவாடையில் என்னோடு விளையாடிய சொர்ணமா இது? இது என்ன... பௌர்ணமி நிலவைக் கூட தலைகுனிய வைக்கிற ஒரு பேரழகு அழகில் எதனையும் மிச்சம் வைக்காமல்... அத்தனையையும் அள்ளிப் பூசிக்கொண்டாளா?

அவளது அழகு அந்த இளைஞனை அதிர வைத்தது. பிரமிப்பிலிருந்து அவனால் விடுபடவே முடியவில்லை.

அப்புறம் பாரதி கவிதைகளில் பெண்களைப் பற்றிப் படிக்கிறபோதெல்லாம்... சொர்ணத்தின் தோற்றம்தான் அவனுள்.

அப்படியே கிறங்கிப் போவான். உள்ளுக்குள்ளேயே வார்த்தைகளைக் கோத்துக் கோத்து அவளை வர்ணித்துப் பார்ப்பான். இயலாமையுடன் தலையைக் குலுக்கிக் கொள்வான். முடியவே முடியாது.

'அடடா... ஓ... அடடா...' பாரதியின் இந்த பிரமிப்புச் சொல்தான்... அவனது வேதமாயிற்று. அந்த வர்ணனைதான்... இவனுக்கு ஓரளவு திருப்தியாக இருந்தது.

சொர்ணத்தின் இன்றைய நிலை... அவனுக்குள் பரிதாபமாக இருந்தது.

புழுதியில் விளையாடுகிற போதுகூட பட்டுப் பாவாடை கட்டிக்கொண்டு, பட்டுப்பூச்சியாகத் திரிந்த சொர்ணம், சாயம் போன நைலக்ஸ் சேலையும், மலிவு விலைச் செருப்பும் அணிந்துகொண்டு கால்நடையாக நடந்து... பசை ஒட்டிப் பிழைக்கிற இன்றைய அவலம்...

இவனுக்குள் பரிதாபமாக இருக்கிறது.

தான் வாங்குகிற சம்பளம் முழுவதையும் செல வழித்து... அவளை ராணி போல வைத்துப் பராமரிக்க வேண்டும் என்கிற ஆசை அவனுள் வெறியாகவே எழும்.

இப்போதுகூட.... அவன் மனசு நினைவாக நிறைந்து ததும்புவது, அவள்தான். பௌர்ணமி நிலவாக அவள்.

*ஒருவேளை... அவள் நிலாதானா? அவளுக்கு ஆசைப்படுவது குழந்தைத்தனம்தானா? அவள் என்ன ஜாதி? இவன் என்ன ஜாதி? தாங்குவாளா? சம்மதிப் பாளா? ஊர் சம்மதிக்குமா? எட்டாத தூரம்தானா? இட்டு நிரப்ப முடியாத இடைவெளியா? கடக்க முடியாதா? கலக்க முடியாதா?*

*நிலாவை எட்டிப் பிடிக்க நினைப்பது அறியா மையா?*

"சந்திரனைத் தொட்டதின்று கனிதசக்தி
சரித்திரத்தை மீறியது மனிதசக்தி"

*பட்டுக்கோட்டையாரின் வரிகள், இவனுள் ஒரு நம்பிக்கை தரும். கனவுகளுக்குக் கால் வழங்கும்.*

*எப்படிப் பார்த்தாலும்... அறிவுபூர்வமாக யோசித் தால்... சொர்ணத்தை எட்டிப் பிடிப்பது இயலாதுதான். அவளைக் காதலிப்பதுகூட... அநியாயம்தான். அனா வசியம்தான். அசாத்தியம்தான்.*

*ஆனால் இதையெல்லாம் மனசு பார்ப்பதில்லை. அடங்குவதில்லை. குரங்காகக் குதிக்கிறது. தவ்வுகிறது. தாவுகிறது. அறிவின் லகானுக்குள் மடங்க மறுக்கிறது...*

# 21

***அ**ந்த அதிர்ச்சி தாளாமல்... அந்தச் சின்ன நகரம் வெலவெலத்தது. மூலை முடுக்கெல்லாம் பயத்தோடும் பதைப்போடும் புலம்பல்கள். டீக்கடைகளில், பஸ்*

நிலையத்தில் சினிமாத் தியேட்டர்களில் எங்கும் அதே பேச்சுத்தான்.

தீப்பெட்டியாபீஸ்கள் எல்லாமே இன்றைக்கு லீவ் விடப்பட்டன. எந்த வேலைகளும் நடக்கவில்லை. எல்லா ஆலைகளும் மூடிக் கிடந்தன. வாட்ச்மேன் களைக் கூட வரச் சொல்லவில்லை.

தீப்பெட்டி ஆலைகளை நிறுத்தியவுடன், நகரம் வெறும் வீடுபோல ஆகிவிட்டது. கடைசியாய் ஊருக்குள் நுழைகிற டவுன் பஸ் மாதிரி... அங்கும் இங்குமாய் ஓரிரு மனிதர்கள். ஜனக் கூட்டமேயில்லை. சவமாயிற்று, ஊர்.

வெறிச்சோடிக் கிடக்கிறது, மெயின் பஜார். நடந்த சம்பவத்தைக் கண்டித்து நாலைந்து தட்டிப் போர்டுகள் மெயின் பஜாரில் முளைத்துவிட்டன. அதில் ஒன்றுதான் 'ஆலை முதலாளியைக் கைது செய்' என்று தெளிவாகக் கூறியிருந்தது.

விஷயம் இதுதான். முந்தாநாள், மதியச் சாப் பாட்டுக்குக் கலைந்துவிட்டு, திரும்ப வேலைக்குள் நுழைகிறபோது அந்தப் பெண்ணைக் காணவில்லை. அவள் காணாமல் போயிருக்கிறாள் என்பதை அன்று சாயங்காலம் வரை யாரும் உணரவேயில்லை.

வேலைகள் முடிந்து சிட்டைகளில் குறிக்கிற போதுதான் அவள் காணவில்லை என்று உணரப்படு கிறது. தீப்பெட்டியாபீஸ் முழுவதும் பரபரப்பு. ஆலை முழுக்கத் தேடிப் பார்க்கிறார்கள். மூலை முடுக்கெல் லாம் தேடுகிறார்கள் காணோம்.

ஒரே பரபரப்பு. சிறுமிகளின் அழுகை, கதறல், கூச்சல், திகைப்பு, குழப்பம்.

மறுநாள் பார்த்தால், அவள் ஊருக்குப் போகிற வழியில், நகருக்கு ஒதுக்குப்புறமாக, பிணமாகக் கிடக்கிறாள்...

தாவணியும், உயிரும் எப்போதோ... உருவப்பட்டு விட்டன.

நகரம் திகைத்துப் போய்விட்டது. ஜனங்கள் 'ஐயோ பாவம்' என்று புலம்பினர். அனுதாபப்பட்டனர்.

"ஐயோ... யாரு பெத்த புள்ளையோ... எந்தப் பாவிப் பய சீரழிச்சானோ... உயிர் போறப்போ... அந்தப் புள்ளை மனசு என்னமாய்த் துடிச்சிருக்கும்?" என்று பெண்கள் மருகித் தவித்தனர்.

போலீஸ் வந்தது. காவல் இருந்தது. சுற்றி மொய்த்த ஆட்களைத் துரத்தியது. சடங்கு, சம்பிரதாயங்களின்படி வேலைகள் நடந்தன.

பெண்ணுக்குப் பாத்தியப்பட்ட கிராமத்தினர் சிலர் வந்தனர். அழுது குமுறினர். கத்தி ஆர்ப்பாட்டம் செய்தனர். பெரிதாக வம்பு தும்புகளில் ஈடுபடுவதைப் போல மிரட்டினர்.

இன்ஸ்பெக்டர் அடங்கிய - அரவணைப்பான தொனியில் கண்டிப்புடன் பேசியபின், எல்லாம் அடங்கிப் போயிற்று.

பாவம், அந்தப் பெண்ணின் அம்மா மட்டும் ஒற்றை மனுஷியாக உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள்.

அவளிடம் வந்தவர்களெல்லாம்... எம்.எல்.ஏ.யிடம் சென்று முறையிடும்படியே வற்புறுத்தினர். நஷ்ட ஈடு கிடைக்கும் என்றனர்.

அதிலும் சிலர், "சங்கத்துக்காரங்க கிட்டே போயிடாதே. அவங்க சட்டம், கொள்கைன்னு பேசி, கிடைக்கிறதும் கிடைக்க விடாமப் பண்ணிடுவாங்க" என்று விஷமமாகப் பேசினர்.

மதியச் சாப்பாட்டுக்குக் கலைகிறபோது, காதலனைச் சந்திப்பதாகத் திட்டமிட்டு... வாட்ச்மேனை எப்படியோ ஏமாற்றி, அரவமில்லாமல் வெளியேறியிருக்கலாம்.

அப்போது... காதலன் திட்டமிட்டபடி வராமல் போயிருக்கலாம். தனித்து நின்ற இளம் பெண்ணை வேறு சிலர் வளைத்திருக்கலாம். கற்பழிப்பு முயற்சியில் மரணம் சம்பவித்திருக்கக் கூடும்...

இதுதான் போலீஸ் சொல்கிற யூகம், இப்படித்தான் முதல் தகவல் அறிக்கை. இந்த யூகமே... ஊர் முழுக்கச் செய்திகளாகப் பரப்பப்பட்டது.

பாவம்... ஊரிலும் அப்படித்தான் பேசிக்கொள்கிறார்கள்.

இன்னொரு உலகம் இருக்கிறது. இருட்டுக்குள் இயங்குகிற உலகம். பணம் மழைக்காலத் தண்ணீராகப் புரள்கிற உலகம். அந்த உலகத்துக்குத்தான் உண்மை தெரியும். ஆனால், அந்த உலகம், உண்மையை - நீதியை- மனிதாபிமானத்தை எல்லாவற்றையும் விழுங்கி ஜீரணித்துவிட்டது.

**அ**ருஞ்சுனை மனசுக்குள் சிரித்துக் கொண்டான். அவனும் அந்த உலகத்தைச் சேர்ந்தவன்தானே!

டெக்கில் படம் ஓடிக் கொண்டிருந்தது. இப்படிப் பகலில் வராய்யாக வீட்டில் உட்கார்ந்திருக்க முடியுமா?

வெறும் கைலியை மட்டும் உடுத்தியிருந்தான். சோபாவில் சுதந்திரமாகச் சரிந்து கிடந்தான். படுத்த மாதிரியும் இல்லாமல், உட்கார்ந்த மாதிரியும் இல்லாமல் இடைப்பட்ட ஒரு தினுசில்.

ரத்னம் தட்டில் பலகாரம் ஏதாவது கொண்டுவந்து கொண்டிருந்தாள். இவனும் அதைக் கொறிக்க... படம் பார்க்க... ரத்னத்துடன் ஏதாச்சும் வாய் கொடுத்துக் கொள்ள...

ரத்னத்துக்குச் சொல்லிமாளாத சந்தோஷம். புருஷன் வீட்டில் இருப்பதும்... சிரித்துப் பேசுவதும்... அவளுக்குப் பெரிய கோட்டையே பிடிபட்டுப் போன மாதிரி யிருந்தது.

டெக்கில் ஓடுகிற படத்திலுமா... ஒரு கற்பழிப்புக் கொலை நிகழ வேண்டும்? கொலையை மறைக்க அந்தப் பணக்காரன் பெரிய போலீஸ் ஆபீஸருடன் பேச வேண்டும்? வேறுவிதமாகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு... கோர்ட்டில் வழக்கு நடக்க வேண்டும்?

அருஞ்சுனைக்குள் ஏதோ ஈரமான நினைவுகள். மாபெரும் கொலை பாதகத்திற்கு மௌனத்தின் மூலம் தானும் உடந்தையாக இருந்துவிட்ட மாதிரி ஒரு பயம், பிரமை.

இத்தனைக்கும்... அந்த தீப்பெட்டியாபீஸ், இவனுக்கு முழுக்க முழுக்க போட்டி. தீவிரமான போட்டி.

இந்நேரம் அருஞ்சுனை இலேசாக வாயைத் திறந்தால் போதும். அந்த பேக்டரியே க்ளோஸ். கைது, வழக்கு என்று முதலாளி அலைவது மட்டுமல்ல...

பேக்டரியின் பெயர் பலமுனைகளிலும் ரிப்பேராகி விடும். ஓர் ஈக்குஞ்சு கூட வேலைக்குப் போகாது. 'கொலைகார ஆபீஸ்' என்று எல்லாக் கிராம மக்களும் சீல் வைத்துவிடுவார்கள்.

பெரும் தொழில் போட்டியாக இருக்கிற நந்தியை உடைத்துத் தூள் தூளாக்கி விடலாம்.

ஆனாலும், இவனுக்குச் செய்ய மனமில்லை. விருப்ப மில்லை. உரிமையாளர்களுக்குள் ஓர் ஒற்றுமை இருந்தாக வேண்டும்.

பலமுனை ஆபத்துகள் நிரம்பியுள்ள சிறு தொழில் இது. பெரிய பகாசுரன்களை எதிர்த்து உயிர் வாழ்கிற சிறு தொழில்.

இதில் ஒருவரை ஒருவர் ஜெயிக்க ஆசைப்படுகிற போட்டிகள் இருக்கலாம். ஒழிக்க முனைகிற பொறாமை ஆகாது. துரோகம் ஆகாது.

அழிவு என்று வருகிற போது... அது தீயாக வரும். பற்றிய வீட்டில் மட்டும் எரிந்து முடியாது. சுற்றியுள்ள சகல வீடுகளையும் அது தொடும். பற்றும். கரியாக்கி விடும்.

பொறாமைப்படுவதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். மௌனத்தைவிட கூடுதலான எச்சரிக்கை யாக எது இருந்துவிட முடியும்?

"ரத்னம்..."

"ம்?"

"நீ படம் பாரு... நா சித்தே உடம்பைச் சாய்க்கேன்."

"தூங்கணுமா?"

"இல்லே, ரெஸ்ட்."

உள்ளே போனான். மின்விசிறி சுவிட்சைத் தட்டிவிட்டுப் படுத்தான்.

மன அயர்ச்சியுடன் கண்களை மூடினான். காற்றின் சுகத்தில் லயித்தான். அலைபாய்கிற மனசு, மெல்ல மெல்ல கண் மூடுகிறது.

கிழிசல்களோடு மல்லாந்து கிடக்கிற அந்த இளம் பெண் வெறிபிடித்த மனித மிருகங்களால் குரூர மாகக் கிழிக்கப்பட்ட பெண் - மானத்தையும் உயிரையும் இழந்து அனாதையாகக் கிடந்த ஓர் ஏழைச் சிறுமி...

மதியச் சாப்பாட்டு நேரம் பார்த்து... வாட்ச்மேனுக்கு ஒரு வேலை கொடுக்கப்பட்டு அப்புறப்படுத்தப் பட்டான். அந்தப் பெண்ணுக்கு, 'அம்மா வெளியே நிக்குறா. கூப்பிடுறா. சத்தமில்லாம வா' என்று மேஸ்திரி மூலமாகத் தகவல் போகிறது.

வெளியே வந்தவளை வாரியள்ளிப் போட்டுக் கொண்டு ஒரு கார் தூள் பறத்துகிறது.

எல்லாம் பேக்டரி முதலாளியின் செல்ல மகன் வேலை.

அவனும் அவனது நண்பர்களும் அந்த விருந்தைப் பலவந்தமாகத் தின்னு தீர்க்கின்றனர்.

சிந்தின பருக்கையாகக் கிடந்த உடல், அப்புறப் படுத்தப்படுகிறது...

அந்த இரவிலேயே... முதலாளிக்கு ரகசியமாகத் தகவல் போகிறது. அவர் 'பேக்டரியின் பெயர் கெட்டு விடக்கூடாதே... தொழில் நாசமாகிவிடக் கூடாதே' என்று மட்டும் கவலைப்படுகிறார்.

அதைக் காப்பாற்ற மட்டுமே, அவர் எடுக்கிற நடவடிக்கைகளில்... இயல்பாகவே கொலை மறைக்கப் பட்டு விடுகிறது.

டெக்கில் படத்தின் சப்தம் கேட்கிறது. கதா நாயகன் பாய்ந்து பாய்ந்து போடுகிற சண்டையின் சினிமாச் சத்தம்.

சொர்ணத்தையும் இதேபோல் கடத்திவிட்டா லென்ன... கடத்திவிடலாம். ஒருநாள் அனுபவிக்கவும் செய்துவிடலாம்.

அதுவல்ல தேவை. எனக்குச் சொர்ணம் வேண்டும். முழுசாக வேண்டும். என்மீது விழும் வெளிச்சமாக என் நிழலைக் கர்ப்பந் தரித்துப் பெற்றுத் தருகிற வெளிச்ச மாக...

என்றென்றும் என் சொத்தாக என் உரிமையாக என் வாழ்வாக, எனக்கே வேண்டும்.

சம்மதிப்பாளா?

லேசாகக் கைநீட்டிய ஸ்டோர்மேனையே பத்ரகாளி யாகி அந்தப் பாடுபடுத்தி ஆர்ப்பாட்டம் செய்தவள்-

சம்மதிப்பாளா?

அவள் என்ன ஜாதி? நான் என்ன ஜாதி?

கிராமங்கள் சூழ்ந்த - கிராமக் கலாசாரத்திலிருந்து இன்னும் உருவிக் கொள்ளாத - இந்த நகரத்தில் ஜாதி கடந்த சேர்க்கை அனுமதிக்கப்படுமா? ரத்தக்களறி வருமா?

ஒரு காலத்தில் ஓஹோவென்று வாழ்ந்த குடும்பம்.

இன்று நொறுங்கிப் போய், கூலி வேலைக்கு வந்தாலும்... அந்தப் பிறவிக் குணம் போகுமா? உயர்ந்த வாழ்க்கை வாழ்ந்த கர்வம் - உயர்ந்த ஜாதி என்கிற அகந்தை போகுமா?

கர்வமும் அகந்தையும் உள்ள சொர்ணம், என்னை எப்படி ஏற்பாள்? அடுத்த ஜாதிக்காரன். ஒரு காலத்தில் போர்மேனாக இருந்தவன். என்னை மதிப்பாளா?

சம்மதிக்கவே மாட்டாள்...

சம்மதம் என்பது அத்தனை முக்கியமா? அவசியமா?

எப்படியும் சொர்ணம் வேண்டும். சொர்ணத்தின் இழப்பை என்னால் சகித்துக்கொள்ள முடியாது. எனக்கு அவள் வேண்டும். அவள்தான், என் வாழ்க்கையை அர்த்தப்படுத்துவாள். நான் ஆண்மகன் என்று என்னையே நம்ப வைப்பாள். என்னைத் தகப்பனாக்குவாள்.

வெற்று மரமாக இருக்கும் என்னை... அவள்தான் வாழை மரமாக்குவாள். என் வாரிசை என் மடியில் போடுவாள்...

அப்படியானால்... சொர்ணம் எனக்கு எதுவாக வேண்டும்? சின்ன வீடாகவா? ஆம். அப்படித்தான்...

குழந்தை பெற்றுத் தருகிற ஓர் உயிர்.

அவளை எப்படியாவது ஆகர்ஷிக்க வேண்டும். வசீகரிக்க வேண்டும். வசப்படுத்த வேண்டும்?

அதற்கு வழி? கருவி?

என் பணம். அவள் பார்த்தறியாத ஆடம்பரம்... அவள் இழந்துவிட்டு ஏங்குகிற பணக்கார வாழ்க்கை. பட்டுச் சேலைகள்... தங்க நகைகள்... கவலையற்ற, சுகபோக வாழ்க்கையனுபவங்கள்.

இவைதான் என் ஆயுதங்கள். அஸ்திரங்கள்.

பயன்படுமா? பாயுமா? குறி தவறாமல் தைக்குமா?

பறவையைக் காயப்படுத்தாமல் மடியில் கொண்டு வந்து போடுமா? மெல்ல மெல்ல உறக்கத்தின் மடியில் புதைந்தான்.

## 22

இளமதியத்துக்கும் மேலாகிவிட்டது. என்ன இழவோ... இன்றைக்குச் சாப்பிடவே தோன்றவில்லை வேலாயிக்கு. அங்கும் இங்குமாய் உட்கார்ந்து... கோழிச் சிந்தனையாய் யோசித்து, அப்படியும் இப்படியுமாய் பொழுது கரைந்து மாயமாகிவிட்டது.

சொர்ணத்தைச் சுற்றி மூத்த மருமகன் எழுப்பி யிருக்கிற சூறாவளி, என்ன கதியில் போகுமோ... என்ன வாகி முடியுமோ என்கிற திகில். ஈரச் சேலை முள்ளுப் புதரில் விழுந்த மாதிரியிருக்கிறது.

உதறிச் சொல்லி... மூத்த மகள் வாழ்க்கையில் புயலைக் கிளப்பி விட்டுவிடவும் கூடாது. சம்மதம் என்று சொல்லி சொர்ணத்தின் எதிர்காலத்தைப் பலியிட்டு விடவும் கூடாது.

எப்படித்தான்... இதிலிருந்து மீளப் போகிறோமோ என்று நினைக்க நினைக்க மலைப்பாக இருக்கிறது. பயத்தில் கிடந்து தவித்துப் போகிறது.

கழுத்தாம்பிடியாக இருக்கிறது. மீளமுடியாத முற்றுகையாக இறுக்குகிறது.

சொர்ணமும் நெருப்புக்கோழியாய்ச் சிலுப்புகிறாள். நிகரில்லாமல் வார்த்தையை விடுகிறாள். அவள் இருக்கிற வேகமும், வெடிக்கிற வெடிப்பும் பார்த்தால்... வண்டி குடை சாய்ந்துவிடுமோ என்று திகிலாகக் கிடக்கிறது.

நொடித்துப் போய்... நொம்பலப்பட்டு... சிறுமைப் பட்டுக் கிடக்கிற குடும்பத்தில் வயிற்றுப்பாட்டுக்கே வறட்டிழுப்பு இழுக்கிற கொடுமையில்... இது வேறா?

‘பட்ட இடத்திலேயே படும்; கெட்ட குடியே கெடும்’ என்பது நிஜம்தானா?

சனீஸ்வரன் பிடித்தாலே... ஏழரை வருஷத்தில் விலகிவிடுமே. பன்னிரண்டு வருஷத்துக்கு மேலாகி விட்டதே. இன்னும் குடும்பத்தைப் பிடித்த சனியன் விட்டுத் தொலைய மாட்டேன் என்கிறதே...

போதாதென்று... இப்போது இந்தச் சனியன் வேறு!

எல்லாம்... அந்த ஒழுக்கரிசிச் சீவன்.

உயிரோடு இருந்திருந்தால்... இன்றைக்கு இப்படி இருக்குமா? இந்த மனிதருக்குத்தான் இப்படிக் கேட்கிற தைரியம் வருமா?

சிங்கம் போல இருப்பாரே. நிமிர்ந்து நடந்தால்... எந்த தேசத்து ராசாவோ என்று நினைக்க வைக்குமே...

அந்த ராசா கண்ணை மூடிவிட்டதால்... கண்ட கண்ட நாய்களுக்குக் கூட பயமற்றுப் போயிற்று.

இன்னும் என்னென்ன ஆகுமோ.. ஏதேது நேருமோ.. அடக் கூத்துவனே.. எங்களை இப்படியா சீரழிச்சு கூத்துப் பாக்கணும்?

நாங்க யாருக்கு என்ன கெடுதல் செய்தோம்? ஒரு கோழிக்குஞ்சைக் கூட 'சூ' என்று பத்தியிருக்கமாட்டோமே.. மறந்தும் ஓர் ஈ காக்கைக்குக் கூட இடைஞ்சல் செய்திருக்க மாட்டோமே...

எங்களுக்கா... இந்தக் கதி? என் வயிற்றில் வந்து பிறந்த தங்கப் பெட்டிக்கா... இந்த விதி? அடக் குருட்டுப்பய தெய்வமே!

திண்ணை விளிம்பில் முந்திச் சேலையை விரித்துக் கண்ணை மூடிக் கிடந்தாள், வேலாயி. இருப்புக் கொள்ளாமல் அலைபாய்கிற நினைவுகள். புகை காட்டப்பட்ட தேனீக்களாக... எங்கும் உட்காராமல் ரீங்காரமிடுகிற நினைவுகள்.

மனசின் சோகங்கள் கிளறிக் கிளறி விடப்பட்ட நெருப்புக் கங்குகளாகக் கனன்று கனன்று தகிக்கின்றன.

வீட்டு முற்றத்தில் யாரோ வருகிற காலடிச்சப்தம். வேற்றுச் சப்தமாக இருக்கிறது. யாரது இந்நேரம்? இந்த

வீட்டுக்கும் ஒரு விருந்தாளா? நாதியத்த வீட்டுக்கும் ஒரு விருந்தாளா?

திகைப்போடு கண்ணைத் திறந்தாள். சங்கடத்துடன் எழுந்தாள். அயற்சியைச் சுமந்துகொண்டு வெளியேறிய பெருமூச்சு. முந்திச் சேலையைச் சரிப்படுத்திக் கொண்டாள். அவிழ்ந்து கிடந்த கட்டை முடியை தட்டி உதறி முடிந்துகொண்டாள்.

அதற்குள் வாசலில் நிழல்.

செருப்பைக் கழற்றுகிற அரவம். நிமிர்ந்து பார்த்த கண்கள் இடுங்கின.

ஊர் நாட்டாண்மை வெங்கடாசலம். எப்பவும் வெள்ளைக் கதர்தான். வெள்ளை வேட்டிதான். பனியன்தான். வெள்ளைக் கதர்த் துண்டுதான். புதுநிறம். எப்பவும் மழுங்கச் சிரைத்த முகம்.

"அக்கா... எப்படியிருக்கீக?"

"தம்பி... நீயா? எப்பவும் வராத ஆளு வந்துருக்கீயே... உக்காருயா... ஏதோ இருக்கோம்... சாகமாட்டாம..."

அவளுக்குள் சின்னச் சந்தோஷம். ஊர் நாட்டாண்மை வீடு தேடி வருவது என்றால்... பரபரத்தாள். உபசரிக்க ஆசைப்பட்டாள்.

"தம்பி... திண்ணையிலே இரு. காப்பித் தண்ணி கொதிக்க வைக்கட்டா?"

"ஒண்ணும் வேண்டாக்கா. உங்க கையாலே ஒரு சொம்புத் தண்ணி குடுங்க. போதும்க்கா..."

விருட்டென்று எழுந்தாள். காலையிலிருந்து சாப் பிடாத கிறக்கம். சட்டென்று ஓர் இருட்டு கண்களைக் கவ்வி விலகியது. சமாளித்துக் கொண்டாள்.

வெங்கடாசலம் விஷயமான ஆள். வயது ஐம்பதைச் சுற்றி இருக்கும். வாய்ச்சாமர்த்தியம் ரொம்ப. மனிதரைப் பேசிச் ஜெயிக்க ஆள் கிடையாது. நாலா காடு போய் வந்தவர். அனுபவம் பேச்சில் தெரியும். ரொம்ப வினயமானவர். யாரிடம் என்ன பேசினால் காரியம் ஆகும் என்பது அத்துபடியாகிப் போனவர்.

இப்படிக் கிடக்கிற துரும்பை எடுத்து, அப்படி போடமாட்டார். விரலில் அழுக்குப் பட்டதில்லை. வியர்வை சிந்தி வேலை செய்ததில்லை. வெள்ளை வேட்டி எப்பவும் அழுக்காவதேயில்லை. ஆனால், குடும்பம் 'ஜேஜே' என்று நடக்கிறது என்றால்... முழுக்க முழுக்க வாய்ச் சாமர்த்தியம்தான்.

நாராயணசாமி நாலு யூரியா உப்பு மூட்டைகளை நாட்டாண்மை வீட்டில் கொண்டு போய் போட்டு விட்டான். இதோ... வெங்கடாசலம் அஸ்திரங்களோடு வியூகம் வகுத்து வந்துவிட்டார்.

அவரது மனச்சாட்சி, அவரது நியாயத்திற்கேற்ப நெளியும் - வளையும். நெளிவுசுளிவாய் நடந்துகொள் ளும் - வம்பு பண்ணாது.

வேலாயி கொண்டுவந்து நீட்டிய செம்பை வாங்கிக் கொண்டார். அண்ணாந்து குடித்தார். பாதி குடித்து விட்டுச் செம்பை பக்கத்தில் வைத்துக்கொண்டு, 'அக்கா'வை உட்காரும்படி சொல்லி மரியாதை காட்டினார்.

“தம்பி... ஊருக்குத் தலைமையான ஆளு. வீடு தேடி வந்துருக்கே... காரியம் என்ன ஏதுன்னு தெரியாம, மனசு அடிச்சுக்குது... தம்பி...”

சிரித்தார். நம்பிக்கையூட்டுகிற சிரிப்பு. பல விஷயங் களைப் பொதிந்து வைத்திருக்கிற அர்த்தமான சிரிப்பு.

இவளும் அசட்டுத்தனமாய்ச் சிரித்தாள்.

“அக்கா... நான் என்னக்கா தலைமையான ஆளு? ஊரு கூடி நாட்டாண்மைன்னு புடிச்சு வைச்சிருக்கு. புள்ளையாரு மாதிரி நா இருக்கேன். என் திறமையிலே நா இல்லியே... ஆனா... நம்ம மாமா எப்படி இருந்தாரு? இதே ஊர்லே. அவர் சொல்லைத் தட்டிச் சொல்ல யாரும் இல்லாத அளவுக்கு... ராசா மாதிரி இருந்தாரே? அவரு, அவரோட திறமையிலே, செல்வாக்குலே, சொந்த வலுவுலே அப்படியிருந்தாரே... அந்த மாதிரியான மலையை நெனைச்சா... நானெல்லாம் ஒரு தூசுக்குச் சமானம்க்கா...”

அவ்வளவுதான். வேலாயியின் முகமே மாறிவிட்டது. ஒரு வாட்டம். கண்களின் ஓரத்தில் ஈரக் கசிவு. உதடுகள் வருத்த நினைவுகளோடு சூள் கொட்டின.

“மாமாவோட ‘கருமாந்தரத்’தன்னைக்கு இந்த வீட்லே உக்காந்து, இதே எடத்துலே உக்காந்துருந்தேன். அதுக்கப்புறம் இன்னைக்குத்தான் இந்த வீட்லே காலடி எடுத்து வச்சிருக்கேன்...”

“ராசா இருந்தா... ஊரு கூடும். இல்லேன்னா, இந்த நாதியில்லா நாய்களை யாரு வந்து பாப்பாக?”

“அப்படிச் சொல்லாதீக அக்கா! யானை படுத் தாலும் குதிரை மட்டம்னு சொல்லுவாக. உங்களை

மாதிரி உசந்த குடும்பத்து ஆளுக கோபுரம் மாதிரி. தூரத்துலேருந்து நாங்க கையெடுத்துக் கும்புடுறது, கோபுரத்துக்குத் தெரியாதுக்கா...”

“என்னமோ தம்பி. உங்களுக்குத் தெரியுது, எங்க அருமை. ஆனா நொடிச்சுப் போன குடும்பம். தலை தூக்க முடியலே தம்பி. இப்ப வவுத்துப்பாடு கழியுறதே பெரும்பாடா இருக்கு. இதுலே குடும்பப் பெருமையை நெனைச்சு ஆகப் போறதென்ன தம்பி?”

“நல்ல காலம் வர்றப்போ... வராத ஆளுக எல்லாம், தானா வருவாகக்கா.”

வேலாயிக்குள் ஓர் இன்ப அதிர்வு. ஏதோ நல்ல சகுனம் எதிர்ப்படுகிற மாதிரி மனசுக்குள் ஆழத்தில் ஒரு குரல். விசுக்கென நிமிர்ந்தாள்.

“என்ன சொல்றே தம்பி?”

“அக்கா - நா இதே இடத்துலே உக்காந்துருந்தப்போ இந்த வீடு எப்படி இருந்துச்சு? ‘ஜேஜே’ன்னு இருந்துச்சு. கொடி கட்டிப் பறந்துச்சு. ஈடு சொல்ல யாருமில்லைங்கிற மாதிரி ஒசந்து நின்னுச்சு இல்லியா?”

“ஆமா...”

“பன்னெண்டு வருஷம் கழிச்சு, நா வந்து இதே இடத்துலே உக்காருதேன்னா, என்ன அர்த்தம்? மறுபடியும்- இந்த வீடு ‘ஜேஜே’ன்னு ஆகப்போவுதுன்னு அர்த்தம். மறுபடியும் நீங்க கொடிகட்டிப் பறக்கப் போறீங்கன்னு அர்த்தம். நீங்க ஊருக்கே மகாராணி மாதிரி இருக்கப் போறீகன்னு அர்த்தம்க்கா...”

வேலாயிக்குள் ஒரு மாய உலகம். மனசின் சகல மூலைகளையும் மயிலிறகால் நீவிவிடுகிற மாதிரி ஒரு புல்லரிப்பு. குறி சொல்லுகிறவன் ஒரு நல்ல வார்த்தை யைக் கூறிவிட்டால் கூட மயங்கிவிடுகிற மனம், இவரது பேச்சில் சொக்காமல் இருக்குமா?

பேச வார்த்தை வராமல்... நா தடுமாற, வெங்கடா சலத்தின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவர் சொல்லுக்கேற்ப, தலையைத் தலையை அசைத்துக் கொண்டிருந்தாள்.

"மாமா இருக்குறப்போ... இந்த வீடு, ஓகோன்னு இருந்துச்சுன்னா... அதுக்கு ரெண்டு காரணம். ஒண்ணு, இந்த வீட்லே ராச ராஜ்யம் இருந்துச்சு. ரெண்டு, காடு கரைக 'திகிடு முகுடா' வெளைஞ்சது. என்னக்கா நாஞ் சொல்றது?"

"நூத்துலே ஒரு வார்த்தை தம்பி."

"இன்னிக்குக் காலம் ரொம்ப மாறியிருக்கு. அன்னிக்கு எவ்வளவு வெளைஞ்சதோ... அதே வெளைச் சலை, இப்ப உங்ககிட்டே யிருக்கிற காடுகள்லேயே எடுத்துரலாம். ஒட்டுக் கம்பு வந்திருக்கு. எல்.ஆர்.ஏ. பருத்தி வந்திருக்கு. பம்ப் செட் மோட்டாரு, டிராக்டரு... இப்படி நிறைய மாறியிருக்கு."

"வாஸ்தவந்தா தம்பி. முந்தி குறுக்கத்துக்கு மூணு கோட்டை வெளையுறது அதிசயம். இப்ப, குறுக்கத்துக்கு பதினைஞ்சு மூட்டை வர்றது ரொம்பச் சாதாரணமாகப் போச்சு."

"ஆங்... அதான் வெஷயம். அது மட்டுமில்லே, உங்க எறவைத் தோட்டத்துக்கு மேற்காலே இப்ப கண்மாய்

ஒண்ணு வெட்டியாச்சு. அதனாலே உங்க கெணத்துலே ஆழப்படுத்தாமலேயே... தரிசாக் கெடக்குற புஞ்சையை வெள்ளாமை பண்ண முடியும். இப்ப தேவையெல்லாம் ஒண்ணே ஒண்ணுதான். இந்த வீட்டுக் காடுகளுக்கு உசுர் தரக்கூடிய ஒரு ஆம்பளை."

வேலாயிக்கு இப்போதுதான் விஷயமே பிடிபட்டது. இந்தச் சோழியன் குடுமி எதற்காக ஆடுகிறது என்கிற சூட்சுமம் தெரிந்து போயிருந்தது.

மருமகனுக்குத் தூதாகத்தான் வந்திருக்கிறான். தெரிந்துவிட்டது.

ஆனால், மனசில் பயம் வரவில்லை. தெளிவு வருகிறது. நம்பிக்கை ஒளி மனசுக்குத் தெரிகிறது.

"என்னக்கா... நாஞ் சொல்றது."

"வெளங்குது. சொல்லுய்யா."

"வெறும் ஆம்பளையாயிருந்தா, பத்தாது. வெவசாயம் தெரிஞ்ச ஆபளையாயிருக்கணும். நிலத்தை மதிச்சுப் பாடுபடுற ஆம்பளையாயிருக்கணும். மண்ணுலே பொன்னெடுக்க வேர்வை சிந்த ஆசைப்படுற ஆம்பளையாயிருக்கணும். இல்லியா?"

"ம்...ம்..."

"ஏக்கா, நாங் கேக்கேன்? இப்படி ஓர் ஆம்பளை உங்க வீட்டுக்கு வலிய வாரான்னு வையுங்க. வேண்டாம்பீகளா? வாசல்லே வந்து நிக்குற சீதேவியைக் காறித் துப்பி வெரட்டிருவீகளா? சொல்லுங்கக்கா..."

எதுவும் சொல்லத் தெரியாமல் தலையை அசைத்தாள்.

"மாமா செத்தும் தெய்வமாயிருந்து... நீங்க கரையேற ஒரு வழி காட்டுறார்னு வையுங்க. அதை ஒதறியெறிஞ் சுருவிகளா? உங்க மூத்த மகளும், எளைய மகளும் தேவானையும் வள்ளியுமா சந்தோஷமாய் வாழ்றதுக்கு ஒரு வாய்ப்புக் கெடைச்சா... வேண்டாம்பீகளா?"

வேலாயிக்குள் பழைய வசந்த காலம். வில்வண்டி யில் வந்து இறங்கி, ராஜ கம்பீரமாய் வருகிற ராமானுஜம். வீடு முழுக்க செல்வம். தான்ய வகைகள். தொழு நிறைய மாடுகள். வீடு முழுக்க ஆட்கள்.

அந்த ஆட்களுக்கெல்லாம் ராணிகளாக நின்று உத்தரவிடுகிற கிருஷ்ணம்மாவும், சொர்ணமும்.

அவர்களைக் கும்பிடுகிற ஆட்கள். அதைப் பார்த்துப் பெருமிதப்படுகிற வேலாயி.

இன்னும் ரொம்ப நேரம் வெங்கடாசலம் பேசிக் கொண்டிருந்தார். செம்பில் மிச்சமிருந்த தண்ணீரையும் குடித்து முடித்தார்.

அப்புறமும் பேசிக் கொண்டிருந்தார். கனவும் நனவுமாய் வேலாயி...

அவர் மதியத்திற்குப் பிறகுதான் வீட்டை விட்டுப் புறப்பட்டார். வலையில் சிக்கிய பறவைகளைச் சாக்குக்குள் அள்ளிப் போட்டுக்கொண்டு போகிற வேடனின் மனத்திருப்தி, அவருக்குள்.

வேலாயிக்கும் வயிறு நிறையச் சாப்பிட்ட மாதிரி யான திருப்தி.

சொர்ணத்தின் ஆவேசப்பட்ட முகம், நினைவுக்கு வந்தபோது, தொண்டைக்குள் விக்கலெடுத்தது.

# 23

இரண்டாவது பேரிடி, இது. இந்த இரண்டாவது பேரிடி, காலடித் தரையை உடைத்துத் தூளாக்கி அவளை அந்தரத்தில் தூக்கி வீசிவிட்டது.

சொர்ணம் இப்படி நினைக்கவில்லை. இம் மாதிரி நிகழ்ச்சி திசை மாறும் என்று எதிர்பார்க்கவேயில்லை. நம்ப முடியாமல் திணறினாள். 'அம்மாவா இப்படி? அம்மாவுமா இப்படி? இப்படி மாறிவிட எப்படி முடிந்தது அம்மாவால்?'

நினைக்க நினைக்க மலைக்கிறது. பயம், மனசைக் கவ்வுகிறது. அதைவிடக் கொடிய வேதனை மனச் சூன்யம். நாதியற்றுப் போய்விட்ட உணர்வு அம்மா வுக்கும் கூட அந்நியமாகிவிட்ட திகில்.

"கூறு போட்டுக் குடும்பம் நாசமாப் போகணுமா? ஒண்ணடியும் மண்ணடியுமா எல்லாரும் கூடிக் கிடந்தா... நமக்கு ஒரு பலம்தானே? மாமாவுக்கு அப்படி என்ன வயசா போச்சு? மிஞ்சிப் போனா... முப்பத்தெட்டு இருக்குமா? அது ஒரு வயசா?"

அடப் பாதகத்தீ! என்ன ஆகிப் போச்சு, உனக்கு? எந்தப் பேய் பிடித்து ஆட்டுகிறது உன்னை? அதுக்குள் ளாகவா, உன் வாய்ப்பேச்சு இப்படி மாறணும்?

'அரைக் கிழவனுக்கு வந்துருக்கிற ஆசையைப் பாத்தீயா' என்று நேற்றுக்கூட புலம்பி அங்கலாய்த்

*தாயே... ஒரு நாளைக்குள் அரைக் கிழவன் முழு இளவட்டமாகி விட்டாரா?*

*எந்தப் பேய் பிடித்து அவரை ஆட்டுகிறதோ என்று கலங்கினாயே... அதே பேய், உன்னையும் பிடித்துக் கொண்டதா? அது என்ன பேய்?*

*நிலத்தோடு நிலம் சேர்க்கிற பேய், அவரைப் பிடித்திருக்கிறது. உன்னை எந்தப் பேய்? பழைய காலப் பேயா? வில்வண்டிப் பேயா? 'பெரும் பண்ணைக் குடும்பமாக' ஆயிடலாம் என்கிற ஆசைப் பேயா? 'மகராசி'யாக 'பெரிய குடும்பத்து மனுசி'யாக மாறி விடலாம் என்கிற கௌரவப் பேயா?*

*அதற்கு உன் மகளையா பலி கொடுக்கணும்? உன் 'தங்கப் பெட்டியை'யா காவு கொடுக்கணும்?*

*உன்னதமானவள் அம்மா. எந்தக் காரணங்களாலும் பங்கப்படாத ஓர் உறவு, அம்மா. மிதித்தால்கூட குஞ்சைக் கொல்லாத ஓர் உன்னத உறவு, அம்மா.*

*அந்தத் தாய்மையையே நிறம் மாற்றிவிட்டதே! குணம் இழக்கச் செய்துவிட்டதே! அந்தளவுக்கு கௌரவப் பேய் உனக்குப் பெரிசா?*

*வயிற்றுப் பாட்டுக்கு அல்லாடி அல்லாடி அலுத்துப் போனாயா? கதியற்றவள் என்ற உணர்வுத் தீயில் வெந்து வெந்து விரக்தியடைந்து விட்டாயா? வெறுத்துப் போனாயா? இனியும் தாங்காது இந்த நிலை என்று ஆகிவிட்டாயா?*

*அதனால்தான்... ஆசை மகளையே பலி கொடுக்கத் துணிந்து விட்டாயா? ச்சே!*

எனக்கென்று மிச்சமிருந்தது நீ ஒருத்திதான். நீயும் என்னை அம்போவென்று கைவிட்டு விட்டாயா? கழுத்தில் சலங்கை மாட்டி, மாலை போட்டு, மஞ்சள் தண்ணீர் ஊற்றி பலிபீடத்தின் முன்னால் நிறுத்தி விட்டாயா?

அவளுக்குள் சொல்லி மாளாத கவலை, வருத்தம்.

புரண்டு புரண்டு படுத்தாள். உறக்கமே வரவில்லை. உறக்கம் எப்படி வரும்? மனம் பூராவும் முள் விளாறால் அடிபட்டுக் கிடக்கிறபோது, ரத்தக் கசிவு எடுக்கிற போது உறக்கம் எப்படி அண்டும்?

எழுந்தாள். தொழுவத்திற்குள் வந்தாள். திடீரென்று உள்ளே ஒரு மின்னல் 'செத்துத் தொலைஞ்சுட்டால் என்ன!'

இது ஒரு நல்ல யோசனையாகவே பட்டது. தன்னை முற்றுகையிட்டவர்கள் அனைவரையும் இதன் மூலம் பழிவாங்கி விடலாமே!

சொர்ணம் தலையை உலுக்கிக் கொண்டாள். அவளது சுபாவம் தலைதூக்கி விட்டது. அவளுக்கே உரிய கர்வம். நா எதுக்குச் சாகணும்? இந்த நாய் களுக்குப் பயந்தா... சாகணும்? யார் இந்த நாய்கள்? யார் இந்த நாராயணசாமி? முக்காக் குறுக்கம் நிலத்தை வைத்துக்கொண்டு நாதியற்றுக் கிடந்த ஒரு அனாதை. அக்காளைக் கல்யாணம் செய்ததன் மூலம் ஒரு மனித அந்தஸ்து பெற்றவர்!

அதுவும் எங்க அய்யா போட்ட பிச்சை! பெருந் தன்மை. இரக்கப்பட்டு போட்ட தானம்! எங்க குடும்பத்தில் பிச்சையெடுத்து மனிதரான ஒரு அற்பப்

பதருக்குப் பயந்து கொண்டா... நான் சாவது? அதுவே... ஒரு இழிவல்லவா?

என் கால் தூசிக்குக் கூடப் பெறாத இந்த நாய்களா, எனக்கு எதிரி?

மனசில் ஒரு தென்பு. ஒரு தைர்யம். ஒரு பலம் கிடைத்துவிட்ட மாதிரியான நிமிர்வு, உள்ளே வந்தாள்.

படுத்தவள் எதை எதையோ யோசித்தாள். யோசனைகளின் பிடுங்கல்களுக்கு மத்தியில் எப்படியோ உறங்கிப் போனாள்.

விடிந்தது. ஞாயிற்றுக்கிழமை பரபரக்க வேண்டிய தில்லை. வாரிச் சுருட்டிக்கொண்டு எழ வேண்டிய தில்லை. ஓடி ஓடிக் காலைக்கடன் முடித்து... சூரியன் உதிப்பதற்குள் பாதித் தூரத்தைக் கடக்க வேண்டிய தில்லை.

இந்த ஒருநாள்தான் அவளுக்குச் சொந்தமான நாள். அவள் - அவளது விருப்பப்படி உயிர் வாழ்கிற நாள். சூரியோதயத்தைப் பார்க்காமல் தவிர்க்கலாம். யந்திர மில்லை, தான் ஒரு மனுசி என்பதை இன்று உணரலாம். ஒரு விடுதலை உணர்வை ஒரு சுமையை இறக்கி வைத்த ஆசுவாசத்தை சுவாசிக்கலாம்.

காலைக் கரண்டு. குழாயில் தண்ணீர் வந்திருக்கும். தொட்டிக்கு நாலு குடமாவது தண்ணீர் எடுத்து ஊற்றலாம். நாலு மனித முகங்களைப் பார்த்தால்... மனசின் இறுக்கம் தளரக்கூடும். மனசுக்குள் புது காற்று பாயட்டும்.

பதறாமல் எழுந்தாள். அம்மா முகத்தில் விழிக்க மனமில்லை. வெறுப்பாக இருந்தது. வெடுக்கென்று திரும்பிக் கொண்டாள். முகத்தைக் கழுவிக்கொண்டாள்.

குடத்தை எடுத்துக் கொண்டாள். எவர்சில்வர் குடம் அழுக்காக இருந்தது. நீர்த்துளி பட்டுப் பட்டு, அதுவே ஒரு கறையாகத் தோன்றியது. மினுக்கிக் கொள்ள வேண்டும்.

குழாயடிக்குத் தெற்கில் ஒரு கட்டைச் சுவர். கட்டைச் சுவருக்குப் பின்னால்... செம்மண் கிடக்கும். அதில் ஒரு பிடி அள்ளிக்கொண்டால், அதை வைத்துக் குடத்தைத் துலக்கிக் கொள்ளலாம்.

அவள், சுவருக்குப் பின்னாலே மண்ணைக் கையில் அள்ளுகிறபோது... குழாயடியில் சொர்ணத்தின் பெயர். சொர்ணம் திகைத்தாள், கூர்மையானாள்.

"ராமானுசம் மகளுக்குக் கல்யாணமாமில்லே?"

"ஆமாமா... ஊர்லேயே பெரிய ராணி கணக்கா திமிரோட திரிஞ்சா. அவளுக்கு அரவமில்லாம கல்யாணம் நடக்கப் போகுது, பூட்டுன வீட்டுக்குள்ளே."

"நாராயணன் முறுக்கான எளவட்டம். கன்னியறியாத எளவட்டம். சூட்டு கோட்டு மாட்டுன பெரிய ஆபீஸர்..."

"ஆமா... பெரிய சீமாட்டிங்கிற நெனைப்புலே நிமிர்ந்தாப்பலேயே அலைஞ்சா. இப்ப, அரைக்கெழவன் காலடியிலே சீரழியப் போறா. துள்ளுன மாடு பொதி சொமக்கத்தானே செய்யும்?"

"நெசந்தான். என்னமோ... செவப்புத் தொலியோட பொறந்துட்டாளாம்! அடேயம்மா... அவளுக்கு இருக்குற

மண்டைக்கர்வம்! நம்மகிட்டேயெல்லாம் மூஞ்சியைக் குடுத்துப் பேசவேமாட்டா. 'நாமெல்லாம் அவளுக்குத் தூசிக்குச் சமானம். அவா... பெரிய கோபுரம்'கிற நெனப்பு மனசுலே."

"அதுக்கெல்லாம் சேத்துத்தான்... 'சீப்' படப் போறாள்லே? அப்பன் பொழப்பை நெனச்சுக்கிட்டே குதிரையேறித் திரிஞ்ச கழுதை... அழுக்குப் பொதி சுமக்காம தப்பிச்சிரவா முடியும்?"

"சீமான் நெனைப்புலே சீராட்டித் திரிஞ்சாலும், 'கஞ்சிக்குச் செத்துப் போய், பசை ஒட்டித் திரியுற பவிசு' தெரியாதாக்கும்?"

அவளுக்குள் எங்கோ ஒன்று உடைந்து சரிகிறது. தரையே உருவிக்கொண்டு ஓடுகிற மாதிரியான திடுக் கிடல். அதிர்ச்சி.

வெலவெலத்துப் போன சொர்ணம், வெடித்துச் சண்டைக்குப் போய்விடலாமா என்று சீறலாய் நினைத் தாள். உஷ்ணமாய் மூச்சு விட்டாள்.

'விழுந்து கிடப்பவளைக் காட்டி, கை கொட்டிச் சிரிக்கிற இதுகளோடு சண்டை போடக்கூடாது. போட்டு நம்ம தரத்தைக் கொறைச்சுக்கிடக் கூடாது..."

அப்படியே திரும்பிவிட்டாள். வெறுங்குடத்தை எறிந்துவிட்டு குப்புறப் படுத்துக்கொண்ட வேகத்தைப் பார்த்தாள், வேலாயி. அதிர்ச்சியோடு யோசித்தாள்.

"என்னடி... என்னாச்சு?"

"இந்தா! எங்கிட்டேயெல்லாம் பேசாதே! பெத்த புள்ளையை அறுத்துத் திங்குற ஒன்னோட வயித்துலே வந்து பொறந்தேன் பாரு... எனக்கு இதுவும் வேணும், இதுக்கு மேலேயும் வேணும்."

எங்கோ வெடித்துச் சீற வேண்டிய கோபம், வேலாயியின் மீது பாய்ந்தது.

அவள் முகம் சட்டென்று கறுத்துப் போய்விட்டது. அவமானத்தில் அப்படியே இறுகிப் போனாள். அடிப்பட்டு முகம் சிறுத்துப் போன அம்மாவை அவள் பார்க்கவேயில்லை.

அம்மாவா... இவள், பாதகத்தி? ஊர் முழுக்க உதைத்து விளையாடட்டும் என்று என்னைத் தூக்கி வெளியே எறிந்த ரணகாளி! சுயநலக்காரி! அவள் பெருமை கொடிகட்டிப் பறக்கிறதுக்காக, மகளோட நரம்புகளை அறுத்துக் கயிறாக முடிச்சுப் போட்ட கொடுமைக்காரி.

குழாயடிப் பெண்கள் வாயால் எறிந்த சாணம். அனல் துண்டுகள். குழாயடியில் நாலு பெண்களா, இது? இல்லை, மொத்த ஊரின் எண்ணமே இதுதான்?

அடக் கொடுமையே... ஜனங்கள் புத்தி இப்படியா போகணும்? ஒரு பெண்ணை - சம்மதம் கேட்காமல், உயிரோடு சமாதி கட்டப் போகிறார்களே... ஒரு பெண்ணைக் கொடுமைப்படுத்திச் சீரழிக்கப் பார்க்கிறார்களே... என்று எந்தப் பெண்ணுக்கும் ரோஷம் வரவில்லையா? ஆத்திரம் வரவில்லையா? ஆங்காரம் வரவில்லையா? அந்தளவுக்கு ஒரு பெண்ணிடமும் ஈரமேயில்லையா?

பெண்ணின் உரிமை பகிரங்கமாகப் பறிக்கப்படு கிறதே என்கிற சூடு சொரணை ஒருத்திக்குக்கூட வரவில்லையா?

எனது அகம்பாவமும், ஆணவமும், கர்வமும் தெரிகிற அளவுக்கு, பெண்ணினத்தின் உரிமையை சொத்துக்காக ஆணினம் பறிக்கிற அக்கிரமம் தெரியவில்லையா?

இதென்ன காலக்கூத்து?

அட, மானங்கெட்டதுகளே... எனக்கு வரப்போகிற ஆபத்தை நினைத்தா சந்தோஷப்படுகிறீர்கள்? உங்கள் சந்தோஷம் நிறைவேறப் போறதில்லை. உங்கள் கண்முன்னால் நான் குதிரையாகவே வாழ்ந்து காட்டு கிறேன். சீமாட்டியாகவே இருந்து காட்டுகிறேன். நீங்கள் நெருங்கி நிற்க முடியாத உயரத்தில், ராணியாகவே இருந்து காட்டுகிறேன்.

எனக்கு இருக்கிற அழகுக்குத் தகுதியான... வாழ்க்கையே வாழ்ந்து காட்டுகிறேன். முடியும் என்னால் முடியும்.

முடியுமா? எப்படி முடியும்? என்ன வழி? யார் துணை?

பழநி ஞாபகத்துக்கு வந்தான்.

அழுகையே வரவில்லை. மனம் முழுக்க ரௌத்ரம். கோபம். காளியின் விஸ்வரூபம்.

எழுந்தாள். டப்பாவைத் திறந்து சில்லறையைப் பொறுக்கினாள். வேக வேகமாக வெளியே போய்விட்டு வந்தாள். ஓர் இன்லெண்ட் லெட்டர்.

அன்றைக்குச் சாயங்காலம். கருகருவென்று மயங்குகிற 'பொழுது.

வழக்கமில்லாத வழக்கமாக... தெருவில் நடந்தாள். ஊரின் கீழ்க்கோடிக்கு வந்தாள்.

அங்குதான் பழநியின் தாத்தாவின் குடிசை. முனியசாமிக் கிழவனின் குடிசை.

எதிர்ப்பட்ட நேரமெல்லாம் விசுவாசத்துடன் கையெடுத்துக் கும்பிடுகிற முனியசாமி.

"எங்க ராசாவோட செல்ல மகள் நீங்க. அவுக ஆசைப்பட்டபடி... நீங்க மகராசியா வாழ்றதைப் பாக்கணும், எங்கண்ணாலே. உங்க கையாலே போடுற சோத்தை நாந்திங்கணும். அப்பத்தான்... ஏங்கட்டை தீயிலே வேகும்" என்று கபடமில்லாத அசலோடு வாழ்த்துகிற கிழவன்.

# 24

ஷிப்டு முடியப்போகிற நேரம். மணி மூன்றுக்கு மேல் ஆகிவிட்டது. 'வொர்க் மேனேஜர்' ரூமிலிருந்து பழநிக்கு அழைப்பு. போன் வந்திருக்கிறதாம்...

கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தால், உதவி மேனேஜர் இருந்தார். "வாங்க பழநி."

"எஸ் சார்."

"உங்களுக்குப் போன். டைம் ஆபீஸ்லேயிருந்து."

டேபிளில் கிடந்த ரிஸீவரை எடுத்தான்.

"ஹலோ..."

"ஹலோ... பழநியோ?"

"ம். என்ன விஷயம்?"

"நா ஷிப்ட்டுக்குப் புறப்பட்டுக்கிட்டிருந்தேன்..."

"போர் - டுவல்லவா?"

"ம். அப்ப உங்க வளத்தையா வந்துருந்தாரு."

இவனுள் ஆச்சர்யம்.

"வளத்தையாவா?" மகிழ்ச்சியோடு கேட்டான். அவன் முகத்தில் ஒரு மலர்ச்சி.

வாரத்திற்கொரு தடவை வீட்டுக்குப் போவான் அல்லது இரு வாரத்துக்கொரு தடவை போவான். எப்போதுமே அவர் இங்கு வந்ததில்லை. வர ஆசைப்பட்டதுமில்லை. தேவையும் நேரவில்லை. இப்போது என்ன தேவை? அப்படியென்ன அவசரம்?

"ஆமா. அவரை உங்க ரூம் சாவியைக் குடுத்து, அங்க உக்கார வைச்சேன். ஒரு காப்பி வாங்கிக் குடுத்தேன். உங்களுக்குத் தகவல் தரச் சொன்னாரு."

"ரைட் ஓகே. நா வாரேன்."

போனை வைத்தான். நிமிர்ந்தான். இவன் முகத்தையே பார்க்கிற உதவி மேனேஜர்.

"என்ன பழநி... பெர்மிஷன் வேணுமா?"

"வேணாம் சார்... டயம் முடியப் போகுதில்லே..."

“பரவால்லே, நீங்க போகணும்னா போங்க. யூனியன் லீடர் நீங்க. உங்களுக்கு இல்லாத சலுகையா?”

பழநி சிரித்தான்.

“அதனாலேதான் நான் கரெக்டா இருக்கணும். லீடர்ங்கிற சலுகையை நான் பயன்படுத்தித் தப்பு பண்ணுனா... ஒர்க்கர்ஸுகிட்டே ஒழுக்கம் எப்படி வரும்? நீங்களே என்னை மதிப்பீங்களா?”

“ஓ...” ஏதோ ஜோக் சொல்லிவிட்டதைப் போல பெரிதாகச் சிரித்தார் அவர். நன்றி சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

**நா**ன்கு மணியாகவும் கிளம்பினான். நேராக அறைக்கு ஓடினான். வளத்தையாவைப் பார்க்கிற ஆசை. வந்த இடத்தில் அவரை நல்லபடியாக உபசரிக்க வேண்டும். மகிழ்ச்சிப்படுத்த வேண்டும். வளர்த்து, படிக்க வைத்து ஆளாக்கிய வளத்தையா, தாய் தகப்பன் இல்லாத வெறுமையை உணரவிடாமல் காப்பாற்றிய வளத்தையா.

அவனுள் ஒரு பரபரப்பு. ஆவல். அதையும் தாண்டி ஆழத்தில் குறுகுறுப்பு.

“இவ்வளவு தூரம் தேடிக்கொண்டு வரவேண்டிய அளவுக்கு என்ன அவசியம்? என்ன அவசரம்?”

வளத்தையா வெளியிலேயே காத்திருந்தார். இவனைக் கண்டதும் முகம் மலர்ந்தார்.

“என்ன வளத்தையா... அதிசயமாயிருக்கு?”

"சும்மாத்தாண்டா..."

"சும்மா அலையுறதுக்குக் கிறுக்கா பிடிச்சிருக்கு?"

"கிறுக்குத்தான். இதுவும் ஒரு கிறுக்குத்தான். என்னிக்கோ போட்ட சோத்துக்குச் சாகுற வரைக்கும் வாலாட்டுற நாய் மாதிரி இது... எனக்கு இப்படியொரு கிறுக்கு."

இடுப்பில் நாலு முழ வெள்ளை வேட்டி. மேலே ஒரு துண்டு. இடையில் பளீரென்று கறுத்து மின்னுகிற உடம்பு. மார்புக் குழியில் மட்டும் நரைத்த ரோமம். பழநியைப் போலவே உதட்டுக்கு மேலே கொத்து மீசை. வெள்ளை மீசை. இன்னும் வழுக்கை விழாத தலை.

சொர்ணம் வீட்டில் காலம் பூராவும் சாணிக்கூடை சுமந்து சுமந்து செம்பட்டையாகிப் போன தலைமுடி.

அறைக்குள் அழைத்துச் சென்றான். இவன் பேச்சு பேச்சாகப் பேசிக்கொண்டிருக்கையிலேயே கால் கையைக் கழுவிக்கொண்டான். கைலியை உடுத்திக் கொண்டான். மின்விசிறியைப் போட்டுவிட்டு இவனும் ஒரு சேரில் உட்கார்ந்து கொண்டான்.

வருகிற வழியிலேயே ஒரு பையனிடம் சொல்லி விட்டு வந்திருந்தான். ரெண்டு முட்டைக்கோஸ், நாலு உளுந்து வடையோடு பையன் வந்தான்.

வளத்தையாவும் இவனும் டீயைக் குடித்து முடித்தனர்.

"சரி... இப்பச் சொல்லுங்க வளத்தையா. வந்த விஷயம் என்ன?"

"விஷயம் இதாண்டா. எங்க மோலாளி (முதலாளி) மகளைக் காப்பாத்தணும். என்ன ஆயிட்டாலும் சரி, எம்புட்டுச் செலவாயிட்டாலும் சரி... அந்தப் புள்ளையைக் காப்பாத்தணும்..."

சொர்ணம்! அவனது அந்தரங்கக் கனவு. அழகுச் சிற்பம். ஆழ்மன வசீகரம். ஆன்மாவோடு பின்னிக் கலந்துவிட்ட கற்பனைப் பந்தம்.

அவனுக்குள் ரகசியமாக ஓடிய சிலிர்ப்பு.

"அவளுக்கு என்ன ஆச்சு?"

வளத்தையாவின் கண்களில் கோபம், கண்டிப்பு, தாட்சண்யமற்ற கண்டிப்பு. உதடு துடிக்கச் சீறினார்.

"மரியாதையா பேசுடா. 'அவ இவ'ன்னு என்ன ஏக வசனம்? படிச்சு ஒரு உத்தியோகத்துக்கு வந்துட்ட உடனே பெறந்த சாதி மறந்து போகுதோ...? அது யாருன்னு பார்த்தே? எனக்கும் ஒனக்கும் சோறு போட்ட நாச்சியாள். நம்ம கண்கண்ட தெய்வம்டா. எங்க ராசாவோட செல்லப் புள்ளை. அந்த எளைய ராணியையா... நீ 'அவ இவ'ன்னு பேசுறே? ராஸ்கல் நீ... அவுக கால்லே ஒட்டுற தூசி வெலைகூட பெறமாட்டே தெரியுமா?"

பழநி உள்ளுக்குள் இறுகிப் போனான். லேசான அவமானம். கோழி மிதித்த குஞ்சின் வேதனை. வளத்தையாவை வெறுமையாகப் பார்த்தான். எதுவும் பேசவில்லை. பேசத் தோன்றவில்லை.

உள்ளுக்குள் உயிர் வளர்த்துக் கொண்டிருந்த கனவு ரொம்ப அதிர்ந்தது. சொர்ணம் சம்மதிக்கிறாளோ,

இல்லையோ... இவரே இவனது காதலை அனுமதிக்க மாட்டாரோ... சகித்துக்கொள்ள மாட்டாரோ...?

அவள் என்று சொல்லக்கூட அனுமதி மறுக்கிற இவர், எப்படி இவனது காதலைப் பொறுத்துக் கொள்வார்?

பழநி உள்ளுக்குள் சிதைந்து போனான். ரொம்பக் கலவரப்பட்டான்.

தாத்தாவைக் காயப்படுத்தி இவன் கனவை நிறை வேற்றிக் கொள்வதா? அது நியாயமா? நன்றி உணர்வா?

ஆனால், தாத்தாவின் அடிமைப் புத்தியையும் அங்கீகரிக்க முடியாதே... கூடாதே! அடிமைப் புத்தியை அங்கீகரித்தால்... நானுமல்லவா அடிமையாகச் செயல்பட வேண்டும்?

அது என்னால் முடியுமா? இயலுமா? தேவையா? மூன்றாவது தலைமுறையிலும் அந்த அடிமை உறவு நீடிக்க வேண்டுமா? மாறுதலே இல்லையா? காலம் என்பதற்கு ஒரு மதிப்பேயில்லையா?

“என்னடா?”

“ஒண்ணுமில்லே... சொல்லுங்க.”

முனியசாமி, நாட்டாண்மை வெங்கடாசலம், நாராயணசாமி பற்றிக் கூற ஆரம்பித்தார்.

“இதான் விஷயம்.”

பழநி யோசித்தான்.

“எனக்குத் தெரிஞ்ச வரைக்கும்... இதுலே ரெண்டே ரெண்டு வழிதான் இருக்கு.”

"சொல்லு."

"அவரோட மூத்த சம்சாரம் போலீஸ்லே எழுதிக் கொடுக்கணும். மறுதாரத் தடைச்சட்டப்படி அரெஸ்ட் பண்ணி கேஸ் போடுவாக. அல்லது... இவங்க சொர்ணமே கேஸ் குடுக்கணும். 'என்னோட விருப்பத்துக்கு மாறா... பலவந்தத் திருமணம் செய்ய முயற்சி பண்றாங்க — காப்பாத்துங்க'ன்னு புகார் குடுக்கணும்."

"ஏலேய்... நீ சொல்ற ரெண்டுமே நாராயண சாமியைக் கோர்ட்லே நிறுத்துமில்லே?"

"ஆமா."

"ஊஹூம். அது கூடாது. இந்த அம்மாவே சொல்லுது... 'அவுக மாமாவுக்கு எந்த ஆபத்தும் வரக்கூடாது'ன்னு."

"அதெப்படி வளத்தையா? கூரையிலே தீ வைக்கிறதையும் நிறுத்தணும், தீப்பந்தத்துக்கும் நோகக் கூடாதுன்னு சொன்னா, எப்படி? விறகை எரிக்காம, பணியாரம் எப்படிச் சுட்டு எடுக்குறது?"

"அதுக்குத்தான்... ஒங்கிட்டே வந்துருக்கேன்..."

"எனக்கு ஒண்ணும் தோணலை."

"சரி... நாஞ் சொல்ற மாதிரி செய்துரு."

"எப்படி?"

"தீப்பெட்டியாபீஸுக்குப் போயிட்டு வர்றப்போ... வழிமறிச்சு அந்தப் புள்ளையைக் கடத்திக் கொண்

ணாந்துரு. சம்மதத்தோட ஒடியாந்துரும். ஒரு மாசம் எங்காச்சும் பாதுகாப்பா வைச்சிரு..."

"ம்... சரி..."

"அதுக்குள்ளே அங்க ஊர்லே பிரச்சினையாயிடும். மூத்த அம்மா... புருஷன்கூட சண்டை போடும். எங்க பெரிய அம்மாவும் தப்பை உணர்ந்து, அழுது புலம்பும். அப்புறம் அவகிட்டே ஒப்படைச்சிருவோம்.. சரிதானே?"

"சரிதான். ஆனா... இது சிக்கலான யோசனை. நம்ம எதிர்பாராத தப்புகள் நடந்துபோக நியாயமிருக்கு. அப்புறம் நாம தேவையில்லாத கிரிமினல் வம்புகள்லே போய் மாட்டிக்கிட்டு நிக்கணும்."

"அதெல்லாம் ஒண்ணும் வராது."

"வராட்டா நல்லதுதான் வ்ளத்தையா. வந்துட்டா என்ன செய்றது?"

"என்னடா... கோழைப்பயலா இருக்கே? ஒரு காரி யத்துலே ஒரு குறியோட எறங்கிட்டா... அதுக்கப்புறம் லாப நட்டத்தைப் பத்தி யோசிக்கவே கூடாதுடா..."

"இது கோழைத்தனமில்லே தாத்தா. எறங்குற காரியத்தைப் பத்தி யோசனையில்லாம செய்றது, முரட்டுத்தனம்தா, வீரமில்லே."

"வெள்ளத்துலே ஓர் உயிர் போய்க்கிட்டிருக்கையிலே, கரையிலே நின்னு யோசிச்சுக்கிட்டா இருப்பாக? அது மனுஷப்பயலுக்கு அழகா? இல்லே, அறிவு இருக்கிறவன் செய்ற காரியமா?"

பழநி யோசித்தான். நிதானமானான். மௌனமாக வளத்தையாவின் முகத்தையே பார்த்தான்.

இவர் சொல்லுகிற யோசனையில் ஏகப்பட்ட சிக்கல்கள் இருக்கின்றன. ஏகப்பட்ட வம்பு தும்புகள் வரக்கூடும். ஆபத்தான விளையாட்டு. கடத்துகிறபோது... ஏதேனும் இசகுபிசகு ஏற்பட்டுவிட்டால்...

ஒளித்து வைத்திருக்கிற இடத்தில் ஏதேனும் தவறுகள் நிகழ்ந்துவிட்டால்...

ஒளித்து வைத்த இடம் கண்டுபிடிக்கப்பட்டு விட்டால். அதனால் வரக்கூடிய விளைவுகள்...?

மகள் காணாமல் போன அதிர்ச்சியில், சொர்ணத்தின் அம்மா தற்கொலை செய்துகொண்டால்...

இப்படி எத்தனையோ சிரமங்கள் உண்டு. சிக்கல்கள் உண்டு. வம்பு தும்பு உண்டு. ஏகப்பட்ட சனியன்கள் ஒளிந்திருக்கக்கூடிய மோசமான, ஆபத்தான காரியம் தான்.

ஆனால், அதற்குள்ளும் நல்ல விஷயங்கள் உண்டு. இனிமையான நிகழ்வுகள் உண்டு. சொர்ணம் நமது பாதுகாப்புக்குள் வரும்போது... நெருங்கிப் பழகலாம். என்னைப் பற்றிப் புரிந்துகொள்கிற வாய்ப்பு வரலாம். எனது கதகதப்பான காதல் மனம் புரியலாம்.

தாயும் உறவும் கூட எதிராக நிற்க, நாதியற்ற மனநிலையில், எனது நல்ல மனசும், பாதுகாப்பும் துல்லியமாக உணரப்படலாம். அது நல்ல பல சமிக்ஞைகளுக்கு உதவலாம்.

வளத்தையாவையும் மீறி... சொர்ணமே என்னைத் துணையாகத் தேர்வு செய்துவிட்டால்...

வளத்தையா பூரித்துப் போய் ஆசிர்வாதம் பண்ணிவிடுவார்...

அவனுக்குள் முகம் சுண்டிப் போய் நின்ற கனவுகள். மீண்டும் பூக்களாக மலர்ந்து சிரித்தன. இரை கண்ட சிட்டுக் குருவிகளாக ஜிவ்வென்று சிறகடித்துப் பறந்தன. கும்மாளமிட்டன. கும்மியடித்தன.

சந்திப்புச் சாலைக்கு வளத்தையாவைக் கூட்டிக் கொண்டு வந்தான். நல்ல ஓட்டலில் திருப்தியாகச் சாப்பிடச் செய்தான். அப்புறம், பஸ்ஸில் ஏற்றிவிட்டான்.

அறைக்குத் திரும்புகிற போது மனசு விசிலடித்தது. பாரதியின் கண்ணம்மா பாட்டை அவன் சொந்த ராகத்தில் இசைத்தான்.

பக்கத்து அறைக்காரர் ஒரு கடிதத்தைக் கொடுத்தார்.

இன்றைக்கு மதியம் வந்தது என்றார்.

அறைக்குள் நுழைந்தான். கட்டிலில் வாகாகச் சாய்ந்துகொண்டான். கால்களைச் சுதந்திரமாக நீட்டினான்.

அந்த இன்லண்ட் லெட்டரைப் பிரித்தான்.

அவனுள் குப்பென்று ஓர் ஆச்சர்யம். விருட்டென்று எழுந்தான். வாராது வந்த மாமணி போல அதிசயமான கடிதம். சொர்ணத்தின் கடிதம்.

மனசுக்குள் ஒரு சந்தோஷப் பிரவாகம்.

"பழநிக்கு,

சொர்ணத்தின் கடிதம்.

உங்கள் வளத்தையா முழு விவரமாகச் சொல்லி இருக்கலாம். மாமா, ஊர், நாட்டாண்மை, அம்மா இப்படிச் சகலராலும் முற்றுகையிடப்பட்டிருக்கிறேன்.

இந்தச் சூழலிலேயே நான் இருந்தால்... நான் பலியாவதைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விடும்.

பலியாகவும் விரும்பவில்லை. சாகவும் விரும்ப வில்லை.

ஆகவே, என்னைக் கடத்துவதற்கு ஏற்பாடு செய்யவும். இது உதவிதான். ஆனால், இந்த உதவியைச் செய்கிற கடமை உங்களுக்கு உண்டு என்று நம்புகிறேன்.

இப்படிக்கு
ரா. சொர்ணம்."

வளத்தையா 'வளவளா'வென்று பேசி விளங்க வைக்க முடியாத விஷயத்தை, கடிதத்தில் சொர்ணம் நறுக்கென்று புரிய வைத்துவிட்டாள்.

முற்றுகையின் மூர்க்கத்தில்... ஒற்றைப் பெண் நின்று சமாளிக்க முடியாது; போராட முடியாது - என்கிற விஷயத்தைத் துல்லியமாகக் கடிதம் உணர்த்திவிட்டது.

கடைசி விஷயம்தான், மூளையைக் குடைகிறது...

'உதவிதான். இந்த உதவியைச் செய்ய நீ கடமைப் பட்டுள்ளாய்...'

இது என்ன அர்த்தத்தில்?

சொர்ணத்தின் மீது ஆசையையும், காதலையும் ரகசியமாக வளர்த்து வந்திருக்கிற இவனது உள்மனசின் படி, அந்தக் கடமை உள்ளவன்தான்.

அது எப்படி அவளுக்குத் தெரியும்? நின்று, நேருக்கு நேராக ஒரு வார்த்தைகூடப் பேசியதில்லையே...

ஆத்மார்த்தமாகப் புரிந்திருக்கிறாளா? அல்லது தன்னைப் போலவே... அவளும் தன்னைப் பற்றி மனசுக்குள் ஆசையும் காதலும் கொண்டிருக்கிறாளா?

அவனுள் இறக்கைகள் முளைத்தன. அவனுக்குள் புதிய பலம் கிடைத்தது. காதலி கடைக்கண் காட்டி விட்டால்...

## 25

திங்கட்கிழமை. தார் ரோட்டுக்கு வந்துவிட்டனர். வழக்கம்போல சொர்ணம் சற்று இடைவெளி விட்டு மௌனமாய் வந்தாள். வழக்கத்திற்கு விரோதமாய்... ராசாத்தியும் மௌனமாகவே வந்தாள்.

ஒரு சத்தம் கூட எழவில்லை. ஊமைப் பதுமை போல நடந்தனர். சொர்ணத்தைச் சுற்றி எழுந்திருக்கிற சூறாவளி அவர்கள் மனத்துக்குள்ளும்...

ராசாத்திக்குச் சொர்ணத்தைக் காப்பாற்ற ஏதாவது செய்ய வேண்டும் போலிருந்தது. என்ன செய்ய...?

மூவர் மனசிலும் அதே கனம்.

பாவம்...பொம்பளை ஜென்மமெடுத்தாலே, இந்தக் கொடுமைதான். பொம்பளைக்கு என்ன மரியாதை இருக்கு? என்ன அந்தஸ்து இருக்கு? உழைப்பு...

உழைப்பு... உழைப்புத்தான். ஆயுள் முழுக்க உழைப்புத் தான்... குடும்பத்திலும் உழைப்புத்தான்... உழைப்பு மட்டுமா?

வாழ்க்கையே ஒரு சுமைதான். தலையை அழுத்துகிற சுமை. கழுத்தை நெரித்து முறிக்கிற சுமை. முள்ளுப் புதருக்குள் காயம் பட்டு விழுந்த பறவையைப் போல... நாலா திசைகளிலும் முள்முள்ளாய்க் குத்திக் கிடக்கிற வாழ்க்கை!

கெங்கம்மா முகத்தைப் பார்த்தாள் ராசாத்தி.

"என்ன ராசாத்தி...இன்னைக்கு மூச்சே வரல்லியே?"

"என்னத்தைப் பேச? சொர்ணத்தை நெனைச்சா வருத்தமாயிருக்கு."

"அதாண்டி... கிளியைக் கொண்டுபோய்க் கொரங்கு கிட்டே குடுக்கணும்கிறாகளே... அதுவும் கெழட்டுக் கொரங்கு!"

"பொண்ணுககிட்டே சம்மதம் கேக்காமலேயே... எல்லாக் காரியமும் செய்றாகளே... ஏன்? அவளுக்கும் ஒரு மனசு இருக்குன்னு ஒத்துக்கிடமாட்டேங்கறா...க?"

"ஒலக அறிவு இல்லாத பொம்பளைகளுக்கு எதையும் உருப்படியா நெனைக்கத் தெரியாதாம். ஒண்ணும் தெரியாத பொட்டைக் கழுதைக சம்மதம்... யாருக்கு வேணும்?"

"இதெல்லாம் அக்கிரமம்... அநியாயம்!"

"ஒனக்குத் தெரியுது. எனக்குத் தெரியுது. பெத்தவ களுக்குத் தெரியலையே..."

“நாம... பாத்துக்கிட்டு சும்மா எப்படி இருக்குறது?”

“நாம சின்னப் பொண்ணுக. என்ன செய்ஞ்சிர முடியும்?”

ராசாத்திக்கு அந்த வார்த்தை சமாதானமாக வில்லை. கவலையோடு தலையை ஆட்டினாள். மனசுக்குள் மறுத்தாள். வாயால் மறுப்பதற்கு வார்த்தை கூட இல்லை. உருப்படியாக யோசிக்கவும் முடிய வில்லை.

யோசனையில் ஒரு வெறுமை. ஆனால், மனசுக்குள் ஒரு பிரளயம். சகித்துக்கொள்ள முடியாத ஒரு தன்மை.

திடீரென்று சிலிர்த்தாள். செங்கம்மாவைப் பார்த்தாள்.

“ஏன்... இப்படிச் செஞ்சா என்ன?”

“என்ன?”

“நம்ம தீப்பெட்டியாபீஸ் முதலாளிகிட்டே சொன்னா... என்ன?”

“சொல்லி...”

“அவரு பணக்காரரு. நிறைய செல்வாக்கு உள்ளவரு. போலீசை வைச்சு... சும்மாவாச்சும் ஒரு அரட்டு போட்டார்னா... நாராயணசாமி அரண்டு போயிட மாட்டாரு?”

“சரி... நம்ம முதலாளிகிட்டே யாரு போய்ச் சொல்றது?”

“ஏன்? என்ன பயம்? நம்மளைக் கடிச்சு முழுங்கிரு வாரா? நா வேணும்னா சொல்றேன்...”

"சரி சொல்லிப் பாரு..."

அந்த மூவரிடமும் ததும்பி நின்றது மனிதநேய ஈரமா? ஒரே உழைப்புக் களத்தில் வேலை செய்கிற உழைப்புத் தோழமையா?

அருஞ்சுனை ஆபீஸுக்குள் இருந்தான். எதிரில் ஒரு பிரமுகர். ரியல் எஸ்டேட் ஆள். நகரின் ஒதுக்குப் புறத்தில் ஒரு ஆபீஸரின் சிறிய பங்களா விலைக்கு வருகிறது.

முடித்தாகிவிட்டது. இன்று பத்திரம். அதுவும் யாருக்கும் தெரியாமல். விற்றதோ - வாங்கியதோ - யாருக்கும் தெரியக்கூடாது என்று ஒரு நிபந்தனை.

இன்னும் அந்த ஆபீஸர் பங்களாவாகவே தோற்றமளிக்க வேண்டும். 'அந்த வீடு விலைக்கு வேண்டுமா?' என்று தொடர்ந்து சும்மாவாவது நகர முதலாளிகளிடம் விசாரித்துக் கொண்டேயிருக்க வேண்டும். அதற்கும் தனியாக ஒரு கமிஷன் தொகை.

ரிஜிஸ்டர் ஆபீஸில் அப்படி இப்படி என்று ரொம்ப நேரமாகிவிட்டது. ரெண்டு மணிக்கு மேலாகிவிட்டது.

ஸ்கூட்டரில் வந்தான். பின்னால் அந்தப் பிரமுகர்.

அருஞ்சுனையைப் பொறுத்தவரை... இந்தப் பங்களா ஒரு வசந்தமாளிகை. ரத்னத்துக்குத் தெரியாமல் வாங்கிப் போடுகிற வசந்தமாளிகை. சொர்ணத்திற்கான ஆகாயம்.

வசந்த மாளிகையில் புதுப்பிக்க வேண்டியது எதுவுமில்லை. புது மெருகு குலையாமல் இருக்கிறது. வசதியான மாளிகை. சிக்கனமான - நல்ல பங்களா.

சொர்ணம் பார்த்தால்... அசந்துவிடுவாள். பசை ஒட்டிப் பிழைக்கிற அவள், இந்த ராஜமாளிகையைப் பார்த்தால் அரண்டுவிடுவாள். அலமாரி நிறையப் பட்டுச் சேலைகளை வாங்கி அடுக்கிவிட வேண்டும். கொஞ்சம் தங்க நகைகள் வாங்க வேண்டும். ஒரு பெண்ணை வீழ்த்துவதற்கு இது போதும். அதிலும் நன்றாக வாழ்ந்து, ஆடம்பரத்தில் மிதந்து... இழந்து போனவள். இருந்து இழந்த அருமையின் மீது எந்த மனிதருக்கும் தீரா மோகம் இருக்கும். ஆடம்பர மோகம் உள்ள ஓர் இளம் பெண்ணை, நகைகளும் பட்டுச் சேலைகளும், ஒரு பங்களாவும்... கவலையற்ற நகர வாழ்க்கையும் அசத்தாமல், வேறு எது அசத்தப் போகிறது?

அருஞ்சுனைக்குள் ஆழ்ந்த நம்பிக்கை. சந்தேகமற்ற நம்பிக்கை. சஞ்சலமற்ற நம்பிக்கை. அசுர நம்பிக்கை.

ஸ்கூட்டரை காம்பவுண்டுக்குள் வேப்ப மரத்தடியில் நிறுத்துகிறான். காலிங்பெல்லை அழுத்துகிறான். கதவைத் திறக்கிற சொர்ணம், சிரித்த முகத்தோடு தங்க நிலவாகச் சொர்ணம்.

இந்த அழகுச் சிற்பத்தின் உரிமையாளன் என்பதே எத்தனை கௌரவம்! எத்தனை பெருமிதம்...

இது ஒன்றே போதாதா? இந்தப் பசும் பூங்கொடியின் சொந்தக்காரன் என்ற ஒன்றே... வாழ்வின் பயன் என்றாகிவிடுமே...

வாழ்ந்ததற்கான அர்த்தமே பூர்ணப்பட்டுவிடுமே...

“என்ன இப்பத்தான் வாரீகளா?”

“ஆமா... சொர்ணம்.”

"அந்த வீட்டுக்குப் போகலியா?"

"போகலே. என்ன செய்ய?"

"அக்கா பாவமில்லியா?"

"இல்லே... அந்த மலட்டு ஜன்மத்தைக் கட்டிக்கிட்டு இத்தனைக் காலம் மாரடிச்சு நா...ம் பட்ட துன்பம் போதாதா?"

'அப்படிச் சொல்லாதீக... பாவம்ங்க அக்கா.... அதுவும் ஒரு மனுஷ சீவன் இல்லியா? உங்களுக்கு இருக்கிற கௌரவம், செல்வாக்கு எல்லாம்... அந்தச் சீதேவி தந்ததில்லையா?'

சொர்ணத்தைப் பிரமிப்புடன் பார்க்கிறான் பெருமித பிரமிப்பு.

'நீ... கொணத்திலேயும் தங்கம்மா!' என்று மனசு கிடந்து கூவுகிறது. சொல்லவில்லை.

சொர்ணம்... சொர்ணம் நீ... என் புதையல் பொக்கிஷம். என் அதிசயம். அற்புதம். என்னை தேவ புருஷனாக மாற்றுகிறவள். சுகங்களின் உச்சத்தில் ஏற்றுகிறவள். மகிழ்ச்சியின் சிகரத்தில் உயர்த்துகிறவள். என்னை ஆனந்த சமுத்திரமாக அலைமோத வைக்கிறவள். நீ என் வாழ்வின் பௌர்ணமி. சாஸ்வத மான பௌர்ணமி.

சொர்ணம்... சொர்ணம்... சொர்ணம்...

தங்கம். உடம்பு தங்கம், முகம் தங்கம். தொடக் கூசுகிற தங்கம். தொட்டால் ஒட்டிக் கொள்கிற தங்கம்.

கடைந்து உருட்டிய வெண்ணெயாக மிருதுவான தங்கம். மனசின் சகல அணுக்களிலும் நெய்யாகப் பரவிப் படர்கிற தங்கம்.

பறிகொடுத்து... பறிமுதல் செய்கிற தங்கம்.

மனம் பூராவும் ததும்பி வழிகிற கனவு. பரவச உணர்ச்சி. பங்களா ஒன்று சொந்தமான மகிழ்ச்சியில், உல்லாசமாகச் சிறகடிக்கிற கனவு...

ஸ்கூட்டர் ஆபீஸுக்குள் நுழைகிறது. வாட்ச்மேன் பீடியை எறிந்துவிட்டு, அவசரமாக எழுகிறான்.

ரியல் எஸ்டேட் ஆளை ஆபீஸ் ரூமுக்குள் அழைத்துச் சென்றான். ஜூஸ் வாங்கி வரச் செய்தான். சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருந்தனர்.

அந்த ஆள் உத்தரவு வாங்கிக்கொண்டு புறப்பட்ட அந்த நிமிஷத்தில்...

அந்தக் கதவைத் தள்ளிக்கொண்டு நுழைகிறாள், ஒரு பெண்.

அருஞ்சுனைக்குப் புரியவில்லை. யார் இவள்? நம்ம ஆபீஸில் வேலை பார்க்கிறவள் மாதிரியல்லவா, இருக்கிறது? பார்த்த முகமாகவே இருக்கிறதே...

அட... நம்ம சொர்ணத்தோட ஊர்க்காரி.

"யாரும்மா... நீ?"

"முதலாளி, ராசாத்தி."

"சொர்ணத்தோட ஊரா?"

"ஆமா முதலாளி."

"என்ன விஷயமம்மா?"

"சொர்ணத்துக்கு ஒரு சோதனை வந்துருக்கு."

"சோதனையா?"

"ஆமாங்க..."

அவள் சொல்லச் சொல்ல... அவனுள் மகிழ்ச்சி பிரவாகம் எல்லாம் கைகூடி வருகிற பொருத்தம்.

பறவைக்கு வலை வீசவேண்டிய நேரம் வந்து விட்டது.

## 26

முகம் கொடுத்துப் பேசாமல்... விறைத்துக்கொண்டு திரிகிற மகள். தாயை எதிரியாக நினைத்து, மனம் கொதித்துப் போய்ச் சீறுகிற மகள்.

சீரழிஞ்சு செங்கல் சுமந்து... சீப்பட்ட குடும்பம். மறுபடியும் தலைதூக்கிப் பெருமையோடு நிமிர்ந்து நிற்க ஒரு வழி கிடைக்கிறது என்றால்... அது சும்மாவா? தெய்வமாகப் பார்த்துத் திறந்து வைக்கிற வாசலை, இந்த மூதேவி மூடிப் போட வேண்டும் என்கிறாளே...

இதெல்லாம் என்ன? ஏன் இவளுக்கு இப்படி மதி போகிறது? உருப்படுவதற்கு ஒரு வழி கிடைத்தால்... அதைப் பற்றிக்கொள்ள வேண்டும் என்கிற அறிவு வேண்டாமா?

கூடப் பிறந்த அக்காளுக்குச் சக்களத்தியாக இருப்பதில்... என்ன இழிவு? என்ன கேவலம்? என்ன கௌரவக் குறைச்சல்?

அக்கா பிள்ளை வேறு. இவள் பிள்ளை வேறா? தன் பிள்ளைபோல, தன் குடும்பம் போல நினைத்துக் கொள்வதில் என்ன கேடு வந்தது?

இந்தப் பொட்டைக் கழுதையின் மூளையில் என்ன புற்று புறப்பட்டிருக்கிறதோ..?

வயிற்றில் சுமந்து, மார்பில் போட்டுச் சீராட்டி, ரத்தத்தைப் பாலாக்கி ஊட்டி வளர்த்த தாய், மகளுக்குத் துரோகம் செய்வாளா? செய்ய மனம் வருமா?

செய்வதாக நினைத்துச் சிலிர்த்துக்கொண்டு அலைகிறாளே... சண்டைக் கோழியாகக் கொண்ட ரோமத்தைத் தூக்கிக்கொண்டு அலைகிறாளே...

இன்னும் சனீஸ்வரன் ஏறிக்கொண்டு கூத்தாடுகிறானோ... இந்தக் குடும்பம் கெட்டழிந்து சீரழியத்தான் போகுதோ...

வேலாயிக்குக் கோபமும் பயமும் மனத்தை வாட்டி வதைத்தது. முள்ளு முள்ளாகக் குத்துகிற நினைவுகள். ரோஷம் கெட்டுப்போய் சொர்ணத்திடம் வலியப் பேசுகிறபோது... என்ன பேச்சுப் பேசிவிட்டாள், பாதகத்தி!

"பெத்த புள்ளை எலும்பைத் தின்னு, பெரிய பொழைப்பு பொழைக்க நெனைச்சுருக்கே, எலும்பைத் தின்னுருவே. ஆனா, பெரிய பொழைப்பு பொழைச்சுக் கிட மாட்டே..."

அந்த வார்த்தைகள் இந்த அம்மாவை எவ்வளவு அரட்டிவிட்டது? மயிலைக் கண்ட பாம்பாக ஒடுங்கிப் போனாளே...

மகள் எலும்பைப் பார்க்கவா, இத்தன காலம் இத்தனைச் சீரழிவில் சாகாமல் கிடந்தாள்? நல்ல காலம் இப்ப வந்துவிடாதா, அப்ப வந்துவிடாதா என்ற

நப்பாசையில் அல்லவா இத்தனை காலம் உயிரைப் பிடித்துக்கொண்டு கிடக்கிறாள்.

நல்ல காலம் வரவே வராதா? வராமலேயே போய் விடுமா? வருகிற நல்ல காலத்தைக்கூட இவளது குறைமதியால் குலைத்து விடுவாளோ...

திமிர், திமிர், உடம்பெல்லாம் திமிர். அப்பன் திமிர் அப்படியே ரத்தத்தில் வளர்ந்து கிடக்கிறது.

அவரும் அப்படித்தான். கர்வத்திற்காகவே வப் பாட்டிகளை வைத்துக்கொண்டார். வில் வண்டியைக் கட்டிக்கொண்டு ஊர் ஊராகத் திரிந்தார். திமிரினா லேயே பல பேரோடு வம்பு வழக்குகளை வளர்த்துக் கொண்டு, கோர்ட்டுக்கு அலைந்து திரிந்தார்.

அழிவைப் பற்றிக் கருதாமல், வீம்புக்காக, கர்வத் துடன் காரியங்கள் செய்கிறவர். அதே குணம்தான் இவளிடம். யாருக்கும் அடங்குவதில்லை. யாரிடமும் மடங்குவதில்லை. எவரிடமும் மதிப்பு மரியாதையே வைப்பதில்லை.

நானே உசத்தி என்கிற மமதை.

இருக்கும் நிலைமையைப் பாராமல்... ஆகாயத்தி லேயே அகந்தையுடன் அலைகிற தன்மை... எல்லாரும் தன் கால் தூசிக்குச் சமானம் என்ற நினைப்பு...

**சா**யங்காலம் மூன்று மணியிருக்கும். வீட்டு வாசலில் சைக்கிள் சத்தம். 'கொரட் கொரட்'டென்கிற சத்தத்தைக் கேட்டாலே தெரிந்துவிடும், இது நாராயணசாமிதான்.

எட்டிப் பார்த்தாள். அவன்தான்.

அதிசயமாகச் சட்டை போட்டிருந்தான். அரைக் கை சட்டை. வழுக்கை விழுந்த நரைத்த தலைக்கும் அந்தச் சட்டைக்கும் ஒத்து வரவேயில்லை.

ஏதோ சோளக்காட்டுப் பொம்மைக்கு மாட்டியது போல, பொருத்தமில்லாமல் இருந்தது.

வேர்த்து, விறுவிறுத்துப் போய் வந்தான்...

"என்னய்யா..." என்றாள் வேலாயி.

"ஒண்ணுமில்லேக்கா..."

"சாப்டுறீயா? சோறு வைக்கட்டா?"

"வேண்டாம்க்கா. சாப்பிட்டுட்டுத்தான் சைக்கிள் எடுத்தேன்..."

"கிட்ணம்மா எப்படியிருக்கா?"

"இருக்கா."

"புள்ளைக?"

"நல்லாயிருக்காக..."

"கோடைப் பருத்தி விதை ஊனியாச்சா?"

"நேத்துத்தான்... அந்த வேலை முடிஞ்சுது."

"நேரா... நம்ம வீட்டுக்குத்தான் வாரீயா?"

"இல்லே... நம்ம நாட்டாமை வெங்கடாசலம் அண்ணாச்சியைப் போய்ப் பாத்துட்டு வாரேன்."

"என்ன விஷயம்?"

"நம்ம சொர்ணம், முனியசாமி வீட்டுக்குப் போனாளாமே?"

“என்னமோ, தெரியலை.”

“முனியசாமி வீட்டுக்கா? அங்க போகமாட்டா. போனதுனாலே என்ன வந்துருது?”

“அப்படியில்லேக்கா... இந்த நேரத்துலே அவன் வீட்டுக்கு இவளுக்கு என்ன ஜோலி? முனியசாமி ஒரு எளிய சாதிக்காரன். அவனையெல்லாம் ஒரு மனுசனாகவே மதிக்கமாட்டா. அப்பேர்ப்பட்டவள், இந்தச் சமயத்துலே அவன் வீட்டுக்கு வலிய தேடிப் போறாள்னா... அதுலே விஷயமில்லாம இருக்குமா?”

“நீ சொல்றதைப் பார்த்தா... ஏதோ இருக்கும்னுதான் தோணுது.”

“கட்டாயமா இருக்குக்கா... முனியசாமியோட பேரன் சிமிண்டாபீஸ்லே வேலை பாக்கான். அவன், ஏதோ கட்சியிலே லீடரா இருக்கான்... அவன் சப்போர்ட்டை வைச்சுக்கிட்டு இவ ஏதோ தந்திரம் பண்ணிக்கிட்டிருக்காள்னு நெனைக்கேன்.”

“அப்படியா... நெனைக்கே? நேத்து... அவகிட்டே பேசிக்கிட்டிருந்தேன்... எலும்பைத்தான் பாக்கப் போறீகன்னு.. பேசுறா.”

“அதெல்லாம்.. நம்மளை அரட்டுற தந்திரம். பயங்காட்டி, நம்மளைக் கலங்கடிச்சு... திகைக்க வைச்சுட்டு, வேறு ஏதோ செய்யணும்னு கமுக்கமாத் திட்டம் போடுறான்னு நெனைக்கேன்...”

“இதென்ன... பெரிய குண்டைத் தூக்கிப் போடுறே? போயும் போயும்... எளிய சாதிக்காரப் பயலோட ஓடியா போயிருவா? நம்ம குடும்பத்தோட மானமே

போயிருமே... கஞ்சிக்கு வழியத்துப் போய்க் கிடந்தாலும் நம்ம குடும்பத்துக்கு ஒரு மரியாதை இருக்கு. அதையும் போட்டு ஒடைச்சிருவாளா..."

"அதான்... நானும் போய் வெங்கடாசலம் அண்ணாச்சியைப் பாத்துப் பேசிட்டு வந்தேன். அவரு, முனியசாமியைக் கண்காணிக்க ஏற்பாடு செய்றதாகச் சொல்லியிருக்காரு."

"தம்பி... ஒங்கிட்டே ஒரு விஷயம் சொல்லணும்."

"என்ன அக்கா?"

"எப்பவும் இல்லாத அதிசயமா... ஒரு நா... காயிதம் எழுதிப் போட்டா. யாருக்கு எழுதுனான்னு தெரியலை."

"அப்ப... நா நெனைச்சது சரியாத்தான் இருக்கும்னு நெனைக்கேன்."

வேலாயிக்குப் பகீர் என்றது. மனசுக்குள் சிலீர் என்று ஒரு வெறுமை. எதிரில் வரப் போகிற பயங்கரத்தை நினைத்து... மனசே நடுங்கியது.

இப்படியும் ஒரு கேவலம் வந்து சேருமா? போயும் போயும் இப்படி ஒரு அசிங்கமா? நம்ம வீட்டிலே பழைய கஞ்சியைக் குடித்துவிட்டு, சாணிக் கூடை சுமந்த ஓர் அடிமையின் பேரனுடனா... இவள் ஓடிப் போகப் போகிறாள்?

அடப் பாதகத்தி... குருட்டு வெறியிலே இப்படியும் காரியம் செய்யத் துணிந்து விடுவாயா?

ஐயய்யோ... இது என்ன கொடுமை! எத்தனை தலைமுறை கழிஞ்சாலும்... இந்தக் கேவலம் அழியாதே...

நடுங்கும் கண்களோடு மூத்த மருமகனைப் பார்த்தாள். அவன் செய்வதறியாத குழப்பத்துடன் மருண்டான். பார்வையை எதிர்கொள்ள முடியாமல்... தவிர்த்தான். தவித்தான்.

வேலாயிக்குள் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

பேர் பெற்று வாழ்ந்த குடும்பம். கஞ்சிக்கு வழியற்றுக் கிடப்பதையாவது காலக் கொடுமை என்று சகித்துக் கொள்ளலாம். விதிக்கொடுமை என்று விசாரப்பட்டுக் கொள்ளலாம். குடும்பத்தின் மானத்தையே குழிதோண்டிப் புதைக்கிற காரியத்தை ஏழேழு தலைமுறைக்கும் நீள்கிற அவமானத்தை எப்படிச் சகித்துக் கொள்வது? எவ்வாறு பொறுத்துக் கொள்வது?

இதைச் சகித்துக்கொண்டு உயிர் வாழணுமா? அது என்ன மானங்கெட்ட பிழைப்பு...

இவளை இப்படியே விடக் கூடாது. அடக்கி வைக்க வேண்டும். வீட்டிற்குள் முடக்கிப் போட வேண்டும். வேலைக்கும் போக வேண்டாம். ஒன்றுக்கும் போக வேண்டாம்.

குரங்குக் குட்டியை மனம்போல ஆடவிட்டு விடக்கூடாது.

“தம்பி... எனக்கொரு யோசனை...”

“என்னக்கா..?”

“இந்தக் கழுதையை இப்படியே வுட்டுறக் கூடாது.”

“ம்.”

“வுட்டுட்டா... தீராக் கேவலம் தேடி வந்து சேந்துரும்.”

“ம்.”

"இன்னிக்கு வரட்டும். கழுதையை வூட்டுக்குள்ளே போட்டுப் பூட்டிப் போடுவோம்... அப்பத்தான், அதுவும் அடங்கும்."

"இதுவும் சரியாத்தான் இருக்கு."

"அது மட்டுமில்லே... மாசி மாசத்துலே முதல்லே வர்ற முகூர்த்தத்துலே தாலியைக் கட்டிப் போடணும்."

"சரிக்கா... அப்ப... இன்னிக்கு நா இங்கேயே இருந்துரட்டா..."

"இரு..."

**ம**ணி ஆறுக்கும் மேலாகிவிட்டது. வரவேண்டிய நேரம்தான். இன்னும் சொர்ணம் வரவில்லை. வேலாயிக்கு முள் மேல் இருப்பது போலிருந்தது. மனம் கிடந்து 'திக்திக்'கென்று அடித்துக் கொண்டது.

'என்னாச்சோ, என்னாச்சோ...' என்று மனம் தவித்தது. கண்ட கண்ட விதத்தில் மனம் கற்பனை செய்துகொண்டு, அரண்டு கிடந்தது.

அவளுக்கு ஒன்றும் ஓடவில்லை. நாராயணசாமி யுடன் பேசக்கூட மனமில்லை. என்னத்தைப் பேச என்று வெறுப்பாக இருந்தது.

வீட்டுக்குள் புயலாக ஓடி வந்தாள், ராசாத்தி.

"என்னடி... அவ எங்க?"

ராசாத்தி ஒன்றும் சொல்லத் தோன்றாமல் மலங்க மலங்க விழித்தாள். முகமெல்லாம் அப்பியிருந்த பய பீதி. வாய் அசைகிறது வார்த்தை வரவில்லை.

வேலாயிக்குள் திகில். அடிவயிற்றில் ஏதோ சங்கடம். மனம் செயல்படாமல் 'திக்'கென்று நின்றுகொண்டது.

"என்னடி, என்னடி?" என்று பரபரத்தாள். கத்தியது போல கூச்சலாகக் கேட்டாள். ராசாத்தி மிரண்டு போய்க் கிடந்தாள். அடைந்த அதிர்ச்சியிலிருந்து இன்னும் மீளாதவளைப் போலத் தவித்தாள்.

திக்கித் திணறிப் போய் அவள் சொல்லி முடித்த போது நாராயணசாமி கிரகித்துக் கொண்ட விஷயம், இதுதான்:

வேலை முடிந்து, நகரத்தைக் கடந்து வருகிற போது... தார் ரோட்டில் ஒரு வெள்ளைக் கார் இவர்களைக் கடந்து நின்று, கதவைத் திறந்தது. சொர்ணத்தை இழுத்து உள்ளே போட்டவுடன், கார் சிட்டாகப் பறந்துவிட்டது.

இவர்கள் கொஞ்ச தூரம் கத்திக்கொண்டே துரத்தினார்கள். பயனில்லை.

வேலாயி தலையில் அடித்துக்கொண்டு அழுது புலம்பினாள்.

"அய்யய்யோ... பாதகத்தீ..! குடும்பத்துத் தலையிலே தீயை வைச்சுட்டீயே... குலத்துக்கே குழியைத் தோண்டிட்டீயே..."

என்று மார்பில் அடித்துக்கொண்டே கதறினாள். அவள் முகம் கோணிக்கொண்டு போயிற்று.

நாராயணசாமிக்கு முகம் வெளுத்துவிட்டது.

நெஞ்சில் வந்து மோதிய அதிர்ச்சி. அவனையே பறித்துக்கொண்டு ஓடுவது போலிருந்தது. மூளையே மரத்துப் போன மாதிரி இருந்தது. எதுவும் செய்யவும்

தோன்றாமல், சொல்லவும் தோன்றாமல், இருட்டிக் கொண்டு வந்தது.

நாட்டாண்மையைப் பார்த்துப் பேச வேண்டும் என்று நாராயணசாமி ஓடினான்.

'வெங்கடாசலத்திடம் சொல்லி... முனியசாமி பேரன் மேல் அவசரமாகக் கேஸ் கொடுக்கணும். அவனை உடனடியாக மடக்கணும். அப்பத்தான் பறவையைப் பிடிக்க முடியும்...' என்று மனசுக்குள் குருட்டு எண்ணம் ஓடியது. அவன் தெருவில் பதற்றத்துடன் நடந்தான்.

## 27

நகரத்தின் இதய பாகத்தில் காவல் நிலையம். சிவப்புச் சுவர்கள் ரத்த பயங்கரமாய் ஜனங்களை மிரட்டிக் கொண்டிருக்கிறது.

இன்ஸ்பெக்டர் ரத்தநாளங்கள் விறைத்து விம்மிப் போயிருந்தார். மூளை சூடேறித் தகித்தது. தடியைப் பிரயோகிக்கத் துடித்துக் கொண்டிருந்தார். எரிச்சலின் உச்சத்தில் குமுறிச் சினந்து போயிருந்தார்.

அப்போதுதான் டெலிபோன் கூப்பிட்டுத் தொல்லை செய்கிறது. இன்ஸ்பெக்டரின் பார்வையின் அனலைக் குறிப்பறிந்து, கான்ஸ்டபிள் ரிசீவரை எடுத்தார்.

“அலோ” என்ற கான்ஸ்டபிளின் குரலில் பதற்றம் நடுக்கம்.

“ஐயா... எஸ்.பி. ஆபீஸ்லேயிருந்து...”

எரிச்சலில் தடியை மேஜையின் மீது எறிந்துவிட்டு... ரிஸீவரைக் கையில் வாங்கினார்.

“எஸ். ஸார்...”

“கிட்நாப் கேஸ்லே பழநின்னு ஒருத்தரை என் கொயரி பண்றீங்களா?”

“எஸ். ஸார்.”

“எப்படியிருக்கு?”

“ரொம்ப டவ்வாயிருக்கான், ஐயா. குற்றவாளிங்கிற பயமேயில்லை. பணிவுமில்லே.”

“வயலன்ஸை யூஸ் பண்ணலையே?”

“இன்னும் இல்லே, ஐயா.”

“இனியும் வேண்டாம். யூனியன் லீடர். ஸ்மூத்தா டீல் பண்ணுங்க. இல்லேன்னா... சிமிண்ட் பேக்டரியிலே ஸ்டிரைக், அது இதுன்னு... வீணான லா அண்ட் ஆர்டர் ப்ராப்ளம் வந்துரும்.”

“எஸ்... ஸார்.”

“அது மட்டுமில்லே. எனக்குக் கிடைச்ச தகவல்படி, அந்த யூனியன் லீடர் நல்ல டைப்பா தெரியுது. நீங்க ஸ்மூத்தா டீல் பண்ணுனீங்கன்னா... அந்த ஆளு உங்களோட கோ ஆப்ரேட் பண்ணுனாலும் பண்ணுவான். நீங்க அதை யூஸ் பண்ணிக்கலாம்.”

“எஸ், ஸார்.”

டெலிபோனுக்கு இன்ஸ்பெக்டர் போவதைப் பார்த்தவுடன்... பழநிக்குள் ஆசுவாசம், ஒரு சின்ன ஆசுவாசம். காவல் துறையோடு தேவையில்லாமல் ஒரு கௌரவ மோதலைத் தவிர்த்துவிட முடியும்.

பழநி யூனியன் லீடர். தொழிலாளி வர்க்கத்தின் பிரதிநிதி. ஒரு கிரிமினலை நடத்துகிற மாதிரி இவனையும் நடத்தக் கூடாது. நடத்துவதற்கு அவன் அனுமதிக்க முடியாது. இழிவு, இவனுக்கு அல்ல. இவனுக்குப் பின்னால் அணி வகுத்திருக்கிற தோள் களுக்கான இழிவு. அந்தத் தோள்களின் முகத்தில் காறித் துப்புவதற்கு அவன் காரணமாக இருந்துவிட முடியாது.

அதற்காக... இன்ஸ்பெக்டருடன் மோத வேண்டி யிருக்கிறது. முதலில் உட்கார நாற்காலி தர மறுக்கிறார். இரண்டாவது, 'நீ, வா போ' என்று ஒருமையில் பேசுகிறார்.

இந்த இரண்டை எதிர்த்ததற்கே வெகுண்டு போகிறார். கொதிக்கிறார்.

தொடர்ந்து மனிதன் என்கிற தன்மானச் சிலிர்ப் புடன் நடந்து கொண்டால்... தாக்குவார். அடிப்பார். உதைப்பார். பரவாயில்லை.

பிரச்சினையை தெருவுக்குக் கொண்டு போய்விட வேண்டியது வரும். ஒரு தலைவரை மரியாதைக் குறைவோடு நடத்தவும், அடிக்கவும் உரிமையில்லை.

அந்த அத்துமீறலை பிரச்சினையாக்குகிற போது... தட்டிப் போர்டு... கண்டனப் பேரணி... பொது வேலை நிறுத்தம் என்று பிரச்சினை கூடுதல் சிக்கலாகக் கூடும்.

இதையெல்லாம் ஊகித்து, தவிர்க்க விரும்பிய பழநி, தேடி வந்த போலீஸை கொஞ்ச நேரம் காத்திருக்கச் சொன்னான். சங்கத்தின் மாவட்டச் செயலாளரைப் போனில் தொடர்பு கொண்டான். முழுசாக நடந்த விவரம் முழுவதையும் கூறினான். எதையும் மறைக்க வில்லை.

அழகு... ஆசை... காதல்... வந்த கடிதம்... வளத்தை யாவின் வேண்டுகோள்... அனுப்பிய பதில் கடிதம்.. ஏமாற்றம் எல்லாமே சொல்லிவிட்டான்.

தற்சமயம் அடைந்திருக்கிற அதிர்ச்சியையும் சொன் னான். மாவட்டச் செயலாளர், எஸ்.பி.யுடன் தொடர்பு கொள்வதாகக் கூறினார்.

அது நல்லதாகப் போய்விட்டது. இதோ... டெலிபோன். இனி, இன்ஸ்பெக்டர் நிறம் மாறுவார். நீர் தெளித்த கொதிபாலாவார்.

சகஜமாவார். சுமுகமாவார்.

**ப**ழநிக்குள் சொர்ணம் பற்றிய கவலை அரித்துக் கொண்டிருந்தது. யார் கடத்தியிருப்பார்கள்? என்ன நிலைமை? சொர்ணம் என்ன ஆனாள்? அழுது புலம்புவாளோ? தப்பிக்க வழியற்றுத் தவிப்பாளோ? நினைத்ததற்கு மாறாக நடந்து விட்டதற்காக கவலைப் படுவாளோ...

அல்லது... நான் கடமை தவறிவிட்டதாகக் கோபம் கொள்வாளோ...

செய்தி கேட்டவுடன் ஏற்பட்ட அதிர்ச்சி... இப்போது இல்லை. தணிந்து அடங்கிவிட்டது, ஆனால்... அவள்

என்ன கதியானாளோ என்கிற கவலை மனசுக்குள் உறுத்திக் கொண்டேயிருக்கிறது.

இன்ஸ்பெக்டர் வந்து நாற்காலியில் உட்கார்ந்தார். முகத்தைத் துடைத்துக் கொண்டார். உணர்வுகளை மாற்றிக்கொள்ள முயற்சி செய்கிறார். புருவ ரோமங் களைத் தேய்க்கிறார்.

இன்னும் நின்றுகொண்டிருக்கிற பழநி. முகத்தை நிமிர்த்தாமல் விழியை மட்டும் உயர்த்தி, பழநியைப் பார்க்கிறார்.

"உக்காருங்க... மிஸ்டர்."

பழநி நாற்காலியில் உட்கார்கிறான். ரொம்ப நேரம் வரை நின்றுவிட்டான். முழங்காலின் உள்பக்கங்கள் வலிக்கின்றன. கோபத்தில் முறுக்கேறிய நரம்புகளைத் தளர்த்துகிற முயற்சியில் திணறுகிற இன்ஸ்பெக்டரைப் பார்த்தான். உதவணும் போல் இருந்தது.

"சார்... என்னாலே ஏதாச்சும் ஹெல்ப் செய்ய முடியுமா? செய்றேன் சார்."

"அதெப்படி மேன்? பெண்ணை நீங்க கடத்துன தாகத் தான் ரிப்போர்ட்?"

"இல்லைன்னு ப்ரூவ் பண்ண எங்கிட்டே எவிடென்ஸ் இருக்கு சார்..."

"என்னது?"

"கடிதம். சொர்ணம் எழுதுன கடிதம்."

"இங்க இருக்கா."

"இருக்கு சார்."

"கொண்டாங்க."

கையிலிருந்த டைரி. டைரி கர்ப்ப ஸ்திரீ போலிருந்தது. வீங்கிப் பெருத்திருந்தது. பக்கங்களுக்கு இடையில் செருகப்பட்ட பேப்பர் பேப்பர்கள்... கடிதங்கள்... கவர்கள்...

அதிலிருந்து சொர்ணத்தின் கடிதத்தை எடுத்து நீட்டினான்.

வாங்கிப் பார்த்தார்.

"இதுலே... உங்க மேலே உள்ள குற்றச்சாட்டை ஊர்ஜிதப்படுத்துற தகவல்தானே இருக்கு? கடத்தும்படி அந்தப் பொண்ணே சொல்லியிருக்கு..."

"எஸ் சார். ஆனா... அந்தப் பொண்ணுக்கு ஏற்கெனவே இருந்த முற்றுகையைப் பற்றிய விவரங்கள் இருக்கு."

"ம்."

"இப்ப யாரு கம்ப்ளெய்ண்ட் குடுத்துருக்காகளோ... அவங்களாலேதான் அந்தப் பொண்ணுக்கு ஆபத்து நேர இருந்துருக்கு, இல்லியா சார்!"

"ம்."

"ஏன் சார். அவங்களே அந்தப் பொண்ணை ஒளிச்சு வைச்சுக்கிட்டு, ஏன் என்மேலே புகார் குடுத்துருக்கக் கூடாது?"

"தேவையில்லையே. உங்களுக்கும் அவங்களுக்கும் எந்தவிதமான விரோதமுமில்லியே..."

"கட்டாய கல்யாணத்தைத் தடுக்கிறதுக்கு, நா ஒருத்தன்தானே இருக்கேன்?"

"அது சரிதான். ஆனா, போலீஸ் ஸ்டேஷனுக்கு பிரச்சினையைக் கொண்ணாந்துட்டா... அப்புறம் கட்டாயக் கல்யாணம் செய்ய முடியாதே? அவங்க திட்டத்தை அவங்களே மண்ணையள்ளிப் போட்டு பாழாக்குவாகளா?"

பழநி காலியானான். அதற்கு அவனிடம் பதில் இல்லை. இன்ஸ்பெக்டர் கேள்வியில் லாஜிக் இருக்கிறது. வலு இருக்கிறது. இவன் வெறுமையாக அவரைப் பார்த்தான்.

அந்நேரம்—

ஸ்டேஷன் வாசலில் ஒருவர்.

ஆலைத் தொழிலாளி. தொழிற் சங்கத் தோழர்.

"பழநியைப் பாக்கணும்."

"எதுக்கு?"

"முக்கியமான விஷயம்."

பழநி வெளியே வந்தான். அந்தத் தொழிலாளித் தோழர் பழநியின் காதுகளுக்குள் சொன்னார். அவனுள் பதற்றம். தவிப்பு... கோபம்... குமுறல்...

கிராமத்தில்...

ஏகமாய்க் கூட்டம். ஊர் ஜனம் பூராவும் அந்த மடத்தின் முன் திரண்டிருந்தது. ஜாதி மடம். மடத் திண்ணையில் நாராயணசாமி, வெங்கடாசலத்துடன் வேறு சில பெரிய மனிதர்களும் உட்கார்ந்திருந்தனர். ஊர் ஜனங்கள் முகத்தில் கோப வெறி.

"நம்ம சாதிப் புள்ளையைக் கடத்துறதுக்கு... எளிய சாதிக்காரனுக்கு எம்புட்டுத் திமிரு இருக்கணும்? ராஸ்கல், இதை ஊருன்னு நெனைச்சானா. காடுன்னு நெனைச்சுட்டானா? நம்மளையெல்லாம் ஆம்பளைக இல்லேன்னு எளப்பமாக நெனைச்சுட்டானா?" என்கிற குமுறல். கோபம். வெறி.

முனியசாமி நடுக்கத்துடன் நின்றான். மேல்துண்டை இடுப்பில் கட்டி, பணிவுடன் கேள்விக்குறியாக நின்றான். அவன் முகத்தில் பயம். கண்களில் திகில்... பீதி.

"என்னடா... நின்னுக்கிட்டிருக்கே? மரமா நின்னா என்ன அர்த்தம்? முதல்லே... ஊரை வணங்கு."

சுற்றிலும் மிரட்டுகிற சத்தங்கள். அதட்டலான சத்தங்கள். சுற்றிலும் ஊர் ஜனத்தைப் பார்த்துவிட்டு... பயத்துடன் "கும்புடுறேன் சாமி" என்று கையெடுத்து வணங்கினான்.

நெடுஞ்சாண் கிடையாகத் தரையில் விழுந்து கும்பிட்டு எழுந்தான்.

"இப்பச் சொல்லு... சொர்ணத்தை எங்க வைச் சிருக்கே?"

"எங்கிட்டே கேட்டா... எப்படி சாமி? எனக்கு என்ன தெரியும்? எளியவன் நா. உங்க காலடிப் புழுவாக் கிடக்கிறவன். நா எதுக்கு எங்க சின்னம்மாவைக் கடத்தணும்?"

"என்னடா... திருப்பிக் கேள்வியா கேக்கே? ராஸ்கல், நீயும் பேரனும் சேர்ந்து நடத்துற நாடகம், ஊருக்குத் தெரியாதுன்னு நெனைக்கியா? தொலியை உரிச்சுக்

காயப் போட்டுருவோம் ஜாக்கிரதை. ஊரைப் பகைச்சிக் கிட்டு நீ இருந்துருவே? நாங்க விட்டுருவோமா?"

சுற்றிலும் தடியடிப் பிரயோகமாய் வார்த்தைகள். வசவுகள். ஆத்திரப் பேச்சுகள். ஜாதி குறித்து இழிவான பேச்சுகள். மிரட்டல்கள். ஆத்திரமாய் அதட்டல்கள்.

கடைசியில்... முனியசாமியைத் தூணில் பிடித்துக் கட்டினார்கள். முரட்டுத்தனமாய் அடிக்கத் துவங்கி விட்டனர்...

கிழவன். வயது முதிர்ந்தவன். சாணிக் கூடை சுமந்து அடிமையாகவே வாழ்ந்தவன். அடிமையாகவே சாக நினைத்தவன்...

பழநி ரௌத்ரமானான். தாய் தகப்பனில்லாமல் நாதியற்ற சிறுவனாக இருந்தவனை... தாயாக இருந்து பராமரித்து வளர்த்தவர்... தகப்பனாக இருந்து படிக்க வைத்தவர்... அன்பு காட்டி, ஆளாக்கி வளர்த்தவர்...

அவரையா... ஊர் நடுவே கட்டி வைத்து அடிக் கிறார்கள். பாவிகள்? ஜாதி வெறி. கண்களையும் அறிவையும் இருட்டாக்கிய ஜாதி வெறி. உயர்ந்த ஜாதி என்கிற ஆதிக்கம். இன்னும் கிராமத்து நிலங்களில் ரத்தம் பாய்ச்சுகிற ஜாதி வெறி. மனித உயிர்களைப் பறிக்கிற ஜாதி வெறி.

இதை அனுமதிக்கவே முடியாது. கூடாது.

பரபரத்தான்.

டைரியிலிருந்து நாலாய் மடித்திருந்த வெள்ளைப் பேப்பரை உருவினான். மளமளவென்று எழுத ஆரம்பித் தான்.

"என்ன பழநி... என்ன ஆச்சு?"

"ஒரு கம்ப்ளையண்ட், சார்."

"அதான் கேக்கேன். என்ன விஷயம்?"

"ஊர்லே எங்க வளத்தையாவைக் கொன்னுக்கிட்டிருக்காங்க. கட்டி வைச்சு அடிக்கிறாங்க."

"இப்ப என்ன செய்யப் போறீக?"

"உங்களுக்கு ஒரு பெட்டிஷன். தீண்டாமை கோர்ட்டுக்கு ஒரு பெட்டிஷன்..."

இன்ஸ்பெக்டர் கண்களில் ஒரு பதற்றம். துரிதகதி. பரபரப்பானார். "ஜீப்பை எடு" என்று கத்தினார்.

## 28

சொர்ணம் இங்கு கொண்டு வரப்பட்டு எத்தனை நாளாயிற்று? செவ்வாயோடு செவ்வாய் எட்டு, புதன் ஒன்பது, வியாழன் பத்து... அடியம்மா... பத்து நாள்களா, ஆச்சு?

இது என்ன... சுற்றிலும் எந்த வீடும் இல்லை. காடும் இல்லை. வெறும் நிலம். வீடு கட்டுவதற்காக ப்ளாட், ப்ளாட்டாக அளக்கப்பட்டு... வெள்ளை வெள்ளைக் கற்கள் போடப்பட்டுள்ளன.

இது என்ன.. நம்ம வீட்டோடு ஒப்பிட்டால்... சின்ன வீடு. ஆனால், வசதிகளில் பெரிய வீடு. வழவழப்பான

தளம். பெயிண்டிங் செய்யப்பட்ட சுவர். ஆளுயரக் கண்ணாடி. அதற்கு அடியில் இரண்டு டிராயர் வசதி களுடன் பெட்டி முன்னால் உட்கார்ந்து கொள்ள பிரம்புக் கூடை.

பக்கத்திலேயே பெட். அகலமான இரும்புக் கட்டில். மேலே மெத்தை விரிப்பு. தலையணை. மேலே மின்விசிறி... அலமாரியைத் திறந்தால்... முழுக்க பட்டுச் சேலைகள். உயர்ரகச் சேலைகள். ஜவுளிக் கடை மாதிரி புத்தம் புதிய சேலைகள்.

அதன் இரண்டாவது அறையில், ஒரு டிராயர். அதை உருவினால்... தங்கச் சங்கிலிகள். ஆபரணங்கள்.

மாமா வந்திருந்தால் கூட... குளிக்க முடியாமல் பட்ட பாடுகள். தொழுவத்தில் அடைப்புத் திறப்பு இல்லாத இடத்தில், இருட்டையே சுவராகவும் மறைப்பாகவும் வைத்துக்கொண்டு குளிக்க வேண்டிய தன் வீடு...

இங்கே குளியலறையே பிரும்மாண்டமாய்... காற்றும் நுழைய முடியாத கதவு. உள்ளே தண்ணீர் வருகிற குழாய். அதன் பக்கத்தில் வாஷ்பேஸின். அதன் மேல் கண்ணாடி, சீப்பு, பேஸ்ட், பிரஷ்... எல்லா வசதிகளும்.

அன்றைக்கு போன செவ்வாய்க்கு முந்திய செவ்வா யன்று—

இரவு 7-30 மணியிருக்கும். கார் இங்கு வந்து சேர்ந்தது. அதிகமாகத் திமிரி ஆர்ப்பாட்டம் செய்யாத சொர்ணம், உள்ளே கொண்டு வரப்பட்டாள். பழநியின் ஏற்பாடுதான் இது என்று நம்பினாள்.

பழநி ஏற்பாடாக இருந்தாலே... கொஞ்சம் பயந்தாள். கொஞ்சம் அருவருப்பாகக் கூட இருந்தது.

இவள் கடத்தும்படி 'உத்தரவிட்டு' எழுதிய கடிதத்திற்கு அவன் ஒரு பதில் கடிதம் போட்டிருந்தான்.

அந்தக் கடிதத்தில் பழநியின் 'நிஜம்' தெரிந்தது. அவனது உள்மனக் கிடக்கை தெரிந்தது. காதல் இருந்தது. கனிவு இருந்தது. கௌரவமான வாழ்க்கைக்கு உத்தரவாதம் இருந்தது. கண்ணியமான தோழமை வாழ்க்கை நம்முள் மலரும் என்று நம்பிக்கை கூறியிருந்தது.

ஜாதியின் பொய்மை பற்றிய வியாக்யானம் இருந்தது. மனித நேயத்தின் ஆழமும், விரிவும் இருந்தன.

இவளோ... பண்ணையார் தோரணையில் காப்பாற்றும்படி கட்டளையிட்டிருந்தாள்.

அவனோ... அபயம் அளிக்கிற ஆபத்பாந்தவனைப் போல எழுதியிருக்கிறான்.

இவளுக்கு அந்தக் கடிதத்தை வாசித்தவுடன் எரிச்சலாக இருந்தது.

எங்கள் வீட்டில் சாணிக் கூடை சுமந்து, பழைய கஞ்சியை வாசலில் உட்கார்ந்து குடித்த ஓர் அடிமையின் பேரன். எளிய சாதிக்காரன்.

இவனுக்கு நான் மனைவியாகவா? இவனிடம் எனக்குத் தோழமையா? இவனுக்கு இப்படியோர் பகற்கனவா?

படித்தால்... பிறந்த ஜாதி மாறிவிடுமா? உத்தியோகம் பார்த்தால் குலம் மாறிவிடுமா? என்ன... பெரிய உத்தியோகம்? கூலிக்கார உத்தியோகம்!

ஒரு கூலிக்காரப் பயலுக்கு வாழ்க்கைப் பட்டால், என்ன கௌரவ வாழ்க்கை கிட்டிவிடும்? இப்படியோர் நினைப்பா... அவனுக்கு?

அவனது கறுத்த மூஞ்சியும், கொத்து மீசையும், ச்சே அட்டைக் கரி. அந்தப் பயலுக்கு என் மீது ஆசையா?

ஆசைப்பட என்ன உரிமை இருக்கிறது? என்ன நியாயம் இருக்கிறது? என் மாமாவுக்காவது என்மீது ஆசைப்பட நியாயம் இருக்கிறது. இவனுக்கு என்ன இருக்கிறது?

எத்தனை அத்தமீறி மனசை அலைய விட்டிருக் கிறான்? ஜாதியைக் கடந்து, மரபுகளைக் கடந்து, உயர்ந்த குடும்பத்துப் பெண் என்கிற மரியாதையைக் கடந்து, அவன் ஆசை பாய்ந்திருக்கிறது என்றால்... அவனுக்கு எத்தனை திமிர் இருக்க வேண்டும்?

அவனது தகுதியைப் பற்றிய உணர்வைக் கூட இழந்து விட்டானா?

பாத்திரம் அறிந்து பிச்சையிடு என்பார்கள். உதவியும் கூட... தகுதி, தராதரம் அறிந்துதான் கேட்க வேண்டும். தரமில்லாதவனின் உதவியைப் பெற்றால்... அதுவும் கூட ஓர் இழிவுதான்...

ச்சே! எத்தனை மட்டமாக நினைத்து விட்டான்! அவன் ஆயுசு பூராவும் உத்தியோகம் பார்த்து வருகிற வருமானம், என் வீட்டின் விலைகூடப் பெறுமா?

அவனுக்கு நான் கடிதம் எழுதியது, முட்டாள்தனம்.

முனியசாமியைப் போலவே குணத்தில் இருப்பான் என்று அவள் நினைத்தது தப்பாகி விட்டது...

*முனியசாமியல்ல பழநி. பழநியோட காலம் வேறா? பண்பு வேறா? படிப்பும் உத்தியோகமும் அவனுள் வேறு பழநியை உண்டாக்கி விட்டதா?*

*சரி... இப்போது என்ன செய்வது?*

*இவனது பாதுகாப்பில் இருப்பது, பாதுகாப்பா? தப்பான கருத்து உருவாகி விடுமா? பழநியோடு ஓடி வந்துவிட்டதாக ஊர் கருதுமா? நானே அவனைக் காதலனாக ஒப்புக்கொண்டதாக ஆகிவிடுமா? அய்யய் யோ... அது ஆபத்தல்லவா? அசிங்கமல்லவா? என் கௌரவத்துக்கு இழிவல்லவா? ஒரு பெரிய குடும்பத்துப் பெண் இப்படிச் செய்யலாமா?*

*சொர்ணத்துக்குள் இத்தனை கேள்விகளும் அரித்துக் கொண்டிருந்தன. யோசனைகளில் குழப்பம். உள் வருத்தம். சிக்கலில் சிக்கிக் கொண்ட ஓர் உணர்வு.*

*தானே தன்னைச் சிறுமைப்படுத்திக் கொண்ட மாதிரியான சோர்வு. அயற்சி.*

*அதற்குள் அவள் அறைக்குள் வைத்துப் பூட்டப் பட்டு விட்டாள். விளக்குகள் பிறகுதான் போடப் பட்டன. ஜன்னல் வழியே பார்த்தாள்.*

*ஹாலில், அருஞ்சுனை தீப்பெட்டி யாபீஸ் முதலாளி.*

*அவளுக்குள் ஆச்சர்யம், அதிர்ச்சி. கிணறு வெட்ட பூதம் கிளம்பிவிட்டதோ என்று நினைத்தால்... இங்கு வேறு ஏதோ கிளம்பியிருக்கிறது.*

*இது என்ன ஆச்சர்யம். இவர் எங்கே இங்கே வந்தார்? என் பிரச்சினையில் இவர் ஏன் தலையிட*

வேண்டும்? இவர் ஏன் என்னைக் கடத்த வேண்டும்? என்ன அவசியம்?

அவளுக்குள் திகைப்பு.

"நீங்களா?"

ஒரு மெல்லிய சிரிப்புடன் ஜன்னலை நெருங்கினான். ஆமாம் என்பது போல 'உம்' கொட்டினான்.

"எதுக்கு?"

"ஒன்னைக் காப்பாத்துறதுக்காக மட்டுமில்லே. அப்படிச் சொன்னா... பொய். உன்னைக் கைப்பத்துறதுக்காகவும் தான்."

"அப்படீன்னா..."

"எனக்கு நீ வேணும்."

"சம்மதிக்கலேன்னா..?"

"சம்மதிக்கணும். சம்மதிப்பே. சம்மதிக்கிறதுதான் புத்திசாலித்தனம். சொர்ணம், இங்க ஒன்னை மீறி ஒரு காரியமும் நடக்காது. என் விரல்கூட உன் மேலே படாது, என் காத்துகூட உன்னை அண்டாது. மூணு தரமும் சாப்பாடு வரும். காப்பி வரும். பூ வரும். உள்ளே உனக்கு எல்லா வசதியும் இருக்கு. சேலைக, நகைக, எல்லாமே இருக்கு. எல்லாமே ஒனக்குத்தான். இந்த வீடும் ஒனக்குத்தான்."

"இதெல்லாம்... எதுக்கு..?"

"நீ முழு உரிமைகளோட இருக்கணும். சுதந்திரமாகச் சிந்திக்கணும். சிந்திச்சப்புறம்... சம்மதிக்கணும். ஏன்னா... நீ எனக்கு வேணும்! எப்பவும் வேணும். நீ உன்னோட

மனசு, அன்பு, பாசம் எல்லாமே சேர்ந்து வேணும். சாஸ்வதமா வேணும்."

புரியாத மனக் குழப்பத்துடன் திகைக்கிற சொர்ணத்தின் முகத்தைப் பார்த்தான். அவன் பார்வையிலும் ஒரு சோகம்.

"சொர்ணம் நா ஒரு கம்பெனி முதலாளி. பெரிய பிஸினஸ் மேன். ரொம்பச் சம்பாதிக்கிறேன்... இதெல்லாமே தொழில். பிழைப்பு. இந்தப் பிழைப்பைப் பிழைக்கிறதுக்காக, நா அடகு வைச்சது, என்னோட வாழ்க்கை. நா இப்ப வாழ்றது? வாழ்க்கையேயில்லை. மலட்டு வாழ்க்கை. கசப்பான வாழ்க்கை...

"அந்த வாழ்க்கையை ஒங்கிட்டே கேக்குறேன். தானமா கேட்கிறேன். எனக்கு ஓர் அழகான துணை வேணும். அன்பான துணை வேணும். நா ஒரு ஆம்பளைதான்னு நானே நம்புற மாதிரி எனக்கு ஒரு கொழந்தை வேணும்."

"அப்ப... நா ஒரு கொழந்தை பெத்துக் குடுக்குற மெஷினா?"

"இல்லே சொர்ணம், என் வாழ்க்கையை அர்த்தப்படுத்துறவ, நீ."

அவளுக்கு வெறுப்பாக இருந்தது.

அவனது சோகமும், காலில் விழுந்து கெஞ்சுகிற தோரணையும் எல்லாமே வெறுப்பாக இருந்தது.

அந்தப் பக்கமாகத் திருப்பிக் கொண்டாள் முகத்தை.

இதோ பத்து நாளாகி விட்டது. தினந்தோறும் மாலையில் வருகிறான், அருஞ்சுனை. ஏதாவது குறை

இருக்கிறதா என்று விசாரிக்கிறான். இவள் எதுவும் பேசுவதேயில்லை.

அவன் பாட்டுக்குப் போய்விடுவான்.

ஒவ்வொரு நாளும் வந்த பூ. மல்லிகைப் பூ.

கூந்தலில் வைக்காமலேயே வாடிக் கிடக்கிறது. அதையும் ஒரு பார்வை பார்த்துவிட்டுப் போய்விடு வான்.

முதல் இரண்டு நாள்கள் சாப்பிடாமல் இருந்தாள். அப்புறம் பிடிவாதத்தை நீட்டிப்பதில் அர்த்தம் தெரியவில்லை. குளித்தாள். சாப்பிட்டாள். விதம் விதமான டிசைன்களில் சேலைகள். கலர் கலரான டிசைன்கள். உயர்ரகச் சேலைகள்.

உடுத்தினாள். தங்க நகைகளைப் பார்த்தாள்.

எடுக்கவில்லை.

இதோ... ஒன்பது நாள் கழிந்துவிட்டது. அருஞ்சுனை வாக்குத் தவறவில்லை. தொடவில்லை. தீண்டவில்லை. வற்புறுத்தவில்லை. மிரட்டவில்லை. அதட்டவில்லை.

காத்திருக்கத்தான் செய்கிறான். இவளுடைய சம்மதப் பிச்சைக்காக, பார்வையால் இறைஞ்சுகிறான்.

இது இவளுக்குப் பிடிக்கிறது.

மாமாவைப் போல ஆள் வைத்து, வலையை விரித்து அமுக்க நினைக்கவில்லை. பழநியைப் போல, கௌரவ மான வாழ்க்கையை தானம் அளிப்பதாக கர்வமாய் உத்தரவாதம் தரவில்லை.

இவளது கர்வத்திற்கு மதிப்புக் கிடைக்கிறது. அங்கீகாரம் இருக்கிறது. தானம் கேட்கப்படுகிறாள்.

ராமானுஜத்திடம் தானம் கேட்டார்கள். இருந்ததையெல்லாம் அள்ளி வீசினார். இவளிடமும் தானம் கேட்கப்படுகிறது.

இவளிடமும் அதே வர்க்கக் குணம். அல்லது ரத்த வழிக் குணம். தானமளிக்கிற பரம்பரையில் பிறந்தவள் என்ற நினைப்பு. பிறர் தானத்தில் பிழைப்பது, இழிவு என்று நினைக்கிறவள். வர்க்கத் திமிர். ரத்தத்தில் வந்த கர்வம்.

அந்தக் கர்வமே... அவளது வாழ்வின் பாதையாகிறது.

நேற்றுக்கூட அருஞ்சுனை வந்தான். நிறைய பத்திரங்களைக் கொண்டுவந்து தந்தான்.

பல பெரிய கம்பெனிகளில் வாங்கிய ஷேர் சர்டிபிகேட்டுகள். பங்குதாரர் உரிமைப் பத்திரங்கள்.

எல்லாமே சொர்ணத்தின் பெயருக்கேதான். இதன் மூலம். சொர்ணம் பெரிய பணக்காரி. சுயபூலம் மிக்கவள்.

அம்மா...என்ன ஆனாள்? மாமா என்ன ஆனார்? அக்கா எப்படி இருக்கிறாள்? ரமேஷ் என்ன செய்கிறான்?

ஊரில் நிலவரம் என்ன? இவள் காணாமல் போனதன் பிரதிபலிப்பு என்ன?

மனசு கிடந்து தவிக்கிறது.

இன்றைக்கு அருஞ்சுனை வந்தால்... கேட்கணும்!

எப்படிக் கேட்க? இந்த ஒன்பது நாள்களாக ஒரு வார்த்தைகூடப் பேசியதில்லை, இவள். இப்போது எப்படிப் பேச? பேசணுமா?

பேசாமல் எப்படி விசாரிப்பது? அறிந்துகொள் ளாமல் இருப்பது எப்படி?

சாயங்காலம் குளித்தாள். நல்ல சேலை ஒன்றை எடுத்து உடுத்தினாள். அலங்கரித்துக் கொண்டாள்.

இன்று பூவையும் எடுத்துக் கூந்தலில் செருகிக் கொண்டாள்.

அருஞ்சுனை வரட்டும்.

வந்தால்... விசாரிக்கணும்.

பேசித்தான் ஆக வேண்டும்.

பேசினால் தோஷமில்லை.

ஸ்கூட்டர் சத்தத்தை ஓர் ஆவலோடு எதிர்பார்த் தாள். மனசு படபடத்தது.

## 29

**வ**ந்தான் அருஞ்சுனை. ஹாலில் வந்து உட்கார்ந் தான். ஒன்பது நாளும் ஜன்னல் ஆகாயத்தில் அமாவாசை தான். சூன்யம்தான். சொர்ணம் தட்டுப்படவே மாட்டாள்.

ஏதாச்சும் கேட்டாலும் பதில் வராது. மௌனத்தின் இறுக்கமே மனசுக்குள் குடைந்து கூச்சலிடும். முயற்சியே வீண்தானோ என்று மனம் கலங்கும்.

இலவங்காய் பழுக்கும், கனியும் என்று காத்திருந்து ஏமாந்த கிளியின் கதையாகி விடுமோ! செலவழித்துக் கொட்டிய பணம் முழுக்க விரையம் தானா?

மனம் கிடந்து பதறும். உள் நடுக்கமாய் நடுங்கி அதிரும்.

உள்ளே நுழைந்திடுவோமா என்கிற உன்மத்தம் எழும். பலவந்தம் செய்துவிடலாமா என்று உடம்பு தினவெடுக்கும்.

காளையை நுகத்தடியில் மாட்டி அடித்து வசக்கு வதைப்போல... இவளையும் பலாத்காரமாகத் தான் பணிய வைக்க வேண்டுமா? அடிக்கிற மாடுதான் படியுமா?

சொர்ணத்தின் அழகான தேகம். தேகத்தின் தகதகப்பு. தகதகப்பின் கனிவு. குழைவு.

உள்மனத்தில் எழுகிற உன்மத்தம், வெறி, தினவு.

சமாளித்துக் கொள்வான். சகித்துக் கொள்வான்.

வெண்ணெய் திரண்டு வருகிற போது... தாழியை உடைத்து விடக் கூடாது. எச்சரிக்கை வேண்டும்.

பல்லைக் கடித்துப் பொறுத்துக் கொள்வான்.

இன்றைக்கு—

ஜன்னல் ஆகாயத்தில் தங்க நிலா. சொர்ணத்தின் கருங்கூந்தலில் மல்லிகைச் சரம்.

சொர்ணம் மெல்லப் பேசினாள். ஈடுபாடில்லாத குரல். ஒட்டாத குரல்.

"நா வந்து... பத்து நாளாச்சு?"

"ம்."

"எங்க ஊர்லே என்ன ஆச்சுன்னு தெரியலே. எங்க அம்மா... அக்கா..."

"மொதல்லே பழநியை அரெஸ்ட் பண்ணுனாங்க. அப்புறம் முனியசாமின்னு ஒரு கிழவனைக் கட்டிப் போட்டு அடிச்சதுனாலே... உங்க மாமாவையும், நாட்டாமையையும் அரெஸ்ட் பண்ணி வச்சிருக்காங்க."

"எங்க மாமாவையுமா?"

"ம்."

"ஐயய்யோ... எங்க அக்கா, புள்ளைக எப்படிப் பதறுதுகளோ..."

"அப்போ... உங்க மாமாவை ஜாமீன்லே எடுத்துரட்டா?"

"எடுக்கணும்."

"ம்... சரி.,.."

"நா... எங்க மாமாவைப் பாக்கணும். அக்காவைப் பாக்கணும்."

அருஞ்சுனை யோசித்தான். தயங்கினான்.

ஸ்டேஷனுக்குப் போனவுடன்... 'பூவை' மறந்து விடுவாளா? என்னைக் கடத்தியதே இவன்தான் என்று கூறிவிடுவாளா? கதையே மாறிப் போய்விடுமே! கையில் விலங்கு ஏறிவிடுமே... கதை கந்தலாகிப் போகுமே...

பயந்து பிரயோஜனமில்லை. ஆனது ஆகட்டும். எது வந்தாலும் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்.

விலங்கு கிடைத்தாலும் சரி... பூவிலங்கு கிடைத் தாலும் சரி...

இப்போது இவளைக் கூட்டிக் கொண்டு போகத் தயங்கினால்... இவள் மனசில் வெறுப்பு வரும். கொதிப்பு வரும். தப்பித்து ஓட வேண்டும் என்கிற வெறி வரும்.

அதுதான் ஆபத்து... சாஸ்வத இழப்பு.

"என்ன..."

சொர்ணம்தான்.

"ஒண்ணுமில்லே. வாடகைக் கார் வரச் சொல்லணு மான்னு யோசிச்சேன்."

"இல்லே, வேண்டாம். ஸ்கூட்டர்லேயே போயிரு வோம்..."

"சரி... போவலாம்."

"காட்டிக் குடுத்துருவேன்ங்கிற பயமில்லியா?"

"பய்ப்படுறதுனாலே ஒண்ணும் பிரயோஜனமில்லே."

ஸ்கூட்டரை ஸ்டார்ட் செய்து, அவன் உட்கார்ந் தான். அவளும் பின்னால் ஏறினாள். ஏறிப் பழக்க மில்லை. கூச்சமிருந்தது, சமாளித்துக் கொண்டாள்.

பழக்கமின்மையால் நேரிடுகிற குழப்பம்.

அவன் உட்கார்கிற விதத்தைப் பற்றிக் கூறினான். புரிந்துகொண்டாள்.

ஏறி உட்கார்ந்து கொண்டாள். வண்டி வழுக்கிக் கொண்டு நகர்கிற போது, அவள் உலுக்கப்பட்டாள். அதில்... அவளது உடல் அவனது முதுகில் உரச...

தீப்பிடித்த மாதிரி சுரீரென்று ஒதுங்கினாள். பின் நகர்ந்தாள்.

அடுத்த பத்தாவது நிமிடத்தில், ஸ்கூட்டர் காவல் நிலையத்தின் முன் நின்றது.

இன்ஸ்பெக்டருடன்... பழநி பேசிக் கொண்டிருந் தான். லாக்அப்பில் நாராயணசாமியும், வெங்கடா சலமும்...

"சொர்ணமா!" என்று பழநி அதிர்ந்தான். அப்புறம் தான் வந்திருப்பது சொர்ணம் என்பதே இன்ஸ்பெக் டருக்குத் தெரிந்தது.

லாக்அப்பிற்குள் இருந்து நாராயணசாமியும் 'சொர்ணம்' என்று கத்தினான். அவன் கன்னமெல்லாம் நரைத்த முடிகள். காய்ந்து கிடந்த தலை.

பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

அருஞ்சுனை முன்னால் நடக்க, சொர்ணம் பின்னால் வந்தாள். நேராக மாமாவிடம் போனாள். கம்பியைப் பிடித்தாள். கண்ணீர் மளமளவென்று பெருக்கெடுத்தது.

"மாமா..." என்றாள் அதற்கு மேல் பேச முடிய வில்லை. நாசி நுனி விடைத்தது. காந்தலெடுத்தது. உதடுகள் துடித்தன. மனம் கிடந்து அடித்துக் கொண்டது.

அக்காவையும் பிள்ளைகளையும் மனக் கண்ணில் பார்த்துக் கண்கலங்கினாள்.

சமாளித்துக் கொண்டாள். தன்னைக் கட்டுப் படுத்திக் கொண்டாள். கீழ் உதட்டை அழுந்தக் கடித்துக் கொண்டாள்.

"மாமா... எங் கழுஞ்சைகளும் வீடும்தானே உங்களுக்கு வேணும்? அதுக்காகத் தானே... இத்தனை ஏற்பாடுகளும்?"

நாராயணசாமி வருத்தத்துடன் தலை குனிந்தான்.

"எம்புஞ்சைகளையும், வீட்டையும் அக்கா பேருக்கு எழுதி வைச்சிர்றேன். அதுக்குப் பெறகாச்சும்... அக்காவுக்குத் துரோகம் நெனைக்காம இருப்பீகளா..?"

அவன் ஒன்றும் சொல்லாமல் மௌனமாய்ப் பார்த் தான். பார்வையில், அவமானப்பட்ட ஒரு வேதனை. அடிபட்ட பறவையின் சோகம். கண்களில் ததும்புகிற நீர்த் துளி.

இன்ஸ்பெக்டர், அருஞ்சுனையிடம் சற்று காட்ட மாகவே கேட்டார்.

"என்ன மிஸ்டர்... நீங்கதான் இந்தப் பொண்ணைக் கடத்துனீங்களா? இது எவ்வளவு பெரிய குற்றம் தெரியுமா?"

அதற்குள் சொர்ணம் மேஜைக்கு அருகில் வந்தாள்.

"இல்லே சார்... அவர்கிட்டே நாந்தான் பாதுகாப்புக் கேட்டேன். அவரு என்னைக் கடத்தலை. பாதுகாப்புக் குடுத்தாரு."

"நெஜமா?"

"நெசந்தான் சார்."

"ஏம்மா... இப்படியெல்லாம் எங்க கழுத்தை அறுக்குறீக? நீங்க விளையாட்டு மாதிரி விளையாடுறீக? நாங்க ராத்திரியும் பகலுமா வெட்டியலைச்சலா... அலைஞ்சு சாகுறோம். அப்பவும், எங்களுக்குக் கெட்ட பேரு..."

அருஞ்சுனை குறுக்கிட்டான்.

"சார்... என்னைத் தெரியுமா?"

"ஏன் தெரியாது? தீப்பெட்டியாபீஸ் முதலாளி. அருஞ்சுனை. உங்களைத் தெரியாம இருக்குமா?"

"அப்ப சரி... உள்ளே இருக்கிற ரெண்டு பேருக்கும் நா ஜாமீன் தர்றேன், சார். ரிலீஸ் பண்ணிடுங்க."

"சரி சார்."

"அப்ப பேப்பர் தயார் பண்ணுங்க."

பழநி உறைந்து போயிருந்தான். சொர்ணம் அவனைப் பார்க்கவேயில்லை, அவளை ஓர் அனுதாபத்துடன் பார்த்தவனுள் மெல்ல வெறுப்பு தலை தூக்கியது.

சொர்ணம்... உன் தலையெழுத்து இப்படியா போக வேண்டும்? உன்னோட அழகு என்னைக் கவர்ந்தது. நிஜம்தான். அதைவிட உன்னோட ரோஷம்தான் ரொம்பப் பிடிச்சிருந்தது; அதுதான் உன்னோட போர்க்குணம்னு நெனைச்சிருந்தேன். ஸ்டோர் மேன்

உன்னைத் தொட்ட போது... பத்ரகாளியாக மாறுனியே... அதுலே பாரதியோட புதுமைப் பெண்ணைப் பார்த்தேன். நீ ஒரு புயல்னு நெனைச்சேன்.

அந்த ரோஷம் - சிலிர்ப்பு எல்லாமே போர்க் குணம்னு நெனைச்சேனே... அதுதான் தப்பு. அது போர்க் குணமில்லே. நிலப்பிரபுத்துவ கர்வம். 'தான் உசந்தவள்'ங்கிற மமதை. பண்ணையார் தோரணை.

அது மானத்துக்கான போராட்டமில்லே. மமதை யிலே வெடிச்ச சீற்றம்...

இப்ப என்ன ஆகிப் போனே? போயும் போயும்— ஒரு பணக்காரனுக்கு வப்பாட்டியாயிருந்து சீரழியப் போறே? நீ இழந்து போன வசதியான வாழ்க்கைக் காகவும், ஆடம்பர தாகத்துக்காகவும், படாடோபப் பகட்டாகவும்... கேவலமான முறையிலே தரம் தாழ்ந்து— சின்ன வீடா... இருந்து சிறுமைப்படப் போறே...

உன்னோட மாமாவும், நானும், அருஞ்சுனையும் போட்ட முற்றுகையிலே நீ வீழ்ந்து போகலே. உனக் குள்ளேயே நீ நிலப்பிரபுத்துவ ஆடம்பரக் குணத்தாலே முற்றுகையிடப்பட்டிருந்தாயே... அதுதான் உன்னை வீழ்த்தியிருக்கு...

வீழ்ச்சி... பரிதாபகரமான வீழ்ச்சி... அவலமான வீழ்ச்சி... வெட்கக் கேடான வீழ்ச்சி...

ச்சே! இப்படி ஒரு பிறவியையா... நா காதலிச்சேன்: நினைச்சாலே வெட்கமாயிருக்கு.

உள்ளுக்குள் சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது. சொர்ணத்தைப் பார்க்க விரும்பாமல், முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

ஒரு வெற்றி வீரனைப் போல... பணக்காரன் அருஞ்சுனை சொர்ணத்தை ஏற்றிக்கொண்டு கம்பீரமாக ஸ்கூட்டரில் புறப்பட்டான். ஸ்கூட்டர் வழுக்கிக் கொண்டு நகர்ந்தது. சொர்ணம், அருஞ்சுனையுடன் இழைந்தாள்.

திருவரசு புத்தக நிலையம்

பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794